வரு.74 இல. 29 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

2022 ஜூலை 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

July 17 Sunday, 2022

24 பக்கங்கள் 80/-

03 இலங்கையின் அரசியல் பாதையை திசைதிருப்பிய மக்கள் போராட்டம்!

08 புசல்லாவ பஸ் விபத்தில் இருவர் நசுங்கிப் பலி!

12 மீண்டும் கொதிநிலையில் இலங்கை

யுபுன் அபேகோனுக்கு அனுசரணை 24

பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில்

பிரதம நீதியரசர் முன்னிலையில் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம்

லோரன்ஸ் செல்வநாயகம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பதில் ஜனாதிபதியாக நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். நேற்று முன்தினம் நண்பகல் அவர் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதில் ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதாக பிரதமர் செயலகம் தெரிவித்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியை இராஜினாமா செய்துள்ளதையடுத்து புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் வரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 04

ஜூலை 19 வேட்பு மனு; 20 இல் வாக்கெடுப்பு

ஜனாதிபதி பதவிக்கு மும்முனை போட்டி

பதில் ஜனாதிபதி ரணிலுக்கு SLPP 120 பேர் ஆதரவு

இலங்கையின் 8ஆவது நிறைவேற்று ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான பாராளுமன்ற வாக்கெடுப்பு எதிர்வரும் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளதுடன் மூன்று பிரதான கட்சிகளை சேர்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் தற்போது மும்முனை போட்டி ஆரம்பமாகியுள்ளது.

பதில் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச, பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும ஆகியோர் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்யவுள்ளனர்.

இது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவரிடம் கேட்ட போது,

பதில் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது கட்சியை சேர்ந்த 120க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாக தெரிவித்தார். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தமது கட்சியின் 04

பாடசாலைகள் அனைத்துக்கும் எதிர்வரும் 20 வரை விடுமுறை

கல்வி அமைச்சு தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்க மற்றும் அரச அனுசரணையுடன் இயங்கும் தனியார் பாடசாலைகள் அனைத்துக்கும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விடுமுறை வழங்க தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்தது.

ஏற்கனவே எதிர்வரும் 18 ஆம் திகதி வரை அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த விடுமுறையைத் தொடர்ந்து எதிர்வரும் 20ஆம் திகதி வரை நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. 04

ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட உள்ளதாக டளஸ் அறிவிப்பு

வேட்பு மனுவை சமர்ப்பிக்க உள்ளதாகவும் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி தேர்வுக்கான வேட்புமனு தாக்கல் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதையடுத்து தாமும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடப் போவதாக முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பதவிக்காக பல பெயர்கள் தெரிவிக்கப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும தாம் அப் பதவிக்கு போட்டியிடுவது தொடர்பில் நேற்று 04

நாட்டில் நிலவும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு உடனடி அவசியம்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மையை போக்கவும், மக்களின் அடிப்படைத் தேவைகளை உறுதிப்படுத்தும் அதேவேளையில் சுகாதாரம் உட்பட அனைத்து துறைகளையும் மீட்டெடுக்க உறுதியான நிரந்தரத் தீர்வுகள் இருக்க வேண்டுமென அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) தெரிவித்துள்ளது.

நாட்டின் ஊழல் மற்றும் தோல்வியுற்ற அரசியலை மாற்றுவதற்கும், நாட்டில் நிலவும் பொருளாதார, அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், தற்போதைய 04

உயர்தர பரீட்சை பெறுபேறுகள் அடுத்த மாத நடுப்பகுதியில்

பரீட்சை திணைக்களம் எதிர்பார்ப்பு

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடிகள் காரணமாக உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 04

பெற்றோல், டீசல் தாங்கிய 03 கப்பல்கள் இன்று நாட்டுக்கு

எரிபொருள் நெருக்கடி விரைவில் தணியும்

லோரன்ஸ் செல்வநாயகம்

மூன்று எரிபொருள் கப்பல்கள் இன்று 17ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாக எரிசக்தி மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி 40.000 மெற்றிக் தொன் டீசலுடன் இரண்டு கப்பல்களும் ஒக்டேன் 92 ரக பெட்ரோல் 35.000 மெற்றிக் தொன்னுடன் மேலும் ஒரு கப்பலும் இன்று 17ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி விரைவில் நிவர்த்தி 04

இலங்கையில் தற்போது எற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினையால் எரிபொருளுக்கான தட்டுப்பாட்டால் பொது மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். காத்தான்குடியில் ஒருவர் பெற்றோல் இல்லாததால் சைக்கிளில், மோட்டார் வண்டியை இழுத்துச் செல்வதை படத்தில் காணலாம்.

சட்டமும் ஒழுங்கும் சீர்குலையலாகாது!

இலங்கையில் மக்கள் ஆரம்பித்த போராட்டங்களில் சற்றுத் தணிவு நிலைமையை அவதானிக்க முடிகின்றது. ஆனால் நாட்டில் அரசியல் பதற்றம் இன்னுமே தணிந்ததாகத் தெரியவில்லை. நாட்டின் அரசியல் களமானது ஒவ்வொரு கணமும் புதிய புதிய மாற்றங்களுடனேயே நகர்ந்து கொண்டிருக்கின்றது. அரசியலில் அடுத்த நிமிடம் எத்தகைய திருப்பம் நிகழுமென்பதை ஊகிக்க முடியாதவாறு சமீப நாட்களாக பரபரப்பு தொடருகின்றது.

அரசாங்கம் பதவியிலிருந்து விலகும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லையென மக்கள் ஆரம்பித்த போராட்டங்கள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. கோட்டாபய ராஜபக்ஷ தனது ஜனாதிபதி பதவியைத் துறந்து விட்டார். ஆனாலும் ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கை முழுமையாக நிறைவேறவில்லை என்பதால் போராட்டங்கள் இன்னமும் தொடர்கின்றன.

நாட்டின் அரசியல் கொந்தளிப்பு முதலில் முடிவுக்கு வருவது அவசியம். அரசியல் பதற்றம் தீர்ந்தால் மாத்திரமே, மக்களின் போராட்டங்கள் தணிவு நிலைமைக்குச் செல்லும். அரசியல் பரபரப்பு விரைவில் முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகள் இன்னுமே தென்படவில்லை. எனவே மக்கள் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்ற போராட்டங்களும் இப்போதைக்கு முடிவுக்கு வரப் போவதில்லையென்றே எண்ணத் தோன்றுகின்றது. 04

நிமோனியாவால் பரவிய பக்டீரியா வைரஸ்

சோகத்தை ஏற்படுத்திய இளம் மருத்துவரின் மரணம்

ஹாலிஎல பாக்டர் கராபிட்டியில் உயிரிழப்பு

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையின் இளம் வைத்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த தீபால் அமரசூரிய என்ற 30 வயது 04

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு;

இலங்கை விமானங்களுக்கு இந்தியாவில் எரிபொருள்

இதுவரை 94 விமானங்களுக்கு வழங்கல்

04

இணைந்த வடக்கு கிழக்கிலே இடைக்கால அரசு வேண்டும்

உத்தேச சர்வகட்சி அரசிடம் சிவாஜிலிங்கம் கோரிக்கை

இணைந்த வடக்கு கிழக்கிலே இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தற்போது அமையவுள்ள சர்வ கட்சி அரசாங்கத்திடம் தமிழ் அரசியல் தலைமைகள் முன்வைக்க வேண்டுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 04

யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள்

சம்பந்தப்பட்டவர்கள் மீது சர்வதேச விசாரணை வேண்டும்

சர்வதேச மன்னிப்புச்சபை டுவிட்டர் பதிவு

யுத்த குற்றங்கள், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசிய அலுவலகம் சர்வதேச நியாயாதிக்கத்தையும் பயன்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

டுவிட்டர் பதிவில் சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசிய அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,... 04

பதில் ஜனாதிபதிக்கு இ.தொ.கா வாழ்த்து

இலங்கையின் பதில் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவிற்கு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து 04

வேண்டிய வரத்தை அள்ளி வழங்கும் பத்தனையூர் ஸ்ரீ காட்டு மாரியம்மன்

நுவரெலியா மாவட்டத்தில் புகழ் பூத்த பிரசித்தி பெற்ற பல ஆலயங்கள் இன்றும் காணப்பட்டாலும் கொட்டகலை பத்தனை ஊர் ஸ்ரீ காட்டு மாரியம்மன் ஆலயம் நம்பி வருபவர்களின் குறைத் தீர்க்கும் ஆலயம் என்றால் அது மிகையாகாது. சுமார் 150 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த இந்த ஆலயம் நுவரெலியா செல்லும் பிரதான வீதியில் பத்தனை சந்தியிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதியில் மிகவும் ரம்மியமான சூழலில் உலக புகழ்பெற்ற டெவோன் நீர்வீழ்ச்சியை பார்த்த வண்ணம் அமைந்துள்ளது.

நீர்வீழ்ச்சியின் சல சல சத்தத்தைத் தவிர வேறு எந்த ஒரு சத்தமும் அற்ற மிகவும் அமைதியான சூழலில் ஆலயம் காணப்படுகின்றது.

ஆலயத்திற்கு செல்லும் வழியில் மிகவும் பிரமாண்டமான முறையில் முகப்பு மண்டபம் மற்றும் நடந்து செல்வதற்கான படிகள் பல கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டாலும் அம்மன் எழுந்தருளியுள்ள ஆலயம் ஆரம்பம் முதல் இப்போதும் அதே போன்றே காட்சியளிக்கின்றது. நம்பி வருபவர்கள் தாங்களே பூஜை செய்யும் வடிவில் அமைந்திருப்பது பக்தர்களுக்கும் அடியவர்களுக்கும் இடையே உள்ள நெருக்கத்தினை பறைசாற்றுகின்றது.

இந்த ஆலயத்திற்கு பூஜை செய்வதற்கு பூசகர் ஒருவர் இருந்தாலும் பக்தர்கள் விரும்பும் வேளையில் சென்று வணங்குவதற்கு ஏற்றாற் போல் அமைந்திருப்பது இந்த ஆலயத்தில் உள்ள விசேட அம்சமாகும். கதவின்றி இருந்தாலும் பொருட்கள் பாதுகாப்பாக இருப்பதும் அம்மனின் மீதுள்ள நம்பிக்கைக்கு சான்று பகிர்கின்றன.

கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ள போதிலும் ஆலயத்தினை புனர்நிர்மானம் செய்யக்கூடாது இயற்கையில் எழுந்தருளியவாறே இருக்க வேண்டும் என்பது தொன்று தொட்டு கடைபிடிக்கப்பட்டுவரும் மரபாகவே காணப்படுகின்றது.

ஆலயத்தில் உள்ள அம்மன் திருவுருவச் சிலைக்கு அருகாமையில் பல்வேறு இலட்சினைகள் பொறிக்கப்பட்ட கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. அம்மனின் அருளையும் உணர்ந்த பக்த அடியார்கள் நாட்டின் நாலாபுறமிருந்தும் இன மத வேறுபாடின்றி வந்து வழிபட்டு செல்வது மற்றுமொரு விசேட அம்சம். ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் நாட்டின் நான்கு திசைகளிலிருந்து வரும் பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் அம்மனை தரிசிப்பதற்கு மறப்பதில்லை.

அவர்கள் வந்து வழிபாடுகளை செய்து விட்டு பலருக்கு அன்னதானமும் இட்டுச் செல்வதனையும் ஏழைகளின் பசி தீர்ப்பதனையும் ஒரு கடமையாகவே கொண்டிருப்பது அம்மனின் அனுக்கிரகத்தினால் என்றே எண்ணத்தோன்றுகின்றது. சிறப்புக்குரிய இந்த ஆயலத்தினை பாதுகாத்து எம்மவர்கள் பயன்பெற தேவைப்படும் நடவடிக்கைகளை பிரதேசவாசிகளும், சமயத்தின் பால் அக்கறை கொண்டவர்களும் மேற்கொள்ள வேண்டும் என்பது அனைவரினதும் எதிர்ப்பார்ப்பாகும்.

மலைவாஞ்ஞன் ...✍

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

Advertise Here
தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture
SAPP
කුඩාපරිමාණ කෘෂිව්‍යාපාර සහභාගීත්ව වැඩසටහන
சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்
Smallholder Agribusiness Partnerships Programme
IFAD Investing in rural people
International Fund For Agricultural Development

கமத்தொழில் நவோதயம் - இளைஞர்களுக்கு வழிகாட்டல்

யாருக்கு?

உங்களது வயது 18 – 40 வயதிற்கிடையிலா? தற்போதைய மாதாந்த வருமானம் 50000.00 ரூபாவுக்கும் குறைவானதா? உங்களிடம் 2.5 ஏக்கருக்குக் குறைவான காணி அல்லது காணி இல்லையா? இதற்கான பதில் ஆம் என்றால்

விவசாய வியாபாரத் துறையில் வியாபார உரிமையாளராவதற்கு இளைஞரான உங்களுக்கு அரிய வாய்ப்பு.

SAPP யிடமிருந்து உங்களுக்கு

இலவசமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வியாபார, தொழில்முயற்சி, முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி, மீள்நோக்கு மற்றும் ஆலோசனை. அதிகபட்சமாக 2 மில்லியன் ரூபா வரையில் 6.5% வருடாந்த வட்டியின் கீழ் பின்வரும் வங்கிகளின் ஊடாக கடன் வசதிகள்.

BANK OF CEYLON BOC Bankers to the Nation · PEOPLES BANK · RDB · SDB bank · DFCC BANK · HNB · COMMERCIAL BANK · Cargills Bank

உங்களது செயற்றிட்டம் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டதன் பின் சாதகத் தன்மையின் பிரகாரம் சமநிலையான நிதியளிப்பு.

பழவகைகள், மரக்கறி, பசுமை பயிர்ச்செய்கை, மரக்கறி விதைகள் உற்பத்தி, கால்நடை பராமரிப்பு, வாசனைத் திரவியங்கள், எண்ணையுடனான விதைகள், கித்துள், நீர் வாழ் உயிரினங்கள், பயிர்ச்செய்கை மற்றும் அறுவடையை திட்டமிடல், பெறுமதி சேர்த்தல் போன்ற எந்தவொரு விவசாய முயற்சிக்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பயன்பெறுநர் தகவல் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து செயற்றிட்டத்தை மேற்கொள்ள உத்தேசிக்கும் மாவட்டத்திற்கு இயைபாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச ஒருங்கிணைப்பு அதிகாரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு 2022-08-10ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் சமர்ப்பிக்கவும்.

SAPP
பயனாளர் தகவல் படிவம்
இளைஞர் விவசாய தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

பெயர்			
முகவரி			
தொலைபேசி இலக்கம்		வட்ஸ்அப் இலக்கம்	
மாவட்டம்		பிரதேச செயலாளர் பிரிவு	
கிராம சேவையாளர் பிரிவு		மின்னஞ்சல் முகவரி	

தேசிய அடையாள அட்டை இல.		நீங்கள் வீட்டுத் தலைவரா?	
பால்		உங்கள் வீட்டு அங்கத்தவர்களின் எண்ணிக்கை	

விவாக நிலை		நீங்கள் இலங்கையரா?	
பிறந்த தினம்		வயது	

செயற்றிட்ட முன்மொழிவு மற்றும் சராசரி மதிப்பீடு

(www.sapp.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து Downloads இல் Project Document பிரிவில் ''பயனாளர் தகவல் படிவம்'' தரவிறக்கம் செய்து நிரப்பவும்)

- செயற்றிட்ட எண்ணக்கரு தலைப்பு
- செயற்றிட்டத்தின் நோக்கம் / நோக்கு:
- செயற்றிட்டம் தொடர்பில் சிறிய அறிமுகம்
- விற்பனை நிலையம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள்
- செயற்றிட்டத்திற்கான மதிப்பீட்டு முதலீடு

	செயற்றிட்ட செயற்பாடுகள்	மதிப்பீட்டுத் தொகை (ரூபா)
i.		
ii.		
iii.		
iv.		
v.		

செயற்றிட்டம் ஆரம்பமாகும் காலம்:	

....
விண்ணப்பதாரரின் கையொப்பம் திகதி

ஊவா மாகாணம்	தென் மாகாணம், மேல் மாகாணம்	வட மாகாணம்	கிழக்கு மாகாணம்	வடமேல் மாகாணம்	மத்திய மாகாணம், சபரகமுவ மாகாணம்	வடமத்திய மாகாணம்
திரு. அனில் ஜயவர்தன, பிராந்திய செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர், SAPP பிராந்திய அலுவலகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், மாவட்ட அலுவலகம், கெப்பெட்டிபொல மாவத்தை, பதுளை. Tel: 071 446 06 85 E-mail: anil@sapp.lk	திரு. சஜித் சமரசிங்க, பிராந்திய செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர், சிறு அளவிலான விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (SAPP), இல. 212/A, நாவல வீதி இராஜகிரிய. Tel: 077 375 08 81 E-mail: sajith@sapp.lk	திரு. ஆர். பீ. விஜயரத்னம், பிராந்திய செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர், SAPP பிராந்திய அலுவலகம், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகம், பலாலி வீதி, திருநெல்வேலி. Tel: 077 441 77 66 E-mail: vijayatannamsapp@gmail.com	திரு. கே.பீ. குணரத்ன, பிராந்திய செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர், SAPP பிராந்திய அலுவலகம், அறை இல. 01, விளையாட்டுத்துறை மற்றும் கலாசார நிலையம், மகியங்கனை. Tel: 077 466 16 38 E-mail: kbgunarathne@gmail.com	திரு. ஆர்.எம். குணரத்ன, பிராந்திய செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர், SAPP பிராந்திய அலுவலகம், மாகாண கமத்தொழில் அமைச்சு, தம்புள்ள வீதி, குருநாகல். Tel: 077 329 50 13 E-mail: gunagbsapp@gmail.com	திரு. நிஷாந்த குணரத்ன, பிராந்திய செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர், SAPP பிராந்திய அலுவலகம், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், இல. 13, பேராதனை. Tel: 071 359 14 56 E-mail: nishantha@sapp.lk	திரு. திஸ்ஸ பள்ளேகும்பர, பிராந்திய செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர், SAPP பிராந்திய அலுவலகம், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனம், ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம். Tel: 077 376 00 28 E-mail: thissa@sapp.lk

இலங்கையின் அரசியல் பாதையை திசைதிருப்பிய மக்கள் போராட்டம்!

சுதந்திர இலங்கையில் கடந்த காலத்தில் பல்வேறு மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு, ஆட்சி அதிகாரங்களை மாற்றுவதற்கு அவை பங்களிப்புச் செலுத்திய வரலாறு காணப்படுகிறது. இருந்தபோதும், ஆட்சியாளர்களுக்கு எதிராக தற்போது மக்கள் ஆரம்பித்த போராட்டம் அதிகாரத்தில் உள்ளவர்களை வெளியேற்றும் அளவுக்குப் பலம்மிக்க ஒன்றாக அமைந்து விட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் எடுக்கப்பட்ட சில கொள்கைத் தீர்மானங்களால் ஏற்பட்ட பாதகமான சூழல் மற்றும் உலகப் பொருளாதார நெருக்கடியால் நாடு எதிர்கொண்ட சவால்கள் போன்ற பல்வேறு காரணங்களால் நாட்டில் உருவான மிக மோசமான வீழ்ச்சியினால் மக்கள் போராட்டங்கள் ஆரம்பமாகின.

குறிப்பாக ஜனாதிபதி தனது பதவியில் இருந்து வெளியேற வேண்டும் என்பதை கோஷமாகக் கொண்டு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம் பெற்ற மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் கடந்த ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நிரந்தர போராட்டமாக முன்னெடுக்கப்பட்டன.

காலிமுகத்திடல் பகுதியில் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் போராட்டக்காரர்கள் கூடாரங்களை அமைத்து தங்கியிருந்து தொடர் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

'கோட்டா கோ கம' என இந்தப் போராட்ட இடத்துக்குப் பெயரிடப்பட்டது. இளைஞர்கள், கலைஞர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். இதன் தொடர்ச்சியாக அலரிமாளிகைக்கு முன்னால் முன்னால் ஒன்றுதிரண்ட போராட்டக்காரர்கள், அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகக் கோரி மற்றுமொரு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

காலிமுகத்திடலுக்கு அருகில் ஆரம்பமான போராட்டம் ஒரு மாதத்தை எட்டியிருந்த நிலையில், கடந்த மே 09 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான அரசியல் தரப்பினர் அலரிமாளிகைக்கு முன்னாலிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதும், காலிமுகத்திடலில் இருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதும் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதற்குப் பதிலடிவழங்கும் வகையில், மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்புக்கு வந்தவர்கள் தாக்குதல்களுக்கு உள்ளானதுடன், அவர்களை ஏற்றி வந்த பல பஸ்களும் சேதப்படுத்தப்பட்டன. அவை தீவைக்கப்பட்டன. அது மாத்திரமன்றி மஹிந்தவுக்கு ஆதரவாக செயற்பட்ட பல்வேறு அரசியல்வாதிகளின் வீடுகளும் தீயிட்டு சேதமாக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான சூழ்நிலையில், பிரதமராகப் பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஷ கடந்த மே மாதம் 09 ஆம் திகதி பதவி விலகியிருந்தார். அத்துடன் அப்போதிருந்த அமைச்சரவையும் இராஜினாமாச் செய்தது.

இருந்தபோதும் ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரிய ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வந்தன. இவ்வாறான நிலையில், கடந்த ஜுன் 09 ஆம் திகதி முன்னாள் நிதியமைச்சராகவிருந்த பசில் ராஜபக்ஷ தனது தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினாலும் செயற்பாட்டு அரசியலில் இருந்து விலகப் போவதில்லையென்றும் அவர் கூறியிருந்தார். இதுபோன்ற பதவி விலகல்களின் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

இதுபோன்ற அரசியல் அதிரடி மாற்றங்களுக்கு மத்தியில் எரிபொருள் பற்றாக்குறை, எரிவாயு பற்றாக்குறை போன்ற பல்வேறு சவால்களுக்கு சாதாரண பொதுமக்கள் தொடர்ந்தும் முகங்கொடுத்துக் கொண்டே வந்தனர். எரிபொருள் பற்றாக்குறை அதிகரித்து வாகனப் போக்குவரத்து வெகுவாகக் குறைந்தமையால் மக்கள் பல்வேறு அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

இவ்வாறு பல்வேறு சவால்களுக்கு பொது மக்கள் முகங்கொடுத்துக் கொண்டிருந்த சூழ்நிலையிலேயே, கடந்த 09 ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்டத்துக்கு அனைத்து மக்களையும் வருமாறு காலிமுகத்திடல் போராட்டக்காரர்களால் அழைப்பு விடுக்கப்பட்டது. இது தொடர்பான பிரசாரம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டது. பல்கலைக்கழக கல்விசார் சமூகம் மற்றும் பல்வேறு தொழிற்சங்கங்கள் இந்தப் பிரசாரத்தை மக்கள் மத்தியில் கொண்டு போய் சேர்த்திருந்தன.

இந்தப் போராட்டத்தில் மக்கள் கலந்து கொள்வதைத் தடுக்கும் வகையில் கடந்த 08 ஆம் திகதி இரவு கொழும்பு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பொலிஸ் ஊடரங்குச் சட்டம் போடப்பட்டது. எனினும், பொலிஸ் ஊரடக்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அதிகாரம் பொலிஸ்மா அதிபருக்கு இல்லையென பல்வேறு சட்டத்துறை நிபுணர்கள் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து மறுநாள் அதாவது 09 ஆம் திகதி காலை 08 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது.

ஊரடங்குச் சட்டத்தைக் காரணம் காட்டி அன்றைய தினம் ரயில் போக்குவரத்தை முடக்குவதற்கான திட்டமும் போடப்பட்டிருந்தது. எனினும், அன்றைய தினம் அதிகாலையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏராளமான பொதுமக்கள் ரயில் நிலையங்களில் குவிந்தனர். ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து ரயில சேவைகளை இயக்க வேண்டிய கட்டாயம் ரயில்வே திணைக்களத்துக்கு ஏற்பட்டது.

அதேநேரம், எரிபொருள் பிரச்சினையைக் காரணம் காட்டி தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கங்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு சேவையை ஆரம்பித்தன.

இதனால் ஏராளமான பொதுமக்கள் தன்னார்வத்துடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து கொழும்பை நோக்கி வந்தனர். எரிபொருள் நெருக்கடி காணப்படும் சூழ்நிலையிலும் ஏராளமானவர்கள் லொறிகளில் ஏறி கொழும்புக்கு வந்தனர்.

பல்வேறு நெருக்கடிகளாலும் அழுத்தங்களுக்கும், சவால்களுக்கும் முகங்கொடுத்துள்ள மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த தன்னார்வத்துடன் சென்றதைக் காணக் கூடியதாகவிருந்தது.

சனிக்கிழமை காலை முதல் கொழும்பை வந்தடைந்த மக்கள் காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஒன்றுகூடினர். இவர்கள் பேரணியாக முதலில் ஜனாதிபதி செயலகத்தை நோக்கிச் சென்றனர். பொலிஸார், இராணுவத்தினர் பல்வேறு வீதித் தடைகளை அமைத்து இவர்களைத் தடுத்த போதும் ஆயிரக்கணக்கில் திரண்ட மக்கள் சகல தடைகளையும் மீறி ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றினர். இதன் பின்னர் அங்கிருந்து ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்ற அவர்கள், பாதுகாப்புத் தரப்பினரின் தடைகளையும் மீறிச் சென்று அதனையும் கைப்பற்றியிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டது. முக்கியமான இடங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி பாதுகாப்பான இடத்துக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இந்தப் போராட்டமானது இலங்கை வரலாற்றில் முக்கியமான ஒன்றாகப் பதிவாகி விட்டது. இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட மக்கள் போராட்டங்கள் அரசியல் சாயம் பூசப்பட்டு அரசியல் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்டவையாகவே இருந்தன.

எனினும், இம்முறை இடம்பெற்ற போராட்டங்கள் பொதுமக்களால் தன்னெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களாகவே அமைத்தன. அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் நாட்டின் எதிர்காலம் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்கள் மேற்கொண்ட எழுச்சிப் போராட்டமாகவே அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுதந்திர இலங்கையில் மாறிமாறி ஆட்சி நடத்திய அனைத்து அரசியல்வாதிகளுக்கும் இந்தப் போராட்டம் சிறந்ததொரு செய்தியைக் கூறியிருப்பதாகவே தெரிகிறது. மக்களுக்கான ஆட்சி அமைக்கப்பட வேண்டும் என்பதையே இந்தப் போராட்டம் உணர்த்தியுள்ளது. போராட்டத்தின் ஊடாக மக்கள் வழங்கிய செய்தியை சரியாகப் புரிந்து கொண்டு அரசியல்வாதிகளும் நடந்து கொள்வது காலத்தின் தேவை என்பது மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலத்துக்கும் இதுவே அவசியமாகும்.

பிரதமர் அலுவலகம் முன்பாக இடம்பெற்ற களேபரம்

ஜனாதிபதி மாளிகையின் உள்ளே புகுந்து கொண்ட மக்கள் வெள்ளம்

நாட்டில் ஆங்காங்கே முளைவிட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் கடந்த ஏப்ரல் ஆரம்பத்தில் காலிமுகத்திடலில் நிரந்தரப் போராட்டமாகின. மூன்று மாதம் கடந்த பின்னர், போராட்டங்கள் மேலும் தீவிரமாகி அரச தலைவர்களின் கட்டடங்களே போராட்டக்காரர்களின் வசமாகின!

ஜனாதிபதி செயலகத்தினுள் புகுந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள்

காலிமுகத்திடலில் மே மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற வன்முறை

போராட்டங்கள் கடந்து வந்த பாதையும், நாட்டின் அரசியல்வாதிகள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களும்!



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

சமூக பொருளாதார புரட்சியை ஏற்படுத்த வேண்டியதே தற்போது மிகவும் அவசியம்

நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கையானது, மோதல் மற்றும் கலவரங்களால் அனுபவங்களைப் பெற்றுள்ள நாடாகும். உள் மற்றும் வெளி சூழ்ச்சிகள் புதிய சம்பவங்கள் அல்ல. அழிவுக்குப் பின்னால் மீளல், அதன் பின்னர் மீண்டும் அழிவு என இயல்பாகியுள்ளது. கடந்த சில மாதங்களாக மக்களின் அணிவகுப்பு வழமை போன்று எதிர்பாராத நிலைமையில் முடிவுக்கு வந்துள்ளது.

மக்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் பலவாகும். புரட்சிகள் ஏற்பட்ட விதம் பற்றி உலக சரித்திரம் குறிப்பிடுகின்றது. பிரான்ஸ், ரஷ்யா, பிரித்தானியா,அமெரிக்கா மற்றும் சீனா போன்ற நாடுகளில் பாரிய புரட்சிகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் நடந்த நல்லது கெட்டது பற்றி எமக்கு அனுபவங்கள் உள்ளன.

சர்வதேச அறிக்கைகள் குறிப்பிடுவது போன்று உலகம் பூராவும் நடந்துள்ள குழப்பங்களும் போராட்டங்களும் பெருமளவாகும். பிரித்தானியப் பிரதமர் தனது பதவிக்காலத்திற்கு முன்னர் இராஜினாமா செய்துள்ளார். முன்னாள் பிரதமர் கொலை செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதி ஜோ பைடன் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை விட வலதுசாரி சக்திகளுக்கு இரையாகியுள்ளார். போராட்டங்களுக்கு பின்னர் விரட்டியடிக்கப்பட்ட நிர்வாகியின் அடுத்த பரம்பரையை ஆட்சிக்குக் கொண்டு வர பிலிப்பைன்ஸ் முடிவு செய்துள்ளது.

இலங்கையில் பயங்கரவாதத்தால், ஈஸ்டர் ஞயிறு தாக்குதல் மற்றும் கொவிட் தாக்குதலால் பாதிப்புக்குள்ளான மக்களின் வாழ்க்கை இப்போது மேலும் சிக்கலாகியுள்ளது. அரசாங்கம் தோல்வி அடைந்தது ஒருபுறம், சமூக அரசியல் மற்றும் பொருளாதார நிலையற்ற தன்மை இன்னொருபுறம். நீண்ட காலமாக தீர்க்கப்படாத வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு என்ன?அதிகாரப் பகிர்வு பற்றிய இணக்கப்பாடு உள்ளதா? இந்தப் பிரச்சினைகளை தீர்க்கும் விதம் குறித்து கருத்து வேறுபாடுகள் காணப்படலாம். வெற்றிகரமான முறைகளுக்கு பதிலாக நடைமுறைப்படுத்தக் கூடியவைகளே இச்சந்தர்ப்பத்தில் முக்கியமானவை.

போராட்டத்தை ஜனாதிபதி மாளிகை வரை கொண்டு சென்ற செயற்பாட்டாளர்கள், நாட்டை நிர்வாகம் செய்ய வேண்டிய விதம் பற்றிய அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள். இடைக்கால அரசாங்கம், அந்த அரசாங்கத்திற்கு சட்டரீதியாக அழுத்தத்தை கொடுக்கக் கூடிய பொது மக்கள் கவுன்சில், அரசியல் நியமனங்கள் உடனான அனைவரும் வெளியேற வேண்டும் என்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மக்களின் சக்தியை உறுதி செய்யும் அரசியல் அமைப்பொன்று ஒரு வருடத்திற்குள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். வரி வசூலிக்கும் முறைகளில் திருத்தம் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குதல் போன்ற விடயங்கள் ஆறு மாதத்திற்குள் செயல்படுத்தப்பட வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

போராட்டக்காரர்களின் ஒருமித்த கருத்து எனக் கருதப்படும் இந்த விடயங்கள் பல தசாப்தங்களாக கலந்துரையாடப்பட்டுள்ளதோடு, அதில் இணக்கப்பாட்டை எட்ட முடியாத சில விடயங்களும் உள்ளன. இலங்கையில் தற்போது காணப்படும் இந்த நிலைமையை மீட்டெடுப்பதற்கு இவ்வாறான இலகுவான திட்டங்கள் ஒரு போதும் போதுமானவையல்ல.

இந்தத் தீர்மானம் மிகுந்த சந்தர்ப்பத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய விடயம் ஒன்றுள்ளது. நாட்டை உருவாக்குகையில் கைவிட வேண்டிய பகுதி இல்லை. அனைத்து குடிமக்களும் கௌரவமானவர்கள் மற்றும் இதயமுள்ள மனிதர்கள். கொள்கை அளவிலான கருத்துகளை கலந்துரையாடக் கூடியவர்களை நியமிக்க வேண்டும். போராட்டக்காரர்கள் நடந்து கொண்ட விதம் குறித்து மக்கள் மத்தியில் அதிருப்தியும் உள்ளது. அவர்கள் நடந்து கொண்ட விதம் மக்கள் பலரால் விமர்சிக்கப்பட்டுள்ளது. நாட்டை இவ்வாறானவர்களிடம் ஒப்படைப்பதில் மக்களுக்கு உடன்பாடில்லை.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் உட்பட பல கட்டடங்கள் அடையாளம் மாத்திரமே. அரச சொத்துகளை பாதுகாக்க வேண்டியது அவசியம். அவற்றை சேதமாக்கலாகாது.

பொருளாதாரத்தை சமூகத்தை உருவாக்கும் முறைகளில் தனியான பயணம் இல்லை. தங்களால் முடியும் என்பதை சிந்திப்பதன் மூலம் தோல்வி உள்ளது. ஒரு துறையில் திறமையானவர்கள் வேறொரு துறையில் திறமையற்றவர்கள். விளையாட்டு, கலை அல்லது வேறு பிரிவுகளில் பிரபலமானவர்கள்தான் நாட்டை உருவாக்குவதில் வெற்றி பெற முடியும் என சிந்திப்பது தவறான கருத்தாகும்.

சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற மகாத்மா காந்தி அரச நிர்வாகத்தில் இருந்து விலகினார் . லெனின், மாவோ சேதுங் போன்ற புரட்சித் தலைவர்களின் வெற்றி இன்று கேள்விக்குள்ளாகியுள்ளது. பிரிவை ஏற்படுத்துதல் மற்றும் இனபேதங்களை உருவாக்குவதற்கு பதிலாக தியாகம் ,அர்ப்பணிப்பு இந்த சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு அவசியமாகும். நாட்டின்கௌரவம் பிரதானம். நாட்டில் ஒழுக்கத்தை உருவாக்க வேண்டும். எம்மிடம் இல்லாதது ஒற்றுமையே.

பொருளாதாரத்தை மேம்படுத்தும் நாட்டை வளர்ச்சி அடைய செய்யும் சர்வதேச புரிந்துணர்வுள்ள நிபுணர்கள் நாட்டில் உள்ளார்கள். ஒரே குரல்,ஒரே திட்டம் நாட்டிற்கு அவசியமாகவுள்ளது.

சரித்திரத்திலேயே மோசமான பொருளாதாரப் பிரச்சினை எம் முன்னால் உள்ளது. வாழ்வதற்கான பிரச்சினையை உணராதவர்கள் யாரும் இல்லை. சமூகத்தில் உள்ள பிரச்சினையை அரசியல்வாதிகள் அறியாமல் இல்லை. ஆட்சியாளர்களை குற்றம் சாட்டுவதால் மட்டும் அடிப்படைப் பிரச்சினைகள் தீராது.

உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அந்நிய செலாவணியை சம்பாதிக்க வேண்டும். கடந்த இரண்டு வருடங்களாக அத்துறைகள் பலவீனம் அடைந்துள்ளன. கைத்தொழில், விவசாயம் மற்றும் தொழில்நுட்ப பக்கங்களில் முதலீடு அவசியம். ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்த போது கேலி செய்தார்கள். இன்று அது போன்ற வேறு புதிய கைத்தொழில் இல்லை. இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளின் உதவியுடன் செய்யப்பட்ட முதலீடுகளுக்கு செய்கின்ற கேலியை எதிர்காலத்தில் புரிந்து கொள்ள முடியும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...✍

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு;

இலங்கை விமானங்களுக்கு இந்தியாவில் எரிபொருள்

இதுவரை 94 விமானங்களுக்கு வழங்கல்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

இலங்கையில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதன் காரணமாக கடந்த மே மாதம் 27 ஆம் திகதி முதல் ஜூலை 14 ஆம் திகதி வரை 94 இலங்கை விமானங்கள் எரிபொருளுக்காக இந்தியா வந்து எரிபொருள் நிரப்பிவிட்டுச் சென்றுள்ளதாக கொச்சின் விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜூன் 29 முதல் ஜூலை 13 வரை கொழும்பிலிருந்து 41 விமானங்கள் கொச்சி வந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை விமானங்களை அனுமதிப்பதன் மூலம் இந்திய விமான நிலையங்கள் தங்கள் கடமைக்கப்பால் செயலாற்றியுள்ளன.

அண்டைய நாடுகளுடனான உறவுகளை மேலும் மேம்படுத்த இது உதவும்' என்று விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதால், இலங்கை விமானங்கள் எரிபொருளுக்காக இந்தியா வந்து எரிபொருள் நிரப்பிவிட்டுச் செல்கின்றன.

எரிபொருள் நிரப்புவதற்காக வந்த விமான நிறுவனங்களில் அதிகம் வந்தவை ஸ்ரீலங்கன் ஏர்வேஸ். மேலும், ஏர் அரேபியா, ஏர் ஏசியா, ஃப்ளை துபாய், கல்ஃப் ஏர், ஓமன் ஏர் மற்றும் ஜசீரா ஆகிய விமானங்களும் வந்துள்ளன.

கொச்சி, திருவனந்தபுரம் உள்ளிட்ட இந்திய விமான நிலையங்கள், இலங்கை விமானங்களின் தரையிறக்கத்தை அனுமதித்துள்ளதாகவும் இலங்கைக்கு இந்தியா பல்வேறு வழிகளில் துணை நிற்பதாகவும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில், இலங்கையில் இருந்து இராணுவ விமானங்கள் எதுவும் எரிபொருள் நிரப்ப வந்ததா? என்று தெரியவில்லை.

ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகள் நியாயமாகக் கையாளப்பட வேண்டும்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

ஆர்ப்பாட்டக்காரர்களினால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகள், நியாயமாகக் கையாளப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்கான புறச் சூழல்களை உருவாக்கி, குறித்த விவகாரம் நியாயமாக அணுகப்பட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் தொடர்பாக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் வியாழக்கிழமை கருத்துக்களை பரிமாறியபோதே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்குறித்த விடயம் தொடர்பான கருத்தினையும் தெரிவித்தார்.

மேலும், இவ்விடயம் தொடர்பாக அடுத்த அமைச்சரவை கூட்டத்திலும் பிரஸ்தாபிக்க இருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனநாயக விழுமியங்களுக்கு உட்பட்டு மக்களினால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளும் எதிர்பார்ப்புக்களும் நியாயமான முறையில் பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை பதில் ஜனாதிபதிக்கு எடுத்துரைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் விமான வழக்கு தள்ளுபடி

ரஷ்யாவின் ஏரோஃப்ளோட்' விமானம் தொடர்பான வழக்கை கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் (15) தள்ளுபடி செய்துள்ளது.

ரஷ்ய ஏரோஃப்ளோட் விமானத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கோரி, ஏர்போர்ட் அன்ட் ஏர்லைன் கம்பெனி லிமிடெட் கடந்த ஜூன் மாதம் (28) கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் ஊடாக மனுவொன்றை தாக்கல் செய்தது.

நீதிமன்றத்தை நாடாமல் இந்த தடை உத்தரவு பெறப்பட்டதாக சட்ட மாஅதிபர் உள்ளிட்ட தரப்பினர் முன்வைத்த உண்மைத் தன்மைகளை கருத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது..

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய

நாட்டை விட்டுச் சென்றதில் இந்தியாவுக்கு எந்த தொடர்புமில்லை

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டிலிருந்து, தப்பிச் சென்றதில் இந்தியாவுக்கு எந்தப் பங்கும் இல்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பாக்சி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,..

இலங்கை மக்கள், ஜனநாயக வழிமுறைகள் மற்றும் அரசியலமைப்பு மூலம் முன்னேற்றத்திற்கான அபிலாஷைகளை நனவாக்க முற்படுகையில், அவர்களுடன், இந்தியா தொடர்ந்திருக்கும் என்றும் தெளிவுப்படுத்தியுள்ளார்.

இந்த ஆண்டு மட்டும் 3.8 பில்லியன் டொலர் உதவியை, இந்தியா, இலங்கைக்கு வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஒரு முக்கியமான அண்டை நாடு என்றும், அங்கு உருவாகி வரும் சூழ்நிலையை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களுடனும் புதுடெல்லி தொடர்ந்து தொடர்பில் இருந்து வருவதாக அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மின்சாரக் கட்டணத் திருத்தம்

100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கருத்துக்கள்

உத்தேச மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாக 100க்கும் மேற்பட்ட பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு பெற்றுள்ளது.

இது தொடர்பான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கட்டணங்களை எவ்வாறு திருத்துவது என்பது குறித்த பொதுப் பயன்பாட்டு ஆணையத்தின் பரிந்துரைகள் ஆணையத்தின் அதிகாரப் பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தும் முன், பொதுமக்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

ஜனநாயக முறையில் தீர்வைக் காணுங்கள்

டுவிட்டரில் பிரிட்டன் உயர்ஸ்தானிகர்

இலங்கையில் நிலவும் அரசியல் நெருக்கடிக்கு அரசியலமைப்பின் பிரகாரம் ஜனநாயக முறையில் மக்களின் அபிலாஷைகளை பாதுகாக்குமாறு இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ட்விட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளிப்பது முக்கியமானது. அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்கும், அனைத்து மக்களின் தேவைகளுக்கும் சேவை செய்வதற்கும் அனைத்துக் கட்சிகளும் விரைவாக ஒன்றிணைந்து செயல்படுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வகட்சி அரசின் பிரதமர்; ஐ.ம.சு இன்று அறிவிக்கும்

சர்வகட்சி அரசாங்கத்துக்கான பிரதமர் தொடர்பான முன்மொழிவு இன்று அறிவிக்கப்படுமென ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, பிரதமருக்கான முன்மொழிவுகளை அறிவிக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்சிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமைய, சர்வ கட்சி அரசாங்கத்தின் பிரதமருக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் முன்மொழிவு சபாநாயகருக்கு அறிவிக்கப்படும் என ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எங்கள் கருத்து

சட்டமும் ஒழுங்கும் சீர்குலையலாகாது!

பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றதன் பின்னர் இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதுமே சந்தித்திருக்காத பொருளாதார நெருக்கடியினால் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்கள் எல்லைமீறிச் சென்றதனாலேயே இவ்வாறானதொரு மக்கள் போராட்டம் திடீரென்று வெடித்தது. அன்றாட வாழ்க்கையை நகர்த்திச் செல்ல இயலாத கட்டமொன்று உருவெடுத்த வேளையில், மக்கள் போராட்டக் களத்தில் இறங்கினர்.

இத்தகைய துரதிர்ஷ்ட சூழ்நிலையானது இலங்கைக்குப் புதியதாக இருக்கலாம். ஆனால் உலகின் பல நாடுகளின் வரலாற்றில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. தாங்க முடியாத நெருக்கடியின் அடுத்த கட்டம் பெரும்பாலும் இவ்வாறுதான் திசைமாறுவதுண்டு. எமது தாய்நாடு சந்தித்திருப்பதும் அவ்வாறாதொரு அவலமே ஆகும்.

ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகியுள்ளதால் பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் பதவியேற்றுள்ளார். அப்பதவியானது புதிய ஜனாதிபதியொருவர் தெரிவு செய்யப்படும் வரையான தற்காலிக ஏற்பாடாகும். எனினும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் ஓயவில்லை. இந்நிலையில் நாட்டின் அரசியல் கொந்தளிப்பு விரைவில் முடிவுக்கு வர வேண்டுமென்பதே அனைத்துத் தரப்பு மக்களின் இன்றைய வேண்டுதலாக இருக்கின்றது. அன்றாட பாவனைப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம், எரிபொருள் நெருக்கடி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றவற்றால் மக்கள் கடந்த சில மாதங்களாக பெரிதும் நொந்து போயுள்ளனர். எனவே இன்றைய துன்பம் விரைவில் முடிவுக்கு வந்தால் போதுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

மறுபுறத்தில் நோக்குகின்ற போது, மக்களது போராட்டத்தின் பிரதிகூலமான விளைவுகளையும் நாடு இப்போது சந்திக்க வேண்டியுள்ளது. ஆர்ப்பாட்டங்கள் எல்லைமீறிச் செல்கின்ற சந்தர்ப்பங்களில் மோதல்களும், வன்முறைகளும் உருவெடுப்பதைக் காண முடிகின்றது. அரச உடைமைகள் சேதமாக்கப்படுவதையும், நாட்டின் சட்டத்தை நடைமுறைப் படுத்துகின்ற பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் இம்சைக்குள்ளாக்கப்படுவதையும் நேரில் காண்கின்றோம்.

அதேசமயம், சாதாரண அப்பாவிப் பொதுமக்களும் ஊடகவியலாளர்களும் தாக்குதலுக்குள்ளான சம்பவங்களும் அரங்கேறியுள்ளன. இவையெல்லாம் வன்மையாகக் கண்டிக்கத்தக்க சம்பவங்களாகும். அதே போன்று ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகை போன்ற தொல்பொருள் அடையாளச் சின்னங்களுக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரவேசித்த பின்னர் அங்குள்ள உடைமைகளுக்கு பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

நாட்டின் புராதன அடையாளங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும். அதேபோன்று நாட்டின் சட்டதிட்டங்களும், பாரம்பரிய கீர்த்தியும் பாதுகாக்கப்படுவது அவசியம். நாட்டின் அமைதி சீர்குலைந்து, சட்டமும் ஒழுங்கும் மக்கள் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி விடுமோவென்ற அச்சம் சாதாரண மக்கள் மத்தியில் நிலவுவதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டாமலிருக்க முடியவில்லை.

அரசியலும் ஆட்சியதிகாரமும் மாற்றமடைந்து செல்வது வழமை. ஆனால் நாட்டின் அமைதியும், ஒழுங்கும் சீர்குலையும் படியாக நிலைமை மாறிவிடலாகாது என்பதே மக்களின் வேண்டுதலாக உள்ளது.

பாடசாலைகள் அனைத்துக்கும்...

எதிர்வரும் 21 ஆம் திகதி மீண்டும் அனைத்து பாடசாலைகளும் கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும்

கல்வி சாரா ஊழியர்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ள போக்குவரத்து தொடர்பான அசௌகரியங்களை கவனத்திற் கொண்டே கல்வியமைச்சு மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளது.

கல்வி அமைச்சில் நேற்று அமைச்சின் செயலாளர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. அந்தக் கூட்டத்துக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். அங்கு மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமையவே எதிர்வரும் 21 ஆம் திகதி மீண்டும் பாடசாலைகளை கல்வி நடவடிக்கைகளுக்காக திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவிக்கு...

தலைவர் சஜித் பிரேசமதாசவின் பெயர் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அதற்கு ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பெரும்பான்மையான எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்து வருவதாகவும் அவர் வலியுறுத்தினார்.

பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சராகவும் பின்னர் சுயேட்சையாக பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்த டளஸ் அழகப்பெருமவின் பெயரும் சுயேச்சை உறுப்பினர்கள் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்டவர்கள் மீது ...

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலக அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது போன்று சர்வதேச குற்றங்கள் ,சித்திரவதைகள் பலவந்தமாக காணாமல் போகச்செய்தல் மனித உரிமை மீறல்கள்,மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்களை; விசாரணை செய்து வழக்கு தாக்கல் செய்யுமாறும் சாத்தியமான சூழ்நிலைகளில் சர்வதேச நியாயாதிக்கத்தை பயன்படுத்துமாறும் சர்வதேச சமூகத்தை நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் நம்பகத் தன்மை மிக்க உள் நாட்டு பொறிமுறைகள் இல்லாத பட்சத்தில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான ஏனைய சாத்தியக் கூறுகளை ஆராயவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இணைந்த வடக்கு கிழக்கிலே...

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

'சர்வகட்சி அரசு அமையவுள்ள நிலையில், ஈழத்தமிர்களின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டுமென்ற கோரிக்கையை தமிழ் அரசியல் தலைமைகள் வலியுறுத்த வேண்டுமென புலம்பெயர் தமிழ் மக்கள், தாயக மக்கள் வலியுறுத்த வேண்டும்.

2012ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ரோம் ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திட வேண்டும், பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும், இணைந்த வடக்கு கிழக்கிலே இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் இடைக்கால அரசாங்கத்திடம் சமர்ப்பித்து உடனடியாக தீர்வு காண வேண்டுமென தமிழ் அரசியல் தலைமைகள் வலியுறுத்த வேண்டும்.

இல்லையெனில் மிகப்பெரிய வரலாற்று தவறு அல்லது துரோகத்தை இழைக்கின்றோம்' என கூறினார்.

நாட்டில் நிலவும் பிரச்சினைக்கு ...

எரிபொருள்,சமயல் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்கான வழியைக் காண நாட்டு மக்கள் விரும்புவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலபாகே தெரிவித்தார்.

மற்றும் மின்சார நெருக்கடி. மக்களின் அனைத்து முயற்சிகளுக்கும் மத்தியில் சில அரசியல் கட்சிகள் மற்றும் தனிநபர்கள் பொது முயற்சியை தங்கள் ஆதரவுடன் செய்ததாகக் கூறி முத்திரை குத்த முயற்சிக்கின்றனர் என்றார்.

மக்களின் அடிப்படைத் தேவைகளை வழங்குவதிலும் அந்த இலக்குகளை அடைவதிலுமுள்ள ஆர்வம் படிப்படியாகக் குறைந்து வருகிறது.நாட்டில் கடும் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சுகாதாரத் துறைக்கு போதுமான எரிபொருள் இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

எனவே, சுகாதாரப் பணியாளர்கள் தங்கள் கடமைகளுக்குச் சமுகமளிக்க முடியாத காரணத்தால் மருத்துவமனைத் துறை முடங்கிக் கிடக்கிறதென கொலபாகே கூறினார். நிலையான தீர்வுகளை விவாதிக்கவும் பரிந்துரைக்கவும் யாரும் முன்வரவில்லையென்றும் அவர் கூறினார்.

பதில் ஜனாதிபதியாக...

பதில் ஜனாதிபதியாக பதவி வகிப்பார்.

நாட்டிலிருந்து வெளியேறியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாம் ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்வதாக உத்தியோகபூர்வ அறிவிப்பை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு அறிவித்துள்ளார்.

அதன்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் முதல் ஜனாதிபதி பதவியிலிருந்து சட்டரீதியாக விலகிக் கொண்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

மேற்படி அறிவிப்பை சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்டார்.

அதற்கிணங்க பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்யும் வரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக பதவி வகிப்பார்.

புதிய ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதற்கு அரசியலமைப்பு ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதையடுத்து அதற்கான செயற்பாடுகள் முடிவடையும் வரை ஜனாதிபதி பதவிக்கான அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை பதில் ஜனாதிபதி மேற்கொள்வார்.

பதில் ஜனாதிபதிக்கு...

கட்டியெழுப்ப வேண்டுமென்பதோடு, தங்களுடைய பயணம் வெற்றிகரமாக அமைய எமது மனமார்ந்த வாழ்த்துக்களென தெரிவித்துள்ளார்.

உயர்தர பரீட்சை பெறுபேறுகள்...

இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 28ஆம் திகதி முதல் டிசம்பர் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.

ஜூலை 18ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 19ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோல், டீசல் தாங்கிய...

செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, நாட்டுக்கு இறக்குமதி செய்யும் எரிபொருளை அத்தியாவசிய சேவைகளுக்காக விநியோகிப்பது தொடர்பில் முறையான வேலைத் திட்டமொன்றை தயாரிக்குமாறு உயர் நீதிமன்றம் சட்ட மாஅதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவ்வாறு தயாரிக்கப்படும் முறையான வேலைத் திட்டத்தை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறும் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் இரண்டு வார காலத்திற்குள் எரிசக்தி அமைச்சின் செயலாளர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி எரிபொருள் விநியோகம் தொடர்பில் முறையான வேலை திட்டமொன்றை தயாரிக்குமாறு உயர் நீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரண்டு அடிப்படை மனுக்கள் மீதான விசாரணையின் போதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதேவேளை, சுகாதாரத் துறையினருக்கு எரிபொருள் வழங்குவதில் முக்கியத்துவம் வழங்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மூலம் சுகாதாரத்துறையினருக்கு எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் மீண்டும் இன்று முதல் ஆரம்பமாகும் எனவும், அந்த செயற்திட்டத்தின் கீழ் 100 எரிபொருள் நிலையங்கள் மூலம் சுகாதாரத் துறையினருக்கு எரிபொருள் வழங்க உள்ளதாகவும் கூட்டத்தாபனம் தெரிவித்துள்ளது.

சோகத்தை ஏற்படுத்திய...

வைத்தியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். பிரேதப் பரிசோதனையில் அவர் நிமோனியாவால் ஏற்பட்ட பக்டீரியா தொற்று காரணமாக உய்ரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

மரணம் தொடர்பான விசாரணைகள் நேற்று முன்தினம் காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலையில் மேலதிக மரண விசாரணை அதிகாரி சந்திரசேன லொகுகேவினால் மேற்கொள்ளப்பட்டது.

பிரேத பரிசோதனையின் போது, அவர் கொரோனா வைரஸுக்கு சிகிச்சை பெற்று வந்ததும், சில வாரங்களுக்கு முன் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது.

பல நாட்களாக பெற்றோல் வரிசையில் காத்திருந்த வைத்தியர் தனது காரிலிருந்து மோட்டார் சைக்கிளுக்கு பெட்ரோலை ரியூப் மூலம் எடுத்துச் சென்றதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் அவர் நோய்வாய்ப்பட்டு நிமோனியா நோயினால் பாதிக்கப்பட்டு பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு எக்மோ சிகிச்சைக்காக கடந்த 11ஆம் திகதி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் காலை அவர் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது. இளம் மருத்துவரின் மரணம் இலங்கை மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட...

முன்தினம் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். சட்ட அதிக்கத்தையும் நல்லிணக்கத்தையும் பாதுகாப்பதன் மூலம் நாட்டை பொருளாதார சுபீட்சத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் அதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் எழுந்துள்ள மக்கள் போராட்டம் அரசியல் அதிகாரங்களின் வீழ்ச்சிக்கு காரணமாகியுள்ளது. அதன்படி தற்போது மக்களின் எதிர்பார்ப்புகள் மாற்றமடைந்துள்ளன.

இத்தகைய நிலையில் நாட்டு மக்கள் தொடர்ந்தும் பாதிப்புகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உட்படக் கூடாது என்பதில் நான் உறுதியாகவுள்ளேன்.

பாடசாலை சிறுவர்கள் முதல் ஓய்வூதியக்காரர்கள் வரை எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு நிலையான தீர்வு தொடர்பில் எதிர்பார்ப்புகளை கொண்டுள்ளனர் என்பதை தெளிவாக கூற முடியும்.

முன்னேற்றம் அடைந்த கலாசாரத்தை கொண்ட சமூகம் என்ற வகையில் அனைத்திற்கும் தீர்வு பெற்றுக் கொள்ள ஜனநாயக அரசியலமைப்பின் மூலமான அரசியல் வரைவின் மூலமே முடியும் மூன்று தசாப்த காலமாக அரசியலில் செயல்பட்டுவரும் நான் எல்லா சந்தர்ப்பங்களிலும் நாட்டு மக்களின் பக்கமே இருந்து வருகின்றேன்.

சட்ட ஆதிக்கம் மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைப் பாதுகாத்து பொருளாதார சுபீட்சத்தை நோக்கி நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

இலங்கையின் அரசியல் நிலைமாற்றம்

எழுந்தமானமாக அலையெனத் திரண்டு பொருத்தமற்றவர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கான அதிகாரத்தைக் கொடுத்து விட்டால், அதிலிருந்து அவர்களை விலக்குவதற்குப் பெரும்பாடு பட வேண்டும் என்ற உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது.

கருணாகரன்

அடுத்து என்ன நடக்கப்போகிறது?

அரசியல் நிலைமாற்ற அதிரடிகளின் மத்தியில் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். சரி, அடுத்து என்ன நடக்கப்போகிறது? நிலைமை சீரடையுமா? அல்லது மேலும் மோசமடையுமா? அவர் இந்தப் பதவியில் எவ்வளவு காலம் நீடிப்பார்? அதற்கு மக்களும் போராட்டக்காரர்களும் அனுமதிப்பார்களா? அல்லது அரசியலமைப்பின் பிரகாரமே எல்லாமே நடக்கப்போகிறதா? சபாநாயகர் விடுத்த ஏராளம் அறிவிப்புகளில் எவையெல்லாம் நடக்கும்? எவையெல்லாம் நடக்காது? அடுத்த பிரதமர் யார்? அடுத்து எப்படி ஆட்சிக் கட்டமைப்பு நடக்கும்? புதிய அமைச்சரவை உருவாக்கப்படுமா? அல்லது உள்ள அமைச்சரவையில் திருத்தம் நிகழுமா? இப்படி ஏராளம் கேள்விகளோடுதான் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் உள்ளனர். எந்தக் கேள்விக்கும் யாராலும் சரியான பதிலைச் சொல்ல முடியாது. காரணம், முடிவற்ற குழப்பத்திற்குள்ளாகியுள்ளது நாடு. குழப்பத்திலிருக்கும்போது எதைப்பற்றியும் சரியாகச் சிந்திக்கவும் முடியாது. எதிர்வு கூறவும் முடியாது.

பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே நிலைமையைக் கட்டுப்படுத்தும் வகையில் சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். இதில் முக்கியமானது இயல்பு நிலையை வழமைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள். இது எவ்வளவுக்கு உடனடிச் சாத்தியத்தைத் தரும் என்பது கேள்வியே. முதலில் இயல்பு நிலை என்பது எது என்ற விளக்கம் தேவை. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இயல்பு நிலை என்பது எதிர்ப்பாளர்கள் அல்லது போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டு வீட்டுக்குச் செல்வது என்றே கருதுகிறது. அது அப்படித்தான் கருதும். அதிகாரத் தரப்பின் உளவியல் அது. அதோடு அரசியல் உறுதிப்பாடு ஏற்பட்டு, அமைச்சரவை சீராக இயங்குவது. பாராளுமன்றம் வழமைக்குத் திரும்பிக் கூடுவது. அரச நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இயங்குவது என இது அமையும். மக்களுடைய நோக்கு நிலையில் இயல்பு நிலை என்பது பொருளாதார நெருக்கடி தீருவது. அடுத்ததாக அரசியல் நெருக்கடி தணிவது என்பதாகும்.

எப்படியோ பதில் ஜனாதிபதியின் முயற்சியில் அல்லது அவருடைய நடவடிக்கையில் நிலைமையை வழமைக்குக் கொண்டு வரவேண்டுமானால் இரண்டு வழிகள் உண்டு. ஒன்று படைத்தரப்பையும் பொலிஸையும் பயன்படுத்தி அதிகாரத்தின் மூலமாக – ஏறக்குறைய பலத்தின் மூலமாக இயல்பு நிலையை உருவாக்குவது. இது இன்றைய நிலையில் கொஞ்சம் கடினமான விசயம். கொஞ்சம் இறுக்கினால் அல்லது எங்காவது உராய்வு ஏற்பட்டால் அது அவர் மீதான எதிர்ப்பலைப் படு வேகமாகக் கிளப்பி விடும். ஆனாலும் ரணில் விக்கிரமசிங்க கொஞ்சம் அனுபவம் உள்ள அரசியலாளர் என்பதால் அதற்கான நுட்பங்களைப் பயன்படுத்தி, சாத்தியங்களை எட்டுவதற்கு முயற்சிக்கக் கூடும்.

அடுத்தது, மக்கள் சந்திக்கும் நெருக்கடிகளுக்கான தீர்வைக் கண்டு சனங்களின் கொதிப்பைத் தணிப்பது. இதற்கு உடனடியாக அவர் பல வேலைகளைச்செய்ய வேண்டும். எரிபொருள், எரிவாயு பேன்ற வற்றின் பற்றாக்குறையை நீக்கி பொதுப்போக்குவரத்து உட்பட அனைத்தையும் உறை நிலையிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். கூடவே ஏனைய வருவாயைப் பெறும் வகையிலான திட்டங்களை விரைந்து உருவாக்க வேண்டும். அத்துடன் கடன் உதவிகளை முடிந்தளவுக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் நிதிப்புழக்கத்தையும் பொருட்புழக்கத்தையும் அதிகரிக்க முடியும். இரண்டும் தாராளமாகினால் சனங்கள் இப்போதுள்ள அளவுக்கு அரசுக்கு எதிராக உற்சாகத்தோடு திரள மாட்டார்கள்.

ஆகவே அப்படியொரு சூழலில் சனங்களின் கொதிப்பு அடங்குமானால் இந்தளவுக்கு மக்களின் எழுச்சியோ, எதிர்ப்போ இருக்காது. இதை நன்கறிந்தவர் ரணில் விக்கிரமசிங்க. ஒரு உடன்படிக்கையின் மூலம் போர் தவிர்ப்பைச் செய்து, சமாதான முயற்சிக்கான பொறியில் புலிகளை வீழ்த்தியவர். போர் செய்ய முடியாத புலிகளால் தாக்குப் பிடித்து நிற்க முடியாது என்று அவருக்கு நன்றாகவே தெரியும். புலிகளின் பலம் என்பது அவர்களுடைய போரிடும் ஆற்றலே. ஆகவே அதைச் சரியாக மதிப்பிட்டு அதற்கு ஆணி வைத்தவர் அவர். அதன்மூலம் போரிடும் மனநிலையிலிருந்து வெளியேற்றி – விலக வைத்து வேறு வாழ்க்கைக்குள் – சமாதான கால வாழ்க்கைக்குள் திளைக்க வைத்து நெருக்கடியை உண்டாக்கியவர். அத்துடன், புலிகளுக்குள் கருணா – பிரபாகரன் பிளவையும் மிகச் சிம்பிளாக உருவாக்கியவர். இதற்கு யாரையெல்லாம் எப்படிக் கையாள முடியுமோ அவர்களையெல்லாம் மிகச் சாதுரியமாகக் கையாண்டு வெற்றியடைந்தவர்.

இந்த மாதிரியான அனுபவங்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கைகூடக் கூடியவை. ஆகவே அவர் இனி வரும் நாட்களை தனக்கானதாக மாற்றிடவே யோசிப்பார். சர்வதேச சமூகமும் இலங்கை நிலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு பொதுவாகக் கோரியுள்ளது. ரஷ்யா, அமெரிக்கா, சீனா, இந்தியா, சீனா தொடக்கம் அனைத்து நாடுகளும் இதைக் கேட்டுள்ளன. ஐ.நாவும் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது. உள் நாட்டிலும் மத அமைப்புகள் தொடக்கம் சட்டத்தரணிகள் சங்கம், மற்றும் சில பல தொழிற்சங்கள் வரையில் நாட்டின் நிலைமை விரைவாகச் சீரடைய வேண்டும் என்று கேட்டிருக்கின்றன.

ஆனால் பதில் ஜனாதிபதி எதிர்பார்ப்பதற்கேற்ற மாதிரி இந்த ஆட்டக் களம் இருக்குமா என்பது கேள்வியே. ஏனெனில் இன்னும் கொதி நிலை ஆறவில்லை. இப்போதைக்கு – உடனடியாக அது ஆறக்கூடிய நிலையிலும் இல்லை. அதற்குள் போராட்டக்காரர்களின் திட்டப்படி ரணில் விக்கிரமசிங்க பதவி விலகினால் அடுத்தது என்ன என்ற கேள்வியும் உண்டு. அப்பொழுது அந்த இடத்தை நிரப்பக் கூடியவர்கள் யார் என்பதும் தொடரும் கேள்வியாகும்.

இதேவேளை யார் அதிகாரத்துக்கு வந்தாலும் ஆட்சி கலைக்கப்பட்டு தேர்தல் மூலமாகப் புதிய ஆட்சி ஒன்று அமைந்தால்தான் ஏதாவது புதிதாக நடக்கும் என்று பலரும் நம்புகிறார்கள். அது ஒளரவு உண்மையே. அதைச் செய்வது கூட அவ்வளவு சுலபமானது அல்ல. மிக நுட்பமாக ஒருங்கிணைந்து ஆற்ற வேண்டிய மிகப் பெரிய பணி அது.

ஆனால் அதற்கு மக்கள் எந்தத் தரப்பை – யாரை தேர்வு செய்யப்போகிறார்கள் என்ற கேள்வியும் உண்டு. மீண்டும் பழைய – தவறானவர்களையே தெரிவு செய்தால் மறுபடியும் நெருக்கடியும் தவறுகளுமே விளையும்.

ஆகவே இப்பொழுது அரசாங்கத்துக்கும் அரசியற் கட்சிகளுக்கும் ஆட்சித் தலைவர்களுக்கும் மட்டுமல்ல, மக்களுக்கும் பாரிய பொறுப்புகள் வந்துள்ளன.

நினைத்த மாதிரி, கண்ட பாட்டுக்கு அதிகாரத்தை யாருக்கும் வழங்கக் கூடாது என்ற உண்மை உணர்த்தப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கு மட்டுமல்ல, அதற்கு முன்னிருந்தவர்களுக்கும் அதிகாரத்தை வழங்கி விட்டுப் பட்ட அனுபவங்களை மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

வரமளிப்பதற்கு முன்பு அந்த வரத்தைப் பெறுகின்றவர் தகுதியானவர்தானா? அவர் உண்மையிலேயே காத்தற் கடவுள் தானா என்று ஒன்றுக்குப் பல தடவை சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்தித்த பிறகே யாருக்கு வாக்களிப்பது? எதற்கு வாக்களிப்பது? யாரை ஆதரிப்பது? எதனை ஆதரிப்பது என்று தீர்மானிக்க வேண்டும்.

எழுந்தமானமாக அலையெனத் திரண்டு பொருத்தமற்றவர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கான அதிகாரத்தைக் கொடுத்து விட்டால், அதிலிருந்து அவர்களை விலக்குவதற்குப் பெரும்பாடு பட வேண்டும் என்ற உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது. என்பதால் தொடர்ந்தும் தொடர்ந்தும் மக்கள் தவறிழைக்கக் கூடாது. தவறுகளிலிருந்து பாடத்தைப் படித்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக இனவாதத்தை யாரும் முன்னிறுத்தி நாட்டைப் பாதுகாக்க முடியாது. வேண்டுமானால் அவர்களுடைய வயிற்றை நிரப்பிக் கொள்ளலாம். அவர்களுடைய வாழ்க்கையை வளமாக வைத்திருக்கலாம். இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

இப்பொழுது பாதிக்கிணறுதான் தாண்டப்பட்டுள்ளது. அப்படிக் கூடச் சொல்ல முடியாது. காற்பங்கை மக்கள் போராட்டம் கடந்திருக்கிறது. அதிகாரத்தரப்பை அது ஆட்டம் காண வைத்திருக்கிறது. அப்படியென்றாலும் அது பாதிக்கிணறுதான்.

பாதிக்கிணறு என்பதை நடுக்கிணறு என்றும் வைத்துக் கொள்ள முடியும். மீதியைக் கடக்கவில்லை என்றால் கிணற்றில் விழுவதாகவே முடியும். அப்படி நேர்ந்தால் எல்லாமே பாழ். இப்போது விரைவாகச் செயற்படுத்தப்பட வேண்டியவை புதிய அரசியலமைப்புத் திருத்தம்.

அது தனியே நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை நீக்குவதோடு மட்டுப்பட முடியாது. அதற்கு அப்பால், இந்த நாட்டைப் பீடித்துள்ள அத்தனை பிணி, பீடைகள், சிக்கல்களுக்கும் தீர்வைத் தரும் வகையில் திருத்தம் செய்யப்படுவது அவசியம். முக்கியமாக இனப் பாகுபாட்டை மறுதலித்து பன்மைத்துவத் தேசமாக இலங்கையை எடுத்துக்கொண்டு உருவாக்கப்பட வேண்டும்.

இல்லையென்றால் மீள மீளப் பிரச்சினையும் துயரமுமே நீடிக்கும். இது எல்லாப் பிரச்சினைகளுக்கும் நிவாரணமளிக்க வேண்டிய, தீர்வு காண வேண்டிய சூழல். காலமும் அதற்கிணையாகக் கனிந்துள்ளது.

இதை மறுதலிக்கும் விதமாக எந்தத் தலைமையாவது, எந்தக் கட்சியாவது சிந்தித்தால் அதற்குத் தண்டனை அளிக்கப்பட வேண்டும். மக்கள் அவற்றை இனங்கண்டு விலக்க வேண்டும். மாயமான்களில் மீள மீள மயங்கி விடக் கூடாது.

ஊடகவியலாளர் சக்திவேல் எழுதிய களுமுந்தன்வெளி முத்துமாரியம்மன் பாமாலை இறுவெட்டு வெளியீட்டு விழா

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் களுமுந்தன்வெளி விநாயகர் கலைக் கழகத்தின் 36வது ஆண்டு நிறைவை முன்னிட்டு களுமுந்தன்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் மீது பாடலாசிரியரும், ஊடகவியலாளருமான வ.சக்திவேல் எழுதிய பாமாலை இறுவெட்டு வெளியீட்டு விழா அண்மையில் களுமுந்தன்வெளி முத்துமாரியம்மன் முன்றில் இடம் பெற்றது.

இறுவெட்டிற்கு கிழக்கிலங்கையின் புகழ்பூத்த இசையமைப்பாளர் நிஸ்கமானந்தராஜா டனூஷ்ஷியன் இசையமைத்துள்ளதுடன், இலங்கை வானொலி கலைஞரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான கலைச்சுடர் வீ.பத்மசிறி மற்றும் பாடகி செல்வி சுலக்ஷனி புவனேந்திரராசா ஆகியோர் இணைந்து பாமாலையினை பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

களுமுந்தன்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் விநாயகர் கலைக்கழகத்தின் தலைவரும் ஆசிரியருமான மு.சவுந்தரராசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு அதிதியாக களுமுந்தன்வெளி மாணிக்கப் பிள்ளையார் மற்றும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயங்களின் பிரதம குரு சிவ ஸ்ரீ த.கு.திருச்செல்வம் குருக்களும், பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக் கழத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் கட்புல தொழில்நுட்பத்துறையின் தலைவர் கலாநிதி.சு.சிவரெத்தினமும், சிறப்பு அதிதிகளாக களுமுந்தன்வெளி கஜமுகன் வித்தியாலயத்தின் அதிபர் நா.ராமேஸ்வரன், களுதாவளை சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயத்தின் தலைவர் ஞா.யோகநாதன், செட்டிபாளையம்ம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் தலைவர் யோகராஜா,முன்னாள் அதிபர் வீ.கோபாலபிள்ளை, உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

விநாயகர் கலைக்கழகத்தின் உப தலைவரும் ஆசிரியருமான ந.தரணிதரனின் வரவேற்புரையினைத் தொடர்ந்து இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்பிற்கான தலைவர் த.வசந்தராஜா இறுவெட்டை வெளியிட்டார்.

இறுவெட்டின் முதற் பிரதியை மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவரும் மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் ஆலோசகருமான தேசபந்து எம்.செல்வராஜா பெற்றுக் கொண்டார்.

தொல்பொருள் அடையாளச் சின்னங்களுக்கு பெரும் சேதங்களை விளைவித்த போராட்டம்!

இலங்கை தனது வரலாற்றில் பல்வேறு போராட்டங்களுக்கு முகம் கொடுத்துள்ளது. பண்டைய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் அந்நிய படையெடுப்புகளுக்கு எதிராகப் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

அதன் பின்னர் இலங்கையில் ஐரோப்பியர்கள் காலடி பதித்த பின்னர் காலத்துக்குக் காலம் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. நாடு சுதந்திரமடைந்த பின்னரும் ஆட்சியாளர்களுக்கு எதிராக பல போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

அரசியல் கட்சிகளினால் முன்னெடுக்கப்பட்டுள்ள அகிம்சைப் போராட்டங்கள், அதன் பின்னர் பிரிவினைவாதக் குழுக்களால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டங்கள் என்பவற்றுக்கெல்லாம் நாடு பல தசாப்தங்களாக முகங்கொடுத்திருந்தது. இந்த வரிசையில் தற்பொழுது மக்கள் முன்னெடுத்த போராட்டம் இணைந்து கொண்டுள்ளது.

ஆட்சியாளர்களுக்கு எதிராக நாட்டு மக்களில் ஒரு தரப்பினர் ஒன்றுதிரண்டு நடத்திய போராட்டமாக தற்பொழுது நடைபெறும் போராட்டங்களைக் குறிப்பிட முடியும். பொருளாதார நெருக்கடியினால் உருவெடுத்த பல்வேறு காரணங்களை முன்வைத்து பெரும்பாலும் சாதாரண பொதுமக்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமாக இது கூறப்படுகிறது.

அதேசமயம் அரசுக்கு எதிரான சில அரசியல் சக்திகளும் இப்போராட்டத்தின் பின்னணியில் மறைமுகமாக இயங்குவதை மறுக்க முடியாது. இன்றைய போராட்டங்களில் சில அரசியல் சக்திகள் உள்ளே புகுந்து குழப்பங்களை ஏற்படுத்துவதாக ஆர்ப்பாட்டத்தில் உள்ளவர்களே கூறும் நிலையை இன்று காணக் கூடியதாகவுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து வெளியேறுமாறு கோரி அகிம்சை வழியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் குறிப்பாக மிரிஹானவில் உள்ள அவருடைய தனிப்பட்ட வீட்டுக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் இறுதியில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

பொதுச்சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் புகுந்த ஒரு சில குழுவினர் இதனைக் குழப்பியதாகக் கூறப்பட்டது. அதன் பின்னர் ரம்புக்கண பகுதியில் எரிபொருள் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தில் பெற்றோல் பவுசரை தீயிட சிலர் முயற்சித்ததாகக் கூறி பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்து, பலர் காயமடைந்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் சாதாரண அகிம்சை வழியிலான போராட்டங்களைக் குழப்பும் செயற்பாடுகளாகக் காணப்பட்டன. எனவேதான் போராட்டங்களுடன் அரசியல் தொடர்பும் உள்ளதாகச் சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

இதன் பின்னர் கடந்த மே மாதம் 09 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான தரப்பினர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்திய தாக்குதல்களின் எதிரொலியாக பெரும் களேபரம் வெடித்தது.

கொழும்புக்கு அழைத்து வரப்பட்டிருந்த மஹிந்த ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர். அவர்களை அழைத்து வந்த தனியார் பேருந்துகள் அடித்து நொருக்கி நாசப்படுத்தப்பட்டன. அது மாத்திரமன்றி, மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக உள்ளார்கள் எனக் கூறி பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் பலருடைய வீடுகள் வன்முறைக் கும்பல்களால் தீயிடப்பட்டன.

'அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் அகிம்சைப் போராட்டம்' எனக் கூறப்பட்டாலும் இடதுசாரிக் கொள்கையைக் கொண்ட ஒரு சில அரசியல் கட்சிகள் பின்புலத்தில் இருந்து கொண்டு இவ்வாறான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதாக பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர். இருந்த போதும் குறிப்பிட்ட அரசியல் கட்சிதான் இந்த வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது என்பதற்கான ஆதாரங்கள் இதுவரை சட்டரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை.

அதேநேரம், அகிம்சை வழியிலான போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக ஆஜராகுவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினரும் ஏனைய சட்டத்தரணிகளும் தாமாகவே முன்வந்தனர். இதனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு மேலும் உற்சாகம் கிடைத்தது.

சட்டத்தரணிகளின் இந்தச் செயற்பாட்டை பாதிக்கப்பட்ட அரசியல்வாதிகள் பலரும் விமர்சித்தனர். இந்தப் பலத்தினால் ஆர்ப்பாட்டக்காரர்கள் எல்லை மீறி செயற்படுகின்றனர் என்ற கருத்துக்களும் அவர்களால் முன்வைக்கப்பட்டன.

இவ்வாறான பின்னணியில் கடந்த ஜூலை 09ஆம் திகதி ஆயிரக்கணக்கானவர்கள் கொழும்பில் ஒன்று கூடி அரசாங்கத்தை பதவி விலகச் செய்வதற்கான போராட்டத்தை மேற்கொண்டனர்.

அரச கட்டடங்கள் எந்தவொரு தனிநபரதும் தனிப்பட்ட சொத்துகள் அல்ல; நாட்டின் பாரம்பரிய அடையாளங்களான உடைமைகள் சேதமாக்கப்பட்டிருப்பதால் அமைதியை விரும்பும் மக்கள் வேதனை!

ஆர்ப்பாட்டக்காரர்களுக்குள் ஊடுருவிய வன்முறைக் கும்பல்கள் நடத்திய அத்துமீறல்கள்!

ஆட்சியதிகாரங்கள் மாறலாம். ஆனால் நாட்டின் நற்பெயரும், பொதுஉடைமைகளும் பாதுகாக்கப்பட வேண்டியது மிக முக்கியம்!

இதற்கும் அப்பால் பல வருட வரலாறு கொண்ட தொல்பொருள் அடையாளச் சின்னங்களாகும். ஆர்ப்பாட்டக்காரர்களால் இந்த இடங்கள் கைப்பற்ற போதும், அவர்கள் இவற்றின் பெறுமதி குறித்துப் பெரிதும் அலட்டிக் கொள்ளாமல் இருந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் அவற்றைக் கண்காட்சிக் கூடங்களாக்கியிருந்தனர்.

பொழுதுபோக்கிற்காக இந்தக் கட்டடங்களுக்குள் சென்று அங்குள்ளவற்றைப் பயன்படுத்துவது, நீச்சத் தடாகத்தில் குளிப்பது, பெறுமதிமிக்க பொருட்களை சேதப்படுத்தி நாசப்படுத்துவது போன்ற விரும்பத்தகாத செயற்பாடுகள் பலவும் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறான நடவடிக்கைகள் உண்மையில் போராட்டத்தின் நோக்கத்தை திசைதிருப்பும் வகையில் அமைந்திருந்தன.

ஒரு நாட்டின் முக்கிய பொறுப்புக்களை வகிக்கும் தரப்பினரின் உத்தியோகபூர்வ அலுவலகங்களில் பெறுமதியான ஆவணங்கள் காணப்படக் கூடிய சூழ்நிலையில், வெறுமனே வேடிக்கைக்காக மாத்திரம் அந்த இடங்களைப் பயன்படுத்துவது சாதாரண பொதுமக்கள் மத்தியில் போராட்டம் குறித்த நெருடலை ஏற்படுத்தியிருந்தது.

பிரதமர் அலுவலகத்திலும். ஜனாதிபதி மாளிகையிலும் காணப்பட்ட பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை குறித்தும், சிலவற்றை திருடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றியும் ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. இதுபோன்ற செயற்பாடுகள் போராட்டம் பயணிக்கும் திசை தொடர்பான சந்தேகங்களை ஏற்படுத்தியிருந்தன.

அது மாத்திரமன்றி, கடந்த 13 ஆம் திகதி புதன் கிழமை பிரதமர் அலுவலகத்தைக் கைப்பற்றியபின்னர் பாராளுமன்றத்துக்கு அருகிலுள்ள சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் நுழைவதற்கு சில ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சியெடுத்திருந்தனர்.

போராட்டத்தை தாமே ஆரம்பித்ததாகக் கூறிக் கொள்ளும் ஒரு சில சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் மக்களைப் பிழையாக வழிநடத்தி சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தை முற்றுகையிடுவதற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இந்தப் பகுதியில் ஏராளமான பாதுகாப்புத் தரப்பினர் குவிக்கப்பட்டிருந்த நிலையில், போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையில் தேவையற்ற மோதலை ஏற்படுத்துவதற்கு இந்தத் தரப்பினர் முயற்சித்தனர்.

(22ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...✍

விண்வெளி ஆய்வுத் துறையில் உலகுக்கு சவால் விடும் இந்தியா!

பொருளாதார வளர்ச்சியில் மாத்திரமன்றி, விண்வெளி ஆய்வுத்துறையிலும் உலகின் முன்னணி நாடுகளுக்கு சவால் விடும் வகையில் துரிதமாக முன்னேறி வருகின்றது இந்தியா.

இந்தியாவின் தேசிய வளர்ச்சிக் கொள்கைகளில் பிரதமர் நரேந்திரமோடி கடைப்பிடித்து வருகின்ற நவீனத்துவம் வாய்ந்த திட்டங்களே இதற்கான பிரதான காரணமாகும். இந்தியாவின் கடந்த கால அரசாங்கங்களை எடுத்து நோக்குகின்ற போது, பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சிக்காலத்திலேயே விண்வெளித்துறையில் பெரும் சாதனைகள் ஈட்டப்பட்டுள்ளன எனலாம்.

விண்வெளித்துறை ஆராய்வு திட்டங்கள் மாத்திரமன்றி நவீன தொழில்நுட்பத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதில் பிரதமர் நரேந்திரமோடி தனியான கரிசனையுடன் செயல்பட்டு வருகின்றார். அதன் காரணமாகவே உலக நாடுகளுக்கு சவால் விடும் வகையில் விண்வெளி ஆய்வுத்துறையில் இந்தியா புதிய சாதனைகளில் காலடி பதித்து வருகின்றது.

இந்த முன்னேற்றகரமான திட்டங்களின் அடுத்த கட்டமாக இந்த வருடத்தில் சந்திரயான்3, ஆதித்யா எல்1 உட்பட 12 விண்வெளி ஆய்வுத் திட்டங்களை செயல்படுத்த இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான 'இஸ்ரோ' திட்டமிட்டுள்ளது. இந்திய விண்வெளி ஆய்வுத் திட்டங்களைப் பொறுத்தவரை இந்த 12 திட்டங்களும் முக்கிய மைல்கல் எனலாம்.

இந்திய நாட்டுக்குத் தேவையான தகவல் தொடர்பு, தொலையுணர்வு, வழிகாட்டுதல் செயற்கைக் கோள்களை பி.எஸ்.எல்.வி, ஜி.எஸ்.எல்.வி ரொக்கெட்டுகள் மூலம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) விண்ணில் நிலை நிறுத்தி வருகிறது. அதனுடன் அறிவியல் ஆராய்ச்சியில் சந்திரயான், மங்கள்யான் உள்ளிட்ட பல்வேறு தொடர்சாதனைகளையும் இந்தியா மேற்கொண்டு வருகிறது.

இதற்கிடையே கொரோனா பரவலால் கடந்த 2 ஆண்டுகளாக 'இஸ்ரோ' செயற்பாடுகள் பெரிதும் தாமதமடைந்தன. கடந்த 2 ஆண்டுகளில் 5 செயற்கைக் கோள்களை மட்டுமே இஸ்ரோ விண்ணில் செலுத்தியிருந்தது. இவ்வாறான நிலையில், இந்த ஆண்டில் சந்திரயான்3, ஆதித்யா எல்1 உட்பட 12 ஆய்வுத் திட்டங்களை செயல்படுத்த இஸ்ரோ இலக்கு நிர்ணயித்துள்ளது.

இந்தியா 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் இன்றுவரை பெருமளவில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை அடைந்து வருகின்றது. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் போன்ற முன்னுரிமை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பகுதிகளைக் கண்டறிந்து வளர்ந்து வருகின்றது.

இந்தியாவில் பல அணு ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. இந்திய நாடு அணு ஆற்றல் வளர்ச்சிக்கு முதன்மை அளிப்பது போல விண்வெளி ஆய்வுக்கும் முன்னுரிமை அளித்து வருகிறது. இத்திட்டங்களுக்காக பிரதமர் நரேந்திரமோடி அதிக முக்கியத்துவம் அளித்து ஊக்குவித்து வருகின்றார்.

சந்திரன், செவ்வாய் திட்டங்களையடுத்து எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் வெள்ளி கிரகத்துக்கு விண்கலம் அனுப்பும் இலக்கு!

இவ்வருடத்தில் 12 ஆய்வுத் திட்டங்களை செயற்படுத்த இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான 'இஸ்ரோ' திட்டம்!

நவீன தொழில்நுட்ப இந்தியாவை உருவாக்குவதில் பிரதமர் நரேந்திர மோடி அதிக கரிசனை, ஊக்குவிப்பு

தொலைத் தொடர்பு, தொலைக்காட்சி ஒளிபரப்பு, வானிலை, இயற்கை வளங்களைக் கண்டறிதல் போன்றவற்றின் வினைத்திறனை வளர்ப்பதற்கு செயற்கைக்கோள்களை உருவாக்கி அவற்றை விண்ணில் ஏவும் முயற்சி வரை இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டுள்ளது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் வெள்ளி கிரகத்துக்கு விண்கலம் அனுப்ப 'இஸ்ரோ' திட்டமிட்டுள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான 'இஸ்ரோ', செவ்வாய் கிரகத்துக்கு விண்கலம் அனுப்பும் 'மங்கள்யான்'திட்டத்தை நிறைவேற்றியது. சந்திரனுக்கு விண்கலம் அனுப்பும் சந்திரயான்1, சந்திரயான்2 திட்டங்களையும் மேற்கொண்டது.

அதைத் தொடர்ந்து தற்போது வெள்ளி கிரகத்தின் மீது இஸ்ரோவின் பார்வை பதிந்துள்ளது. வெள்ளி கிரகத்தை ஆராய்ச்சி செய்ய விண்கலம் அனுப்ப 'இஸ்ரோ' திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது. இத்திட்டத்தில் பிரான்ஸ் நாடும் பங்கேற்கிறது. இந்தத் தகவலை பிரான்ஸ் நாட்டு விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான சி.என்.இ.எஸ். தெரிவித்துள்ளது. இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சித் திட்டத்தில் முதல்முறையாக பிரான்ஸ் இடம்பெறுவதாக அந்நிறுவனம் கூறியுள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...✍

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட எட்டாவது ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் எதிர்ப்புக் காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று– முன்தினம் பதவியேற்றுள்ளார். புதிய ஜனாதிபதி யொருவர் நியமிக்கப்படும் வரை ரணில் விக்கிரமசிங்க அப்பதவியை வகிப்பார்.

இலங்கையின் அரசியலில் பதற்றம் நிறைந்த நாட்கள்!

பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச, டலஸ் அழகப்பெரும ஆகியோரின் பெயர்கள் புதிய ஜனாதிபதி தெரிவுக்காக முன்மொழியப்படலாமென ஊகங்கள்!

நாட்டின் அரசியல் களத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வரை தொடரும் பெரும் பரபரப்பு!

வார இறுதி
அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

கோட்டாபய ராஜ–பக்ஷவின் பதவி விலகலையடுத்து, புதிதாகப் பதவி–யேற்கவிருக்கும் ஜனாதிபதி யார்?

ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியிருந்த நிலையில், அவருடைய பதவிவிலகல் கடிதம் கடந்த 14 ஆம் திகதி இரவு தனக்குக் கிடைத்ததாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வெள்ளிக்கிழமை காலை அறிவித்திருந்தார்.

இதற்கமைய கடந்த 14 ஆம் திகதியுடன் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியுள்ளார். அரசியலமைப்பிற்கு அமைய ஜனாதிபதி பதவிக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரடியாகப் பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

இலங்கை வரலாற்றில் இது புதியதொரு அத்தியாயமாகப் பதியப்படுகிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் கீழ் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னரே பதவியை இராஜினாமாச் செய்த முதலாவது ஜனாதிபதி என்ற பெயரையும் கோட்டாபய ராஜபக்ஷ பெற்றுள்ளார்.

இவருடைய காலத்தில் எடுக்கப்பட்ட சில தவறான தீர்மானங்கள் மற்றும் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக இலங்கையிலும் உருவெடுத்த சிக்கல்களால் அவர் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

இதற்றை அடிப்படையாகக் கொண்டே கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கடந்த 9 ஆம் திகதி ஆயிரக்கணக்கானவர்கள் கொழும்பில் ஒன்று கூடி நடத்திய பாரிய ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இந்த நிலையில் கோட்டாபயவின் பதவி விலகல் கடிதம் சபாநாயகருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்தே புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஜனாதிபதி பதவியில் வெற்றிடம் ஏற்பட்டால் அதனை நிரப்புவது தொடர்பான விடயங்கள் அரசியலமைப்பின் 40 ஆவது சரத்து மற்றும் 1981ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க சட்டத்துக்கு அமைய முன்னெடுக்கப்படும். இதற்கு அமையவே பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதிப் பதவி வெற்றிடமான திகதிக்குப் பின்னர் இயன்றளவு விரைவாகவும், எச்சந்தர்ப்பத்திலும், அத்திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிந்தாமலும் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும். இதற்கமைய இந்த வெற்றிடம் ஏற்பட்டு மூன்று நாட்களுக்குள்ளாகப் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு அழைப்பு விடுப்பதாகச் செயற்படுதல் வேண்டும் என்பதுடன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் அத்தகைய கூட்டத்துக்கென நிர்ணயிக்கப்படும் திகதியையும், நேரத்தையும் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

அவ்வாறு பாராளுமன்றம் கூடும்போது ஜனாதிபதிப் பதவியில் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டுள்ளது எனச் செயலாளர் நாயகம் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பார். இதற்கமைய நியமனங்கள் அவரால் பெற்றுக் கொள்ளப்படுவதற்கான திகதியையும் நேரத்தையும் அவர் நிர்ணயிப்பதுடன், கூட்டத் திகதியிலிருந்து 48 மணித்தியாலங்களுக்கு முந்தாததும், ஏழு நாட்களுக்குப் பிந்தாததுமான ஒரு திகதியாக அது இருக்க வேண்டும். இதற்கு அமையவே சனிக்கிழமை (16) கூடிய பாராளுமன்றத்தில் ஜனாதிபதிப் பதவி வெற்றிடம் குறித்து அறிவிக்கப்பட்டது.

இது தவிரவும், குறித்த சட்டமூலத்துக்கு அமைய நியமனங்கள் பெற்றுக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியன்று பாராளுமன்றம் கூட வேண்டும் என்பதுடன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அலுவலராகவும் செயலாற்றுவார்.

ஜனாதிபதிப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கென எவரேனும் உறுப்பினரின் பெயரை முன்மொழிய விரும்பும் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் எந்த உறுப்பினரின் பெயரை முன்மொழிய விரும்பகிறாரோ, அந்த உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஜனாதிபதி பதவியில் அவர் சேவை செய்ய விருப்புடையவராகவுள்ளார் எனக் கூறும் எழுத்திலான சம்மதத்தை அத்தகைய உறுப்பினரிடமிருந்து முன்னர் பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.

அவ்வாறு சம்மதத்தைத் தெரிவித்த உறுப்பினர்கள் அன்றைய தினம் பாராளுமன்றத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும். வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது பற்றிய திகதிகளை சபாநாயகர் அறிவித்திருந்தார். இதற்கமைய எதிர்வரும் 19 ஆம் திகதி வேட்புமனுக்கள் கோரப்படவிருப்பதுடன், 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதி ஒருவரை பாராளுமன்றத்தின் ஊடாகத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

புதிய ஜனாதிபதிப் பதவிக்கு பதவிக்கு உறுப்பினர் ஒருவரின் பெயர் மட்டுமே முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டிருந்தால் அவர் அந்தகைய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென செயலாளர் நாயகம் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பார். ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அவ்வாறு முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு இருப்பின் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நேரத்திலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாத ஒரு திகதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என சட்டம் குறிப்பிடுகிறது. புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும். தெரிவத்தாட்சி அலுவலரினால் வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வாக்களிப்பு இடம்பெறும். வாக்களிப்பு பூர்த்தியடைந்ததும் வாக்குகள் எண்ணப்பட்டு வெற்றி பெற்றவர் அறிவிக்கப்படுவார்.

இருவருக்கு இடையில் அல்லது அதற்கும் மேலான எண்ணிக்கை கொண்ட வேட்பாளர்களுக்கிடையில் சமமான வாக்குகள் காணப்பட்டால் குறைந்த வாக்குகள் பெற்றவரின் வாக்குகள் நீக்கப்பட்டு அதில் இரண்டாவது விருப்பத் தெரிவு மற்றையவர்களுக்கு வழங்கப்படும். இவற்றின் அடிப்படையிலேயே புதிய ஜனாதிபதி தேர்வு செய்யப்படுவார்.

சட்ட மற்றும் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் இவ்வாறிருக்கும் நிலையில், புதிய ஜனாதிபதியாக யாருடைய பெயர்களை முன்மொழிவது என்பது தொடர்பில் அரசியல் கட்சிகள் மத்தியில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுனவின் சுயாதீனக் குழுவினர் உள்ளிட்டவர்கள் புதிய ஜனாதிபதி மற்றும் புதிய பிரதமர் தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளனர். அதேநேரம், தற்பொழுது ஆளும் கட்சியாக இருக்கும் பொதுஜன பெரமுன கட்சியும் தமது சார்பில் ஜனாதிபதி பதவிக்கு ஒருவரின் பெயரை முன்மொழியலாம் என்றும், சில வேளைகளில் தற்போதைய பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரையே அவர்கள் முன்மொழியக் கூடும் என்றும் அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அவ்வாறான பட்சத்தில் தற்பொழுது காணப்படும் பெரும்பான்மையைப் பயன்படுத்தி அவர் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மறுபக்கத்தில் சஜித் பிரேமதாச மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோரின் பெயர்களும் அடிபடுகின்றன. எவ்வாறு இருந்தாலும் பாராளுமன்றத்தில் உள்ளவர்களே தற்போதைய பிரச்சினைகளுக்கு இடைக்காலத் தீர்வொன்றை வழங்க முடியும். குறிப்பாக சர்வகட்சி அரசாங்கமொன்று அமையப்பட வேண்டும் என்றும், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் யாவும் இதில் பங்கெடுக்க வேண்டும் என்ற விடயமும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

தற்பொழுது தோன்றியிருக்கும் அரசியல் சூழலில் அதற்கான வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அரசியல் கட்சிகள் தமது சுயலாப சிந்தனைகளைக் கைவிட்டு குறுகிய காலத்துக்காவது ஒற்றுமையுடன் நாட்டை தற்போதைய பிரச்சினைகளிலிருந்து வெளிக்கொணர்வதற்கு ஒன்றுபட்டு செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

அதேநேரம், யார் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றாலும் எரிபொருள், எரிவாயுத் தட்டுப்பாடு, விலைவாசி அதிகரிப்பு உள்ளிட்ட மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும். இதனையே போராட்டக்காரர்களும் நாட்டு மக்களும் சட்டவாக்கத்தைச் சேர்ந்தவர்களிடம் எதிர்பார்க்கின்றனர். அத்துடன், மக்கள் போராட்டத்துடன் புதியதொரு அரசியல் கலாசாரமொன்றும், ஊழல் நிறைந்த ஆட்சிமுறையும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே பலருடைய எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வேட்புமனுக்கள் கோரப்பட விருப்பதுடன், 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதி ஒருவரை பாராளுமன்றத்தின் ஊடாகத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு

சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதிப் பதவி வெற்றிடமான திகதிக்குப் பின்னர் இயன்றளவு விரைவாகவும், எச்சந்தர்ப்பத்திலும், அத்திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிந்தாமலும் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும்

கிறது. சுமார் 20 வருடங்களுக்கு மேலாக இப்பாதை நீர் பாயும் பாதையாகவே இருந்தது. ஒரு குழியில் சக்கரம் விழுவதில் இருந்து தப்ப முயலும்போது இரண்டு குழியில் விழும்! பல போராட்டங்களுக்கு மத்தியில் இப்பாதையில் இந்த தனியார் பஸ்சேவை இடம்பெற்று வந்தது.

புரடொப் பாதையை சீர்செய்வதாகக் கூறியே சிலர் பாராளுமன்ற உறுப்பினர்களாயினர். போக்குவரத்துக்கும் அதிகஷ்ட பிரதேசமாகத் திகழும் இவ்விடம் வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. இராவணணின் புஷ்பக விமானம் இறங்கியதாக கூறப்படும் சமதரை புல்வெளியும் இங்குதான் உள்ளது.

12 ஆம் திகதி எப்படியும் மக்களுக்கு மருந்துகள் வாங்கவும் வீட்டுக்கு பொருட்கள் வாங்கவும் மேலும் பல தேவைகளுக்காகவும் காலை ஏழுமணிக்கு எல்லாம் பாதைக்கு வந்து 9.00 மணிவரை காத்திருந்து தேங்காய் மூட்டைகளாக பஸ்சில் ஏறி பயணிக்கத் தொடங்கினர். அது மேடும் பள்ளமுமான மலைப்பாதை. ஒரு இறக்கத்தில் பஸ் கடும் வேகமாக சென்றது. கண்ணிமைக்கும் நேரத்தில் ஒருபக்க டயர் பாதையை விட்டு விலகி வடிகானில் இறங்கவே பஸ் பக்கச் சுவர் போன்ற மண் மேட்டில் சாய்ந்து நின்றது.

புசல்லாவ பஸ் விபத்தில் இருவர் நசுங்கிப் பலி!

மேடும் பள்ளமுமான குறுகிய மலைப்பாதைகள்; நியூட்ரலில் வாகனத்தை செலுத்தும் சாரதிகள்

புஸ்ஸலாவ புரடொப் பாதையை பயன்படுத்தும் மக்கள் தொகை மிகப்பெரியது. சுமார் 12 தோட்டப்பகுதிகளையும் இரண்டு கிராமங்களையும் சேர்ந்த 30 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர்.

இப்பாதை புஸ்ஸலாவ நகரில் இருந்து றஸ்புக்வரையில் 21 கிலோமீட்டர் தூரம் வரை நீண்டுள்ளது. புரடொப் பொதுவாகவே போராட்டம் ஆர்ப்பாட்டம் என்பன வற்றிக்கு பெயர்போன பகுதி.

போக்குவரத்து தொடர்பான 100கும் மேற்பட்ட போ ராட்டங்கள், ஆர்பாட்டங்கள், உபவாச ங்கள் கடந்த 20 வருடகாலப்பகுதியில் இடம் பெற்று வந்துள்ளன.

இப்பாதையில் அரச போக்குவரத்து ப ஸ்சேவை நீண்டகாலமாக இடம்பெற்று வந் துள்ளது. கடந்த 15 வருடங்களாக இ.போ.ச பஸ்சேவை, பாதை சேதம். போக்குவரத்து செய்ய முடியாது என்ற காரணங்களின் பேரில் தன் சேவையை நிறுத்திக் கொண்டது.

இதன் பின்னர் சுமார் 15 வருடகாலமாக தனியார் பஸ்சேவையே இடம்பெற்று வருகிறது. உலக முடிவு என்ற Worlds End இங்கிருந்து சமீபம்.

இங்குள்ள பாடசாலைகளுக்கு புசல்லாவ நகரில் இருந்தே ஆசிரியர்கள் வருகின்றனர். இந்த 12 தோட்டப் பகுதிகளிலும் சதொச கூட்டுறவு கடை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வைத்தியசாலைகள் இங்கே இல்லை. இதனால் மக்கள் புசல்லாவ நகருக்கு கட்டாயம் வந்து சென்றே ஆகவேண்டும். 9 ஆம், 10 ஆம் திகதிகளில் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டதுமே பொருள் கொள்வனவில் ஈடுபடுவர். கடந்த 9 ஆம்,10 ஆம் திகதிகளில் வாகன போக்குவரத்துகள் இல்லாததால் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன.

ஐயோ அம்மா என ஒரே அழும்குரல் ஒப்பாரி! பஸ்சில் கூட்டம் அதிகம் என்பதால் மிதிபலகையில் பயணித்தவர்களில் இருவர் சாய்ந்த மண் மேட்டுக்கும் பஸ் சுக்கும் இடையில் அகப்பட்டு நசுங்கிப்போனார்கள்.

பலர் ஜன்னல் வழியாக பாய்ந்து வெளியேறினர். பஸ்சின் முன்பக்க முகப்பு கண்ணாடியை பஸ்சாரதி உடைத்து உள்ளிருப்பவர்களை வெளியே போகும்படி சொல்லிக் கொண்டிருந்தார். ஏனெனில் இரண்டு இறங்குவழிகளிலும் அடைபட்டுக் கிடந்தன.

அருகில் வீடன் தோட்டத்தில் தேயிலை மலையில் வேலை செய்து கொன்டிருந்தவர்கள் வந்து பயணிகளை பத்திரமாக வெளியேற்றினர். அந்த நேரத்தில் எங்கே சாரதி என சத்தம் போட்டவாறு ஒரு கூட்டம் வர சாரதியும் நடத்துனருடன் தப்பியோடி புசல்லாவ பொலிஸில் சரணடைந்தனர்.

பஸ்சுக்கும் மண் மேட்டுக்கும் இடையில் அகப்பட்டவர்களை எடுக்க முடியவில்லை. பல போராட்டங்களுக்கு மத்தியில் கூடிநின்ற இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் முயற்சி செய்து பஸ்சை நிமிர்த்தி பாதையில் ஏற்றினர். இருவரையும் ஒருமணித்தியாலத்திற்கு பின் வெளியில் எடுத்தனர் ஊர்மக்கள் துடித்து போனார்கள். ஏனெனில் சடலங்களாகவே அவர்களை மீட்க முடிந்தது.

19 வயதான ஒரு பிள்ளையின் தந்தையும் 38 வயதான 4 பிள்ளைகளின் தந்தையுமே பரிதாபமாக இறந்தவர்கள். பலருக்கு அடிப்பட்டிருந்தாலும் அவை உட்காயங்கள் பெரிதாக வெளிக்காயங்கள் தெரியவில்லை.

இருவரது பரிதாப மரணத்தைப் பார்த்த பல நூற்றுக்கணக்கான மக்கள் அமைதி இழந்து ஆத்திரமடைந்தனர். பொறுமைகாத்த கூட்டத்திற்கும் பொங்கி எழுந்த கூட்டத்திற்கும் இடையில் கோஷ்டி மோதல் ஏற்பட்டது.

தெல்தொட்டை நவராஜா...✍
(புகைப்படங்கள் : தெல்தொட்டை தினகரன் நிருபர்)

நியூட்ரலில் பள்ளமான பாதையில் வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்பது தெரிய வந்தது. சம்பவத்தைக் கேள்விப்பட்டதும் அங்கு வந்த கம்பளை பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணையில் இருந்த போதே பஸ் வண்டிக்குள் புகை கிளம்பியது. மெதுமெதுவாக தீப்பரவி பஸ் எரியத்தொடங்கியது. ஆத்திரமடைந்த மக்கள் தீ மூட்டினார்களா? தீப்பற்றி கொண்டதா? எப்படியினாலும் பஸ் எரிந்து சாம்பலானது.

வேகமாக வந்ததால் பஸ் கட்டுப்பாட்டு இழந்ததா? நியூட்ரலில் வந்ததால் ஏற்பட்ட விபத்தா? காரணம் இனி மேல்தான் தெரியவரும்.

பெற்றோல் டீசல் இல்லை என்பதால் இன்று பல வாகனங்கள் பள்ளமான இடங்களில் நியூட்ரலில்தான் வாகனங்களை இயக்குகிறார்கள். பெற்றோல், டீசல் தட்டுப்பாடு இல்லாத காலங்களில் கூட நியூட்ரலில் வாகனங்களை செலுத்தும் பழக்கம் மலையகப் பகுதிகளில் உண்டு. பொலிஸார் முன்பு நியூட்ரலில் சென்றால் தண்டம் அறவிடுவர். எரிபொருள் தட்டுப்பாட்டின் பின் பொலிசாரின் கரிசனையும் குறைந்தது விட்டது. பெற்றோல், டீசல் இல்லை என பஸ்காரர்கள் சும்மா இருந்துவிடவும் முடியாது. பினேன்ஸ் கட்ட வேண்டும், தனது குடும்ப செலவைப் பார்க்க வேண்டும் என்று தனது தொழிலை தொடர்கின்றனர். இந்நிலையில் இச் சாரதி நியூட்ரலில் வந்திருக்கக் கூடும் என்றாலும் இதற்கு விஞ்ஞான பூர்வமான ஆதாரங்கள் இல்லை. என்ஜினை நிறுத்திவிட்டு முச்சக்கர வண்டிகள், பஸ்கள், லொறிகள் என்பனவும் நியூட்ரலில் செல்வதை இயல்பாக காணலாம். இந்த புரடொப் பஸ் விபத்துக்கான காரணம் எதுவாக இருந்தாலும் பெறுமதிமிக்க இரண்டு மனித உயிர்களை காவு கொண்டிருக்கிறது. அதிகமான பயணிகளுடன் பஸ் பயணித்ததாக ஒரு குற்றச்சாட்டு உள்ளது. ஒரு பஸ்ஸை விட்டால் அடுத்த இரண்டு மணித்தியாலங்களுக்கு பாதையில் ஒரு பஸ் கூட வருவதில்லை. எனவே கூரைமீது ஏறியாவது மக்கள் பயணிக்கத்தான் செய்வார்கள்.

வாழ்க்கைச்செலவு உயர்வும் கைக்கெட்டாத சம்பள அதிகரிப்பும்

இன்றைய நிலையில் வாழ்க்கைச் செலவு தினம்தினம் உயர்ந்து கொண்டே செல்கின்றது. நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலையை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு கொள்ளை இலாபமடிக்கும் வர்த்தகர் சிலரின் நடவடிக்கைகளால் நிலைமை மேலும் மோசமடையவே செய்கின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கோ கண்காணிப்பதற்கோ கையாளாகாத நிலையில் பொறுப்பு சார்ந்த துறைகள் வாளா விருக்கின்றன.

நினைத்தாற்போல உணவுப் பொருட்களின் விலையை உயர்த்தக்கூடிய வாய்ப்பு உற்பத்தியாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் ஏற்பட்டுள்ளதால் அவர்கள் காட்டில் மழையான மழை. பாவம் நுகர்வோர் விழிபிதுங்கி நிற்கிறார்கள். குறிப்பாக பெருந்தோட்ட மக்களின் பாடு பெரும்பாடு. ஏற்கனவே பற்றாக்குறை வாழ்க்கை. இறுதி நிலவரப்படி வெதுப்பக (BAKERY) உற்பத்திகள் விலை அதிகரிக்கப்பட்டுவிட்டன. பாணின் விலை 190 ரூபாவாகியுள்ளது. மாவின் விலை மேலும் அதிகரிக்கப்படலாம்.

கன் போன்ற தானிய வகைகளை மாவிற்கு பதிலாக பயன்படுத்தலாம் என்று சிலர் ஆலோசனை வழங்குகிறார்கள். இத்தானியங்கள் தேவையான அளவு கிடைப்பது இல்லை என்பதோடு விலையைக் கேட்டாலே குலை நடுங்கும்.

இந்நிலையில் மாவிற்கு மாற்றீடு எதுவுமே இருப்பதாகப்படவில்லை. கவ்பி, கடலை, பயறு பக்கம் எட்டிப் பார்க்கவே பயமாக இருக்கின்றது. மூவேளையும் அரிசி உணவைப் பயன்படுத்தும் அளவுக்குப் போதிய வருமானம் கிடைக்கவா செய்கின்றது? தவிர வெறும் மா ரொட்டியைக் கடித்துக் கொண்டு தேனீர் குடித்துக்கூட ஒரு நேர சாப்பாட்டை முடித்துக் கொள்ளலாம். ஆனால் சோறு என்றால் குறைந்தப்பட்சம் ஒரு கறியோ சம்பலோ கட்டாயம் இருந்தாக வேண்டும்.

தேங்காய் விலை குறைந்தப்பட்டு உணவுக்காக கோதுமை மாவை அதிகமாக பயன்படுத்த பழகிப் போனவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்கள். இது ஆங்கிலேயர் காலந் தொட்டு பரம்பரையாக தொடரும் உணவுப் பழக்கமாக காணப்படுகின்றது. திடுதிப்பென்று வழக்கத்தை மாற்றிக்கொள்ள எவராலும் இயலாது. தவிர அரிசி உணவை அதிகமாக பயன்படுத்தும் அளவுக்கு அரிசி விலை இல்லை. 300 ரூபாவை தொட்டு நிற்கின்றது. அத்துடன் கோதுமை மாவுக்கு மாற்றீடாக உப உணவுப் பொருட்கள் தேவைக்கேற்ப கிடைப்பதும் இல்லை. குறிப்பாக மரவள்ளிக் கிழங்கு. இதேவேளை சாமை, குரக்பாடில்லை. மரக்கறி விலை மட்டும் மலிந்து போய்க் கிடக்கின்றதா என்ன. பெருந்தோட்டப் பிரதேசங்களில் மரக்கறி உற்பத்தி மந்தநிலையை அடைந்துள்ளது. காரணம் பசளை இல்லாமை. தற்போது நாட்டுக்குள் பசளை வந்து சேர்ந்திருந்தாலும் அதில் பெருந்தோட்டப் பிரதேசங்கள் பயன்பெறுமா என்பது சந்தேகமே. பொதுவாக பெருந்தோட்டப் பிரதேசங்களில் உப உணவுப் பொருட்களே உற்பத்தியாகின்றன. தற்போது 40 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் சந்தையில் மரக்கறி விலைகளும் உயர்ந்து காணப்படுகின்றன. எனினும் இங்கு முழுமையான பயன் உற்பத்தியாளர்களான தொழிலாளர்களுக்கு கிடைப்பது இல்லை. தரகர்களும் வியாபாரிகளும் பெருத்த இலாபம் பெறுகிறார்கள். தற்போதைய எரிபொருள் நெருக்கடியால் அங்கும் அல்லாட்டம்தான். வருமானமோ கம்மி. வாழ்க்கைச் செலவோ எட்டமுடியாத உயரம். வேலை நாட்களும் குறைவு. அவர்களுக்கான நாட்சம்பளம் முழுமையாக கிடைப்பதில் ஏகப்பட்ட முரண்பாடுகள் நிலவுகின்றன.

நாட்டின் சமகால பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி கம்பனித்தரப்பு தப்பிக்கொள்கிறது. ஆனால் தற்போதைய விலைவாசி அதிகரிப்பு எதிர்காலத்தில் இறங்கு முகம் காட்டும் என்று யாராவது சொன்னால் அது வேடிக்கையாகவே இருக்கும்.

பன். பாலா ...✍

தோட்ட மக்களின் வாட்டம் போக்கக் கூடிய ஒரேவழி சம்பள அதிகரிப்பாகவே காணப்படுகின்றது. இன்னொரு வகையில் கூறுவதாயின் வருமானத்தை உயர்த்துவது. அதற்கான மாற்று தொழில் வாய்ப்புகள் எதுவும் இங்கு இல்லை.

ஒன்று தேயிலை தொழிற்துறை, அடுத்தது விவசாயம் அல்லது சுயதொழில் முயற்சி. விவசாயம் செய்வதற்கு போதுமான இடவசதி இம்மக்களுக்கு இல்லை. இருப்பதையும் பிடுங்கிக் கொள்ளப் பிரயத்தனப்படுவதாக தோட்ட நிர்வாகங்கள் மீது புகார்கள் வந்துள்ளன.

தரிசுநில விநியோகம் தாமதப்பட்டு நிற்கின்றது. இதில் பெருந்தோட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதற்கு இதுவரை எந்தவித உத்தரவாதமும் தரப்படவில்லை.

இதேநேரம் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கக்கூடிய செயற்திட்டங்கள் எதுவும் நடைமுறையில் இல்லை. தவிர அதற்கான அறிகுறிகளும் கூட தென்படவில்லை.

இதன் பின்புலத்தில் 1000 ரூபாய் தினக் கூலி எந்த மூலைக்கு என்று தொழிலாளர் ஏக்கப்பெருமூச்சு விடுவதில் அர்த்தம் இருக்கவே செய்கின்றது. பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் தமக்குள்ளே ஒற்றுமையின்றி ஆளுக்கொரு கருத்தை முன்வைப்பதையே வாடிக்கையாக கொண்டுள்ளன.

இ.தொ.கா. ஒரு கட்டத்தில் 1000 ரூபா சம்பள அதிகரிப்பை கோரியபோது வடிவேல் சுரேஷ் என்ன சொன்னார் தெரியுமா? இது சாத்தியமற்றது. உள்ளூர் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி, சர்வதேச சந்தையில் தேயிலை விலை சரிவு காரணத்தால் இது சரிப்பட்டு வராத சங்கதி என்றார் வடிவேல் சுரேஷ். இவரே பின்பொரு சந்தர்ப்பத்தில் 1000ரூபா போதாது. இரண்டாயிரமாவது வழங்கப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

இப்படி புரிந்துணர்வு இல்லாத போக்கில் பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் செயற்படுவதால் கம்பனி தரப்புக்கு இலகுவாக காய்நகர்த்த முடிகின்றது. 1000 ரூபா நாட் சம்பளம் வழங்குவதில் கம்பனித் தரப்புக்காட்டும் அசிரத்தைக்கு தொழிற்சங்கங்களின் பலவீனமே அடிப்படைக் காரணமாக உள்ளது.

உண்மையில் 1000 ரூபா நாட் சம்பளம் தற்போதைய நிலையில் போதுமானதல்ல. அது 2000 வரையில் அதிகரிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இது நியாயமான எதிர்பார்ப்பு. எனவே இதற்கான முயற்சிகளில் சகல மலையக தொழிற்சங்கங்களும் ஒற்றுமையாக இறங்க வேண்டும்.

கடந்த காலங்களில் சம்பள அதிகரிப்பு சமாச்சாரத்தைக் கேலிக்கூத்தாக்கியது போதும். இது வயிறு சார்ந்த ஒரு சமூகத்தின் தேவை.

திரைமறைவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி அல்ல இது. சகல தரப்பும் அர்ப்பணிப்புடன் சாதித்துக்காட்டக் கடமைப்பட்டுள்ள விவகாரம்.

39 வருடங்களின் பின்

2ஆம் முறையாக ஜனாதிபதியை தெரிவு செய்யும் பாராளுமன்றம்

இலங்கையின் எட்டாவது செயலதிகாரம் மிகு ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றம் கூடவுள்ளது.

ஏழாவது செயலதிகாரம் மிகு ஜனாதிபதியாகப் பதவியை வகித்த கோட்டாபய ராஜபக்ஷ, பதவி விலகியதையடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு அவர் முழு நாட்டு மக்களாலும் தெரிவு செய்யப்பட்ட 5 வருட காலத்தின் எஞ்சிய இரண்டரை வருட காலப் பகுதிக்கான ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக, பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

அரசியல் யாப்பின் 40 (1) சரத்துப்படி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும். பதவியிலுள்ள ஜனாதிபதி மரணித்து அல்லது பதவி விலகி ஒரு மாத காலத்துக்குள் இயன்றளவு விரைவில் இத்தேர்தல் நடாத்தப்பட வேண்டும். இதன்படி எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்குப் பாராளுமன்றம் தீர்மானித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களின் இரகசிய வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி தெரிவு இடம்பெற வேண்டும். புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்படும் வரை பதில் ஜனாதிபதியாக பிரதமரே பணிபுரிய வேண்டும்.

ஜனாதிபதித்தேர்தல் 1981ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் படியே நடாத்தப்படுகின்றது.

ஜனாதிபதி நாட்டு மக்களின் நேரடியான வாக்குகள் மூலமே தெரிவு செய்யப்படுவார். பதவியின் இடைக்காலத்தில் ஜனாதிபதியாக பதவி வகிப்பவர் ராஜினாமாச் செய்தால் அல்லது மரணித்தால் அல்லது குற்றப் பிரேரணை மூலம் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் அவர் தெரிவு செய்யப்பட்ட முழுமையான பதவிக் காலத்தின் எஞ்சிய காலத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்களால் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்.

இதற்கு முன் ஒரு முறையே பாராளுமன்றம் ஜனாதிபதியைத் தெரிவு செய்துள்ளது. 1983 மே மாதம் முதலாம் திகதி மேதின ஊர்வலத்தின் போது அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஆர்.பிரேமதாச படுகொலை செய்யப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அப்போதைய பிரதமராக இருந்த டீ.பி.விஜயதுங்க, ஐ.தே.க.வேட்பாளராகப் போட்டியிட்டு, ஏகமனதாகத் தெரிவானார். அதன் பின் பிரேமதாசவின் எஞ்சிய பதவிக் காலத்துக்கு டீ.பி. விஜயதுங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்தார்.

ஜனாதிபதிப் பதவியானது அரசியலமைப்பின் 38(1) ஆம் உறுப்புரைகளின் நியதிகளின் படி வறிதாகுமிடத்து இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையானதாதல் வேண்டும் என ஜனாதிபதி தேர்தல் சிறப்பு ஏற்பாடுகள் சட்டம் கூறுகிறது. ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் உறுப்பினரின் பெயரை முன்மொழிய விரும்புவர் அந்த உறுப்பினர் சேவை செய்ய விரும்புகிறார் என்ற சம்மதத்தைப் பெற்றே பெயரை முன்மொழிய வேண்டும்.

ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களது பெயர்கள் பிரேரிக்கப்பட்டால் ஜனாதிபதித் தேர்தல்கள் விசேட ஏற்பாடுகள் 3ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவுக்கமைய தேர்தலை நடாத்துவதற்கு திகதி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

தேர்தலை நடத்தும் தெரிவாட்சி அலுவலராக பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகமே பணிபுரிவார். அவரே பெயர் வரிசைப்படி அங்கத்தவர்களை வாக்களிப்

என்.எம்.அமீன் ...✍

பதற்கு அழைப்பு விடுப்பார். தெரிவாட்சி அலுவலரின் மேசை அருகே சென்று வாக்குச் சீட்டினைப் பெற வேண்டும். தெரிவாட்சி அலுவலர் வாக்குச் சீட்டில் உறுப்பினர் முன்னிலையிலே தனது கையொப்பத்தை இடல் வேண்டும்.

வேட்பாளர் எவரும் அளிக்கப்பட்ட வாக்குகளின் அரைவாசிக்கும் கூடுதலான வாக்குகளைப் பெறாத விடத்து தெரிவாட்சி அலுவலர் ஆகக் குறைந்த எண்ணிக்கையைப் பெற்ற வேட்பாளரை போட்டியிலிருந்து நீக்க வேண்டும்.

அத்துடன் போட்டியிலிருந்து நீக்கப்பட்ட வேட்பாளருக்கென அளிக்கப்பட்ட வாக்கு அவ்வுறுப்பினரது இரண்டாம் விருப்புரிமையானது எந்த வேட்பாளருக்குப் பதியப்பட்டுள்ளதோ அந்த வேட்பாளருக்கான வாக்காக எண்ணப்பட வேண்டும். இது அவர் ஏற்கனவே பெற்ற வாக்குகளுடன் சேர்க்கப்பட வேண்டும்.

மொத்த வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர் ஜனாதிபதிப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என தெரிவாட்சி அலுவலர் அறிவிக்க வேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாச படுகொலை செய்யப்பட்ட அவருடைய எஞ்சிய பதவிக் காலத்துக்கான ஜனாதிபதியாக டீ.பி. விஜேதுங்க, 1993 மே 7ஆம் திகதி தெரிவானார். இவர் 1993 மே 7ஆம் திகதியிலிருந்து 1994 நவம்பர் 12ஆம் திகதி வரை பதவி வகித்தார்.

அப்போது பாராளுமன்ற சபாநாயகராக எம். எச். முஹம்மதும் செயலாளர் நாயகமாக நிஹால் செனவிரத்னவும் பதவி வகித்தனர்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலை அப்போதைய செயலாளர் நாயகம் நிஹால் செனவிரத்னவே நடாத்தி வைத்தார். அதற்கு முன் முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரை டீ.பி.விஜேதுங்க பதில் ஜனாதிபதியாகப் பதவி வகித்தார்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் இந்த நிகழ்வை பாராளுமன்ற செய்தியாளராக நேரடியாக கண்டுகொள்ளும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. அதனை அறிக்கையிடுவதற்காக நான் அங்கு சென்றிருந்தேன்.

20ஆம் திகதி நடத்தும் தேர்தலில் தெரிவாட்சி அலுவலராகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க பணிபுரியவுள்ளார். 20ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் தெரிவாகும் ஜனாதிபதி எஞ்சியுள்ள இரண்டு வருடங்கள் 6 மாத காலத்துக்குப் பதவி வகிப்பார். தெரிவாகும் ஜனாதிபதி பதில் ஜனாதிபதி என அழைக்கப்படுவதில்லை.

ஜனாதிபதி ஒருவர் பதவி இழந்தால் பிரதமர் அல்லது சபாநாயகர் பதில் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கலாம். ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் பதவிக் காலத்தில் ஜனாதிபதியும் பிரதமர் ஆர். பிரேமதாசவும் பிரித்தானியாவின் இளவரசர் சார்ளின் திருமணத்தில் கலந்து கொள்ளச் சென்றபோது சுமார் ஒரு வார காலத்துக்கு அப்போதைய சபாநாயகராக இருந்த பேருவளையின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. பாக்கிர் மாக்கார் ஜனாதிபதியின் கடமைகளைப் புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் படி சபாநாயகர் பதவி நாட்டின் மூன்றாம் நிலைப்பதவியாகும்.

அந்த வகையிலே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயர் பதில் ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டது

ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் இலங்கைப் பாராளுமன்றம் 39 வருடங்களின் பின் எதிர்வரும் 20 ஆம் திகதி இரண்டாவது முறையாக ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்துள்ளது.

1981, 02ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும் போது புதியவர் தெரிவு செய்யப்படுவது எவ்வாறு?

அரசியலமைப்பின் 38ஆவது சரத்தின் (1) உப சரத்துக்கமைய ஜனாதிபதிப் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பின் 40ஆவது சரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமைக்கமைய பதவியை வறிதாக்கிச் செல்லும் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுறாது எஞ்சியுள்ள காலத்துக்கு மாத்திரம் அப்பதவியை வகிப்பதற்கு பாராளுமன்றத்தினால் அதிலுள்ள உறுப்பினர்களில் ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுப்பதற்குத் தகுதியுள்ள ஒருவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இதன்போது இந்தத் தெரிவு 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைப் பின்பற்றியதாக அமைந்திருக்கும்.

விசேடமாக இந்த நடைமுறை பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் தலைமையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதுடன், வாக்கெடுப்பின் போது சபாநாயகரும் வாக்களிப்பார். அத்துடன் இந்த நடைமுகைளுக்காக பாராளுமன்றம் மூன்று நாட்கள் கூடும்.

அதன்படி, சட்ட விதிகளுக்குட்பட்டதாக இந்தத் தேர்தலை நடத்துவதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- இதில் ஜனாதிபதிப் பதவி வெற்றிடமான திகதிக்குப் பின்னர் இயன்றளவு விரைவாகவும், எச்சந்தர்ப்பத்திலும் அத் திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பிந்தாமலும் இந்தத் தெரிவு நடத்தப்படுதல் வேண்டும்.
- இதற்கமைய இந்த வெற்றிடம் ஏற்பட்டு மூன்று நாட்களுக்குள்ளாகப் பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைப்பதாகச் செயற்படுதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் அத்தகைய கூட்டத்துக்கென நிர்ணயிக்கப்படும் திகதியையும், நேரத்தையும் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டும்.
- அவ்வாறு பாராளுமன்றம் கூடும் போது ஜனாதிபதிப் பதவியில் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டுள்ளதெனச் செயலாளர் நாயகம் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். இதற்கமைய நியமனங்கள் அவரால் பெற்றுக் கொள்ளப்படுவதற்கான திகதியையும் நேரத்தையும் அவர் நிர்ணயிப்பதுடன், கூட்டத் திகதியிலிருந்து 48 மணித்தியாலங்களுக்கு முந்தாததும், ஏழு நாட்களுக்குப் பிந்தாததுமான ஒரு திகதியாக அது இருக்க வேண்டும்.
- நியமனங்கள் பெற்றுக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியன்று பாராளுமன்றம் கூடவேண்டுமென்பதுடன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அலுவலராகவும் செயலாற்றுவார். ஜனாதிபதிப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கென எவரேனும் உறுப்பினரின் பெயரை முன்மொழிய விரும்பும் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் எந்த உறுப்பினரின் பெயரை முன்மொழிய விரும்பகிறாரோ, அந்த உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஜனாதிபதி பதவியில் அவர் சேவை செய்ய விருப்புடையவராகவுள்ளாரெனக் கூறும் எழுத்திலான சம்மதத்தை அத்தகைய உறுப்பினரிடமிருந்து முன்னர் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு சம்மதத்தைத் தெரிவித்த உறுப்பினர்கள் அன்றையதினம் பாராளுமன்றத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.
- இங்கு ஜனாதிபதிப் பதவிக்கு உறுப்பினர் ஒருவரின் பெயர் மட்டுமே முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டிருந்தால் அவர் அந்தகைய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென செயலாளர் நாயகம் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அவ்வாறு முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு இருப்பின் வாக்கெடுப்பை நடத்துவதற்கான திகதியும், நேரமும் பாராளுமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட வேண்டும், அத்தகைய திகதி நியமனங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நேரத்திலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாத ஒரு திகதியாக இருக்க வேண்டும்.
- வாக்கெடுப்பை நடத்துவதற்கெனநிர்யணிக்கப்பட்ட திகதியன்று செயலாளர் நாயகமே தெரிவத்தாட்சி அலுவராகச் செயற்படுவதுடன், வாக்களிப்புத் தொடங்குவதற்கு முன்னர் வெற்று வாக்குச்சீட்டுப் பெட்டியை உறுப்பினர்களுக்குக் காண்பித்து அவர்கள் முன்னிலையில் இலச்சினையிடல் வேண்டும். இதற்கமைய வாக்களிப்புத் தொடங்கியவுடன் தெரிவத்தாட்சி அலுவலராகப் பணியாற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் சபாநாயகர் உள்ளிட்ட ஒவ்வொரு உறுப்பினரினதும் பெயரையும் அழைத்தல் வேண்டும். அவ்வாறு அழைக்கப்படும் போது உறுப்பினர்கள் தெரிவத்தாட்சி அலுவலரின் மேசைக்குச் சென்று வாக்குச்சீட்டொன்றைப்பெற்றுதமதுவாக்குகளை அடையாளமிட வேண்டும். அதன் பின்னர் தமது வாக்குகளை அளிக்க வேண்டும்.
- உறுப்பினர் ஒருவர் வாக்குச்சீட்டொன்றை தற்செயலாகப் பழுதாக்கினால், அதனை அவர் தெரிவத்தாட்சி அலுவலரிடம் திருப்பிக் கொடுத்து, தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய தற்செயல் பற்றித் திருப்தியுற்றால்அவருக்கு வேறொரு வாக்குச்சீட்டைக் கொடுக்கலாம். பழுதாக்கப்பட்ட வாக்குச்சீட்டு தெரிவத்தாட்சி அலுவலரால் உடனடியாக இல்லாததாக்கப்படும். பெயர் கூப்பிடப்பட்டபோது வாக்களிக்காதிருந்த எவரேனும் உறுப்பினரின் பெயரை இரண்டாவது முறையாக அழைத்தல் வேண்டும். அவ்வாறு அழைக்கப்பட்ட பின்னரும் வாக்களிக்காதிருந்தால் அவர் வாக்களிக்காது ஒதுங்கியிருந்தவராகக் கருதப்படுவார்.
- ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு வாக்கு உரித்துடையதாக இருக்கும் என்பதுடன், எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கின்றாரோ அந்த வேட்பாளரின் பெயருக்கு எதிரேயுள்ள சதுரத்தில் '1' எனும் எண்ணை இடுதல் வேண்டும். பல வேட்பாளர்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் விருப்பத் தெரிவுகளை வழங்க முடியும். இதற்கமைய போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கமைய பெயர்களுக்கு எதிரேயுள்ள சதுரங்களில் 2,3,எனும் விருப்பத் தெரிவுகளை வழங்க முடியும்.
- இவ்வாறு வாக்களிப்பு நடைபெற்ற பின்னர் வாக்கு எண்ணும் பணி முன்னெடுக்கப்படும். எவரேனும் வேட்பாளர் வாக்குகள் எண்ணப்படும் இடத்தில் சமுகமளிக்க விரும்பினால் அதற்கு வாய்ப்புக் கிடைக்கும் அல்லது அவரது பிரதிநிதியாகச் சமுகமளிப்பதற்கு வேறொரு உறுப்பினரை நியமிக்கவும் முடியும்.
- அளிக்கப்பட்ட செல்லுபடியாகும் வாக்குகளுள் அரைவாசிக்குக் கூடுதலான வாக்குகளைப் ஒரு வேட்பாளர் பெற்றுள்ளவிடத்து தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய வேட்பாளர் ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென்பதை உடனடியாக அறிவிக்க வேண்டும்.
- அதேநேரம், வேட்பாளர் எவரும் அளிக்கப்பட்ட செல்லபடியான வாக்குகளுள்அரைவாசிக்கும் கூடுதலான வாக்குகளைப் பெறாதவிடத்து இரண்டாவது, மூன்றாவது விருப்பத் தெரிவுகள் சரிபார்க்கப்படும். இதில் குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் நீக்கப்பட்டு அவருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது விருப்பத் தெரிவு எண்ணப்படும்.
- வாக்கு எண்ணுகையின் முடிவில் வேட்பாளர் எவருமே செல்லுபடியான வாக்குகளுள் அரைவாசிக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றில்லாதவிடத்து அந்த எண்ணுகையின் போது பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ள வேட்பாளர் ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென்பதை தெரிவத்தாட்சி அலுவலர் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும்.
- அத்துடன், இரு வேட்பாளர்கள் அல்லது பலருக்கிடையிலான வாக்குகள் சரிசமமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் திருவுளச் சீட்டு போடப்படும்.

அ.கனகசூரியர் ...✍

இனவாதமும் மதவாதமுமே நாட்டை சீரழித்தது!

சுதந்திரம் பெற்ற நாள் முதல் இனவாதம், மதவாதம் மற்றும் அரிசி அரசியல் ஆகிய மூன்றையும் மையப்படுத்தியே இந்நாட்டின் தேசிய அரசியல் நடத்தப்பட்டு வந்துள்ளது. மதவாதம் பெரும்பாலும் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவத்துக்கு எதிரானதாகவே அமைந்திருந்தது. கத்தோலிக்க பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டன. ஆஸ்பத்திரிகளில் கன்னியாஸ்திரிகள் சேவையாற்றி வந்தமை விரும்பத்தகாத ஒன்றாகப் பார்க்கப்பட்டது. வெளிநாட்டு கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ பாதிரியார்கள் வெளியேறிச் செல்ல ஊக்குவிக்கப்பட்டனர்.

சிங்களம் மட்டும் சட்டம் நிச்சயம் வரவேண்டிய ஒரு சட்டமே. சிங்களவர்கள் தமது தாய் மொழியில் கற்கவும் அம்மொழியிலேயே அரசுடன் தொடர்பு கொள்ளவும் அம் மொழியையே உத்தியோக மொழியாகப் பயன்படுத்தவும் உரித்துடையவர்களே. தமிழை பூர்வீகமாக உபயோகித்து வரும் இலங்கைத் தமிழ்க் குடிகளுக்கும் அதே உரிமை உண்டு என்பதை ஒக்ஸ்போர்ட்டில் ஆங்கில வழிக் கல்வி கற்ற கிறிஸ்

தவரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க மறந்து போனது இந் நாட்டின் இன ஒற்றுமைக்கும் ஒன்றிணைந்த பொருளாதார வளர்ச்சிக்கும் குந்தகமானது. இதை அவர் நிச்சயம் உணர்ந்திருப்பார். ஆனால் சிங்களம் மட்டும் என்ற கோஷமே தன்னை பிரதமர் பதவியில் அமர்த்தும் என்பதே அவருக்கு முக்கியமானதாக இருந்தது. தாமதமாகவே தன் தவறை உணர்ந்த அவர், பண்டா செல்வா உடன்படிக்கை மூலம் அதை சரி செய்ய முயன்ற போதிலும், அவர் வளர்த்த இனவாதத் தீயே அவரை ஆகுதி ஆக்கிக் கொண்டது.

எனினும் இலங்கை அரசியலில் வாலில் தீ வைத்த அனுமனாக நீண்ட காலமாகவே வளர்ச்சிக்கான சகல வாய்ப்புகளையும் சுட்டெரித்து வந்திருப்பது இனவாதமே. இலங்கை இனவாதம் முற்றிலும் கற்பனையானது என்பதே சரியான பார்வையாக இருக்க முடியும். அது டீ.எஸ். சேனநாயக்க பற்ற வைத்த தீ. இந்தியா, இலங்கை வாழ் தமிழர்களைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி ஆக்கிரமிப்புகளை மேற்கொள்ளலாம் என்ற சிங்களத் தலைவர்களின் ஒரு அச்ச உணர்வு, உண்மையில் சோழர் படையெடுப்புகளுடன் சம்பந்தப்பட்டது. இந்தியா சுதந்திரம் பெற்றதும் தனி நாடாக விளங்கிய காஷ்மீரை தன்னுடன் இணைத்துக் கொண்டது. அதற்காக இந்தியா ஒரு யுத்தத்தை பாகிஸ்தானுடன் நடத்த வேண்டியிருந்தது. பின்னர் பிரெஞ்சு காலனியாக விளங்கிய பாண்டிச்சேரியை இணைத்துக் கொண்டது. அப்போது கோவா போர்த்துக்கேயர் வசமிருந்தது. அன்றைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேல் இராணுவத்தை அனுப்பி கோவாவை இந்தியாவுடன் இணைந்தார்.

இந்தியாவின் இப்போக்கும், திபெத் ராஜ்ஜியத்தை சீனா கபளீகரம் செய்ததும், நேபாளத்தைத் தன் பாதுகாப்பில் இந்தியா வைத்திருந்ததும், இந்தியாவுக்கு மிக நெருக்கமாக அமைந்திருக்கும் இலங்கைக்கு ஒரு பாதுகாப்பற்ற உணர்வை ஊட்டியிருந்தது. இலங்கை உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா மூக்கை அடிக்கடி நுழைப்பதற்கு இங்கு வாழும் வம்சாவளித் தமிழர்களும் தொப்புள் கொடி உறவு கொண்டிருக்கும் வட புலத்துத் தமிழர்களும் காரணிகளாக அமைவார்கள். எனவே அவர்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்ல; அவர்களுக்கு உரிமைகள் வழங்குவது இறுதியாக இந்தியாவின் விஸ்தரிப்பு வாதத்துக்கே உரம் சேர்க்கும் என்பது சிங்கள பௌத்த அரசியல் தலைவர்களின் பார்வையாகவும் அச்சமாகவும் இருந்தது. 1971 ஜே.வி.பி ஆயுத கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கு முன்னர் ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீர ஏழு வகுப்புகளை நடத்தினார். அவற்றில் ஒன்று இந்திய விஸ்தரிப்புவாதம் என்பதாகும். இந்தியா நம்பிக்கைக்குரிய நாடு அல்ல என்பது போலவே இங்கு வாழும் வம்சாவளித் தமிழர்களும் இந்திய அடிவருடிகளாக மாற்றப்படக் கூடியவர்களே என்பதை அந்த வகுப்பு அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஜே.வி.பி. இப்பாடத்தை நடத்திய சமயத்தில் வம்சாவளித் தமிழர்கள் நாடற்றவர்களாக, உரிமைகள் இழந்தவர்களாக ஆக்கப்பட்டிருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டாரநாயக்க ஆட்சியில்....

டீ.எஸ். சேனநாயக்க குடியுரிமையை பறித்தார். எஸ்.டபிள்யூ. ஆர். டீ. பண்டாநாயக்க தான் ஆட்சி பீடமேறுவதற்கான குறுக்கு வழியாக சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தார். இலங்கையின் மத்திய மாகாணத்தில் வம்சாவளித் தமிழர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் தேசிய அரசியலில் அவர்களின் ஆதிக்கத்தைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஸ்ரீமா சாஸ்திரி உடன்படிக்கையை கொண்டு வந்தார். எதிர்பார்த்த எண்ணிக்கை சாத்தியப்படாவிட்டாலும் மூன்றரை லட்சம் தமிழர்களை தென்னிந்தியாவுக்கு அவரால் அனுப்பி வைக்க முடிந்தது. 1972 குடியரசு அரசியல் சட்டத்தின் கீழ் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. தரப்படுத்தல் அமுலுக்கு வந்தது. தமிழர்களின் சாத்விகப் போராட்டங்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. வேறுசில இனவாதக் கொள்கைகளும் ஸ்ரீமா பண்டாரநாயக்காவிடம் இருந்த போதிலும் இடையில் வந்த உணவுப் பஞ்சம், அரசின் மீதான மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பியது. 1978 அரசியலமைப்புச் சட்டத்தில் சிங்களம் உத்தியோக மொழி. தமிழும் உத்தியோக மொழியாக (Tamil Also) இருக்கும் என்றிருக்குமாறு ஜே.ஆர். ஜயவர்தன பார்த்துக் கொண்டார். மேலும் 1983 இனக்கலவரத்தின் சூத்திரதாரி யார் என்பது அனைவருக்கும் தெரியும்.

வடக்கு கிழக்கில் ஆயுத போராட்டம் கிளர்ந்தெழுந்தபோது அது பயங்கர வாதமாக மட்டுமே பார்க்கப்பட்டதே தவிர அதற்கான பின்னணிக் காரணங்களை தென்னிலங்கைக் கட்சிகள் ஆராய்ந்து தீர்வு காண முற்படவில்லை. தமிழ்ப் பயங்கரவாதம் அவர்களின் இனவாத அரசியல் படகுகளை நகர்த்துவதற்கான சமுத்திரமாக விளங்கியது. 2009 இறுதிப் போரில் வாகை சூடிய மஹிந்த ராஜபக்ச, தன்னை துட்டகைமுனுவாக வரிந்து கொள்வதில் காட்டிய கரிசனையில் ஒரு சிறு பகுதியையாவது தமிழர் பிரச்சினையைத் தீர்த்து நாட்டை சுபீட்சம் நோக்கி முன் நகர்த்த வேண்டும் என்பதற்காக செலவிடவில்லை. நியாயமான ஒரு தீர்வுக்கு அவர் முன்வந்திருந்தால் அதற்கு சிங்கள மக்கள் நிச்சயம் அச் சமயத்தில் ஆமாம் போட்டிருப்பார்கள்.

கோட்டாபய ராஜபக்ச தான் பதவியேற்றது முதல் இறுதி காலம் வரைத் தன்னை ஒரு பௌத்த சிங்களத் தலைவராக மட்டுமே காட்டிக்கொள்ள முனைந்தாரே தவிர சிறுபான்மை இனங்களைப் பற்றி அவர் வாயே திறக்கவில்லை. சிங்கள பௌத்த வாக்குகளினால் தெரிவானவன் என்பதை சொல்லிக் கொள்வதில் அவர் பெருமை கொண்டார் என்பது இனவாத அரசியலின் உச்சம். அவரும் புதிய அரசியலமைப்பு சட்டம், ஒரே நாடு ஒரே சட்டம் போன்றவற்றைக் கொண்டுவர எண்ணியிருந்தார். வெறும் இனவாதம் சோறு போடாதல்லவா? எனவே சிங்கள மக்களாலேயே வெகுவாகத் தூற்றப்பட்டு விரட்டியடிக்கப்பட்டார்.

இறுதியில் இனவாதம் இவர்களுக்கு மட்டுமல்ல; நாட்டுக்கும் சோறு போடவில்லை.

இதுதான் இலங்கை வரலாற்றில் இனவாத, மதவாத அரசியல்களின் வகிபாகமும் விளைவுகளும். இது ஒரு சுருக்கமான பார்வைதான்.

இனி ஹர்த்தாலுக்கு வருவோம். இது ஒரு குஜராத்தி சொல். பணி பகிஷ்கரிப்பு முழு அடைப்பு, ஒத்துழையாமை என்றும் பொருள் கொள்ளலாம். மொத்தத்தில் வேலைநிறுத்தம்.

1912ஆம் ஆண்டு இந்தியாவில் ரௌலட் சட்டம் கொண்டுவரப்பட்டது. சுதந்திரப் போராட்டத்தை நசுக்கும் ஒரு முயற்சியாகவே இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இச் சட்டத்தின் கீழ் ஒருவரை எந்தக் காரணமுமின்றி கைது செய்து இரண்டு வருடங்கள் வரை காவலில் வைத்திருக்கலாம். இச்சட்டம் 1919 மார்ச் மாதம் 21ம் திகதி செயற்பாட்டுக்கு வந்தது. இச் சட்டத்தை எதிர்த்து பஞ்சாப், ஜாலிய் வாலா பாக்கில் மக்கள் கூடி நின்றபோதுதான் ஜெனரல் ஓடயரின் உத்தரவின் பேரில் அப்பாவி மக்கள் குருவி சுடுவது போல சுட்டுக் கொல்லப்பட்ட அந்த ஜாலியன் வாலா பாக் படுகொலை 1919 ஏப்ரல் 13ம் திகதி நடைபெற்றது.

இச் சட்டத்தை எதிர்ந்து ஹர்த்தாலில் ஈடுபடுமாறு மகாத்மா காந்தி இந்தியர்களை அழைத்தார். இந்தியாவெங்கும் மாபெரும் போராட்டங்கள் நடைபெற்றன.

இதன் பின்னர் சத்தியாகிரகம், ஹர்த்தால் ஆகிய இரண்டு இந்திய சொற்களும் அனைத்து உலக மொழிகளுக்குள்ளும் உள்வாங்கப்பட்டன. மொழி பெயர்ப்புக்கு பதிலாக நேரடியாகவே இச் சொற்களை பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

அரிசியை இலவசமாகத் தருவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்துவிட்டு அரிசி விலையை 70 சதமாக உயர்த்தியதோடு ஏனைய வசதிகளையும் கொடுப்பனவுகளையும் நிறுத்தி விட்டீர்களே என்பதுதான் இலங்கை எதிர்க்கட்சிகளின், குறிப்பாக இடதுசாரிகளின், குற்றச் சாட்டு, மக்களும் ஏகோபித்த ஆதரவு அளிக்கவே ஹர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது.

(தொடரும்)

எடப்பாடி ஆரம்பித்திருக்கும் புதிய பயணம் மலர்ப்பாதையா, கல்லும் முள்ளுமா?

அதிமுகவின் இடைக்காலப் பொதுச் செயலாளராக கடந்த ஜூலை 11ம் தேதி நடந்த பொதுக்குழுக் கூட்டத்தில் தேர்தெடுக்கப்பட்டார் எடப்பாடி பழனிசாமி. அந்தக் கூட்டத்தில் கட்சியிலிருந்து ஓ.பி.எஸ்ஸை நீக்கியதைத் தொடர்ந்தது அவர் வகித்து வந்த பொருளாளர் பதவிக்கு முன்னாள் அமைச்சரும் அதிமுகவின் மூத்த தலைவருமான திண்டுக்கல் சீனிவாசன் அறிவிக்கப்பட்டார். இந்தநிலையில், கட்சியின் பல புதிய பொறுப்புகள் உருவாக்கப்பட்டு அதற்கான அறிவிப்புகள் வெளியாகின. அதன்படி, கட்சியின் துணைப்பொதுச் செயலாளராக கே.பி.முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், தலைமை நிலையச் செயலாளராக வேலுமணி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அதேபோல, தற்போது அவைத்தலைவராக இருக்கும் தமிழ்மகன் உசேன் வகித்துவந்த அனைத்துலக எம்.ஜி.ஆர்.மன்றச் செயலாளராக மூத்த தலைவர் பொன்னையனும், அமைப்புச் செயலாளர்களாக, செல்லூர் ராஜூ, சி.வி.சண்முகம், பெஞ்சமின் உள்ளிட்ட 11 பேரும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

``இந்த அறிவிப்பு என்பது முழுக்க முழுக்க சமுதாய அடிப்படையில்தான் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே கட்சியின் துணை ஒருங்கிணைப்பாளராக இருந்தவர் கே.பி.முனுசாமி. தர்மயுத்த காலத்தில், ஓபிஎஸ்ஸின் பக்கம் இருந்தவர், கடந்த சில ஆண்டுகளாக எடப்பாடி பழனிசாமியின் தீவிர ஆதரவாளராக மாறினார். அதைவிட ஒற்றைத் தலைமை முன்னெடுப்புகளிலும் எடப்பாடி பழனிசாமிக்கு மிகவும் பக்கபலமாக இருந்தார். அந்த அடிப்படையில் அவர் துணைப் பொதுச்செயலாளராக்கப்பட்டுள்ளார். அதேபோல, மற்றொரு துணை ஒருங்கிணைப்பாளரான வைத்திலிங்கம் வகித்துவந்த பதவிக்கு, அதே சமூகத்தைச் சேர்ந்த நத்தம் விஸ்வநாதன் அறிவிக்கப்பட்டுள்ளார். தவிர, நத்தம் விஸ்வநாதனும் தர்மயுத்த காலத்தில் பன்னீரின் பக்கம் இருந்தவர்தான். ஆனால், ஒரு சில அதிருப்திகளால், எடப்பாடி பக்கம் தாவியவர், அவர் ஒற்றைத் தலைமையாக வருவதற்கும் பக்கபலமாக இருந்தார். பொதுக்குழுவிலும்கூட தனிப்பட்ட முறையில் மிகக் கடுமையாக பன்னீரை விமர்சித்துப் பேசினார். அதற்குப் பிரதிபலனாக அவருக்கும் துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல பொருளாளர் பொறுப்பு என்பது முக்குலத்தோர் சமூகத்தைச் சேர்ந்த ஓ.பி.எஸ்ஸிடம் இருந்ததால், அதே சமூகத்தைச் சேர்ந்த திண்டுக்கல் சீனிவாசனுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், பொருளாளருக்கு இருந்த வரவுசெலவு அதிகாரங்கள் இப்போது பொதுச் செயலாளருக்கு மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தவிர எடப்பாடி பழனிசாமி வகித்துவந்த தலைமை நிலையச் செயலாளர் பொறுப்பு, அதே சமூகத்தைச் சேர்ந்தவர், அவருக்குப் பக்கபலமாக இருப்பவர் என்கிற அடிப்படையில் எஸ்.பி.வேலுமணிக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, எம்.ஜி.ஆர் மன்றப் பொறுப்பாளராக மூத்த தலைவர் என்கிற அடிப்படையில் பொன்னையனுக்கு வழங்கப்பட்டுள்ளது. பொன்னையனை அவைத்தலைவராக்கும் முயற்சியில் இருந்தார் எடப்பாடி பழனிசாமி. ஆனால், ஓ.பி.எஸ் அப்போது அதற்குத் தடையாக இருக்கவே, இருவருக்கும் பொதுவாக தமிழ்மகன் உசேன் அந்தப் பொறுப்புக்கு வந்தார்.

காமராஜ், ஓ.எஸ் மணியன் என முக்குலத்தோர் சமுதாயத்தைச் சேர்ந்த நான்கு பேர் அறிவிக்கப்பட்டுள்ளனர். ஒற்றைத் தலைமை விவகாரத்தில் எடப்பாடிக்கு பக்கபலமாக இருந்தது ஒருபுறம் இருந்தாலும், ஓ.பி.எஸ்ஸை ஓரம்கட்டியதன் மூலம் முக்குலத்தோர் சமூக மக்களிடம் எழும் அதிருப்தியைச் சமாளிக்கும் யுக்திதான் இது. தவிர சி.வி.சண்முகம், கே.பி.அன்பழன் என இருவருக்கு வன்னிய சமூகத்தைச் சேர்ந்த இருவருக்கும் அமைப்புச் செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. கட்சியில் சட்ட ரீதியாக எடப்பாடிக்கு பக்கபலமாக இருந்தவர் சி.வி.சண்முகம் மாநில பொறுப்பில் இல்லாமல் இருந்தார். அதேபோல முக்குலத்தோர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பட்டியலில் அதிகமாக இருப்பதால் அதைச் சமாளிக்கும் யுக்தியாக வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த கே.பி.அன்பழகனுக்கும் பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான ஓ. பன்னீர் செல்வத்தை ஓரம் கட்டுவதற்கு பதவிகள் சாதி ரீதியாக வழங்கப்பட்டுள்ளன. ஓபிஎஸ் சாதியைச் சேர்ந்தவர்களுக்கே பதவிகள் கொடுத்தால் சாதி ரீதியாக எழக்கூடிய எதிர்ப்புகளை அவர்கள் சமாளித்து விடுவார்கள் என்று எடப்பாடி தரப்பு நினைக்கிறது.

இது பன்னீர் செல்வம் எடுத்திருக்கும் அதிரடி முடிவு. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகிய இரு ஆளுமைகளும் இல்லாத நிலையில் ஓ.பி.எஸ். கை ஓரம் கட்டி களையெடுக்க எடுக்கப்பட்டிருக்கும் இம் முயற்சி, நீண்ட கால திட்டமிடலின் விளைவாகவே நடந்தேறியிருக்க வேண்டும். பக்கச் சார்பின்றிப் பார்ப்போமானால் இரட்டைத் தலைமை என்பது ஒரு பிரதான அரசியல் கட்சிக்கு உகந்ததாக இருக்க முடியாது. எடப்பாடியார் ஓபிஎஸ்சை நம்பத் தகுந்தவர் அல்ல எனக் கருதுவாரானால் அதில் தவறு இருக்க முடியாது. பன்னீர் செல்வம் எப்போதும் தன்னையும் தன் நலன்களையுமே முன் நிறுத்தி கூழைக்கும்பிடு போட்டுக் கொண்டிருப்பவர், அவரை ஜெயலலிதா பயன்படுத்திக் கொண்டது அவரது திறமையைக் கருதி அல்ல. தன் சொற்படி நடக்கக் கூடியவர் என்பதே தெரிவுக்குக் காரணம். இப்படிப்பட்டவரை எடப்பாடி தன் பக்கத்தில் வைத்துக் கொண்டு கட்சியை வளர்க்கவும் தி.மு.கவுக்கு எதிரான கட்சியாக மாற்றவும் முடியாது என்பதை அவதானிகளும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

இப்போது ஏறக்குறைய கட்சியின் கட்டுப்பாட்டை எடப்பாடியார் எடுத்துக் கொண்டுவிட்டார். இப்போது பன்னீர் செல்வாக்கை ஒட்டுமொத்தமாகக் களையும் வேலை தான் நடந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் எடப்பாடிக்கு மும்முனைகளில் எதிர்ப்புகள் உள்ளன. முதலாவது தி.மு.க அது பிரச்சினை இல்லை. அ.தி.மு.கவின் தோற்றமும் வளர்ச்சியும் தி.மு.கவை வைத்தே நிகழ்ந்து வந்திருக்கிறது. இரண்டாவது எதிர்ப்பு, பன்னீர் செல்வத்திடமிருந்து வரக்கூடியது. அவருக்கு எதிரான நடவடிக்கைகள்தான் நடந்து கொண்டிருக்கின்றன. மூன்றாவது சசிகலா எதிர்ப்பு. சசிகலா இப்போதும் தானே கட்சியின் பொதுச்செயலாளர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். சசிகலாவும் தினகரனும் தொடர்ந்தும் அ.தி.மு.க மீது தாக்குதல்களை பல வழிகளிலும் தொடுத்துக் கொண்டே இருப்பார்கள். இவற்றை எல்லாம் தவிர்த்தபடியே புறமுகிடச் செய்து கட்சியை கட்டி வளர்க்க வேண்டிய பெரிய பொறுப்பு எடப்பாடியாருக்கு உண்டு. அதற்கான தளபதிமாரை அவர் வைத்திருக்கவும் செய்கிறார். அவர் தனது பாதுகாப்புக்காக பா.ஜ.க.வை நாட வேண்டியிருக்கலாம்.

அதேசமயம் பா.ஜ.க.வுடனான கூட்டு என்பது அவருக்கு பலவீனமாகி விடவும் முடியும். தற்போதைய தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை எடப்பாடிக்கு தலைவலியாகவும் மாறலாம்.

சூழ்நிலையின் கைதியாக எடப்பாடி செயல்பட வேண்டியிருந்தால் தி.மு.கவுக்கு எதிராக அ.தி.மு.கவை கொம்பு சீவுவதில் பிரச்சினைகள் எழலாம். எனவே பல வழிகளிலும் திட்டமிட்டு செயலாற்றாவிட்டால் கூட இருப்போரே அவருக்கு குழிபறித்துவிடலாம். எனவே எடப்பாடியாருக்கு இப் புதிய பயணம் முள் பாதையாகவே இருக்கும். அதாவது முள்ளில் இருந்து மலர் பாதை நோக்கிய பயணம். அது அவ்வாறு அமையுமா? என்பதே கேள்வி.

ஷோபனா அருள்

கவிதை உணர்வும் தூண்டுதலும் பிறப்பிலிருந்தே இருக்கவேண்டும்

திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர் என பரவலாக அறிமுகமாகி இருந்தாலும் கவிஞர் எனும் அழகிய முகம் கொண்டவர் என்.லிங்குசாமி. 2001ஆம் ஆண்டில் 'ஆனந்தம்' திரைப்படத்தின் மூலமாகத் தமிழ்த் திரையுலகிற்குள் காலடி எடுத்து வைத்தவர். ரன், பையா, சண்டைக்கோழி என பல வெற்றிப் படங்களைத் தந்தவர்.

கடந்த 30 ஆண்டுகளாக ஹைக்கூ கவிதைகளை வாசித்துக்கொண்டும், ஹைக்கூ கவிதைகளில் மனம் தோய்ந்து எழுதி வருகிறார். லிங்கூ, செல்ஃபி எடுத்துக்கொள்கிறது மரம், என இரு ஹைக்கூ நூல்களைப் படைத்துள்ளார். இவரது கவிதைகள் பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. கல்லூரிப் பாடத் திட்டத்திலும் இடம்பெற்றுள்ளன.

ஹைதராபாத்தில் 'தி வாரியார்' படத்திற்கான வேலைகளில் இருந்தவர், விடிகாலை நேரத்தில் உரையாடிய கணங்களே கவிதையாக இருந்தன. இனி, கவிஞரும் ஹைக்கூம் நீங்களும்...

இயக்குனர் லிங்குசாமி

உங்களுக்குள் ஒரு கவிஞன் இருப்பதை எப்போது கண்டுகொண்டீர்கள்?

நம் உடலுக்குள் உயிர் இருப்பது மாதிரி, நமக்குள் எந்த கணத்தில் கவிதை வந்தது என்று பிரித்து ஆராய்ச்சியெல்லாம் செய்யவே முடியாது. நாள், நட்சத்திரம் குறித்து வைத்துக்கொண்டு இந்த நாளில் கவிஞனானேன் என்று யாராலும் சொல்ல முடியாது.

நாம் பிறந்தது முதலே நம்முடைய பேச்சு, நமது இயல்பு, ரசனை, வாசிப்பு எல்லாமே சேர்ந்துதான் நம்மைக் கவிஞனாக்குகிறது. சிறுவயதில் எங்கள் உறவினர் வீட்டில் தங்கி, நான் படித்துக்கொண்டிருந்த சமயமது. அப்போது நான் எது பேசினாலும் 'இவன் என்ன எடக்கு மடக்கா பேசுறானே..!' என்று சொல்வார்கள். நான் பேசுவதன் தன்மை புரியாமல் அப்படிச் சொல்வார்கள். அப்பவே நாம ஏதோ புதுசா பேசியிருக்கோம்னு தானே அர்த்தம்.

கவிதை உணர்வும் தூண்டுதலும் ஒருவனுக்கு இயல்பாகவே பிறப்பிலிருந்தே இருந்திருக்க வேண்டும். அம்மாவின் கருவிலிருக்கும்போதே கவிதை விதை நமக்குள் ஊன்றப்பட்டு விடுகிறது என்று நான் உணர்கிறேன்.

நான் கவிதை என்று எழுதி, அது ஒரு பத்திரிகையில் பிரசுரமான காலம் என்றால் 1991 என்று சொல்வேன். பிறப்பிலேயே ஒருவன் கவிஞனாக இருந்தால் மட்டுமே ஒரு வரியாவது எழுத முடியுமென்று நம்புகிறேன்.

தொடக்கக் காலத்தில் புதுக்கவிதைகள் எழுதிக்கொண்டிருந்த உங்களை ஹைக்கூ ஈர்த்தது எப்போது?

நான் ஆரம்பத்தில் கூட நீண்ட கவிதைகளை நிறைய எழுதியதில்லை. முதன்முதலாக 'செருப்பு' எனும் தலைப்பில் நீண்ட கவிதையொன்றினை எழுதினேன். சில பிரசுரமாகாத நீண்ட கவிதைகளும் என்னிடம் இருந்தன. ஆனால் 'இஸ்திரி போடும் தொழிலாளி வயிற்றில் சுருக்கம்' எனும் கவிதையை எழுதிய பிறகு, சுருக்கமான ஹைக்கூ கவிதை வடிவம் மனசுக்கு ரொம்ப நெருக்கமாச்சு. கவிக்கோ அப்துல்ரகுமான் அய்யா, அறிவுமதி அண்ணன், எழுத்தாளர் சுஜாதா இவர்களெல்லாம் அதுக்கு முக்கியமான காரணம்னு சொல்லலாம்.

நீங்கள் எழுதிய முதல் ஹைக்கூ எது? அது இதழில் வெளியானபோது உண்டான பரவசத்தைப் பகிர்ந்துகொள்ளலாமா?

இப்போது நினைத்தாலும் அந்த நாள் எனக்குப் பரவசத்தைத் தருவதாக இருக்கிறது. எனது முதல் கவிதை வெளியான 'ஆனந்த விகடன்' இதழில் இருந்த விளம்பரங்களையும் கூட வாசித்து முடித்தேன். அந்த இதழைப் பூஜை அறையில் வச்சாச்சு. படிக்கத் தெரியாதவங்க கிட்டேக்கூட காட்டியாச்சு. படத்தோட பாட்டு ஒன்றில் சொல்கிற மாதிரி, வீட்டிலுள்ள ஆடு, மாடு, கோழி எல்லார்க்கிட்டேயும் சொல்லியாச்சு.

அந்தப் பரவசம் சொல்லில் அடங்காதது. 'உங்கள் கவிதை பிரசுரமாகியிருக்கிறது' என்று வந்த கடிதமும், கூடவே வந்த 30 ருபாய் மணியார்டரும் என் வாழ்வில் மறக்கவே முடியாதது. அந்தப் பகுதியிலிருந்த பல கவிஞர்களும், 'கவிதையை நீ லட்டர்ல எழுதி அனுப்பினீயா இல்லை இன்லேண்ட் கவர்ல எழுதி அனுப்புனீயா?'ன்னு கேட்டாங்க. நானும் ஒரு பெரிய கவிஞரா என்னை நினைச்சுக்கிட்டு, "எதுல அனுப்புறோம்ங்கிறது முக்கியமில்லை; எதை அனுப்புறோம்ங்கிறது தான் முக்கியம்" சொன்னேன். லவ் பண்ணின பொண்ணுக்கிட்டே நேரடியாக கொடுக்க தைரியமில்லாம, அவகூட வர்ற தோழி கிட்டே புக்கை கொடுத்தது எல்லாமே பரவச நிலைதான். என்னோட முதல் படம் 'ஆனந்தம்' வெளியான போது என்ன பரவசத்திலே இருந்தேனோ, அதே நிலைதான் என்னோட முதல் கவிதை பிரசுரமான அன்றும் இருந்தது.

நெருக்கடிமிக்க திரைத்துறையில் இயக்குநராக, தயாரிப்பாளராக இருக்கும் உங்களுக்கு ஹைக்கூ எழுதும் அமைதியான மனநிலை எப்படி வாய்க்கிறது?

ஹைக்கூ எழுதும் மனநிலையை நான் என்னுள் தக்க வைத்து இருப்பதினால்தான் என்னால் இவ்வளவு வேலைகளையும் பார்க்க முடிகிறது என்பேன். அதுதான் ஆதாரமாக இருக்கிறது.

ஹைக்கூவின் கிளை வடிவங்களான சென்ரியு, லிமரைக்கூ, லிமரிக்சென்ரியு , ஹைபுன் ஆகிய வடிவங்களில் நீங்கள் எழுதுவதில்லையே... ஏன்?

நான் இரண்டு வரிகளில், மூன்று வரிகளில் எழுதிவிட்டால் அது ஹைக்கூ என்று இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறேன். நான் எழுதிய கவிதைகளில் ஹைக்கூவின் பல வடிவ கவிதைகளும் இருக்கக்கூடும். பெயர்தான் மாறுபடுகிறதேயொழிய எல்லாமே கவிதைகள்தான். இன்னும் சொல்லப்போனால் ஜப்பானிய ஹைக்கூவின் உண்மையான இலக்கணத்தோடு யாருமிங்கே ஹைக்கூ எழுதுவதில்லை. நான் எழுதியிருக்கும் இந்த நூறு கவிதைகளில் யாராவது ஹைக்கூ அளவுகோலை வைத்துப்பார்த்தால், இரண்டு, மூன்று ஹைக்கூ தேறலாம். ஆனால், நமக்கு நாம் எழுதுவது ஹைக்கூ தான். அந்த நம்பிக்கையோடுதான் எழுதிக் கொண்டிருக்கிறோம்.

ஜென் தத்துவத்தில் மனம் ஒன்றிப்போகிறவராக இருக்கிறீர்கள். இந்த மனநிலைக்கு வர உங்களுக்குத் தூண்டுதலாக இருப்பது எது?

தியானம் தான்.

தமிழ்ச்சூழலில் இன்றைக்கு எழுதப்படும் கணங்கள் குறித்து சொல்லுங்களேன்?

என் படத்தில் வரும் பாடல்களில் இடம் பெறும் மேண்ட்டேஜ்கள், குட்டிக்குட்டி டயலாக்குகள் எல்லாமே ஹைக்கூவா இருக்கும். என்னோட டயலாக் பேட்டன் கூட சின்னதா நறுக்குன்னு ஹைக்கூ வடிவத்திலே தான் வருது. 'ரன்' படத்தில் வரும், 'விட்ற மாட்டியே; விட்டா உசிரை விட்டுருவேன்' டயலாக் மாதிரி நிறையவே என்னோட படங்கள்ல வரும். ஹைக்கூ எழுதிறதாலே எனக்கு அந்த மாதிரியான பேட்டன் தான் வருதுன்னு நம்புறேன். ஹைக்கூ நமக்குள்ளே இருக்கிறதுனாலே என்னோட டயலாக்லேயும் அதுதான் வெளிப்படுது. ஒரு ஆக்ஷன் படத்தைக்கூட ஒரு லவ்வப்பிலா, எல்லாரும் உட்கார்ந்து பார்க்கிற மாதிரி எடுக்கிறது, ஒரு புக்குக்குள்ளே அரிவாள் வைச்சு எடுக்கிற ஒரு ஷாட் வைக்க ஹைக்கூ எழுதிறவங்களால மட்டும் தான் முடியும்னு நம்புறேன்.

முகநூல் குழுக்களில் ஹைக்கூ எனும் பெயரில் எழுதப்படும் கவிதைகளைப் படிக்கும் சூழல் எப்போதாவது அமைந்திருக்கிறதா?

பேஸ்புக்ல நான் ஆக்டிவ்வா இல்லே. அதனால அவற்றை படிப்பதற்கான சந்தர்ப்பம் அமையவில்லை.

தங்களின் முதல் ஹைக்கூ நூலான 'லிங்கூ'வுக்கு கிடைத்த வரவேற்பு எப்படியிருந்தது?

2013இல் என்னோட முதல் ஹைக்கூ நூலான 'லிங்கூ'வை 'ஆனந்த விகடன்' தான் வெளியிட்டது. அந்த நூல் ஆங்கிலம், மலையாளத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது, கல்லூரிப் பாடத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. ரொம்ப முக்கியமான நண்பர்கள், அந்த ஹைக்கூ நூலைப் பயணங்களில் படிச்சிட்டுப் போறதா சொல்வாங்க. ஹைக்கூவில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிற மு.முருகேஷ் தொடங்கி, ஹைக்கூவில் ஈடுபடுகிற முக்கியமான பலர் பேசினாங்க. அறிவுமதி அண்ணன், கலாப்ரியா, வைரமுத்து, கே.பாலசந்தர், ஷங்கர் மாதிரியான ரொம்பவே முக்கியமானவங்க அந்த நூலைப் பாராட்டிப் பேசியிருக்காங்க. முதல் நூல் எனக்கும் மறக்க முடியாத நூல்.

ஹைக்கூ கவிதைகளைப் பற்றிய தங்களின் மதிப்பீடு என்ன?

தொடர்ந்து ஹைக்கூ கவிதைகளை வாசித்துக் கொண்டிருப்பவன் நான். தற்போது நடத்திய கவிக்கோ நினைவு ஹைக்கூப் போட்டியில் 50 ஹைக்கூ கவிதைகளைத் தேர்வுசெய்ய வாசித்த போது ஒரு நம்பிக்கை வந்தது. நிறைய கவிஞர்கள் சிறந்த ஹைக்கூ கவிதைகளை எழுதப் போகிறார்கள் என்ற எண்ணமும் உண்டானது. மிக அற்புதமா சில கவிஞர்கள் எழுதியிருக்காங்க. இன்றைய சூழல் நல்லாவே இருக்கு. அதை இன்னும் பெரிதாகக் கொண்டு செல்வதற்கான வேலைகளைச் செய்ய வேண்டுமென்கிற ஆசை எனக்குள்ளிருக்கிறது.

ஹைக்கூவில் வெளிப்படும் காட்சிப்பூர்வமான அழகியல் பதிவுகள், உங்களின் திரைப்படக் காட்சி அமைப்புகளிலும் வெளிப்படும்

கேள்விகள்:
கவிஞர் மு.முருகேஷ்

காற்றேணி ஏறி கடல் மீதாடி நிலா பிடிக்கும் கவிதைகள்..

கடல் கடந்து ஒருநாள் என் காதுக்கேர் அழைப்பு வந்தது. கனத்த இரவு அது.

அப்போது கண் பூக்கும் ஒரு நீள் பயணத்தில் கருஞ்சாலை முதுகில் காற்றில் உளி செதுக்கியபடி காரோட்டிக் கொண்டிருந்தேன் என் குழந்தைகளோடு.

அந்நேரம் என் காதுரசிய அந்தக் குரல் புதிது அந்தத் தமிழ் புதிது. அந்த உச்சரிப்பு புதிது. அதில் வழிந்த அன்பு புதிது. அந்த இனிப்புக் குரலுக்குச் சொந்தக்காரர் இனிய சகோதரர் ஈரக் கவிஞர் எங்கள் ஈழ தேசத்தின் கவிஞர் , .வி. மைக்கல் கொலின்.

எனக்கும் அவருக்கும் இடையேயான நட்பு ஏழாண்டுகள் தருகிறேன் தாமதமாகும் காலம் பரவாயில்லையா என்றேன்.

ஆனால் பத்து நாளினுள் என்ற நான் சில மாதங்கள் சிறைசெய்து கொண்டேன். காரணம் என் அலுவல் என் பணிச் சுமை என் இலக்கிய முன்னெடுப்புகள் இப்படி நிமிடச் சூரியன்களின் நெற்றிகளுள் நெருக்கப்படும் என் நீல விதானத்தின் நிமிடக் கொடுமைகள் நெருப்பின் சாம்பல் சிறகுகளொத்தவை. கருப்பையின் அவஸ்தை வலிகள் கொண்டவை.

இப்படிப்பட்ட என் தாமதத்தில் கூட சற்றேனும் சலிப்புறாத மைக்கல் என் தமிழ் வளர்த்த வாழ்த்துக்குரியவராகிறார் சீயோன் மலை கொடுத்த வார்த்தைக்குரியவராகிறார். சரி. நூல் குறித்த என் பார்வைக்கு வருகிறேன்.

கால்காசு செலவில்லாமல் காற்றேணி ஏறி கடல் மீதாடி நிலா இதய முடுத்திய ஒன்று.

அதுசோழன் பிசிராந்தைச் சொந்தம். இதோ! கண்காணும் முன்பே என் காதோர வீதிகளில் குரல் திருவிழா. அந்த திருகோண மலைத் தமிழிலும் மட்டக்களப்பு மகரந்தத்திலும் வவுனியாக் காட்டுப் பறவை போல வாழுறலாயிற்று என் நெஞ்சு. மைக்கல் சொன்னார்' என் இனிய பட்டாம்பூச்சிக்கு' என்ற என் கவிதை நூலுக்கு உங்கள் அணிந்துரை வேண்டும் கவிஞரே.

பிடித்துத் தொங்கிய நித்திலம்பூ அனுபவம் உண்டா உங்களுக்கு.

இதோ! அப்படிப்பட்ட ஒரு பேரனுபவத்தை அழகான இந்நூலில் நான் பெற்றிருக்கிறேன்.

காயாம் பூக்களும் கோங்கம் பூக்களும் கடைவிரித்தக் குறிஞ்சி மலைக் காட்டுள் அருவி நீராடி அடை'தேன்' களவாடிகுருவி போல் பறந்த குதூகலம் கொண்டதுண்டா நீங்கள்.

இதோ! அத்தகைய தேனானுபவத் தென்றலில் திணறத் திணற திருவிழா கொண்டாடிய தேவாமிர்தருசியை இந்தக் கவிதை நூலில் கண்டடைந்து கரைந்துபோய் நான் நிற்கிறேன். மழைக்காற்று வீசும் ஒரு மந்த மாருதப் பொழுதில் கதிர்களில் பால் பிடித்த வயலோரங்களில் காலாற வரப்பேறி பொடிநடை போட்டதுண்டா நீங்கள்.

இதோ! அவ்வாறான ஒரு புதிய திக்குமுக்காடலைஆழமான இந்தக் கவிதை நூலில் பெரும்பாலான வரிகளில் பிழியப் பிழிய பிரபஞ்ச ரகசியம் வழிய வழியவட்டிலில் வாரி வாயொழுகத் தின்றிருக்கிறேன் நான்.

ஒருபக்கம் மழை மறுபக்கம் வெயில் இரண்டுக்கும் நடுவே ஒரு வானவில்லாகி வாழ்ந்ததுண்டா நீங்கள்.

இதோ! இந்தக் கவிதைநூல் வாசித்த போது என் சாலைகளெங்கும் நிறச் சேலைகளின் நீள ஓவியங்கள்கரம் பிடித்தெனக்கு கள்ளூற்றிக் கொடுத்தன.

சில கவிதைகளை என்னால் அள்ள முடியவில்லை. ஆனால் பல கவிதைகளினின்று என்னை மொள்ள முடியவில்லை.

நாம் கவிதை நூல்கள் நிறைய வாசிக்கிறோம் தாம்.

ஆனால் பெரும்பாலானவைநம் நினைவு மண்டபங்களைநெய்ப் பசை போல அப்பிக் கொள்வதுண்டா இல்லையே.ஆனால் என் முதல் பார்வையிலேயே'என் இனிய பட்டாம்பூச்சிக்கு' என்ற இந்தக் கவிதை நூல்என் கண்களில் மணிபோல கட்டிக் கொண்டது என் நெஞ்சினில் பனிபோல ஒட்டிக் கொண்டது.

காரணம் கவிஞர் தன் மனங் கவர்ந்தவருக்கு இந்தத் தாழம்பூக் கவிதைகளை தருவித்த போதும் தன் தமிழாசிரியருக்கு இதை அவர் சமர்ப்பித்திருக்கிறார் என்ற போதே என் அன்பின் மைக்கல் என் தாழ்வார ஆகாயத்தில் தங்க நாற்காலி போட்டு சம்மணமிட்டுக் கொள்கிறார் என்றால் சற்றேனும் மிகையில்லை.

தனக்கு கற்றுத் தந்தவருக்குதான் பெற்று வந்தவற்றை பரிசாக நீட்டுகிற பண்புக்கும் மாண்புக்கும்பெரிய தொரு வாழ்த்துகள் மைக்கல்.

இன்னொரு வியப்பும் இந்நூலில் எனக்கிருந்தது.

அது யாதெனில் இது வெறும் காதல் கவிதைகளின் தொகுப்பு மட்டுமல்ல. இதன் பல கவிதைகள் இலங்கையின் வரலாறு பேசுகிறது. இலங்கையின் இயற்கை பேசுகிறது. இலங்கையின் ஆன்மீகம் பேசுகிறது. இலங்கையின் நம்பிக்கை பேசுகிறது. இலங்கையின் அழகு பேசுகிறது

இது மட்டுமல்ல இராவண மகாராஜாவின் கீர்த்தி பேசுகிறது. அவர் வாளின் மகிமை பேசுகிறது. அவர் கட்டடக் கலையின் கம்பீரம் பேசுகிறது

இதை வாசிக்கிற போது 'மா காரின் மின்கொடி மடக்கினர் அடுக்கி மீகாரம் எங்கணும் நறுந்துகள் விலக்கிஆகாய கங்கையை அங்கையில் அள்ளிபாகாய செஞ்சொலவர் வீசுபடு காரம்'

'பொன்கொண்டு இழைத்த மணியைக் கொடு பொதிந்தமின் கொண்டு அமைத்த வெயிலைக் கொடு சமைத்தஎன்கொண்டு இயற்றிய எனத் தெரிகிலாதவன்கொண்டல் விட்டு மதி முட்டுவன மாடம்'

என கம்பன் இலங்கையைப் பேசியதெல்லாம்இதயத்தில் நிழலாடுகிறது.

இராஜ இராஜ சோழன் பற்றிஇவர் கவிதைகள் நாவாடுகிற போது

'கச்சி ஒருகால் மிதியா ஒருகாலால்தத்துநீர்த் தண்ணுஞ்சை தான் மிதியாப்பிற்றையும் ஈழம் ஒருகால் மிதியா வருமே'

என சோழ மன்னனைப் பற்றிய முத்தொள்ளாயிரம் எல்லாம் மூளையுள் முற்றுகையிடுவதைத் தவிர்க்கவே முடியவில்லை.

இவரின் தமிழ்ப்பற்றை தமிழ்ப் பண்பாட்டை தமிழர் மீதான நேசத்தைக் காண்கிற போது

'தமிழ் எனது இருகண் பார்வை தமிழ் எனது உருவப் போர்வை தமிழ் எனது உயிரின் காப்புதமிழ் எனது உள ஏமாப்பு தமிழ் எனது உடைமைப் பெட்டி தமிழ் எனது உயர்வுப் பட்டி தமிழ் எனது உரிமை'

என தமிழின் மேன்மை பேசிய புலவர் குழந்தையின் இராவண காவியம் என் ஞாபக மண்டபங்களில் நின்று கொண்டு பூங்கொத்துகள் நீட்டத்தான் செய்கிறது.

இப்படி பல்வேறு அனுபவங்களை ஒரு கவிதைத் தொகுப்பு உற்பத்தி செய்யுமா என உயிருருக உறைந்து போகிறேன்.

ஒரு காதல் கவிதைத் தொகுப்பில் தமிழ் இனம் பற்றிதமிழ் நிலம் பற்றி தமிழ் மொழி பற்றிதமிழ்ப் பாரம்பரியம் பற்றிதமிழ்ப் பண்பாடு பற்றி இதன்முன் இந்தளவு எவரும் பேசியதாக என் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தகவல்கள் இல்லை என்பதே உண்மை.

பாடலாசிரியர்
விக்டர்தாஸ்

பொருளாதார அரசியல்

கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
மொழியியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

மீண்டும் கொதிநிலையில் இலங்கை

ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்கான திரைமறைவு காய்நகர்த்தல்கள்

கடந்த வாரம் இலங்கையின் அண்மைக்கால அரசியல் வரலாற்றில் கொந்தளிப்புமிக்க ஒரு காலப்பகுதியாகப் பதிவாகியதுடன் இன்னும் அக்கொதி நிலை தொடர்ந்து செல்கிறது

நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரியின் பதவி விலகலை வலியுறுத்தி காலி முகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திற்கு இன்றுடன் நூறு நாட்கள் ஆகின்றன. தனக்கு அறுபத்தொன்பது இலட்சம் பேரின் ஆணை உள்ளதாகவும் எனவே பதவி விலகுவது பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்றும் தெரிவித்த ஜனாதிபதி பின்னர் ஒரு தோல்வியடைந்த ஜனாதிபதியாக தாம் பதவி விலக விரும்பவில்லை என அறிவித்தார்.

அத்துடன் பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்சவை பதவியிலிருந்து அகற்றி தமது குடும்பத்திற்கு மிக நெருக்கமான விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்துக்கொண்டார். போராட்டக்காரர்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் இடம்பெறாத

அதேவேளை அதற்கு மாறாக அதிகாரத்தைப் பலப்படுத்தும் வகையில் இடம்பெற்ற சம்பவங்கள் காரணமாக கொதிப்படைந்த மக்கள் பெருமளவில் கொழும்பை வந்தடைந்து ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி அலுவலகம் அலரிமாளிகை மற்றும் பிரதமர் அலுவலகம் என்பவற்றை ஆக்கிரமித்து நிலை கொண்டனர்.

இதனால் ஜனாதிபதி தப்பியோட நேர்ந்ததுடன் பிரதமரும் வெளியே வரமுடியாத நிலைமை தோன்றியது. அரச தொலைக்காட்சி ஒரு குழுவினால் ஆக்கிரமிக்கப்பட்டது. மேலும் ஒரு குழு பாராளுமன்றத்தை கைப்பற்றும் நோக்கில் விரைந்தது. நாடு ஆரப்பாட்டக்காரர்களின் ஒரு குழுவினரால் பிழையான திசையில் நகர்த்திச் செல்லப்படுவதைக் கண்ட சட்டத்தரணிகள் சங்கம் போராட்டக் காரர்களுக்கு கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்தது.

மிரிஹானவில் உருவாகிய இந்த அறவழிப் போராட்டம் சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆதரவு கிடைத்திராவிட்டால் இந்தளவு தூரம் வலுப்பெற்றிருக்க முடியாது. அது போராட்டக்காரர்களுக்கும் தெரியும். மேலும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அமெரிக்கா நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைபெறுவது அவசியம் என்று வலியுறுத்தின.

போராட்டக்காரர்கள் உடனடியாக தாம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அரச கட்டடங்களை மீள ஒப்படைத்து விட்டனர். தப்பி ஓடிய ஜனாதிபதி எங்கிருக்கிறார் என்பது பற்றிய தகவல்கள் உடனடியாக வெளிவராத போதும் பின்னர் கட்டுநாயக்க ஊடாக அவர் வெளிநாடு செல்ல முனைந்தபோது குடிவரவு அதிகாரிகள் அதனை அனுமதிக்காத காரணத்தினால் அருகில் உள்ள படைமுகாமில் பாதுகாப்புத்தேட நேர்ந்தது. பின்னர் விமானப்படையின் உதவியோடு மாலைதீவுக்கு சென்றவருக்கு அங்கு வாழ்கின்ற இலங்கையர்களின் எதிர்ப்பையும் சந்திக்க நேர்ந்தது.

மாலைதீவின் எதிர்க்கட்சி இப்போது கோட்டாபயவுக்கு மாலைதீவுக்கு வர எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது என்று கேள்வி எழுப்பியுள்ளது. பயணிகள் விமானமொன்றில் பயணிக்கப் பயப்பட்டு தனி விமானம் கோரிய கோட்டாபய பின்னர் சவுதி விமானமொன்றில் ஏறி சிங்கப்பூர் ஊடாக சவுதி அரேபியாவுக்கு சென்றதாக ஊடகக் குறிப்புகள் கூறுகின்றன.

ஜனாதிபதி பதவியிலிருந்த கோட்டாபய விலகுவார் என்று பலமுறை அறிவிக்கப்பட்ட போதிலும் பதவி விலகல் கடிதம் பதினான்காம் திகதி மாலை வேளையிலேயே கிடைத்ததாக அறிவிக்கப்பட்டது. ஆயினும் அக்கடிதத்தின் அதிகாரபூர்வத் தன்மை குறித்த 15 ஆம் திகதியே உறுதிப்படுத்த முடியும் என பின்னர் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை பிரதமராக இருந்த விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. உடனடியாகவே நாடு தழுவிய அவசரகாலச் சட்டமும் மேல்மாகாணத்தில் ஊரடங்கும் அறிவிக்கப்பட்டது. ஆயினும் போராட்டங்கள் வலுப்பெற்றுச் செல்கின்றன. ஆங்காங்கே பாதுகாப்புப் படையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் மோதல்கள் ஏற்பட்ட போதிலும் பாதுகாப்புப் படையினர் தமது உண்மையான பலத்தை பிரயோகிக்கவில்லை.

அப்படி நடந்திருக்குமாயின் மிகப் பெரிய இரத்தக்களரி ஒன்றை நாடு சந்தித்திருக்கும். ஆனால் இப்படி ஒரு போராட்டம் சிறுபான்மையினர் அதிகம் வாழும் வடக்கு கிழக்கில் இடம்பெற்றிருக்குமாயின் இதே பொறுமை காட்டப்பட்டிருக்குமா என்று சமூக ஊடகங்களில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

ஆனால் இப்போது அமைதியான வழியில் ஆட்சிமாற்றத்திற்கு வழிவிட்டு நாட்டை வழிநடத்த உதவுமாறு முப்படைகளும் மக்களைக் கேட்டிருக்கின்றன. தவறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கையை சாதாரணமான ஒன்றாகக் கருத முடியாது. அத்துடன் சர்வதேச ராஜதந்திர வட்டாரங்கள் ஆரம்பத்தில் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களுக்கு தடை ஏற்படுத்தக் கூடாது என்று அரசாங்கத்தை எச்சரித்திருந்த போதிலும் கோட்டாபயவின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து போராட்டக் காரர்கள் அரச நிருவாகத்தையும் சட்டம் ஒழுங்கையும் பேணும் வகையில் கலைந்து செல்ல வேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்திருக்கின்றன.

இப்போது அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலை குறித்தோ அல்லது ஊரடங்குகள் குறித்தோ இவ்வட்டாரங்களிடமிருந்து எவ்வித கருத்துக்களும் வெளிவரவில்லை. தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்தில் நுழைந்த விக்கிரமசிங்ஹ பிரதமராகி இப்போது பதில் ஜனாதிபதியாகவும் பதவியேற்றுள்ளார்.

புதிய பிரதமரைத் தெரிவு செய்யும் அதிகாரப்போட்டி இப்போது தோன்றியுள்ளது. அத்துடன் நாட்டின் அரசியலமைப்புக்கு உட்பட்டு அடுத்த தேர்தல் நடக்கும் வரையிலான காலப்பகுதிக்கு ஜனாதிபதி ஒருவரையும் பிரதமர் ஒருவரையும் தெரிவுசெய்ய வேண்டிய பொறுப்பு பாராளுமன்றத்திற்கு இருக்கிறது. ஆனால் இவ்விரு தெரிவுகளையும் மேற்கொள்வது அவ்வளவு இலகுவானதாக அமையப் போவதில்லை.

எனவே கோட்டாவின் வெளியேற்றம் நிம்மதியைத் தந்தாலும் அதிகாரப் போட்டாபோட்டி மற்றும் இவ்விரு பதவிகளுக்குமான திரைமறைவுக்காய் நகர்த்தல்கள் என்பன இலங்கை அரசியலில் உறுதிப்பாடற்ற ஒரு நிலையினை அடுத்துவரும் சிலவாரங்களுக்கு தொடரச் செய்யும் என்றே எதிர்பார்க்கலாம்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வுகண்டு நாட்டை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தவல்ல தொலை நோக்குச் சிந்தனை கொண்ட தலைமைத்துவத்தை (visionary leadership) வழங்கக்கூடிய எவரையும் தற்போதுள்ள எந்த அரசியல் கட்சியிலும் காண முடியாதுள்ளது. கிணற்றுத் தவளைகள் போல குறுகிய உலக அறிவும் இனவாதத்தால் ஊறிப் போன சிந்தனையையும் பின்னணியையும் கொண்டவர்களையே காண முடிகிறது.

அத்துடன் ஜனாதிபதி பதவியை வெறுப்பவர்களாக காட்டிக் கொள்பவர்கள் எப்படியாவது அந்த நாற்காலியில் அமர்ந்து விடவேண்டும் என்று ஓநாய்களாக அலைவதையும் காண முடிகிறது. இந்நிலையில் மத்திய வங்கியின் ஆளுநர் முக்கியமான ஒரு அறிவித்தலை விடுத்துள்ளார்.

நாட்டில் அரசியல் உறுதிப்பாடு இப்போது முக்கிய தேவையாக உள்ளதாகவும். நாட்டில் ஏற்கெனவே தொய்ந்து போயுள்ள பொருளாதாரம் மேலும் அழிந்து இயங்காமல் நின்று விடுமென்றும் உரிய தரப்பினர் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார். பதவி ஆசைக்காக அலைபவர்களின் காதில் அது எட்டியதா என்று தெரியவில்லை.

நாட்டில் எரிவாயுக் கப்பல்கள் வந்துள்ளன. எரிபொருள் கப்பல்களும் வந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வாரங்களில் எரிபொருள் மற்றும் எரிவாயு நெருக்கடி ஓரளவு தீரும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் அதன் பின்னர் அவற்றைப் பெற்றுக்கொள்ள டொலர் கையிருப்புகள் இல்லை என்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். அத்துடன் எரிபொருளைக் கொள்வனவு செய்ய போதியளவு ரூபாய்கள் இல்லையெனவும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் எரிபொருள் விலைகள் பலமடங்கு பல தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. எந்த ஒரு பொதுமகனும் விலையைச் செலுத்தாமல் ஒரு துளி எரிபொருளையும் பெற்றுக்கொண்டதில்லை. அவ்வாறாயின் எரிபொருள் விற்ற பணம் எங்கே என்ற கேள்வி எழுகிறது. பாராளுமன்ற கோப் குழுவின் முன்னால் குறித்த துறைக்கு பொறுப்பான அதிகாரிகள் வெளியிட்ட கருத்துகள் அத்துறையில் நிலவும் கட்டமைப்பு சார் பலவீனங்களையும் முறை கேடுகளையும் நேரடியாக வெளிப்படுத்துகின்றன.

எரிபொருள் மற்றும் சக்திவளம் தொடர்பான துறை முழுமையாக கட்டமைப்புசார் மாற்றங்களை சந்திக்காமல் இந்த சக்திவள நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வுகாண முடியாது. அதற்குத் தீர்வு காணாமல் நாட்டின் உற்பத்தித் துறையையும் வணிகத் துறையையும் மீட்டெடுப்பதன் மூலம் பொருளாதாரத்தில் வழமை நிலையை ஏற்படுத்த முடியாது.

எனவே பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதே பிரச்சினை. மிகப்பலம் வாய்ந்த தொழிற்சங்கங்களும் ஊழல்மிக்க அரசியல்வாதிகளும் உள்ளவரை அது நடப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. பிரச்சினைகள் தொடரும் என்றே எதிர்பார்க்கலாம்.

சென்னையில் உள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகராலயம் முதன்முறையாக தமிழ்நாட்டில் உள்ள இலங்கையர்களுக்கான மருத்துவ முகாமை ஏற்பாடு செய்துள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு துணை உயர்ஸ்தானிகராலயத்தினால் வழங்கப்படும் சேவையை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன். திருச்சி ஸ்டார் கிம்ஸ் இன்டர்நேஷனல் மருத்துவ மனையைச் சேர்ந்த டாக்டர் ராஜரத்தினம் மற்றும் அவரது குழுவினர் பங்கேற்ற மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் பங்கேற்றவர்கள் அனைவருக்கும் தனித்தனியாக ஆலோசனை நடத்தப்பட்டு, அடிப்படை மருத்துவ பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. இந்த முகாமுக்குச் சமாந்தரமாக திருப்பூர் மாவட்டத்தில் தூதரக சேவைகள் முகாமொன்றும் நடத்தப்பட்டது செந்தாரப்பட்டி, தாமம்பட்டி, நாகாவதி அணை, பாம்பார் அணை, தும்பலஹள்ளி, கேசர்குளிஹள்ளி ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் 500 இலங்கையர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டதுடன், 483 குடியுரிமைச் சான்றிதழ்கள், 97 பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் 5 RRP கடவுச்சீட்டுகளும் முகாமில் வழங்கப்பட்டன.

வாழ்வாதாரமா சேதாரமா 231

தமிழ்க் கவி பேசுகின்றார்

அனுபவப் பாடமே உயர்வானது

'குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடை மெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்'

நான் மற்றவர்களைப்பற்றி பேசவில்லை என்னைப்பற்றித்தான் பேசுகிறேன். முன்னொரு காலத்தில் காலுக்கு செருப்பேயில்லாமல் காடு கரம்பையெல்லாம் அலைவோம். அதேபோல பாடசாலைக்கும் போவோம். நாங்கள் படித்துத்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் எங்களுக்கு இருந்ததில்லை.

வீட்டில் அம்மாவுக்கு தொந்தரவில்லாமல் கொஞ்ச நேரம் விலகியிருக்கிறோம் என்பது மட்டுமே குறிக்கோளாக பாடசாலைக்குப் போனோம்.

நான் எப்போது எத்தனையாம் வகுப்பில் படிக்கிறேன் என்பது என் தந்தைக்கு தெரியாது. யாராவது 'பெடிச்சி என்ன படிக்கிறாள்'; என்று கேட்டுவிட்டால் மட்டும் என்னை கூப்பிட்டு சொல்லச் சொல்வார். அது ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதுகளின் ஆரம்பகாலம்.

ஒருவழியாக நாம் கஸ்டப்பட்டு பத்துவருடங்கள் படித்து முடித்தாலும், எம்மை பரீட்சை எழுத அரசாங்கம் வழி செய்யவில்லை. அது ஆயிரத்து தொளாயிரத்து அறுபதுகளின் ஆரம்பம். எமது மண்ணுக்கு புதிதாக இராணுவம் வந்து தெருக்களை ஆக்கிரமித்து எமது கல்வியை கேள்விக்குள்ளாக்கியது. அடிப்படையில் பயமே வாழ்க்கையாக உலகயுத்த காலத்து இராணுவங்களை கண்டிருந்த எனது பெற்றோருக்கு இலங்கை ராணுவமும் அந்நியமாகத்தான் தெரிந்தது. அதுமுடிய, பாடசாலைகளை அரச உடமையாக்கும் சட்டத்தை எதிர்த்து மக்கள் பாடசாலைகளில் தங்கி வாழ்ந்து தமது எதிர்ப்பை வெளியிட்டதால் பாடசாலைகள் முடங்கின. எனவே எமது கல்வியில் தடை விழுந்தது.

எழுபதுகளின் ஆரம்பம். முதன் முதலில் ஒரு பெரும் புரட்சியை எதிர்கொண்டது இலங்கை அரசு. ஒரே வாரத்தில் கலகம் அடங்கினாலும் பாடசாலைகளின் காலம் ஒழுங்காக இல்லை. தொடர்ந்து கல்வி மோசமான தடைகளை எதிர் நோக்கியது. உரிமை போராட்டம் என மக்களை தூண்டிய அரசியல் வாதிகள், தமது பிள்ளைகளை மிகத் தந்திரமாக வெளிநாடுகளுக்கு அனுப்பி படிக்க வைத்தனர். அவர்களுடன் பணம்படைத்த மக்களும் இணைந்து கொண்டனர்.

எண்பதுகளின் ஆரம்பம் மிக மோசமான நிலையை அடைந்தன. எமது பாடசாலைகள், மாணவர் காணாமல் போனதும் காணாமல் ஆக்கப்பட்டதும் சொந்த சகோதரர்கள் மோதிக் கொண்டதும் அந்நிய இராணுவத்தின் அனுசரணையுடன் நடந்தேறின.

காணிநிலங்களை விற்றும் கடன்பட்டும் பிள்ளைகளை நாடு கடத்தினர் பெற்றோர். உள்ளுக்குள் பாடசாலைகளே பாசறைகளாக செயல்பட்டன. கல்வி கால்களை இழந்து தவித்தது. தனி நடந்த கதை, இளைய தலைமுறை அறிந்த கதைதான்.

எனது பிள்ளைகள் கல்வியை இடைநிறுத்தி காணாமல் போயும் காணாமல் ஆக்கப்பட்டும் போயினர். மீதமிருந்தவர்கள் இளம் வயதில் திருமணம் செய்தனர். ஆம் திருமணம் செய்தலும் ஒரு பாதுகாப்பாக தெரிந்த காலம்.

இப்போது என் பேரர்களுக்கு பாடசாலைக் காலம். அடிக்கடி இடப்பெயர்வுகள் செய்த தொழிலை மட்டுமல்ல வீடுகளை விட்டே ஓடும்போது பாடசாலைகளும் ஓடின. என் பேத்தி ஆறாம் வகுப்பை ஒன்பது பாடசாலைகளில் படித்தாள். ரெண்டாவது பேத்தி தன் ஒன்பதாம் வகுப்பை ஆறு பாடசாலைகளில் படித்தாள். என்றாலும் கணிதம் விஞ்ஞானம் ஆங்கிலம் என்ற பாடங்கள் வன்னிப்பாடசாலை களுக்கு கிடையாது.

ஒரு வகுப்பில் மாணவர்கள் குறைந்தபட்சம் முந்நூறு நாநூறு பேர் கற்றார்கள். எனவே வகுப்புகள் ஏ, பீ, சீ. டீ என பிரிக்கப்பட்டே நடந்தது. அதுவும் அறிவு மட்டத்திலான பிரிவுதான் படிப்பவர்களை, கெட்டிக்காரர், கெட்டிக்காரர் ஆகிக் கொண்டிருப்பவர்கள். கெட்டிக்காரர் ஆக்க முடிந்தவர்கள், இனி இவர்களால் முடியாது என கருதப்பட்டோர். (இவர்களுக்காக 'மெல்லக் கற்போம்' என்ற திட்டத்தை யுனிசெப் நடாத்தியது தனிக்கதை.) ஆக பாடசாலையின் குறைந்த அளவான ஆசிரியர்கள் யாருடன் வினைக்கெட்டால் பாடசாலையின் நற்பெயரை தக்க வைக்க முடியுமோ அவர்களுடன் வினைக்கெட்டார்கள். ஏனைய மாணவர்களை போராளிகள் தம் வசம் இணைப்பதில் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருந்தனர்.

பலர் தலைநகருக்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் ஓடி அங்கே பிள்ளைகளை படிக்கவைத்தனர்.

அந்த வசதி எல்லோருக்கும் கிட்டவில்லை இதற்கும் போராட்டம் விழித்துக் கொண்டது பயணம் பல தடைகளைக் கடந்து செல்ல வேண்டியதாயிற்று. பணம் மிகப்பெரும் இடத்தில் எழுந்து நின்றது. சொத்துசுகம், வாகனம், காணி நிலம் இருந்தவர்கள் அவற்றை போராளிகளிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறினர் அது அல்லாதவர்கள். ....?

கல்வியும் வாழ்க்கையின் ஆதாரமாகத்தானே அமைகிறது ஆனால் அந்தக்கல்வியை பெறுவதில் எமது தலைமுறையிலிருந்து இன்றுவரை பட்ட துன்பங்கள் எத்தனை. தனியார் கல்வி நிறுவனங்கள் இல்லாத ஒரு காலத்திலும் பாடசாலைகளில் விசேட பரீட்சைக்கு விசேட வகுப்புகள் எடுத்து கற்பிப்பார்கள்.

தாம் விரும்பிய துறையை தேர்ந்தெடுத்து எந்த வயதிலும் கற்க முடியும் என்ற வசதியை பல நாடுகளில் மக்கள் அனுபவிக்கிறார்கள்.

நான் பத்திரிகையில் படிக்கிறேன் எழுபது வயதில் பட்டப்படிப்பை முடித்த மூதாட்டி என்று. எமதுநாட்டில் அது நடக்காது. கல்வி தரப்படுத்தல் படிக்கும் வயதில் உள்ளவர்களுக்கே தடையை வைத்திருக்கிறது.

போர் ஒரு வழியாக ஓய்ந்தபின், கல்வியில் ஒரு வளர்ச்சி தென்பட்டது ஆனால் கல்வியை முடித்தவர்களில் பெரும்பாலோர் நாட்டை விட்டு வெளியேறவே செய்தார்கள்.

ஒறுத்த பல்கலைக்கழக அனுமதியில் படித்தவர்கள் நாட்டின் வளங்களை பயன்படுத்தி சித்திபெற்றவர்கள் எங்கோ வேறு ஒரு நாட்டிற்கு ஏற்றுமதியாகிறார்கள். அந்நிய செலாவணிகூட வராது ஏனெனில் குடும்பமாக வெளியேறிவிட்டவர் யாருக்கு பணம் அனுப்புவார்.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக பாடசாலைக் கல்வி பெரும் சோதனைகளை எதிர்நோக்கி தேய்ந்து வருகிறது. பாருங்கள் கிராமத்து விதிகளில் காலையிலேயே பிள்ளைகள் பந்தடிக்கவும் கிட்டியடிக்கவுமாக ஓடிக் கொண்டிருக்கின்றனர். அது ஆரோக்கியமானது தான்.

கொஞ்சம் வசதியிருந்தால் கேரம் போட்டில் நேரத்தை செலவிடுகிறார்கள். ஏராளமானவர்கள் கையில் செல்பேசிகளை வைத்து நோண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கொரனாக்காலம் ஒரு நீண்ட விடுமுறையை வழங்கி பாடசாலைகளை முடக்கியபோது செல்பேசிகளில் வகுப்புகள் தொடங்கின. இப்போது இன்னும் மோசமாக பாடசாலைகள் நெருக்கடியை சந்திக்கின்றன.

வாரம் மூன்று நாட்கள் மட்டுமே பாடசாலை என்றால், நான்கு நாட்கள் ஆசிரியர்களுக்கு விடுமுறை. அவர்களது தனியார் கல்வி நிலையங்கள் அமோகமாக நடக்கிறது. முள்ளிவாய்க்கால் காலம் ஒன்று இருந்தபோது தொடர்ச்சியாக பலமாதங்கள் பாடசாலைகளே இல்லாமல் ஆரம்பக்கல்வியை பயிலும் மாணவர்கள் பயில வேண்டிய காலத்தில் பதுங்குகுழிக்குள். தமது போர் அறிவை வளர்த்துக் கொண்டிருந்தனர். செல் குத்தும் ஓசையை வைத்தே அது எந்தத்திசைக்குப் போகிறது என்பதையிட்டு பந்தயம் வைத்துக் கொள்வார்கள். பறக்கும் விமான ஓசையை வைத்தே அது என்ன வகை விமானம் என்பதை கணித்துச் சொல்வார்கள். அப்போதெல்லாம் என் நெஞ்சம் துணுக்குறும். இவர்களுடைய அறிவு எங்கே வளர்ந்து கொண்டிருக்கிறது என ஆச்சரியமும் வருத்தமும் அடைவேன்.

மாமனுடன் பட்டங்கட்டிக் கொண்டிருந்தான் எனது பேரன். அவனுக்கு வயது ஐந்துதான். பங்கரின் வாசலுக்கு வெளியேதான் அமர்ந்திருந்தார்கள்.

சந்தடியான பொழுது ஒரு எறிகணை அவர்களுக்கு பத்தடி தூரத்தில் வீழ்ந்து வெடித்தது. தலையைக்குனிந்து படுத்தான்.

அவன் மாமன் பதுங்கு குழிக்குள் அவனை இழுத்துப் போட்டான் சந்தடி ஓய அவன் மாமனிடம் சொன்னான். 'ஏன் மாமா பக்கத்தில விழுற செல்லுக்கு பயப்பிடுறியள். அது விழுந்த ஊடன மேலதானே கிளம்பும்' என் வியப்பு அதற்கல்ல.

குண்டுகள் வீசப்பட்ட பின் நாற்பத்தைந்து பாகை செறிவில் மேற்கிளம்பும் என்பது நாங்கள் படித்தறிந்தது. இவனுக்கு யார் சொன்னது. அனுபவம் தந்த பாடம் உயர்வானது.

'பாரம்பரிய'த்தில் கலாபூஷணம் போர்வை பாயிஸ் ஜிப்ரி !

காலஞ்சென்ற போர்வையூர் ஜிப்ரியின் நினைவுகளும மீட்டல்

இ.ஒ.கூ. முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 19 ஆம் திகதி (19.07.2022) செவ்வாய் இரவுஒலிபரப்பாகும் " பாரம்பரியம் " நிகழ்ச்சித் தொடரில், மூத்த எழுத்தாளரும், அந்நாட்களில் ஒலிபரப்பான முஸ்லிம் நிகழ்ச்சிகளில், நேரடி, ஒலிப்பதிவு நிகழ்ச்சிகளில் பாடல்கள் பல பாடியதோடு, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற கலாபூஷணம் போர்வை பாயிஸ் ஜிப்ரி கலந்து, தன் வானொலி, இலக்கிய பங்களிப்புகளை பகிர்ந்து கொள்கிறார்.

கலாபூஷணம் போர்வை பாயிஸ் ஜிப்ரி

மர்ஹூம் அல்ஹாஜ் போர்வையூர் ஜிப்ரி.

1971 களில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் அதிகாரியாக கடமையாற்றிய இவர் அரசு அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளருமாவார்.

அதே நேரம் முஸ்லிம் சேவைக்கு பங்களிப்பு செய்து, தனக்கும், பெரும் புகழினை தேடிக்கொண்ட, இவரது பெயரினை ஒத்த இன்னும் ஒரு பிரபலமாக திகழ்ந்த பிரபல வானொலி நாடக எழுத்தாளர் மறைந்த "போர்வையூர் ஜிப்ரி" யின் நினைவுகளையும் இவர் நினைவு கூருகிறார்.

அத்தோடு, காலஞ்சென்ற போர்வையூர் ஜிப்ரி அவர்களின் மகள், பாத்திமா ரிபாஸா ஜிப்ரியும் நிகழ்ச்சியில் பங்கேற்று தன் தந்தையின் நினைவுகளை பகிர்கிறார்.

காலஞ்சென்ற போர்வையூர் ஜிப்ரி, முஸ்லிம் நிகழ்ச்சிகளில் நாடகங்கள் ஒலிபரப்பாக துவங்கிய காலத்திலேயே, முஸ்லிம் நாடகங்கள் எழுதிய குறிப்பிடத்தக்க பிரபலங்களில் முக்கியமான நாடக எழுத்தாளராக இன்றும் அதிகளவு நேயர்களால் நினைவுகூரப்படுகிறார்.

இவர் 1955 களில் முஸ்லிம் நாடகங்கள் முஸ்லிம் நிகழ்ச்சிக்கென எழுதத் துவங்கி, 1975, 1985 களில் கூடுதலான நாடகங்கள், முஸ்லிம் சேவைக்கு எழுதி புகழ் சேர்த்தார். வேலை ப்பளுவின் காரணமாக எழுத்துத் துறையை விட்டும் சற்று தூரமானார்.

இறைவரி திணைக்களத்தில், வரிமதிப்பீட்டாளாரக பணியாற்றிய இவர் பட்டய கணக்காளருமாவார். நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவைப்பணிப்பளர் எம்.ஜே. பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

டிக்கோயா ரோட்டறி கழகத்தின் தலைவராக தியாகு

சர்வதேச ரோட்டறி கழகத்தின் டிக்கோயா கழகத்தின் தலைவராக சுப்பிரமணியம் தியாகு 2022/2023 ஆண்டிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் சுப்பிரிமணியம் பூரணம் தம்பதிகளின் புதல்வராவார். தனது ஆரம்ப கல்வியை கந்தப்பளை மெதடிஸ்ட் கல்லூரியிலும் பின்பு நுவரெலியா புனித சவேரியார் கல்லூரியிலும் பின்பு ஆண்டு 5 முதல் க.பொ.த சாதாரண தரம் வரை கண்டி அசோகா வித்தியாலயத்தில் கல்வி கற்றதுடன். உயர் கல்வியை நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியிலும் கற்றார்.

கடந்த 30 வருடங்களாக சுதந்திர ஊடகவியலாராக செயற்பட்டு வருகின்ற இவர் நுவரெலியா இந்து கலாசார பேரவையின் முன்னாள் செயலாளராகவும் நுவரெலியா ஆவேலிய சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் நுவரெலியா பொது வைத்தியசாலையின் முன்னாள் அபிவிருத்தி சங்க செயலாளராகவும் நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளராகவும் ஆசிய வலய ஊடகவியலாளர் சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினராகவும் இன்னும் பல பொது அமைப்புகளின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார்.

தன்னுடைய காலப்பகுதியில் ரோட்டறி கழக தலைவராக பாடசாலை மாணவர்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படவுள்ளதாகவும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக புலமைப்பரிசில் திட்டங்களை செயற்படுத்துவதற்கு தன்னுடைய குழுவினருடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் டிக்கோயா ரோட்டறி கழகத்தின் செயலாளராக டாக்டர் ரவிவர்மன் தெரிவு செய்யபட்டுள்ளதுடன் பொருளாளராக பாலகிருஸ்ணன் திருச்செல்வமும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த காலங்களில் டிக்கோயா ரோட்டறி கழகம் பல பொது வேலைத்திட்டங்களை ஹட்டன் உட்பட பல பகுதிகளிலும் முன்னெடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நாகலிங்கம் லோகேந்திரலிங்கத்தின் 50 ஆண்டு கால ஊடக மற்றும் இலக்கியப் பணிகளை பாராட்டும் நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 12/07/2022 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. உடுவை எஸ். தில்லை நடராஜா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் கனடா உதயன் பத்திரிகையின் இலங்கை சிறப்பு இதழின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். அத்துடன் இலங்கை பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் இளைஞர்கள், கலைஞர்கள் சமூக ஆர்வலர்கள் சார்பில் லோகேந்திரலிங்கத்திற்கு கௌரவிப்பும் இடம்பெற்றது. இந்த வைபவத்தில் சிவஸ்ரீ வைத்தீஸ்வரகுருக்கள், மூத்த ஊடகவியலாளர் வி.தேவராஜ், சிரேஷ்ட எழுத்தாளர் கலாநிதி. சிவலிங்கம் சதீஷ்குமார், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(படம்: கொழும்பு வடக்கு நிருபர்)

வெளிநாட்டு பயணமும் குடும்ப சிதைவும்

ஆசிரியர்
சந்தனம் பத்மசிறி
தெரணியகலை

பாலகனாய் விட்டு சென்றாய்
இப்போது பயங்கரமாய் வளர்ந்திருப்பேன்!
பார்க்க நீ வரும்போது பல
மாற்றமும் உற்றிருப்பேன்!

வளர்த்த மகன் வீணானான் என்று
வாசல்வரை புலம்பும் நீ நான்
உன்னை பார்த்து வளர்த்தவளே என்பேனோ?

நச்சு வார்த்தை பல வசையாக
என்னில் இணைந்திருக்கும் பலர்
பாசம் என்னில் கோபமாய் மாறி நிற்கும்
எட்ட நின்று பார்த்தாலும் தனியாய்
நான் அழுவேன்!!
பத்து மாதத்தில் பெற்றவளே என்னருகில்
நீ இல்லை என்று!!!

காசு தேடி நீ வருவாய்
ஆனால் கருங்கல்லாய்
என் மனமோ சூதாக மாறி நிற்கும்
கண்டு நீ கவலை கொள்வாய் !!

இனி வேண்டாம் இந்த வெளிநாடு
என்னோடு நீ விளையாடு
அந்த இன்பம் போதும் அம்மா!!
சிதைந்த வாழ்க்கை அது சீக்கிரமாய்
திரும்பிவிடும் தொலைத்த இன்பம்
எல்லாம் தொடர்ச்சியாய் வந்து சேரும்
வெளிநாடு வேண்டாம் அம்மா!

பொய்த்துப் போன கனவு

மலையருவி பானு (பாத்திமா ஸகீனா)

சுமந்த காதல் அழியாமல் இருக்கிறது...
இன்னும் என்னுள் உன்னை சுமந்தவாறே...
இருந்தும் எப்படி நான் மறந்தேன்...
பொய்த்துப் போன கனவு நீயென...

என்றோ நீ பேசிய வார்த்தைகளால்...
என்னில் இன்றிந்த நம்பிக்கையின் சுடர்...
என்றாவது வந்துவிடுவாய்
என்றென்னில் அசரீரியாகிறது...

அதனாலோ இதயம் நினைவுகளை உயிர்க்கிறது...
இது சிறு பிரிவென்றே சொல்கிறது...
சிற்றிடைவெளியில் கூட உந்தன் நினைவில்...
கனப்பொழுதிலும் மனம் தனிமையை நாடுகிறது...

இருட்டிய நொடிகளில் உறக்கமும் தொலைகிறது...
வாசல் கதவில் எதிர்பார்ப்பும் புதைகிறது...
ஏதோவொரு ஏக்கம் நெஞ்சில் கனக்கிறது...
எங்கோ கேட்கும் குரலும் உனதாகிறது...

பாசத்தின் பிணைப்பும் நம்பிக்கையும் வெல்லும்...
எனக்குள் வாழும் நீயும் மீள்வாய்...
இதுவொன்றும் நிரந்தர விலகல் அல்லவே...

புனிதஹஜ்

தேசகீர்த்தி
எம். நிசாம்தீன்

பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்
பாலைவத்தில் நடந்த
இறைநேசர் இப்ராஹிமின்
பாலர் இஸ்மாயில் நபியின்
இணையில்லாத் தியாகத்தைநினைவு
கூரும் நிகரில்லா ஹஜ்ஜாகும்;

தூண்கள் ஐந்தில் துணிந்துநிற்கும்
தூயகடமை ஹஜ்ஜாகும்
கலிமாவைகல்பில் போற்றிதல்பியாவை
மனதில் ஏற்றி
புனிதஹஜ்ஜை பூரணமாகநிறைவேற்றி
கஹ்பாவைசுற்றி அலை
மோதும் ஹாஜிகள் கூட்டம்
அல்லாஹ்வின் அலைப்பொன்றேதல்
பியாநாதமதில் உலகெல்லாம்
செவிகொள்ளும் கண்கொள்ளா
காட்சி ஹஜ்ஜாகும்

ஏற்றத்தாழ்வுகள் எல்லாம்
இல்லாதொழிந்துபோகும்
ஒன்றே குலமென்று ஒற்றுமையாய்
நின்றுதொழும் நிகழ்வே ஹிஜ்ஜாகும்
வேதத்தைமதிக்கும் விவேகத்தை காட்ட
மக்கள் கூட்டம்
மக்காநகரில் மகிழ்வூட்டும் ஹஜ்ஜாகும்

பெற்ற மகனைவிட்டு சென்ற– திறந்தவெளியில்
இருந்த பாலகனை பரந்த பாலைவனத்தில் பிரிந்து
செல்ல வைத்த தியாகம் இதுவே

பாலைவனத்தில் பாலுக்கு துடித்த பாலகனுக்கு
பரிதாபமாக அலைந்துதிரிந்த
அன்னை ஹாஜராவின் பாலகன்
இஸ்மாயில் நபியின் பாதடியில்
ஊற்றெடுத்ததேஅதிசய
ஸம்ஸம் புண்ணியநீராகும்

அள்ளஅள்ளபுனிதநீரும்
வற்றாத ஸம்ஸம் சுவனஆறும்
ஹஜ்ஜுக்குசென்றால் அதைநீரும் பருகிபாரும்
மருந்தாகஅதைவீட்டுக்குகொண்டுவாரும்

அற்புதமாக அங்கேதோன்றிய
ஸம்ஸம் நீர் ஊற்று– அது
எப்போதும் வற்றாத ஏகன்
வழங்கியதேன் ஊற்று

தரித்திடும் இஹ்ராம்
உடைதணிந்திடும் உலகின் ஆசை
தந்திடும் மரணத்தின்கலைமனதில்
எழுந்திடும் மஹ்ஷரின் நிலை

அருள் வடிவாம் இப்ராஹிம்நபிக்கு
அல்லாஹ்வின் ஆணைபிறந்தது
அதன் பயனாகப் பாரான் வெளியில்
அதிசயசம் பவம் நிகழ்ந்தது

இப்ராஹீம் நபிதன் அருமை
மகனைபலியிடதுணிந்த
இறை ஆணை எனக்கண்டு பலியிட
அன்னை ஹாஜரா நாயகிஅனுமதிக்க
மகத்தானகனவுஎனமகன்
இஸ்மாயில் நபியும் சம்மதிக்க
கத்தியின் கூர்மைகண்டு
கலங்காத இஸ்மாயில் நபி
வாஞ்சையோடுதம் கழுத்தை
அறுக்ககொடுக்க
கத்தியும் அறுக்கமறுத்தது

ஆட்டொன்றை அல்லாஹ் அனுப்பி
ஆணையிட்டான் குர்பான் கொடுக்குமாறு
இறை இட்டசோதனைகலத்தை
சாதனையால் வெற்றிகண்டார் நபி
இப்ராஹிம் இறைதூதர் அவர்கள்

இப்ராஹிம் நபிபாங்கைகேட்டோர்
ஹஜ்ஜை இனிதாய் நிறைவேற்றுவர்
புண்ணியபூமிமக்காநகரம்
போய் வாருங்கள் ஹாஜிகளே..!
புதிதாய் பிறந்தபாலகனைபோல்
பாவம் நீங்கிவாருங்களே..!

அல்லாஹ் அருளியபாக்கியம்
அதுகிடைப்பதுஉமக்குநிச்சயம்
ஏக இறைவனின் விருந்தினர் தாங்கள்
இஹ்ராம் கட்டிய ஹாஜிகள் நீங்கள்
இறைமறைவழியில் உயர்ந்துசெல்லுங்கள்

புனிதமக்காமண்ணைமிதித்தமாந்தருக்கு
ஹாஜி பட்டம் நீஅளித்தாய் அதற்குநல்ல
மதிப்பும் மரியாதையும் நீகொடுத்தாய்

பாவம் அறியாபாலகனாய்
ஹாஜிகள் யாவரும் மாறிடவே
பலம் பெறும் ஹஜ்ஜின் பாக்கியம் கிடைத்திடவே
ஹஜ்ஜை செய்யும் நோக்கத்திலே
அடைவோம் அதன் நன்மைகளே

படைத்தவன் அல்லாஹ்வை உள்ளத்தால் உணர்ந்திட
கண்ணியமிக்க கஃபாவைகண்குளிரகண்டிட
வல்லமை வல்லோனின் நன்மைகிடைத்திட
வாழ்வில் ஒருமுறை ஹஜ் பயணம் செய்திட
இணையற்ற அல்லாஹ் நம் அனைவருக்கும்
நல்லருள் புரியட்டும் ஆமீன்

நிலாவின் குடியேற்றம்!

சி. மௌநேஷ் ஏறாவூர் 04

நம் உதிரத்தில் உருவான
பாவை நிலாவொன்று அழுகின்றது
அதன் நிறம் சிவப்பு நிறம்
கசப்பும் புளிப்பும் கலந்த
காந்தர்வ நிலாவொளியில்
மீ ண்டும் மீண்டும் அதேகுரல்
துப்பாக்கி கலாசாரம்
அணு ஆயுத கலாசாரம்
தேசத்திற்கு தேசம் யுத்தம்
இவ் உலகில் பல மொழிகள்
இம் மொழி என்னும் சிலந்திவலையில்
சிக்குண்ட மனித இனம்
காட்டுமிராண்டிக்காலத்தில் இருந்து
இன்னும் விடுபட வில்லை
இதற்கு நல்ல சாட்சி
உக்ரேனும் ரஷ்யாவும்...
இன்று வீதியில் நீண்ட வரிசையில்
மனித இனம்...
வெல்லப் போவது...!
சுய நலமா இல்லை பொது நலமா?...

நெருப்பு நதியில் நீந்தும் அம்மாக்கள்...!

ஷெல்லிதாசன்....
திருகோணமலை

அடுக்களைச் சமையல்களுக்குள்
அமிழ்ந்து விடுகின்றது பல
அம்மாக்களின் வாழ்க்கை..!

உறங்கும்போது கனவுகளாகவும்
விழிப்பின்போது நனவுகளாகவும்
அன்றாடம் மூன்று வேளைகளிலும்
என்ன சமையல் செய்வதென்ற
கேள்விக் கொத்து
அவளின் முன்னே..!

இருப்புக்கள் இருக்கிறதோ இல்லையோ
ஒவ்வொருவா் விருப்புகளுக்கும்
வேண்டிய விதத்தில் சமையல்கள்!

அப்பனுக்கு ஒன்று
பிள்ளைகளுக்கு வெவ்வேறு
திருப்திக்கு வேறொன்று
மாமனாருக்கோ ஏதேதோ..!

தன்விருப்பம்
தன் வருத்தம் பாராது
கையில் காசில்லாவிட்டாலும்
அடுத்த வீட்டிலோ கடையிலோ
கடன்பட்டு ஆக்கிப் போட்டாலும்
வாய்க்கு ருசியில்லையென்ற
வக்கணைகள்....!

ஏன்டா சாமி என்னை
பெண்ணாய் படைத்தாய் என
ஏங்கும் அவளது மன ஏக்கங்களை
புரிந்து கொள்ள முடியாத
மரமண்டை மனித ஜென்மங்களால்
மரத்துப் போனது அவளது நகர்வுகள்..!

நித்தம் நித்தம் நெருப்புக்குள்ளும்
அடுப்புப் புகைக்குள்ளும்
மூழ்கும் அவளது இதயம்
கறுத்துக் கருகுகிறது
காலன் வீசும் பாசக்கயிற்றை
அவள்.....
பற்றிப் பிடிக்கும் வரை...!

பிரிதலெனும் வலி

ஷப்ரா இல்முத்தீன்

முன்பு போல்
நம்மால் இனியும்
பேச முடியாது
போய் விடுமென்பதன் வலி
எத்தனை பாரமானது..

கிடைக்கும் நேரங்களில் எல்லாம்
அழைப்பெடுத்து
அளவளாவி

அடிக்கடி ஒரு குறுஞ்செய்தியில்
பல் இழித்து பாவனை காட்டி
குறும்பாய் வெளிவரும்
ஒரு புகைப்படத்தை
இருவருமாய் பார்த்து
தனித்தனியே சிரித்தென

அந்த நிமிடங்கள்
மீண்டும் வராதென்பதை
மனதால் ஏற்றல் தான்
எத்தனை வலி நிறைந்தது...

இருப்பினும்
ஓர் ஓரமாய் அமர்ந்து கொண்டு
அழுகையை நிறுத்திட
அங்கிருந்து வந்த
மனதை மாற்றுமொரு
குறும்புச் செய்தியையும்
அன்பெனும் பெயரில்
களவாடிக் கலைத்த
ஒவ்வொரு நொடிகளையும்

நொடிக்குள்
இருபது குறுஞ்செய்திகளை
பரிமாறிக் கொண்ட
அந்த தொலைபேசி
திரையையும் பார்த்து
புன்னகை செய்வதைத் தவிர
வேறென்ன செய்திட முடியும்...

முன்பு போல் நம்மால்
இனியும் பேச முடியாதெனும்
வலிகளுக்குள் புதைவதைத் தவிர..

அம்மா!

அஸ்மா பாரிஸ்
மள்வானை

அன்பு என்றால் அம்மா
ஆறுதல் தருபவள் அம்மா
இரத்தத்தைப் பாலாக்கித் தந்தவர் அம்மா
ஈகை விளக்கியவர் அம்மா
உயிரைக் கொடுப்பவர் அம்மா
ஊழ் உரைத்தவள் அம்மா
என்னைப் பெற்றவள் அம்மா
ஏணியாய் இருந்தவள் அம்மா
ஐயம் நீக்கியவர் அம்மா
ஒற்றுமை விதைத்தவள் அம்மா
ஓய்வின்றி உழைத்தவள் அம்மா
ஔடதம் ஆனவள் அம்மா

சொல்ல மறந்த காதல்

பவி!
கொட்டகல

சொல்ல மறந்த காதல்
மிக சோகம் நிறைந்தது
மெல்ல நினைத்துப் பார்க்க
மனப் பாரம் கொடுப்பது

இதயம் வலிக்க பலருக்கு
காரணம் மறைத்த காதல்
உதயம் வாழ்வில் குறைவே
ரணமே அந்தக் காதல்

காயம் மனதில் இருக்கும்
வலியை வாழ்வில் கொடுக்கும்
மாயம் செய்யும் இன்றும்
மொழியை மறக்க வைக்கும்

காதல் உதித்த நேரம்
இருக்கும் இதய ஓரம்
சொல்ல மறந்த செயலே
இன்றும் மறக்கடிக்கும் துயிலை

கனவில் ஜெயித்த காட்சி
அடிக்கடி வந்து போகும்
மனமும் ஆறுதல் பெறும்
அதுவே வாழப் போதும் பவி!!!!

கரிகாலன் காதல்

ரதிதேவி,
மானிப்பாய்

தூயமனிதன் அல்ல இவன்
தூண் இடிந்த நடுவினிலே
கொதிக்கும் மலர்
பதிக்கும் பாதம்
நிலம் பறிக்கும் உணர்வுடனே

அவள் மார்பில் சாய்ந்திட
வாய்ப்பு மறுத்ததினால்
கொய்த முகம்
மிதக்கும் இவன் கனவினிலே
கொதிக்கும் நிலவாய்
முழுநிலவாய்

துதிக்கும் சிவனடியை சேர்ந்திருக்கலாம்
வாழ்வே மாயம் என்று மாண்டிருக்கலாம்
அமைப்பன் பல கோயில்கள்
எல்லாம் ஆணவச் சுவர்கள்

அன்பு

சுமையா சத்தார்
அநுராதபுர்.

அன்பு என்பது ஒற்றை
வார்த்தை தான்...
அம்மா என்பது போல..

அதில் இயற்கை
செயற்கை என்ற எந்த பேதமும் கிடையாது...

உருவம் இல்லாத அந்த
வார்த்தை உருவம் உள்ள
சிலரால் நாடகம் என்னும்
வார்த்தைக்குள் மடிய வேண்டாம்...

யாருடைய மனதையும்
யாராலும் படித்து எளிதில் புரிந்து கொள்ள முடியாது...

அப்படியிருக்க ஒருவரது அன்பை மட்டும் எப்படி
பொழுதுபோக்கு,
நடிப்பு என்றெல்லாம் அடையாளப் படுத்த முடியும்...

அன்பு தேடப்படும் பொருள் தான்

கண்ணீர் வடிக்கும் போது
ஆறுதலுக்காய்
தேடப்படுகிறது...
தனிமையின் போது
அழகிய தோழமைக்காய்
தேடப்படுகிறது..
துவண்டு போய் இருக்கையில்
தூக்கி விடத் தேடப்படுகிறது..
கோபத்தின் போது வார்த்தைகளைக்
கொட்டிவிடத் தேவைப்படுகிறது..
கோபத்திலும் காயப்படவும்
காயப்படுத்தவும் தேடப்படுகிறது...

தேடப்படும் பொருளாக அன்பு இருக்கிறது
என்று எண்ணாதீர்கள்...
எப்போது ஒரு விடயம் தேடப்படுகிறதோ
அப்போது தான் அதன் பெறுமதி உயரும்...

எந்த சூழ்நிலையிலும்
அன்பு மாறாதது..
ஆனால் அது எந்த வடிவிலும் இருக்கலாம்..
அதை அன்பு என்று ஏற்றுக் கொண்டாலே போதும்
ஏமாற்றங்கள் தொலைந்து விடும்...

பயன்தரும் மாற்றம்

குப்பிளான் குமரன்

எங்கும் எல்லோரும் இன்று பேசுகின்றனர்
எரிபொருள் பிரச்சினையின்
பாதிப்பினையே பெற்றோலிய
விலை உயர்வும் தட்டுப்பாடும்
ஏங்க வைக்கிறது மக்களையே

மக்களின் வாழ்க்கையினை
இலகுபடுத்த மாமனிதர்கள்
பலவற்றை கண்டுபிடித்தனர்
மக்கள் அவற்றை இயக்குவதற்கு
உள்ளீடாகியது பெற்றோலியம்

பெற்றோலியப் பொருட்கள் இல்லாவிடில்
நாடே இயங்காது என்றாயிற்று
பெற்றோல் பாவனை அதிகரித்து
நமது சூழலும் அழிவடைந்தது

பாதிப்பை அறியாத அக்காலத்தில்
பயன்படுத்தினர் அதிக எரிபொருட்களை
இன்றைய நிலையில் எமது நாடு
டொலர்கள் இல்லாமல் திணறுகிறது

டொலர் பற்றாக்குறையின்
பாதிப்பு எரிபொருட்களை
பெறமுடியாமல் செய்தது
என்றும் நாட்டை
நேசிக்கும் மக்களாய்
எரிபொருள் பாவனையை
குறைக்கப் பழகுவோம்

சக்தியைப் பெற
புதியன புகுவோம்
பொதுப் போக்குவரத்தை
பயன்படுத்துவோம் மிதிவண்டிகளை
மீண்டும் பயன்படுத்துவோம்
நம் மனங்களை மாற்ற பழகுவோம்

மனத்திடம் கொண்டெழுவோம் வாரீர்

கலாபூஷணம் மொழிவரதன் கொட்டக்கலை

காலமெனும் ஜீ வநதி – காராராய்
கட கட வெனவே
ஞாலமதில் சத்தமின்றி – தொடர்ந்த
தோடுது சற்றே பார்!
காலை எனும் பொழுதினிலும் – பின்
காய்ந்து வரும் மதியத்திலும்
மாலை மங்கும் வேளையிலும் – சிறிதும்
மாற்ற மின்றியே ஓடுது பார்!
மாட்டுத்தொழுவமென்ன – என்றோ
மடையனொருவன் கட்டிவைத்த
வீட்டு முறைமையிலே முழு மாற்றமிலை – அதை
விட்டு விலகிடவும் வழி இல்லை
ஒட்டுரிமை பெற்ற பின்னும் – இங்கே
உருப்படியாய் ஏது மில்லை
வெற்று கோவடிங்கள் மறுக்கனும் – புதிய
வீறார்ந்த நெறி ஒன்றுதோன்றனும்
ஆயிரம் பெற்றும் ஒன்றுமில்லை – அதை
அடுத்தும் பல்லாயிரம் சோதனைகள்
காவயிறு அரைவயிறு கதை – இன்னும்
கதையாகவே தொடருது பார்!
காற்று தரும் இதமான சுகத்திலே – இங்கே
கடந்திட்ட முப்பாதை தனை
மாற்றி ஒருலகமைத்திட மலையகத்தாரே– இன்றே
மனத்திடம் கொண்டெழுவோம் வாரீர்

පෙරුගෙ
பெறுகை அறிவித்தல்

லங்கா சதொச லிமிட்ட் நிறுவனத்தின் நட்டுகளை பழுதுபார்ப்பதற்காக தகுதியுடைய வழங்குனர்களை தேர்வு செய்தல்

விலைமனு இலக்கம் : LSL/PRO/05/94/Repair
Super Market Rack- Maligawatta WH/2022

24 ஜூன் 2022 அன்று கொள்விப்பட்ட பெறுகை விலைப்பத்திரம் ஏற்பு, மாவத்தின் முழுவு மற்றும் திறக்கும் தேதி 25 ஜூலை 2022 பிற்பகல் 01.00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தலைவர், நிலைக்கான பெறுகைக் குழு
லங்கா சதொச லிமிட்ட்

INTERNATIONAL DRIVING LICENCE

Obtain Your International Driving Licence to Drive Overseas.

AA CEYLON

Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha,
Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB: www.aaceylon.lk

விலைமனுக்களுக்கான அழைப்பிற்கான திருத்தம்

SUPPLY, APPLICATOR TRAINING AND APPLICATION SUPERVISION OF WALL GRANULAR BASED ESTERIOR COATING SYSTEM FOR BLOCKS 06, 07 AND 08 OF DEFENCE HEADQUARTERS COMPLEX AT AKUREGODA

CONTRACT No.: DHQC/GRAN COAT 678/2022

1. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக சண்டே ஒப்சேவர், சிலுமின மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு தொடர்பானது.
2. மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுக்களுக்கான அழைப்பிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
   - விலைமனுக்களை திறத்தல்/ மூடல் நேரமானது 2023 ஜனவரி 17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.
   - விலைமனுக்கள் 2023 மே 16 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   - விலைமனுப்பிணையானது 2023 ஜுன் 13 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. முன்னைய விலைமனுக்களுக்கான அழைப்பின் ஏனைய அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் பணிப்பாளரிடமிருந்து பெற்று 2023 ஜனவரி 16ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

தலைவர்,
அமைச்சு பெறுகைக் குழு,
பாதுகாப்பு அமைச்சு,
பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி,
ரீரீ ஜயவர்தனபுர கோட்டே.

தொலைபேசி : 0094-11-2439381/ 0094-11-2390719.
தொலைநகல் : 0094-11-2390720
மின்னஞ்சல் : procurement@defence.lk

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

இலங்கை முதலீட்டுச் சபை
விலைமனு மூடும் திகதியை நீடிப்பதற்கான அறிவித்தல்
இலங்கை முதலீட்டுச் சபையின் கோப்பரேட் வீடியோ உற்பத்தி கம்பனியொன்றை தெரிவு செய்வதற்கான முன்மொழிவுக் கோரிக்கை

(BOI/ADM/Q/81/2022)

மேலேயுள்ள விலைமனு தொடர்பாக 2022 ஜுன் 26 ஆம் திகதியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கு மேலதிகமாக, முன்மொழிவு கோரிக்கைக்கான மூடும் திகதிகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளவென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

- **முன்மொழிவு முன்னோடிக் கூட்டம்** : 2022 ஜுலை 20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு
- **முன்மொழிவு கோரிக்கை ஆவணங்களை வழங்குவதற்கான மூடும் திகதி** : 2022 ஜுலை 28 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும்.
- **முன்மொழிவிற்கான மூடும் திகதி** : 2022 ஜுலை 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக.

2022 ஜுன் 26 ஆம் திகதியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்தில் வழங்கப்பட்ட ஏனைய விபரங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

மேலதிக தகவலுக்காக விலைமனுதாரர்கள் தயவு செய்து நிருவாகத்திற்கான சிரேஷ்ட பிரதி பணிபாளரிடமிருந்து 011-2543041/ 074-1531432 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
இலங்கை முதலீட்டுச் சபை

www.adz.lk
it's what you want

தொடர் தொலைக் கல்வி நிலையம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பொது கலைமாணி (வெளிவாரி) தேர்வு (பழைய பாடவிதானம்) - 2021
ஒக்டோபர் / நவம்பர் - 2022

01. பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுதல்

+ முதலாம் கலைத்தேர்வில் (GAQ) (வெளிவாரி) சித்தியடைந்தவர்களும் செல்லுபடியான பதிவினையுடைய வெளிவாரி பட்ட அபேட்சகர்களும் மேற்படி பரீட்சையில் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம்.
+ பரீட்சை விண்ணப்பம் தொடர் தொலைக்கல்வி நிலைய இணையதளமான www.pdn.ac.lk/cdce என்ற இணையதளத்தில் 2022-07-20 ம் திகதி வரை பதிவிறக்கம் (Download) செய்யலாம்.

உரிய விதத்தில் பூரணப்படுத்தப்பட்ட பரீட்சை விண்ணப்பப் படிவங்களை 20-08-2022 ம் திகதி அல்லது அதற்கு முன் "துணைப் பதிவாளர்" தொடர் தொலைக்கல்வி நிலையம், இல.43 பழைய கலஹா வீதி, பேராதனை (Deputy Registrar, Centre for Distance and Continuing Education, No. 43, Old Galaha Road, Peradeniya) எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். குறித்த திகதியின் பின் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்ப படிவங்களும் பூரணமற்ற விண்ணப்ப படிவங்களும் நிராகரிக்கப்படும்.

02. பதிவைப் புதுப்பித்தல்

+ மாணவர்கள் தங்களின் பதிவைப் புதுப்பித்துக்கொள்வதற்காக பதிவைப் புதுப்பிக்கும் விண்ணப்பத்தினை (விண்ணப்ப இல. 02) தொடர் தொலைக்கல்வி நிலைய இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து குறித்த கட்டணத்தைச் செலுத்தி பரீட்சை விண்ணப்பத்துடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் காலங்களில் எமது படநெறிகள் பற்றிய அனைத்து தகவல்களையும் அறிவித்தல் களையும் எமது உத்தியோகபூர்வ இணையதளமான www.pdn.ac.lk/cdce மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சை விண்ணப்பப்படிவம், அறிவுறுத்தல்கள், பரீட்சை அனுமதி அட்டை, பரீட்சை நேர அட்டவணைகள், ஆசன ஒழுங்குமுறைகள் போன்ற அனைத்து ஆவணங்களையும் எமது இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் (Download) செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனவே எமது நிறுவகத்தின் மூலம் விடுக்கப்படும் அறிவித்தல்கள், கடிதங்கள், ஆவணங்கள் போன்றவை இனிமேற்கொண்டு **தபால் மூலம் உமக்கு அனுப்பிவைக்கப்படமாட்டாது** என்பதனை அறிவிக்கின்றோம்.

கவனிக்க : பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொடர் தொலைக்கல்வி நிறையத்தினால் நடாத்தப்படும் பொது கலைமானி பாடநெறிக்குரிய (பழைய பாடவிதானம்) தேர்வுகள் 2022 ஆம் ஆண்டுடன் முடிவுறுத்தப்படவுள்ளன. **2022 ஆம் ஆண்டின் பின்னர் மீண்டும் எக்காரணத்திற்காகவும் இப்பரீட்சையானது மீண்டும் நடாத்தப்படமாட்டாது என அறியத்தருகின்றோம்.**

இது தொடர்பான மேலதிக விபரங்களை அறிய விரும்பின் **081-2392210 / 081-2392218** எனும் தொலைபேசி இலக்கத்துடன், அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளவும்.

உதவிப் பதிவாளர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
30-06-2022

University of Peradeniya

IFAD | SAPP

கமத்தொழில் அமைச்சு

சிறுஉரிமையாளர் விவசாய - வர்த்தக கூட்டாண்மைகள் திட்டம் (SAPP)

பெறுகை அறிவித்தல்

பெறுமதி சங்கிலி செயற்பாட்டு சேவையை வழங்கல் – 05 வெற்றிடங்கள்

சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மை திட்டமானது கமத்தொழில் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதிய உதவியுடன் அமுல்நடாத்தப்படும் ஆறு வருட செயற்றிட்டமொன்றாகும்.

மேற்குறிப்பிட்டுள்ள செயற்றிட்டத்தினூடாக கமத்தொழில் பெறுமதி சங்கிலி அபிவிருத்தியை அமுல்நடாத்துவதற்கான செயற்பாடுகளை எடுத்துச் செல்வதுடன் இனம் காணப்பட்ட பயனாளிகளுக்கு அவர்களின் உற்பத்தி செயற்பாட்டை மேலான நிலைபேறான வகையில் அபிவிருத்தி செய்வதற்காக நிதியிடல் மற்றும் கடன் வசதியை வழங்குவதாகும்.

மேற்குறிப்பிட்டுள்ள செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக, 2023 மே 30 ஆம் திகதி வரையும் பெறுமதி சங்கிலி செயற்பாட்டு சேவைகளை வழங்குவதற்காக பின்வரும் தகைமைகளையுடையவர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமைகள்:

1. இலங்கை பிரஜையொருவராகவிருத்தல்.
2. 55 வயதிற்கு குறைவாகவும் சிறந்த உடல் உள ஆரோக்கியத்தையும் கொண்டிருத்தல்.
3. தீவின் எப்பகுதியிலும் உரித்தான சேவையை வழங்குவதற்கான உடல் மற்றும் உள ஆற்றலைக் கொண்டிருத்தல்.
4. ஆங்கில அறிவு/ தேர்ச்சியுடன் சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் தேர்ச்சி.
5. தகவல் தொழில்நுட்பவியலை செயற்படுத்துவதற்கான அறிவு மற்றும் திறன்களை கொண்டிருத்தல்.
6. சுயமான, நெகிழ்வுத்தன்மை மற்றும் கால முகாமைத்துவத்தைக் கொண்டிருத்தல்.
7. மோட்டார் சைக்கிள் உரிமையொன்றைக் கொண்டிருப்பதுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கொண்டிருத்தல்.

கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:

1. அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் கல்லூரியொன்றிலிருந்து பெறப்பட்ட கமத்தொழில் டிப்ளோமாவொன்றுடன் அல்லது நிகரான அல்லது மேலான தகைமைகள், கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டங்களில் 1 வருடம் அல்லது மேற்பட்ட காலத்தில் சுறுசுறுப்பாக சமூக செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல்.

அல்லது

2. கபொத (உ-த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் ஆகக் குறைந்தது 5 வருடங்களுக்கு கிராமிய அபிவிருத்தி செயற்பாடுகளில் அனுபவம் அத்துடன் சமூக உயிர்ப்பூட்டும் செயற்பாடுகளில் சுறுசுறுப்பாக இயங்கியிருத்தல்.

அல்லது

3. கபொத (சா-த) பரீட்சையில் சித்தியுடன் ஆகக் குறைந்தது 5 வருடங்களுக்கு கிராமிய அபிவிருத்தி செயற்பாடுகளில் அனுபவம் அத்துடன் சமூக உயிர்ப்பூட்டும் செயற்பாடுகளில் சுறுசுறுப்பாக இயங்கியிருத்தல்.

பின்வருபவைகள் விஷேட தகைமைகளாக கருதப்படும்.

1. கமத்தொழில் பெறுமதி சங்கிலி தொடர்பாக கிராமிய அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டிருத்தல். உரித்தான துறையில் சமூக உயிர்ப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபாடும் அனுபவத்தையும் கொண்டிருத்தல்.
2. நிதியிடலின் கீழ் அமுல்நடாத்தப்படும் செயற்றிட்ட செயற்பாடுகளில் அனுபவம்.
3. அரசாங்க திணைக்களங்களில் கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் அனுபவம் அல்லது விவசாய தொழில்முயற்சிகளில் அனுபவம்.
4. தகவல் தொழில்நுட்பவியல் பாவனையில் (Office package) தேர்ச்சி மற்றும் அனுபவம்.

விவசாய-வர்த்தக பெறுமதி சங்கிலி அபிவிருத்தி செயற்பாட்டு சேவையை வழங்குவதில் எதிர்பார்க்கப்படும் வகிபங்கு.

மேலதிக விபரங்கள் எமது இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. **'CAREERS' at www.sapp.lk'**

என்ற உபதலைப்பிலிருந்து கடப்பாடுகளின் விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

நிபந்தனை:

உயிர்ப்பூட்டும் சேவையை வழங்கும் ஒப்பந்தமானது ஆரம்பத்தில் மூன்று மாதங்களுக்கு அமைந்திருக்கும். செயற்பாட்டு மதிப்பீட்டின் பின்னர் இக்கால எல்லையானது வருடந்தோறும் நீடிக்கப்படும்.

செயற்றிட்ட பிரதேசம்:

வடக்கு, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பம்:

2022.08.05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உரித்தான தகைமைகள் மற்றும் அனுபவத்தை சான்று பகருவதற்காக உங்களின் சுயதரவு மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அல்லது info@sapp.lk என்ற மின்னஞ்சலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

தெரிவு செய்யும் முறைமை:

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

தலைவர்,
பெறுகைக் குழு,
சிறுஉரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மை திட்டம்,
இல. 212/ஏ, நாவல வீதி,
இராஜகிரிய.
மின்னஞ்சல்: info@sapp.lk

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

BE BETTER INFORMED!



News you can trust now free on your mobile phone.

Dinamina | Daily News | Thinakaran

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

வேலைவாய்ப்பு

309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

கணக்காய்வு/ கணக்காளர் பயிலுநர்கள் விண்ணப்பிக்கவும். முகாமையாளர் 891/2, பேங்ஷால் வீதி, கொழும்பு 11. தொலைபேசி / வட்ஸ்அப் 075 5030954. மின்னஞ்சல் :agapeaccservices@gmail.com 038819

308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

யூடியூப் இற்கு சென்று யூனியன் அஸ்ஸுரன்ஸ் ஆட்சேர்ப்பு வீடியோவை பாருங்கள். அது போன்று வாழ்க்கையை வெல்லுவதற்கு தேவையா யின் அழையுங்கள். டேமியன் 0773719580. 041046

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கிருளப்பனை எப்பார்ட்மன்ட்ஸ் Complex இல் உள்ள ஒரு சிறிய குடும்பம் வசிக்கும் வீடொன்றில் தங்கி வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண் ஊழியர் ஒருவர் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு 0777313478. 041977

வீட்டுப் பணிப்பெண் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 30 இற்குக் கீழ் அனுபவம் தேவையில்லை. நல்ல சம்பளம் வேலை நிபந்தனைகளுடன் தொடர்பு 75/1, W.A. சில்வா மாவத்த, கொழும்பு 06 தொலைபேசி 2591169, 0777452447, 0755091379. 040927

325 தொழில்துறை பொது

கிருளப்பனை எப்பார்ட்மன்ட்ஸ் Building இல் Cleaning வேலை செய்வதற்கு ஊழியர் ஒருவர் தேவை. கிருளப்பனை, நுகேகொடை அருகாமையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. மேலதிக தொடர்புகளுக்கு 0775158079. 041857

காணி/தோட்டம்

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொழும்பு-09இல் 12.2 பேர்ச்சஸ் வெற்றுக் காணி உடன் விற்பனைக்கு. 75 இலட்சம் ஒரு பேர்ச் அரைவாசியும் எடுக்கலாம். 0702777335. 041908

617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கம்பஹா மாவட்டத்தின் வேயன்கொட பிரதேசத்தில் 18.5 பேர்ச் சிறிய வீட்டுடன் காணி நீர், மின்சாரத்துடன் விற்பனைக்கு. தொ.பே. 0768309354. 041749

தினகரன் வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா

*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

முள்ளு முருங்கை மரம்

படித்துக்கொண்டிருந்த கணேசன் யோசனை வந்தவனாக," அம்மா இஞ்ச பாரேன். இந்த முள்ளு முருங்கை மரத்தை வெட்டாமல், இவ்வளவு மொத்தமாய் வரும் வரை விட்டிருக்கிறார் பக்கத்து வீட்டு கிரகன் அண்ணை. எங்களின்ரை குசினியோடை நிக்குது. காத்தடிச்சு முறிஞ்சு தெண்டா என்ன செய்யறது அம்மா." என்று தாய் தெய்வியிடம் கேட்டான்.

தெய்வி என்று அழைக்கப்படுவது தெய்வானை ஆச்சியைத்தான்.

தெய்வி,"எடே மோனே கணேசா, அவன் கிரகன் பெரிய நஞ்சனடா. உவங்கள் முந்தி எங்கட தோட்டத்து காணிக்கையும் தங்கட கலப்பையால் உழுது எல்லைகளை கிளப்பி கொஞ்சம் கொஞ்சமாக அரக்கி அரக்கி தங்கட காணிய பெருப்பிச்சவங்கள்.

எங்களின்ரை தோட்ட காணியின்ரை பரப்பு தான் குறைஞ்சு குறைஞ்சு வந்தது. இப்பவும் என்ன நஞ்சு வேலைக்காக உந்த மரத்தை விட்டிருக்கிறானோ தெரியேல்லை." என்று மகன் கணேசனிடம் கூறினார்.

கணேசன் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது வருடத்தில் படிக்கிறவன். சிறுவயதில் இருந்து பெற்றோர்களும் சகோதரர்களும் நேர்மையாக வாழ்ந்து வரும் நடைமுறைகளை அவதானித்து அவ்வாறு வாழ வேண்டும் என்று விரும்புபவன்.

ஆச்சி தெய்வி சின்னனிலை பிள்ளைகளுக்கு அடிச்சு பயப்படுத்தி வச்சிருந்தா. வளர்ந்தாப் போலை அவவுக்கு தன்ர ஆம்பள பிள்ளைகளை கட்டுப்படுத்த முடியவில்லை. அவவுக்கு ஆறு பெடியங்கள். பெடியங்களை பெற்ற தாலை சொந்தக்காரரின் பொறாமைக்கு உட்பட்டதுதான் மிச்சம்.

பிள்ளைகளால் அவவுக்கு பெரிய சுகம் ஒண்டும் கிடைக்கவில்லை. அவை ஒவ்வொருத்தரும் வளர வளர தங்களின்ரை போக்கில போகத் தொடங்கிவிட்டினம்.

கணேசனும் வெளியாட்களுக்கு நல்ல பெடியன் தான். ஆனால் வீட்டிலை தாய் சொல்லுறது ஒண்டையும் கேட்க மாட்டான். பெரிய ஆளான பிறகு கணேசன் செய்யிற அட்டகாசங்களைப் பார்த்து மனிசி தெய்விக்கு பயமாக இருந்தது. அதனால் கணேசன் எது செய்தாலும் அவ ஒண்டும் பேச மாட்டா. கணேசனும் இளமைத் துடிப்பில் தான் நினைச்சதெல்லாம் செய்வான். தாயை கணக்கெடுக்க மாட்டான்.

சும்மா பேச்சுக்கு எதையாவது கதைப்பான். அப்படித்தான் அந்த முள்ளு முருங்கை மரத்தை பற்றியும் தாயிடம் கேட்டான். கிரகன் படிக்கேல்லை எண்டாலும் சின்னனிலை இருந்து தனது தாய் தகப்பன் மாதிரி வறுகி வறுகி காசு சேர்க்க வேண்டும் என்று பேராசை கொண்டிருந்தான். அதற்காக அவன் களவெடுப்பதில் ஈடுபடவில்லை. பக்கத்து காணிகளை அபகரிப்பது, காசை செலவழிக்காமல் இருக்கிறது, போன்ற விடயங்கள் மூலம் தங்களது செல்வத்தை பெருக்க முயன்றான்.

கிரகன் தனது முப்பத்தி ஐந்து வயதில் தான் திருமணம் செய்தான். கல்யாணம் செய்த பின்னர் தனது பெற்றோர்களின் சொத்தான கணேசனின் வீட்டுக்கு பக்கத்திலிருந்த வீட்டிலதான் மனைவியுடன் குடியேறினான். அது பெரிய காணியாய் இருந்ததால் அதில் மரவள்ளி, வாழை, பழமரங்கள் போன்றவற்றையும் நாட்டினான்.

கணேசன் அடுத்த நாள் கிரகனுடைய வளவுக்குள் கால் வச்சதை அம்மா தெய்வி கண்டுவிட்டார். அவ மெல்லமாய் அடிக்குரலில் கணேசனுக்கு ,"மோனே சண்டைகிண்டைக்கு போகிடாதை" என்றார். கணேசன் தாயின் வார்த்தைகளை கேட்டும் கேட்காதது போல் கிரகனின் வீட்டுக்கு போனான். அங்க வெளியில கிரகனின் மனுஷி சரசி அக்கா தான் இருந்தார். சரசி என்று அவவை ஆக்கள் கூப்பிட்டாலும் அவவின்ரை உண்மையான பெயர் சரஸ்வதி என்பதாகும்.

கிரகனின் வீட்டு வாசலுக்கு கணேசன் போனபோது சரசி அக்கா,"வா தம்பி வாங்கோ" என்று வரவேற்றார். பின்னர், "என்ன தம்பி இந்தப் பக்கம் ஒருநாளும் வர மாட்டீங்களே" என்று கூறினார். கணேசன் அமைதியாக சரசி அக்காவிடம் முள்ளு முருங்கை மரத்தை தனது விரல்களால் சுட்டிக் காட்டி,

"அக்கா அங்க பாருங்கோ, எங்கட குசினிக்கு பக்கத்துல முள்ளு முருங்கை மரத்தை எவ்வளவு பெரிசா வளரவிட்டு இருக்கிறீங்கள். மரம் பாறி விழுந்துதெண்டால் குசினிக்கு எவ்வளவு பெரிய சேதம் வரும். அதை கிரகன் அண்ணாவிடம் சொல்லி ஒருக்கா வெட்டி விடுங்கோ" என்று கூறினான்.

இதை கேட்டுக்கொண்டு வீட்டுக்குள்ளே இருந்த கிரகன் வெளியே வந்து,"தம்பி இஞ்ச பாருங்கோ. எங்களின்ரை வளவுக்குள்ள மரவள்ளி நட்டு இறைக்கிறேன். உங்களின்ரை வேலியிலை இருக்கிற பெரிய பூவரசு மரத்தை பாருங்கோ. எவ்வளவு பெருசா வளர்ந்திருக்கு. அதால எங்களுக்கு எவ்வளவு பாடு. நீங்க அந்த பூவரசம் மரத்தை தறிச்சு விட்டால் நானும் முள்ளு முருங்கை மரத்தை தறிச்சு விடுகிறேன்" என்று கூறினான்.

கணேசன் சரசி அக்காவிடம், "அப்ப நாங்களும் பூவரசு மரத்தை தறிக்கிறோம். நீங்களும் முள்ளு முருங்கை மரத்தை தறிச்சு விடுங்கோ "என்று கூறினான். அப்போது சரசி அக்கா நல்ல பிள்ளை தனமாக,"சரி தம்பி பிரச்சினைகளை சமாதானமாக பேசி தீர்க்கிறது நல்லதுதானே" என்றார்.

கணேசன் இளைஞனாக கள்ளங்கபடம் அற்றவனாக இருந்தான். அவனுக்கு பெரிய அளவில் அனுபவங்கள் கிடைக்கவில்லை. வெளுத்ததெல்லாம் பால் என்பதுபோல சரசி அக்கா நேர்மையாக பேசுகிறார் என அப்பாவித்தனமாக நம்பி விட்டான். கிரகனினதும் சரசியினதும் நயவஞ்சகத்தை அவன் உணரவில்லை.

கணேசன் வீட்டுக்கு வந்ததும் அனுபவ சாலியான தாய் தெய்வி உண்மையை புரிந்துகொண்டார். ஆனால் கணேசனின் முரட்டுத்தனமான குணத்திற்கு பயந்து பெரிதாக ஒன்றும் அலட்டிக்கொள்ளவில்லை. எனினும் கணேசனிடம்,"என்னடா அங்கால போனாய். என்ன கதைச்சனி." என்று கேட்டார்.

கணேசன்,"அவை சொல்லுகினம் எங்களின்ரை வேலியில் உள்ள பெரிய பூவரசு மரம் அவையின்ரை பயிர்களுக்கு பாடாய் இருக்குதாம். எங்கட பூவரசை வெட்டினால் தாங்களும் முள்ளு முருங்கை மரத்தை வெட்டுறதெண்டு சொல்லுகினம்." என்று கூறினான்.

தாய் தெய்வி "எடே பார்த்தியேடா நான் சொன்னேன் அவன் நஞ்சு வேலைக்காக தான் வெட்டாமல் இருக்கிறான் என்றேன்." என்று கூறினர். மேலும் "அந்த பூவரசு எவ்வளவு காலமாய் நிக்குதடா. கோழியள் எல்லாம் இரவில அதுல தானேடா பறந்துபோய் தூங்குகிறது. எப்படியடா அதை நீ வெட்ட சம்மதிச்சாய். ஏதோ சொல்ல வேண்டியத சொல்லிப்போட்டேன். இனி நீ நினைச்ச மாதிரி செய்." என்று கூறினார்.

கணேசன் என்ன செய்வதென்று தெரியாமல் கொஞ்ச நாட்களாய் யோசித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் தீர்மானத்துக்கு வந்தவனாக கோடாலியை எடுத்துக்கொண்டு பூவரசு மரத்தை தறிப்பதற்காக சென்றான். அப்போது தாய் தெய்வி வீட்டில் இருக்கவில்லை. கணேசன் பல மணித்தியாலங்களை செலவழித்து பூவரசு மரத்தை அடியோடு வெட்டி விழுத்தினான். இதைக்கண்ட சரசியும் கிரகனும் தங்களுக்குள் நையாண்டி சிரிப்பொன்றை பகிர்ந்து கொண்டனர்.

கணேசன் அவர்களது சிரிப்பை கண்டும் விளங்கிக்கொள்ள முடியாதவனாக இருந்தான். அன்று தோட்டத்தில் கணேசனின் தந்தை பயிர்ச் செய்கைக்காக நிலத்தை பண்படுத்திக்கொண்டு இருந்தார்.

அப்போது கணேசனின் தாய் தெய்வி அவருக்கு உதவி செய்வதற்காக உணவு சமைத்துக் கொண்டு தோட்டத்துக்கு போயிருந்தார். மாலையில் வீட்டுக்கு வந்தபோது பூவரசு மரத்தை காணவில்லை.

தெய்வியின் உயிரே நின்றுவிடும் போல இருந்தது.தெய்விக்கு மயக்கம் வந்தது. தெய்வி சிறுவயது முதல் அந்த பூவரசு மரத்தின் நிழலின் விளையாடுவாள். அதன் சருகுகளை கூட்டி குப்பையில் போடுவாள். அவை தோட்டத்தில் பசளையாக பயன்படும் போது மகிழ்ச்சி அடைவாள். இப்போது

பூவரசு மரம் இல்லாமல் போனதால் மிகுந்த துயரம் அடைந்தார். அப்போது சிறிது தூரத்தில் கணேசன் பூவரசு மரத்தை துண்டுதுண்டாக வெட்டுவதை கண்டார்.

தாய் தெய்வி கணேசனை நோக்கி வேகமாக நடந்து வந்து, "பாழ்படுவானே என்னடா செய்தனீ." என்று கத்தினார்.

அதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. தோட்டத்திலிருந்து கொண்டு வந்த சாமான்களை அப்படியே போட்டுவிட்டு திண்ணையில் போய் இருந்து தலையில் கை வைத்துக்கொண்டு அழுதார்.

தெய்வியின் உரத்த சத்தத்தையும், அழுகையையும் கண்ட கிரகனும் சரசியும் தங்களுக்குள் குதூகலம் அடைந்தனர். சரசி கிரகனிடம்,"தெய்வி மோட்டு பெடியங்களை பெத்து சீரளியிறா" என்று கூறினாள். இது சாடைமாடையாக தெய்வியின் காதிலும் விழுந்தது. தெய்வி தன் விதியை எண்ணி துயரமடைந்தாள்.

இதன்பின் கணேசன் முள்ளு முருங்கை மரத்தை கிரகன் எப்ப வெட்டுவான் என்று பார்த்துக்கொண்டிருந்தான். பல மாதங்களாகியும் அது வெட்டப்படவில்லை. ஆனால் தனது நேர்மையான குணத்தினால் கணேசன் கிரகனுடன் அதற்காக சண்டைக்கு போகவும் இல்லை.

ஒரு நாள் பகல் சூறாவளிக் காற்று பலத்த வேகத்துடன் திடீரென்று அடித்தது. அப்போது கிரகனின் ஆறு வயது மகன் கணேசனின் வீட்டு வேலிக்கு அண்மையில் முள்ளு முருங்கை மரத்தின் கீழ் நின்று விளையாடிக்கொண்டு இருந்தான்.

திடீரென்று வேகமாக வீசிய காற்றை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தான். அப்போது சடபுடவென்ற சத்தத்துடன் மரம் ஒன்று முறிந்து விழுந்தது. சில வினாடிகளில் திடீரென்று சிறுவன் ஒருவன் பயங்கரமாக அலறும் சத்தமும் கேட்டது.

கணேசன் சத்தம் வந்து திசையில் வேலியால் எட்டிப்பார்த்தான். கணேசனின் வீட்டு குசினிக்கு அண்மையில் கிரகனால் வெட்டப்படாத முள்ளு முருங்கை மரம் கிரகனின் வளவுக்குள் முறிந்து விழுந்து கிடந்தது. கிரகனின் ஆறு வயது

மகன் இரத்த வெள்ளத்தில் முனகிக் கொண்டு இருந்தான்.

இது யாருடைய தீர்ப்பு யாதுமறியாத அப்பாவிச் சிறுவன் பெற்றோரின் கொடுஞ்செயல்களால் துன்புறுவது என்ன நீதி ? அதேநேரம் கணேசனின் விட்டில் பூவரசு விறகு உணவு சமைப்பதற்காக முழுமையாக எரிந்து முடிந்திருந்தது.

(யாவும் கற்பனையே)

குப்பிளான் ஆ.மோகனசுந்தரம் ...✍

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 32



திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 32
த.பெ.இல.834. கொழும்பு

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 32

இடமிருந்து வலம்

(1) அரசன்
(3) தவத்தோர் சபித்துக் கூறுவது.
(5) காலணி
(6) மகன்
(9) இரு தரப்பினருக்கு இடையே இணைப்பாகவிருந்து செயற்படுபவர். (குழம்பியுள்ளது)
(10) வெளியில் தெரியாத நிலை.
(12) பெண் மாடு திரும்பிவிட்டது.
(13) விலங்கு, பறவைகளுக்கான உணவு.
(14) பெண்களின் தலைமுடி. (திரும்பியுள்ளது)
(17) வீடு அல்லது கட்டடங்களின் வாயிலில் பொருத்தப்பட்டிருப்பது. (குழம்பியுள்ளது)
(19) விரைவு.
(21) பழங்கால வீடுகளின் நுழைவாயில் பக்கவாட்டில் காணப்படுவது. (திரும்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

(1) இதுவும் ஒரு விருட்சம்.
(2) ஒரு காரியத்தை சாதிக்க கையாளும் சாதுரியமான வழிமுறை.
(3) அமைதியான இயல்புடையவர்.
(4) விரோதம்
(5) யானையை கட்டுப்பாட்டில் வைத்திருப்பவன். (குழம்பியுள்ளது)
(7) பெருக்கல் அடையாளக் குறி. (தலைகீழ்)
(8) விற்பனை நிலையத்தில் பணிபுரிபவர்.
(10) மிதமிஞ்சியது.
(11) அன்பு அல்லது பரிவின் வெளிப்பாடு.
(15) சேறு.
(16) தீங்கு.
(18) அம்பு.
(20) நீக்குதல் அல்லது குறைத்தல்.

★ ★ ★

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 31

விடைகள்

இடமிருந்து வலம்

(1) போக்குவரத்து (5) தூளி (6) ருசி (8) ஆதவன் (10) நீலகிரி (13) வனம் (14) சத்தியம் (16) ஊதா (17) நன்றி (19) கர்ணன் (21) சாவு (23) மீசை (24) அலை

மேலிருந்து கீழ்

(1) போக்கிரி (2) குதூகலம் (3) வளி (4) துருவம் (7) சிறுவன் (9) தனயன் (11) நீத்தார் (12) சகி (15) நதி (16) ஊகம் (18) அறிவு (20) மீன் (22) சாலை

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 30

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு
சந்தியாகு,
34/12, செமினரிவத்தை வீதி,
தென்னக்கும்புர,
கண்டி.

இரண்டாம் பரிசு
யுஸ்ரியா அஹமட்,
236/1, குமாரதுங்க
மாவத்தை
மாத்தறை.

மூன்றாம் பரிசு
எம்.வி.எப். பஸீனா,
71, மரிக்கார் வீதி,
களுத்துறை தெற்கு,
களுத்துறை.

பாராட்டு பெறுவோர்

1. ஏ.ஆர்.எம். அபூபக்கர்,
411, அளுத் வீதிய,
வெலிகம.

2. அனுராதா பாக்கியராஜா,
88 1/1, பஸல்ஸ் லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு 06.

3. திருமதி ஸாஹிரா பானு லியாவுதீன்,
இ ல. 12/6, சென். பீற்றர்ஸ் லேன், நிந்தனி, புத்தளம்.

4. ஏ.எல்.ஏ. அஸீஸ்,
17/A, சிறிமல் மாவத்தை,
தெஹிவளை.

5. எஸ். கனகரெத்தினம்,
975, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

6. கஸ்தூரி களியபெருமாள்,
2/27A, வெளிக்கந்தை,
கண்டி.

7. எம்.எச்.எம். பாஸி,
இல. 2, கும்புக்கந்துறை,
ரஜவெல்ல.

8. எம்.ஆர். அய்னா செய்னப்,
இல. 117, அன்னல் வீதி,
மாஞ்சோலைச்சேனை,
கிண்ணியா 3.

★ ★ ★

ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 14

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

சாதியத்துக்கு எதிரான முதலாவது சிறுகதையை எழுதிய பண்டிதர் சச்சிதானந்தன்

'12.02.1939இல் ஆனந்தன் என்ற பெயரில் பண்டிதர் சச்சிதானந்தன் எழுதிய தண்ணீர்த்தாகம் என்ற சிறுகதையே சாதியத்துக்கு எதிரான முதலாவது தமிழ்ச் சிறுகதை என்ற கணிப்பைப் பெற்றது. இக்கதை ஈழகேசரியில் வெளிவந்ததாகும். இவரது எட்டுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் ஈழகேசரியில் வெளிவந்துள்ளன. ஈழத்தின் உன்னதமான சிறுகதைகளில் தண்ணீர்த்தாகமும் ஒன்றாகும். அது எழுதப்பட்ட காலகட்டத்தையும் அது கூறுகின்ற சமூகச் செய்தியையும் கவனத்திற்கு எடுக்கும்போது வியப்பும் பெருமிதமும் ஏற்படும். யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதியக் கொடுமையை முதன்முதலில் கருப்பொருளாக்கி மக்கள்முன் தூக்கி வைத்தவர் அவர். சமூகத்தின் எரியும் பிரச்சினையை அவர் கையாண்டிருக்கும் முறைமையும் அதனூடாக அவர் கூறும் செய்தியும் 1956களின் பின்னரும் ஈழத்தின் நவீன சிறுகதை ஆசிரியர்களால் கையாளப்பட்டு வருகின்றன. இச்சிறுகதை சாதிய அடக்கு முறை அவலத்தையும் மானிட நேயத்தையும் சித்திரிக்கின்றது. 1939இல் இவ்வாறான சமூகப்பிரச்சினை கொண்ட சிறுகதையாக தண்ணீர்த்தாகம் எழுதப்பட்டுள்ளது என்பது மிக முக்கிய அம்சமாகும். சாதிய ரீதியான அடக்கியொடுக்கல் உச்சமாக விளங்கிய ஒரு காலகட்டத்தில் ஆனந்தன் துணிந்து இவ்வாறான சிறுகதையைப் படைத்துள்ளமை அவரின் சமூகப்பார்வையின் புரட்சிகரச் சிந்தனையை தெளிவாகக் காட்டுகின்றது' என கலாநிதி செங்கை ஆழியான க. குணராசா குறிப்பிட்டுள்ளார். (ஞானம் ஆகஸ்ட் 2010 /12/3)

நடேசையர் என்ற பிராமணர் தன் அனுட்டானத்திற்குச் செம்பில் நிறைத்து வைத்திருந்த நீரை மீனாட்சி என்ற இழிகுலப் பெண் தண்ணீர் தாகத்தால் எடுத்து அசுத்தம் செய்து விடுகிறாள். அதனால் ஆத்திரமடைந்த நடேசையர் அப்பெண்ணைச் செம்பினால் அடித்துக் காயப்படுத்தி விடுகிறார். காலக்கழிவில் மரணதாகத்தினால் படுக்கையில் யாருமின்றித் தவிக்கும் நடேசையருக்கு இறுதியில் மீனாட்சியே தண்ணீர் தருகிறாள். அவர் தன் செயலுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டு உயிரை விடுகிறார். இதுதான் தண்ணீர்த்தாகத்தின் கதையாகும்.

பண்டிதர் க. சச்சிதானந்தன் தும்பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை என்பவருக்கும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த தெய்வானைப்பிள்ளைக்கும் 19.10.1921இல் மகனாகப் பிறந்தார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியை பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றிலும் பெற்ற பின்னர் தனது உயர்கல்வியை பரமேஸ்வராக் கல்லூரியில் பெற்றார். தனது தந்தையாரிடம் வானியல், சோதிடம் என்பவற்றைக் கற்ற இவர் சிவப்பிரகாசதேசிகர், சுப்பிரமணிய சாஸ்திரிகள், பாலசுந்தரக் குருக்கள் ஆகியோரிடம் சமஸ்கிருதக் கல்வியைக் கற்றார்.

1941ஆம் ஆண்டு இலங்கை இந்தியா இரு நாடுகளிலும் மதுரைப் பண்டிதர் பரீட்சையில் முதன்மைச் சித்தியடைந்தார். பண்டிதக் கற்கை நெறியில் வழிவந்தவராயினும் இலண்டன் பல்கலைக்கழக London Inter Science பரீட்சையில் சித்தியடைந்தார். 1978ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகம் சென்று ஆய்வு செய்து உளவியல் எம்.பில். பட்டம் பெற்றார்.

1939ஆம் ஆண்டில் இலக்கியப் பிரவேசம் செய்த இவர், கவிதை, நாவல், காவியம், இலக்கணம், வானியல், இலக்கிய ஆய்வு, சமஸ்கிருதப் புலமை, சரித்திர ஆய்வு, நாடகங்கள், சித்திரங்கள், சிறுவர் இலக்கியம் என்பவற்றினூடாக இலங்கைத் தமிழிலக்கிய வளர்;ச்சிக்குப் பெரும் பணியாற்றினார். ஆனந்தன், யாழ்ப்பாணன,; பண்டிதர், சச்சி என்பன இவரது புனைபெயர்களில் சிலவாகும்.

நீர்கொழும்பு சென்ற்மேரிஸ் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றில் கணித ஆசிரியராகவும், யாழ் இந்துக்கல்லூரியில் தமிழ் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

1962/1965 காலப்பகுதியில் அரசின் பாடநூற்சபை எழுத்தாளராக விளங்கியதுடன், ஆசிரிய கலாசாலையின் உளவியற் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போதே இவருக்கு வெண்பா எழுதும் வல்லமை கைவரப்பெற்றிருந்தது. காதலியின் கையெழுத்து என்ற இவரது முதற்கவிதை இந்திய நவசக்தி சஞ்சிகையில் வெளிவந்தது. 1955இல் இவரது 'ஆனந்தத் தேன்' என்ற கவிதை நூல் வெளியானது.

இவர் எழுதிய முதலாவது காவியம் யாழ்ப்பாணக் காவியம் ஆகும். இது 2088 பாடல்களைக் கொண்டது. யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு காலகட்ட (கி.பி. 1450 67) சித்திரிப்பாய் அமைந்த இக்காவியம் தமிழ்த் தேசியப்பற்றை எடுத்தியம்புவதாய் அமைகிறது. இக்காவியம் இலங்கை சாகித்திய மண்டலப்பரிசு, வடக்கு கிழக்கு மாகாண இலக்கியப் பரிசு, சம்பந்தர் விருது என்பவற்றைப் பெற்றுக் கொண்டது.

'பருவப் பாலியர் படும்பாடு' என்ற காவியம் 1983 இனக்கலவரம், தமிழ்த்தேசிய எழுச்சி, போர்க் கொடுமைகள், இளம் வயதினரின் பாலியல் நெருக்கடிகள் குறித்துப் பேசுகிறது. இக்காவியத்தில் 4400 பாடல்கள் அடங்கியுள்ளன.

எடுத்த மலர்களும் தொடுத்த மாலையும் என்னும் நூலிலே மேற்குறிப்பிட்ட காவியத்தின் இரண்டாம் பகுதி இடம்பெற்றுள்ளது. இதுதான் ஆசிரியரின் தொடுத்த மாலையாக அமைகிறது. எடுத்த மலர்களாக பல கவிதைகளும் கவிதை நாடகங்களும் இந்நூலிலே இடம் பெற்றுள்ளன.

இவர் மஞ்சு மலர்க்கொத்து (2003) என்னும் பாலர் பாடத்தொகுதியை வெளிக்கொணர்ந்தார். இப்பாடல்கள் நான்கு வயதுக்கும் ஏழு வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் பாடி மகிழ்வதற்கு ஏற்றவை என நூலில் குறிப்பு உள்ளது. பாடல்களுக்குரிய இசைமெட்டுக்கள், பியானோ வாத்தியக் குறிப்புகள் இந்நூலில் அச்சிடப்பட்டுள்ளன.

இவர் ஈழகேசரியில் 12.07.1942 முதல் 20.12.1942 வரை தொடராக எழுதிய அன்னபூரணி என்ற நாவல் பின்னர் நூலுருப் பெற்றது. இந்நாவல் பல புனைகதை ஆசிரியர்கள் உருவாக முன்னோடியாக அமைந்தது.

இவர் ஆங்கிலத்தில் 2002இல் எழுதிய Fundamental of Training Prosody (தமிழ் யாப்பிலக்கண அடிப்படைகள்) என்ற நூல் கவிதைக்கு ஓசை முக்கியம் என்பதை வலியுறுத்துவதாக அமைந்தது. இந்நூல் தமிழிலக்கணத்தை உலகுக்கு அறிவிக்கும் நூலாக அமைந்தது. Foot Printed of our Fathers தமிழினத்தின் வரலாற்றையும் அரசியலையும் உலகுக்கு விளங்க வைக்கும் நூலாகும்.

1945_1946 காலப்பகுதியில் யாழ்நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த சுவாமி விபுலானந்தருக்கு ஆராய்ச்சித் துணைவராக விளங்கியவர் இவர். அதனால் ஆய்வுத்துறையில் இயல்பாகவே இவருக்கு மிகுந்த ஆற்றலும் ஆர்வமும் இருந்தன. 'தமிழர் யாழியல்' (1997) என்ற இவரது ஆய்வு நூல் இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த ஆய்வு நூலுக்கான பரிசைப் பெற்றது.

இவரது மற்றுமொரு ஆய்வு நூல் 'மஞ்சுகாசினியம்: இயங்கு தமிழியல்' (2001). இந்நூல் தொல்காப்பியம் நன்னூல் ஆகிய இலக்கண நூல்களின் அடிப்படையில் தமிழ் இலக்கணத்தை புதியவகையிலும் எளிமையாகவும் எடுத்துச் சொல்லியது.

இலங்கைத் தமிழரின் அரசியலில் முக்கிய பங்காற்றிய தமிழரசுக் கட்சியின் தோற்றுவாயாக, மூலகர்த்தாவாக விளங்கியவர்களில் இவரும் ஒருவர். தமிழரசுக் கட்சியின் அகிம்சை வழிப் போராட்டங்களில் இணைந்து தடுப்புக்காவலில் வைக்கப் பட்டவர். அக்காலத் தமிழரசுக் கட்சியின் மேடைகளில் இவரது 'சாவிற்றமிழ் படித்துச் சாக வேண்டும் என்றன் சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்' என்ற பாடல் பிரபலம் பெற்றிருந்தது.

இவர் ஆங்கிலத்தில் Ceylon Daily News பத்திரிகையில் எழுதிய உளவியற்கட்டுரை, யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவின்போது சமர்ப்பித்த வானியல் ஆராய்ச்சி பற்றிய கட்டுரை, ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தில் படிக்கப்பட்ட தமிழ்ஒலி மூலகங்கள் (1989) தொடர்பான கட்டுரை, கலாநிதி கு.சிவப்பிரகாசம் நினைவாக வாசிக்கப்பட்ட உளவியல் அடிப்படையில் உவம இயல் (1990) கட்டுரை, யாழ். பல்கலைக் கழகத்தில் வாசிக்கப்பட்ட இடைச்சொல் பற்றிய மூன்று எடுகோள்கள் (1991) பற்றியகட்டுரை உள்ளிட்ட ஏராளமான முக்கிய கட்டுரைகள் தொகுக்கப்படவேண்டிய நிலையில் உள்ளன.

பண்டிதர் சச்சிதானந்தன் ஆரிய திராவிடபாஷh விருத்திச் சங்கத்தின் உப தலைவர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்து சங்கத்தின் வளர்ச்சிப்பாதையில் பங்கேற்றவர். பிற்பட்ட காலத்தில் இச்சங்கத்தின் காப்பாளராகவும் பரீட்சகராகவும் விளங்கியவர்.

இவரது இலக்கியப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக, சம்பந்தன் விருது (2001), வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது (2004), தந்தை செல்வாக நினைவு விருது (2004), இலங்கை இலக்கியப் பேரவை விருது (2005), கலாகீர்த்தி தேசிய விருது (2005) ஆகியவை வழங்கப்பட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அரச உயர் இலக்கிய விருதான சாஹித்யரத்னா விருதினை 2006ஆம் ஆண்டு பெற்ற பண்டிதர் சச்சிதானந்தன் தனது 87ஆவது வயதில் 21.03.2008 அன்று அமரரானார்.

கண்டு பிடியுங்கள் கொலைகாரனை கொண்டு செல்லுங்கள் நூல்களை

உங்கள் துப்பறியும் திறனுக்கு ஒரு சவால்.
கொல்லுவதோ இளமை கதையின் கொலைகாரன் யார்?
என்பதைக் கண்டுபிடித்து
24.07.2020ஆம் திகதிக்கு முன்பு எழுதி அனுப்புங்கள்.
ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதலாம்.

சரியான பதிலை எழுதும் மூவருக்கு அதிக விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:
கொல்லுவதோ இளமை
தினகரன் வாரமஞ்சரி, லேக்ஹவுஸ்,
கொழும்பு10.
வட்ஸ்அப்: 0777686741

மாட்டிக் கொள்வாளா மதுமிதா? காட்டிக் கொடுப்பானா பிரசன்னா!

36

"ம்... இன்னுமொரு முக்கியமான விஷயம்!'

"சொல்லுங்க சேர்!"

"நீங்க நாலு பேரும் சிவில் உடையில் தான் போக வேண்டும்!"

"ஏன் சேர் அப்படி போகவேண்டும்... அப்போது எப்படி மதுமிதாவை கைது செய்வது?" பரபரப்புடன் கேட்டார் இன்ஸ்பெக்டர் ராகவன்.

"ம்... ராகவன்... நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். மதுமிதா என்பது ஓர் அப்பாவிப் பெண். முக்கியமான சில தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காகத்தான். அவளை கைது செய்யச் சொல்லுகிறேன். அவளுக்கு எதிராக வழக்கு எதுவும் தாக்கல் செய்வதற்காக அல்ல என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். சில சமயம் அவளுடைய காரிலேயே வருவாள். அப்படி வந்தால் நீங்கள் அவளை பின் தொடர்ந்து வாருங்கள்.

"ஆகட்டும் சேர்... எந்த பொலிஸ் நிலையத்துக்கு அவளை அழைத்துக் கொண்டு வரவேண்டும்!"

"நல்ல கேள்வி கொழும்பு தலைமை காரியாயத்துக்கு அழைத்து வாருங்கள்... ம்... இன்னுமொரு விஷயம் சிவில் உடையில் சென்று அவளைக் கைது செய்ய வேண்டாம் என்று சொன்னதுக்கு காரணம் என்னவென்று தெரியுமா?"

"இல்லை சேர்!"

"அவள் கடைக்கு பக்கத்தில் நிறையவே கடைகள் இருக்கின்றன. பொலிஸ் உடையில் நீங்கள் சென்று அவளைக் கைது செய்தால் அவள் ஏதோ பெரியகுற்றம் செய்திருப்பாள் என்று அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் நினைத்து விடுவார்கள். அதுவுமில்லாமல் அவள் கோடீஸ்வர வர்த்தகர் மகேந்திரனின் மகளும் கூட அது வேறு பிரச்சினையாகிவிடும். ம்... இன்னுமொரு விஷயம் நீங்கள் நால்வரும் போகும் போது பொலிஸ் ஜீப்பை எடுத்துக் கொண்டு போகாதீர்கள். காரை எடுத்துக் கொண்டு போங்கள். அங்கே போய் மதுமிதா யார் என்று கேட்டு அவளிடம் உங்கள் அடையாள அட்டையைக் காட்டி காரியத்தை செய்யுங்கள்.

"ஆகட்டும்.சேர்!"

"சரி ராகவன் போய் வெற்றியோடு காரியத்தை சாதித்து விட்டு வாருங்கள்!"

மறு நாள் காலையில்,

இன்ஸ்பெக்டர் ராகவனையும் சாஜன்ட் வசந்தன் மற்றும் இரண்டு பெண் பொலிஸ்காரர்களையும் ஏற்றிக் கொண்டு,

அந்த வெள´ளைக்காரர், மதுமிதாவின் 'மது' பியூட்டிபாளரை நோக்கி புறப்பட்டது.

"இன்ஸ்பெக்டர் இன்ப ராஜ் சேர் திட்டம் தீட்டுவதில் வல்லவர் மதுமிதாவை கைது செய்யவும் சொல்லுகிறார். அதே நேரம் பொலிஸ் உடையில் போக வேண்டாம் என்றும் சொல்லுகிறார். தனியாக காரில் வந்தால் வரட்டும் என்றும் சொல்லுகிறார். அநேகமாக இவள் குற்றமெதுவும் செய்திருக்க மாட்டாள் என்றுதான் நினைக்கிறேன்!" என்றார் இன்ஸ்பெக்டர் ராகவன்.

"ஆமாம்...அவர் சொன்னதைப் போல நாம் செய்வோம். இதோ அந்த கடை வந்து விட்டது. காரை அப்படி நிறுத்துங்கள்!" என்றார் சார்ஜன் வசந்தன.

'மது' பியூட்டிபாளர் வாசலில் கார் நின்றது.

நால்வரும் இறங்கி உள்ளே சென்றார்கள்.

கடைக்குள் மூன்று பெண்கள் இருந்தார்கள்.

இளமையான அழகிய தோற்றம் கொண்ட ஒரு பெண்மணி,

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றைப் பார்த்தபடியே அமர்ந்திருந்தாள். அவள் அருகில் வந்த இன்ஸ்பெக்டர் ராகவன்.

"மதுமிதா மகேந்திரன் என்பது நீங்களா மிஸ்?" என்று கேட்டார்.

அவர் இப்படிக் கேட்டதும்,

நிமிர்ந்து பார்த்த மதுமிதா பத்திரிகையை மடித்து பக்கத்தில் வைத்து விட்டு எழுந்து நின்றாள்.

"ஆமாம்... நான்தான் மதுமிதா. ம்... நீங்க...?" புருவங்களை வில்லாக்கினாள் மதுமிதா?"

"நான் வட்டவல பொலிஸ் இன்ஸ்பெக்டர் ராகவன். இதோ இருக்கிறது எனது அடையாள அட்டை, உங்களிடம் சில வாக்குமூலங்கள் எடுத்துக்க விருக்கிறது. அதனால் இப்போதே எங்களுடன் வாருங்கள்!"

"என்னது...! என்னிடம் வா... வாக்குமூலமா... எது சம்பந்தமாக?"

படபடப்புடன் கேட்டாள் மதுமிதா.

அதை நீங்கள் அங்கே போனதும் தெரிந்து கொள்ளலாமே!"

"ம்... சரி நான் வருகிறேன். ஆனால் எனது காரில் தான் வருவேன்!"

"ம்... அதில் பிரச்சினை இல்லை... ஆனால் இப்போதே வரவேண்டும்!" இன்ஸ்பெக்டர் இப்படிச் சொன்னதும்,

அமர்ந்திருந்த இடத்தை விட்டு வெளியே வந்த மதுமிதா!

"ம்.... நந்தினி!" "மெடம்!"

"கடையைப் பார்த்துக் கொள்ளுங்கள். மாணிக்கம் என்று ஒருவர் வருவார். அவரிடம் பணத்தை வாங்கிக் கொண்டு பற்றுச் சீட்டொன்றைக் கொடுங்கள்!"

"ஆகட்டும் மெடம்!"

"ம்... சரி இன்ஸ்பெக்டர் நாம் போகலாமா?"

"வாங்க மிஸ்!"

அடுத்து, எல்லோரும் வெளியே வந்தார்கள்.

மதுமிதா தனது காரில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

கார்கள் புறப்பட்டன. காரை ஓட்டியபடியே

அலை பேசியின் எண்களை அழுத்தினாள்.

அது அவள் அப்பாவுக்கல்ல,

பிரசன்னாவுக்கு...!

"ஹலோ...!"

"ம்... பிரசன்னா...!"

"என்ன மது... காலையில்தான் சந்தித்தோமே... இப்போது என்ன ஏதாவது பிரச்சினையா?"

"சரியான வேலைதான் பிரசன்னா...?"

"என்ன மது சொல்லுங்க!"

"நீங்க சுத்த மோசம் பிரசன்னா... என்னைப் பற்றி பொலிஸாரிடம் சொல்லி இருக்கீங்க இல்லையா?"

"என்னது...! நான் உங்களைப் பற்றி பொலிஸில் சென்னேனா... பைத்தியமா மது உங்களுக்கு...?" சரி இப்போது என்ன நடந்திருக்கு...?"

"நான்கு பொலிஸ்காரர்கள் சிவில் உடையில் எனது ஷொப்புக்கு வந்து பொலிஸ் தலைமை அலுவலகத்துக்கு வரும்படி என்னை அழைத்தார்கள். நான் இப்போது அவர்களுடன் போய் கொண்டிருக்கிறேன். ஆனால் எனது காரில் வந்தால் பிரச்சினை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். காரணம் எதுவும் சொல்லவில்லை!"

"ஓ... அப்படியா... சரி எந்த பொலிஸ்!" **(இளமை வளரும்)**

விழிகளில் ஆரம்பித்து
புன்னகையில் சங்கமித்து
கண்ணீரில் அஸ்தமிக்கும்
ஒரு காதல் காவியம்!

இனியவனே என்று பாடி வந்தேன்!

காதலர்களுக்கு பனி மழை
காதலிப்பவர்களுக்கு தேன்துளி
விரைவில் உங்கள்
தினகரன் வாரமஞ்சரியில்!
ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்
எழுதுகிறார்!

இன்றே உங்கள் பிரதிகளை
பதிவு செய்து கொள்ளுங்கள்

இலங்கையை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்காக புத்தாக்க சிந்தனையாளர்களுக்கு அழைப்பு

22 மில்லியன் இலங்கையர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் தேடலில், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, 'Dreamers' தொலைநோக்கு கொண்டவர்கள், கண்டுபிடிப்பாளர்கள், புத்திசாலிகள் மற்றும் வழமைக்கு அப்பால் சிந்திக்கக் கூடியவர்கள் என சகல தரப்பினரையும் தமது செயற்படும் தீர்வுகளுடன் முன் வந்து, இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள பாரிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சிக்க கைகோர்க்குமாறு அழைப்புவிடுத்துள்ளது.

SLTMOBITEL இனால் தனது #NoDreamTooBig எனும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதனூடாக அனைத்து இலங்கையர்கள் வசமும் காணப்படும் அதே தொழில்நுட்பம் மற்றும் இணைக்கப்பட்ட சாதனங்கள் போன்றவற்றை பயன்படுத்தி புத்தாக்கமான முறையில் பாரிய கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்காக பணியாற்ற இணையுமாறு அழைத்துள்ளது. இந்த உறுதியற்ற காலப்பகுதியிலிருந்து நாம் விடுபட்டு ஒரு இலங்கையாக முன்னேற்றத்தை நோக்கி பயணிக்க தேவையான கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் இந்த Dreamers Wanted திட்டத்துடன் இணையுமாறு SLTMOBITEL அழைத்துள்ளது.

தமக்குக் காணப்படும் அறிவு, வளங்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சாதாரணமானவற்றைக் கொண்டு அசாதாரணமானவற்றை உருவாக்க முனையும் விண்ணப்பதாரிகளுக்கு www.sltmobitel.lk/dreamerswanted எனும் இணையப்பக்கத்துக்கு சென்று தமது தொழிற்படக்கூடிய தீர்வு அல்லது கண்டுபிடிப்பு தொடர்பான விளக்கமளிக்கும் சிறிய வீடியோ ஒன்றை தயாரித்து சமர்ப்பிக்குமாறு கோரப்படுவர். தமது தெரிவுக்குரிய மொழியில் இதனை அவர்களால் சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன், விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் சுயமான அறிவுறுத்தல் அவர்களுக்கு வழங்கப்படும்.

Dreamers Wanted Evaluation Team (DWET) என்பதில் SLTMOBITEL அதிகாரிகள் மற்றும் உள்நாட்டு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த கல்விசார் நிபுணர்கள் ஆகியோர் அடங்கியிருப்பதுடன், விண்ணப்பங்களை மீளாய்வு செய்து தெரிவு செய்யும் பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பார்கள். அதனூடாக மேலதிக மேம்படுத்தலுக்காக சிறந்த சிந்தனைகள் தெரிவு செய்யப்படுவது உறுதி செய்யப்படும். #NoDreamTooBig

பிரசவ வைத்தியசாலையான

ஜோசப்ஃ பிரேசரினால் பிரத்தியேகமான சேவைகள் அறிமுகம்

இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் சுகாதார பராமரிப்புடன் தொடர்புடைய நாமமான ஜோசப் ஃபிரேசர் ஞாபகார்த்த வைத்தியசாலை, பிரசவத்துக்காக நோயாளர் தங்கியிருக்கும் பகுதியில் குழந்தைப் பிரசவிக்கும் வசதியை அறிமுகம் செய்துள்ளது. அதனூடாக வீடுகளில் பிரசவம் இடம்பெறுவதைப் போன்ற பிரத்தியேக அனுபவத்தையும், நீரினுள் பிரசவம் போன்ற அனுபவத்தை முதன் முறையாக வழங்கவும் முன்வந்துள்ளது.

அடுத்தாண்டில் நூற்றாண்டு கால பூர்த்தியை கொண்டாடும் ஜோசப் ஃபிரேசர், 2018 ஆம் ஆண்டில், புகழ்பெற்ற வர்த்தகப் பிரமுகரான ஹெரி ஜயவர்தனவின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இலங்கையின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட சிறந்த 10 பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் ஒன்றான Melstacorp PLC இன் முழு உரிமையாண்மையில் இயங்கும் துணை நிறுவனமான Melsta Health இனால் கையகப்படுத்தப்பட்டிருந்ததன் பின்னர் பல மேம்படுத்தல்களை எய்தியுள்ளது.

பெண்களுக்கு ஒப்பற்ற பராமரிப்பை பெற்றுக் கொடுக்கும் வகையில் ஜோசப் ஃபிரேசர் வசதிகளைக் கொண்டுள்ளது. இதில் பெண்நோயியல் மற்றும் ஆலோசனை சேவைகள், குழந்தை நலன், பூப்பெய்தல் மற்றும் மாதவிடாய் நிறுத்தம் மற்றும் இதர பல சேவைகளும் அடங்குகின்றன.

வைத்தியசாலை தனது பாரம்பரிய தோற்றத்தையும், அதிகளவு உள்ளக இடவசதிகளையும் பேணி, புனருத்தாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு, புதிய தொழில்நுட்ப வசதிகளையும், உலகத் தரம் வாய்ந்த சுகாதார பராமரிப்பு வசதிகளையும் உள்வாங்கியிருந்தது. மூன்றறை ஏக்கர் காணிப்பகுதியில் இரம்மியமான தோட்டத்துக்கு மத்தியில் அமைந்துள்ள இந்த வைத்தியசாலை, இயற்கையுடன் ஒன்றித்ததாக அமைந்துள்ளது.

Melsta Health (Pvt) Ltd இன் வைத்தியசாலைகள் திட்டத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி வைத்தியர் கே. தியாகராஜா இறைவன் கருத்துத் தெரிவிக்கையில், "ஜோசப் ஃபிரேசரைப் பொறுத்தமட்டில் எமது இலக்கானது, இலங்கையில் பிரத்தியேகமான சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை வழங்கும் வைத்தியசாலையாக திகழ்வதாகும். அதனூடாக, நாடு முழுவதிலும் வேகமாக விஸ்தரிக்கப்பட்ட வண்ணமுள்ள,சுகாதார பராமரிப்புத் துறையில் Melsta Hospitals மற்றும் Melsta Laboratories ஆகியவற்றுடன் இணைந்து புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்வந்துள்ளோம். சகலருக்கும் இலகுவில் சகாயமான முறையில் பெற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த பராமரிப்பு சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்." என்றார்.

பாரம்பரிய பிரசவ அறையில் பிரசவிப்பதற்கு மாறாக, பிரத்தியேக அறையினுள் பிரசவிக்கும் வசதியினூடாக, தாய்மாருக்கு அழுத்தமில்லாத சூழலில், தமது குடும்பத்தாருடன் பிரசவிக்கும் வசதி வழங்கப்படுகின்றது.

ஸ்டைலான Nova 9 SE மற்றும் 11th Gen MateBook D 15 இலங்கையில் அறிமுகம் செய்யும் Huawei

புத்தாக்க தொழில்நுட்ப வர்த்தகநாமமான Huawei, ஸ்டைலான Nova 9 SE ஸ்மார்ட்போன் மற்றும் நவீன MateBook D15 மடிகணனி ஆகியவற்றை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

Nova 9 SE ஆனது Huawei இன் Nova ஸ்மார்ட்போன் வகையில் புதிய நடுத்தர வகை சாதனமாக இணைகின்றது. Huawei யின் MateBook மடிகணனி வகை 11th Gen MateBook D 15 ஆனது, MateBook வகையின் மேம்படுத்தப்பட்ட மேலும் பல அம்சங்களையும் கொண்டுள்ளது.

Huawei Nova 9 SE ஆனது 6.78 அங்குல, 90Hz refresh வீதத்தைக் கொண்டுள்ள LCD திரையை கொண்டுள்ளதுடன், செல்பி கெமராவை நிறுவுவதற்காக திரையின் நடுவில் சிறுதுளையைக் (punchhole) கொண்டுள்ளது. ஸ்டைலான வடிவமைப்பானது, முப்பரிமாண கண்ணாடியிலான பின்புறம் மற்றும் அழகிய வண்ணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இது, நீலம், வெள்ளை, கறுப்பு (crystal blue, pearl white, midnight black) ஆகிய வண்ணங்களில் வருகின்றது.

Nova 9 SE ஆனது 108MP பிரதான கெமரா, 8MP அல்ட்ரா வைட்ஆங்கிள் வில்லை, 2MP பொக்கே வில்லை, 2MP உருப்பெருக்க மெக்ரோ வில்லை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தனித்துவமான வீடியோ எடிட்டிங் தெரிவுகள் போன்ற புத்தாக்கமான வீடியோ பதிவு அம்சங்களுடன் வருகிறது.

இது 8GB RAM மற்றும் 128GB உள்ளக சேமிப்பகத்துடன் இணைந்து Qualcomm Snapdragon 680 processor மூலம் இயக்கப்படுகிறது. அத்துடன் வேகமாக சார்ஜ் செய்ய, 66W Huawei SuperCharge தொழில்நுட்பத்தையும் கொண்டுள்ளது.

இலங்கையில்

பிளாஸ்திக் கழிவினைச் சமாளிக்க ஒன்றிணையும் நெஸ்லே லங்கா மற்றும் பெரேரா அன்ட் சன்ஸ் பேக்கர்ஸ்

நெஸ்லே லங்கா மற்றும் பெரேரா அன்ட் சன்ஸ் பேக்கர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவை இலங்கையில் பிளாஸ்திக் மாசுபாட்டை சமாளிக்க உதவுவதற்காக கைகோர்த்துள்ளன. இதன்படி உள்நாட்டிலுள்ள பேக்கரி சங்கிலியின் விற்பனை நிலையங்களில் நுகரப்படும் தயாரிப்புகள் பொதி செய்யப்படுகின்ற பொருட்களை சேகரித்து மீள்சுழற்சி செய்வதன் மூலம் இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது. இரண்டு நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம், மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களுக்கு தனித்தனி கழிவுத்தொட்டிகளை ஏற்பாடு செய்வதன் மூலமும், பொறுப்புணர்வுடன் கழிவகற்றலை ஊக்குவிப்பதன் மூலமும் கழிவுகளை தரம் பிரிப்பதற்கு வசதியாக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. சேகரிக்கப்பட்ட கழிவுகள் அதன் பின்னர் ராஜகிரியவில் உள்ள பெரேரா அன்ட் சன்ஸ் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் சேகரிப்பு மையத்திற்கு அனுப்பப்படுகின்றன.

அங்கு அவை சுத்தம் செய்யப்பட்டு, அமுக்கப்பட்டு, உள்நாட்டு மீள்சுழற்சி நிறுவனங்களான EcoMaximus மற்றும் EcoSpindles ஆகியவற்றிற்கு கொண்டு செல்லப்படும் வரை வைத்துப் பேணப்படுகின்றன. தற்சமயம் 100 க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், நெஸ்லே லங்கா மற்றும் பெரேரா அன்ட் சன்ஸ் ஆகியவை இந்த முயற்சியை எதிர்வரும் ஆண்டுகளில் நாடளாவிய ரீதியில் பெரேரா அன்ட் சன்ஸ் விற்பனை நிலையங்களுக்கு விரிவுபடுத்த எண்ணியுள்ளன.

இந்த நற்காரியத்துக்கான ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, பெரேரா அன்ட் சன்ஸ் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் சேகரிப்பு மையத்தில் ஒரு சிப்பமாக்கல் இயந்திரத்தை நிறுவ நெஸ்லே லங்கா உதவியுள்ளது. இந்த சிப்பமாக்கல் இயந்திரம், உள்நாட்டில் பேக்கரி சங்கிலியின் சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி முயற்சிகளை வலுப்படுத்த உதவுகிறது. அத்துடன், கழிவுகளை அமுக்கி மேலும் தொடர்ந்து பதப்படுத்தி மற்றும் மீள் சுழற்சி செய்வதற்கு அவற்றின் போக்குவரத்தை எளிதாக்குகிறது.

மருந்தாளர்களின் திறனை மேம்படுத்த

இலங்கை மருந்தாக்கல் சங்கத்துடன் இணையும் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ்

ஏழு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக, இலங்கையில் முதல் தர மருந்துப் பொருட்கள் இறக்குமதியாளரும் விநியோகத்தருமாக திகழும் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ், மருந்தாளுநர்களின் பிரத்தியேக திறன்கள் விருத்தி நிகழ்ச்சியை பூர்த்தி செய்த இரண்டாவது தொகுதியினருக்கு சான்றளிப்பு வைபவத்தை ஹில்டன் ரெசிடென்சிஸ் இல் அண்மையில் முன்னெடுத்திருந்தது. 35 மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்று தமது திறன்களை விருத்தி செய்திருந்தனர். இலங்கை மருந்தாக்கல் சங்கத்துடன் இணைந்து இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், தேசிய ரீதியில் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்களுக்கு அவசியமான திறன்கள் மற்றும் அறிவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த நிகழ்வு 2019 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

மருந்தாளர்களாக திகழ எதிர்பார்ப்பைக் கொண்ட மாணவர்களுக்கு பரிபூரண அறிவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த மருந்தாளுநர்களின் பிரத்தியேக திறன்கள் விருத்தி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பதிவு பரீட்சைக்கு தோற்ற எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலும், இலங்கை மருந்தாக்கல் நிறுவனத்திடமிருந்து மருந்தாளுநர்கள் பதிவை பெற்றுக் கொள்வதற்கும் உதவும் வகையில் 6 மாத காலப்பகுதிக்கு இலவசமாக அவர்களை தயார்ப்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது. இதனூடாக, தொழிற்துறைக்கும் சமூகத்துக்கும் தகைமை வாய்ந்த மருந்தாளுநர்கள் தயார்ப்படுத்தப்பட்டு சேவைக்கு அமர்த்தப்படுவது உறுதி செய்யப்படுகின்றது. இந்த கற்கையின் பாட விதானத்தில் சமூக மருந்துப் பொருட்கள் செயன்முறை, Pharmaceutics, Pharmacology மற்றும் Therapeutics, Pharmacy Management, Regulatory requirements, Pharmacognosy, Cold Chain Management மற்றும் வாடிக்கையாளர் பராமரிப்பு சேவை திறன்கள் போன்றன அடங்கியுள்ளன.

இந்தத் திட்டம் தொடர்பாக ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் மற்றும் ஹேமாஸ் சேர்ஜிகல்ஸ் மற்றும் டயக்னோஸ்டிக்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் ஜுட் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், "மருந்தாளுநர்களின் பிரத்தியேக திறன்கள் விருத்தி நிகழ்ச்சியின் இரண்டாம் தொகுதியை பூர்த்தி செய்துள்ளதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன், என்றார்.

பீப்பள்ஸ் லீசிங் வாடிக்கையாளர்களுக்கு

SLT–MOBITEL mCash வழங்கும் சௌகரியமான மீளச் செலுத்தல் வசதி

SLTMOBITEL இனால் வடிவமைக்கப்பட்டு, இலங்கை மத்திய வங்கியின் அனுமதியுடன் இயங்கும், புத்தாக்கமான மொபைல் பணக் கொடுக்கல் வாங்கல் கட்டமைப்பான SLTMOBITEL mCash, பீப்பள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் (PLC) வாடிக்கையாளர்களுக்கு மாதாந்த லீசிங் மீளச் செலுத்தல்களை இலகுவாக மேற்கொள்வதற்கான சௌகரியமாக கொடுப்பனவு முறைமை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, மற்றும் இலங்கையின் வங்கிசாரா நிதிச் சேவைகள் வழங்கும் துறையில் நிதிசார் தீர்வுகளை வழங்கும் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் (PLC) ஆகியன இணைந்து, mCash சேவைகளின் விரிவாக்கத்தினூடாக நிறுவனத்தின் நிதித் திரட்டல் நிர்வாக செயன்முறையை இலகுவாக்கிக் கொள்ளவும், லீசிங் மீளச் செலுத்தல் செயன்முறையை இலகுவாக்கிக் கொள்ளவும் வசதியை ஏற்படுத்தியுள்ளன.

PLC வாடிக்கையாளர்களுக்கு தற்போது தமது லீசிங் கொடுப்பனவுகளை இலகுவாக சிக்கல்களின்றி SLTMOBITEL mCash wallet அல்லது mCash விற்பனையாளர் பகுதிகளினூடாக மேற்கொள்ள முடியும். அத்துடன், PLC க்கு நிலுவையிலுள்ள லீசிங் கொடுப்பனவுகளை சௌகரியமாகவும், தாமதங்களின்றி பெற்றுக் கொள்வதற்கும் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

SLTMOBITEL mCash அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர் வலையமைப்புகள் நாடு முழுவதிலும் காணப்படுவதுடன், எதிர்காலத்தில் மேலும் அனுமதியளிக்கப்படும் விற்பனையாளர்கள் உள்வாங்கப்படவுள்ளனர். PLC உடன் கைகோர்த்துள்ளமையானது, SLTMOBITEL இனால் சகல குடிமக்களுக்காகவும், டிஜிட்டல் மாற்றியமைப்பு சேவைகள் ஊக்குவிப்பு செயற்பாடுகளில் எய்தப்பட்டுள்ள மற்றுமொரு மைல்கல் சாதனையாகும்.

புத்தாக்கமான உள்ளம்சங்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறைகளுக்கு உள்வாங்கப்படக்கூடிய வகையில், தொடர்ச்சியாக வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக, SLTMOBITEL இன் mCash இனால் இலங்கையின் மொபைல் பணக் கொள்கையில் புரட்சிகரமான மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

காலி தொழிற்சாலையில்

போர்ட்லண்ட் கலப்பு சீமெந்து உற்பத்தியை ஆரம்பித்துள்ள INSEE

INSEE சீமெந்து நிறுவனம் தனது போர்ட்லண்ட் கலப்பு சீமெந்து உற்பத்தியை அதன் ருகுண சீமெந்து தொழிற்சாலைக்கும் விரிவுபடுத்தியுள்ளது. உள்ளூர் சந்தையில் அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய புதிய SLS1697 தயாரிப்பின் உற்பத்தியை அதிகரித்துள்ளது.

போர்ட்லண்ட் கலப்பு சீமெந்து பல வருட ஆராய்ச்சியின் விளைவாகும். மேலும் சாதாரண போர்ட்லண்ட் சீமெந்துகளின் மூலமான அதிக காபன் அடிச்சுவட்டை நிவர்த்தி செய்யவும், அதே சமயம் அமுக்க வலிமையில் இதுவரை காலமும் வெளிவந்த அனைத்து வகையான சாதாரண போர்ட்லண்ட் சீமெந்து தயாரிப்புக்களுக்கு ஈடாக அல்லது அதற்கும் மேலானதாக உற்பத்தி செய்யும் அதே வேளையில், புத்தளம் ஒருங்கிணைந்த சீமெந்து உற்பத்தி தொழிற்சாலையில் பிரத்தியேகமாக தயாரிக்கப்படுகின்ற ஒரு சிறந்த கலப்பு சீமெந்து ஆகும். "வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கட்டுமானங்களில் நிலைபேற்றியலுக்கான செயல்திறனை அதிகரிப்பதன் மூலம் மதிப்பை உருவாக்குவதல் மற்றும் இலங்கையின் கட்டுமானத்துறையை இலட்சிய வேட்கையுடன், உலகளாவில் தராதரப்படுத்தப்பட்ட நிலைபேற்றியல் இலக்குகளை நோக்கி நகர்த்துதல் என இரு முனை அணுகுமுறையின் ஒரு பகுதியாக INSEE சீமெந்து நிறுவனம் கடந்த ஆண்டு உள்ளூர் சந்தையில் போர்ட்லண்ட் கலப்பு சீமெந்தை முதன்முறையாக அறிமுகப்படுத்தியது, என்று INSEE சீமெந்து நிறுவனத்தின் தயாரிப்புகள் மற்றும் தீர்வுகள்துறையின் தலைமை அதிகாரியான கலாநிதி மௌசாபால்பக்கி தெரிவித்தார்.

"உலகளவில், குடியிருப்பு மற்றும் வணிக பயன்பாடு முதல் பிரமாண்டமான உள்கட்டமைப்பு செயற்திட்டங்களுக்கு கலப்பு சீமெந்து வகைகளின் பயன்பாடு நீண்டகால செயல்திறனில் மேம்பாடுகளை நிரூபித்துள்ளதுடன், கட்டுமானத்தில் காபன் அடிச்சுவட்டைக் குறைக்கவும் பங்களித்துள்ளது. மேலும் காலி தொழிற்சாலைக்கும் எங்கள் உற்பத்தி விரிவாக்கம் நிலைபேறான உற்பத்தி நடைமுறைகளுக்கான எங்கள் அர்ப்பணிப்புக்கான ஒரு சான்றாகும், என அவர் மேலும் குறிப்பிட்டார்.

படித்ததும் பகர்வதும் 103

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

நல்லதை சொல்கிறோம்

பாடசாலை கல்வி!

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் பாடசாலை செல்லும் மாணவர்களின் கல்வி பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று தொடங்கிய நாட்களிலிருந்தே 'கோவிட் 19' உட்பட பல்வேறு காரணிகளினால் பாடசாலை கல்வி நடவடிக்கைகளும், மாணவர்களுக்கான பிரேத்தியேக வகுப்புகளும் தொடர்ந்து பாதிக்கப்பட்டேவருகின்றமைகவலைக்குரியது. தற்போதைய பொருளாதார நெருக்கடி, மற்றும் எரிபொருள் பிரச்சினைகளினால்போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள்பாடசாலைகளை மீண்டும் திறப்பதைதாமதிப்படுத்திவருவதோடு பிரேத்தியேக வகுப்புகளின்செயற்பாட்டையும் பெருமளவில் முடக்கியுள்ளது. இத்தகைய நிலையில் சில மாணவர்கள் மாதக்கணக்கில் கூட பாடசாலை நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபடும் வாய்ப்பை இழந்துள்ளனர். இந்த யதார்த்த நிலையை புரிந்து கொண்டு பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்து இடையூறின்றி நடைபெறத்தக்கவகையில் குறைந்த பட்சம் அவர்கள் பாடங்களை படிக்கின்ற நிலைமைகளையாவதுஉருவாக்கிக் கொடுக்க வேண்டிய கட்டாய நிலை உருவாகியுள்ளது.மாணவர்களான தம் பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் தம்மால் இயன்ற அளவில், தாம் கற்றதைக் கொண்டு கற்றுக் கொடுத்தல், பாடப்புத்தகபயிற்சிகளைசெய்திடச் செய்தல் கல்வியை பூர்த்தி செய்த, அல்லது உயர் வகுப்புகளில் கற்கின்ற தமது மூத்த பிள்ளைகள் மூலம் தம்பி தங்கைகளுக்கு கல்வி போதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தல் போன்றவற்றை ஒவ்வொரு வீட்டிலும் இலகுவாக செய்திட முடியும்.

வசதி வாய்ப்பு உள்ளவர்கள்,இணையவழிகல்வியைத்தொடர்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்கின்றபோது அயல் வீட்டிலுள்ளமாணவமாணவிகளையும் ஏற்றவகையில்இணைத்துக்கொள்வதின் மூலம் அவர்களுக்கும் உதவிட முடியும்.

ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள சமூக சேவை இயக்கங்கள் பொருத்தமான இலவசவகுப்புகளை நடாத்த ஏற்பாடுகள் செய்வதன் மூலம் அவ்வப்பகுதிமாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குஓரளவேனும் உதவிட முடியும். இவ்விடயத்தில் சமய மத்திய நிலையங்களானகோயில்கள்தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் போன்றவற்றின் நம்பிக்கையாளர்கள் சபையும்பாரிய பணியை பயனுள்ள வகையில் ஆற்றிட முடியும். கோயில்களையும், தேவாலயங்ககளையும், பள்ளிவாசல்ககளையும்மாணவர்களின்கல்விக்காக திறந்து கொடுத்து, புது வழியைக் காட்ட இயலும்.

இவ்விடயத்தில்ஒவ்வொருவரும் சிந்தித்து தம்மாலானபங்களிப்பை உயரிய அளவில் வழங்கி, பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்புக்குள்ளாவதிலிருந்து பாதுகாக்க முயற்சிக்க முடியும்.

நெஞ்சுக்கு நீதி

பிரிந்தார் பெருமை

கவிஞர் போருதொட்ட ரிஸ்மி

மற்றுமொரு இலக்கிய ஆளுமையை நாம் இழந்துவிட்டோம். கவிஞர் போருதொட்டரிஸ்மி, கடந்த ஜூலை மாதம் 01ம் திகதி (2022.07.01) தனது 52வதுஅகவையில்இவ்வுலகைப்பிரிந்தார். தொண்டர் ஆசிரியராக, ஆசிரியராக, சமூக சேவையாளராக,ஊடகவியலாளராக, சிறந்தஏற்பாட்டாளராக, சிறந்த கவிஞராகஎல்லோராலும் நன்கு அறியப்பட்டவர்போருதொட்டரிஸ்மி.

பலகத்துறைபள்ளி பரிபாலன சபை செயலாளர்,போருதொட்டஅபிவிருத்தி சம்மேளனம், போருதொட்டநலன்புரி சங்கம் எனவற்றின் நிருவாக உறுப்பினர் என பல அமைப்புகளில் பல பதவிகள் மூலமாக சமூக சேவையில் தீவிர ஈடுபாடுகொண்திருந்த இவர், 2014ம்ஆண்டில் தனது பிரதேசஎழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், இலக்கியஆளுமைகளை ஒன்றினைத்து, 'பலகத்துறை கலை இலக்கிய வட்டம்'என்ற அமைப்பை நிறுவினார்.

பொதுவாக ஓர் அமைப்பைதோற்றுவிப்பவரே அதன் தலைவராக வருவது வழக்கம். ஆனால் இதற்கு மாற்றமாக பொருத்தமான ஒருவரை அதன் தலைவராக்கி, இவர் அதன் உபதலைவராகவேசெயலாற்றினார்.

பலகத்துறைபிரதேசத்தைச் சேர்ந்த கலாபூஷணம். எம். ஜே. எம்.தாஜுதீன்எழுதிய "கம்மல்துறைவரலாறும்வாழ்வியலும்", இளம் ஊடகவியலாளர்அனஸ்அப்பாஸ் எழுதிய "தேசிய சாதனை மடல்" மற்றும் "புலனம்" புகைப்படக்கவிதை நூல்என்பவற்றை வெற்றிகரமாக வெளியீடு செய்வதில் இவரது பங்களிப்பு அளப்பரியது. அத்துடன் பிரதேசஊடகமான "முன்னோடி" எனும்ஒளி வடிவ ஊடகத்தின் முக்கியஅங்கமாகவிருந்து அதன் வளர்ச்சிக்கும் துணையாக இருந்துள்ளார்.

வலம்புரி கவிதாவட்டத்தின் தீவிர உறுப்பினரானபோருதொட்டரிஸ்மி, கொழும்பில் மட்டுமே நடைபெற்று வந்த வலம்புரி கவிதாவட்டத்தி கவியரங்கு, தலைநகருக்குவெளியேயும் நடைபெற வேண்டுமென ஆர்வத்தோடு செயல்பட்டு, அதன் 77 ஆவதுகவியரங்கு,பலகத்துறை கலை இலக்கிய வட்டம் அனுசரணையில் போருதொட்ட மண்ணில் வெற்றிகரமாக நடப்பதற்குவழி செய்தார்.

சிரேஷ்டஊடகவியலாளர்எம்.ஏ.எம். நிலாமின் 'தட்டுத்தாவாரம்' நூல் வெளியீட்டின்போது என்னை சந்தித்த ரிச்மி, 'படித்ததும்பகர்வதும்' பத்தி பற்றி பெரிதும் சிலாகித்துக்கூறியதுடன் அது பற்றி தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரிடம்விசேடமாககுறிப்பிட்டதாகஆர்வத்தோடுகூறியமை என்றும் என் நினைவில் பசுமையானது.

இலங்கை வானொலியில் இம்முறைஹஜ்ஜுப் பெருநாள் கவியரங்கைநடாத்துவதற்காக நான் கவிஞர்களை தேர்வு செய்வதில் அவரும் பங்களிப்பு செய்தமையும், அவரோடு சில விடயங்களைகலந்துரையாட நான் திட்டமிட்டிருந்தாலும் அதற்கு வாய்ப்பில்லாமல் அன்றைய தினமே அவர் காலமானதும், என்றும் மறக்க முடியாதவை.

போருதொட்டரிஸ்மியின் மறைவு என்னைப் போன்ற எழுத்துலகஅன்பர்களுக்கும், குறிப்பாக பலகத்துறைமண்ணுக்கும்பேரிழப்பு என்றால் மிகையல்ல.

பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

பண்டாரவளை பிரநீர்ஷா தியாகராஜா

சர்வதேச மட்டத்திலானபோட்டியில்பங்குபற்றுவதற்காக, இலங்கை இளம் பாடகர்களை தெரிவு செய்யும், சிரசதொலைகாட்சியின் 'த வாய்ஸ்டீன்ஸ்ஸ்ரீலங்கா' (TheVoiceTeensSriLanka) போட்டியில்பண்டாரவளையைச் சேர்ந்த பிரநீர்ஷாதியாகராஜா வெற்றி பெற்றுள்ளார். சுமார் ஆறு மாதங்களாகவாராந்தம்சிரசதொலைக்காட்சியில்ஒளிபரப்பான இந்த நிகழ்ச்சியின் இறுதி போட்டி கடந்த 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நேரலையாகநடைபெற்றது. இதில் மக்களின்வாக்குகளால் முதலிடம் பெற்று போட்டியின் வெற்றிப்பரிசான 25 இலட்சம் ரூபாய் பணப்பரிசையும் வெற்றிக் கேடயத்தையும்பிரநீர்ஷாதியாகராஜா பெற்றுக்கொண்டார். இவற்றோடு பல்வேறு அனுசரனையாளர்களினால் பல இலட்சம் ரூபாய்கள் பரிசாக அவருக்கு வழங்கப்பட்டன.

பிரநீர்ஷாதியாகராஜா ஆரம்பம் முதல் இறுதிப்போட்டிவரை தனது திறமையை சிறப்பாக வெளிக்காட்டி தமிழ், சிங்களம், இந்தி என பல மொழிப்பாடல்களையும் பாடி நடுவர்களையும்பார்வையாளர்களையும்தொலைகாட்சிநேயர்களையும் வெகுவாககவர்ந்தார். இறுதிப்போட்டியில்இறுதிப்பாடலாக தமிழ் பாடலையே பாடி வெற்றி பெற்றார். பெரும்பான்மையினமக்களே அதிகம் பார்க்கும் சிரசசிங்களதொலைகாட்சி நிகழ்ச்சியில் பெரும்பான்மையின மக்களின் பேராதரவோடுபெருந்தொகைவாக்குகளால்சிறுபான்மையின தமிழ் பெண்ணானபிரநீர்ஷாதியாகராஜா வெற்றி பெற்றிருப்பது இன்றைய காலத்தில் விசேடமாக குறிப்பிடத்தக்கது.

பண்டாரவளை மத்திய கல்லூரியில் 9ம்தரத்தில் கல்வி பயிலும் மாணவி பிரநீர்ஷாவின் திறமையை பாராட்டி எதிர்காலத்தில் அவர் மேலும் பல வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

அந்த நாள் ஞாபகம்!

1996 ஆகஸ்ட் 19 ஆம் திகதி. மூத்த எழுத்தாளரும்,பன்முகஆளுமையும் கொண்ட 'தேசத்தின் கண்', 'தமிழ்மணி', மானாமக்கீன் அவர்கள் எனது காரியாலயம் வந்து அவரது சிறிய நூல் ஒன்றை எனக்கு அன்பளிப்பு செய்தார். அது ஒரு வித்தியாசமான நூல்.

அந்நூலுக்கு என தனியான தொரு பெயர் இருக்கவில்லை அவர் எழுதிய மூன்று நூல்கள் பற்றிய ஒரு நூலாகவே அது இருந்தது. அந்த வித்தியாசமான புத்தகத்தின் படம்தான் இங்கே தரப்பட்டிருக்கிறது.

எடுத்துக்கொண்ட எந்த விடயத்தையும்வித்தியாசமாகவும்தனித்துவமாகவும் செய்வதில் வல்லவர்,"நானா" என்று நாங்கள் அன்போடு அழைக்கும் மானாமக்கீன் அவர்கள்.

1995ல்இவர், தென்இந்திய திருச்சி நகரின், பிரபல ஃபெமினாஹோட்டலில் விமரிசையாக பெருந்திரளானோர் மத்தியில் வெளியிட்ட திருச்சி குலாம்ரசூல் பற்றிய நூல், 'பேனா முனையில் அரை நூற்றாண்டு'.

இதனோடு,அக்காலப் பகுதியில் அவர் தென்னிந்தியாவில் வெளியிட்டு புகழ் பெற்ற ஏனைய இரு நூல்களான 'என்னைக்கேளுங்கோ', 'முஸ்லிம்டைஜஸ்ட்' என்பன தொடர்பாக நர்கிஸ், தாருல்குர்ஆன், சாந்தி வளாகம், குமுதம், தினமலர், மணிச்சுடர், எழுச்சிக் குரல், தினகரன், தினமதி, முஸ்லிம் முரசு, ஜமாஅத்துல்உலமா, "சண்டேஒப்சேர்வர்", சூடாமணி, சமரசம், குர்ஆனின் குரல், வீரகேசரி உட்பட உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகைகள், சஞ்சிகைகளில்வெளிவந்த செய்திகள் விமர்சனங்கள், அறிமுகங்கள், மதிப்புரைகள்என்பவறின்தொகுபாகவே, இந்நூல்அமைந்திருந்தது.

தமிழ் ஆக்கங்களைநூலுருவாககொண்டுவருவதற்கேமுத்தாளர்கள் பகீரதப்பிரயத்தனம் பட்ட அந்தக்காலத்தில், தனது நூல்கள் பற்றிய இவ்வாறான ஒரு நூலை 'தமிழ் மணி'மானாமக்கீன்வெளியிட்டிருப்பதுஅவரது துணிச்சலான,தனித்துவமானஒரு சாதனையாகவேஎனக்குத் தெரிந்தது.

வாழ்நாள் சாதனையாளர், தேசத்தின் கண், தமிழ் மணி, மானாமக்கீன், கட்டுரை, விமர்சனம், சித்திரம், வானொலி நாடகம், மேடை நாடகம், சினிமா, பத்தி எழுத்து, சிறுகதை என பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்த பல்கலை வேந்தன். இலங்கை,தென் இந்திய எழுத்தாளர்களிடையேஉறவுப்பாலமாகத்திகழும் இவர், பல்வேறு விடயங்களிலும்வெளியிட்டுள்ள் நூல்கள் ஏராளம்.

'எந்தவொருநிகழ்ச்சியையும் குறித்த நேரத்தில் தொடங்கி, குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும்' என்ற விடயத்தை வலியுறுத்தும் இவர்.மிகக் கடினமான இக்காரியத்தை தான் நடத்தியநிகழ்ச்சிகளில்வெற்றிகரமாக சாதித்து காட்டியவர்.

"அனைத்தும் அவன் எண்ணப்படியும்திட்டப்படியும்" என்று கூறி, இன்றும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்ற, கடந்த மே மாதம் 29ம் திகதிதனது 85வதுஅகவையில்கால் பதித்தமூத்த ஆளுமை மானாமக்கீன் அவர்கள் நலமோடும், மகிழ்வோடும், நீடூழி வாழ பிரார்த்திக்கிறோம்.

பேசும் கவிதை

சில ஹைக்கூ கவிதைகள்!

ஓயாத இருமல்
மாயாதுமாயாது
பாழான தனிமை

சிறைப்பிடித்த விரல்களில்
தீபம் ஏற்றியது
மின்மினி

உன்னால் முடிகிறது குயிலே
ஊறறியஅழுவதற்கு
நான் மனிதப் பெண்

யாரது
குளத்தில் கல் விட்டெறிந்தது?
உடைந்ததே நிலா முகம்
தலைக்கு மேல்
கிளிபறந்தது
குழந்தையின் அழுகை

மனைவி ரசிக்கவில்லை
குழந்தை வரைந்தகாகிதத்தில்
சின்ன வீடு

சிரித்தது நீ
எனக்குள் எப்படி
இறக்கைகள்

போதுமான ஆட்களேறியும்
புறப்படவில்லையே புகையிரதம்
லயன்கள்

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின்நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப்(WhatsApp): 0777314207

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

திருவள்ளுவத்தில் ஒழுங்கமைத்தல் (Organizing)

திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்

கே. பத்மானந்தன் 15

Koontz and O'Donnell, Louis A. Allen, Stephen P. Robbins and Mary Coulte,G.R. Terry போன்றோரின் கருத்துக்களின்படி ஒரு நிறுவனத்தில் ஒழுங்கமைத்தல் என்பது பொறுப்புக்களை இனம்காணல், பொறுப்புக்களை தீர்மானித்தல், பொறுப்புக்களை ஒன்றிணைத்தல் அல்லது குழுவாக்குதல், அப்பொறுப்புகளை யார் செய்யவேண்டும் எவ்வாறு செய்யவேண்டும் என வகுத்தல் அதாவது பதவி நிலைகளை உருவாக்கி வரையறுத்தல், அப்பதவிகளுக்குரிய பொறுப்புகளை அல்லது அதிகாரங்களை வரையறுத்தல், வேலைப்பகிர்வு, அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல்,தேவையான நிர்வாகக் கட்டமைப்புகளை நிறுவுதல், அவற்றுக் கிடையில் உள்ள தொடர்புகளை வரையறுத்தல் யார் யாரின் கீழ் வேலை செய்வார்கள், எங்கே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் போன்ற பணிகளை உள்ளடக்கியுள்ளது.

எனவே ஒரு நிறுவனத்தில் ஒழுங்கமைப்பென்பது வேலைப்பகிர்வு (Division of Labor), அதிகாரப் பகிர்வு (Delegation of Authority), திணைக்களப்படுத்தல் (Departmentalization) , படிநிலை அதிகாரம் (Hierarchy) ,ஒருங்கிணைத்தல் அல்லது இயைபாக்கல்(Coordination) என்பவற்றுடன் தொடர்புடையதாகும். ஒழுங்கமைத்தலினூடாக நிறுவனங்களில் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுகின்ற அதேவேளை அவற்றுக்கிடையே முறையான தொடர்புகளும் ஏற்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் ஒழுங்கமைத்தலின் முக்கிய நோக்கமாகிய நிறுவன வளங்களை முறையாக வினைத்திறனுடன் பயன்படுத்தி இலக்குகளை வெற்றிகரமாக அடைவது என்பது எய்யப்படுகிறது.

ஒழுங்கமைத்தல் என்பதை நிறுவனப் பணிகளுக்கும் நிறுவன வளங்களுக்கும் இடையில் தர்க்கரீதியான தொடர்பை ஏற்படுத்தல் எனவும் வரையறுக்கலாம். இதன்போது இங்கு ஊழியர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் என்ன அப்பணிகளை மேற் கொள்வதற்கு அவர்களுக்குத் தேவையான இடம், காலம், வளங்கள், வசதிகள், கருவிகள், போன்றவை யாவை என்பன கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இத்தகைய பணிகள் மற்றும் வளங்களை வகைப்படுத்துவது ஒழுங்கமைத்தலின் ஒரு பணியாகும். சுருக்கமாகச் சொல்வதாயின் ஒழுங்குபடுத்தல் என்பது உகந்த வளப் பயன்பாட்டை எவ்வாறு அடையலாம் என்பது பற்றிக் குறிக்கின்றது. எனவே ஒழுங்கமைக்கும் போது, ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையத் தேவையான வளங்களையும் அவற்றின் சரியான ஒதுக்கீட்டையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஏறடியில் சிறப்பாக விளக்குகிறார்.

" பொருள்கருவி காலம் வினையிட
னொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்."
(குறள் 675)

ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்பு அல்லது ஒரு நிறுவனத்தை உருவாக்குவதற்கு முன்பு அல்லது புதிய வியாபாரம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்பு முகாமையாளர், அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

உதாரணமாக நிறுவனம் ஒன்று ஒரு புதிய காட்சியறையைத் திறப்பதாயின் ஒழுங்கமைத்தல் செயன்முறையானது போதுமான நிதி ஒதுக்கீடு, தேவையான கட்டிடத்தை அல்லது இடத்தைப் பெறுதல், தேவையான ஊழியர்களைத்தெரிவுசெய்துபொறுப்புகளை அவர்களிடம் ஒப்படைத்தல், தேவையானஅலுவலக வசதிகளை அமைத்தல், தேவையான தொழில்நுட்ப வசதிகளை உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல் எனப் பலவற்றை உள்ளடக்குகிறது. இவ்வாறு திருவள்ளுவர் ஒரு செயலுக்கான அனைத்து வளங்களையும் பெற்றுக்கொள்வதன மூலம் தேவையற்ற செலவுகளைக் குறைத்து தொழிலை சிறப்பாகச் செய்யலாம் என்று கூறியதைத்தான் F.W.Taylor ஒழுங்குபடுத்தல் என்பது என்னவென்றால் என்ன செய்ய வேண்டுமோ அவற்றை செலவு குறைந்த வழிமுறைகள் மூலம் செய்வது என்கிறார்.

ஒழுங்குபடுத்தலின் கீழ் முகாமைத்துவம் முறையான வேலைப்பகிர்வு ஒன்றை கைக்கொள்ளுமாயின் எந்தக் கடுமையான வேலைகளையும் எந்த விதமான பிரச்சனைகளுமின்றி நிறைவேற்றமுடியும். வெற்றிகரமான வேலைப் பகிர்வானது சரியான வேலையைச் சரியான ஆளுக்குச் சரியான நேரத்தில் வழங்கப்படுவதாகும். எனவே முகாமைத்துவமானது ஒருவர் மீதே எல்லாப் பொறுப்புகளையும் சுமத்துவது அவருடைய வேலை செய்யும் ஆற்றலை வெகுவாகப் பாதிக்கும் என்ற உண்மையை விளங்கிக்கொண்டு வேலைகளைப் பகிர்ந்து அளித்தல் முக்கியமானது. அதேவேளை வேலைப்பகிர்வு என்பது ஒரு முகாமையாளரின் வேலைப்பளுவை இலகுவாக்கும். இதனால் அவரினதும் அவரின் நிறுவனத்தினதும் வினைத்திறன் அதிகரிக்கும். அத்துடன் வேலைப் பகிர்வானது ஆட்களின் இயலுமைக்கேற்ப அல்லது அவர்களின் வேலை செய்யும் ஆற்றலுக்கு ஏற்ப வழங்கப்பட்டாலே சரியான பயனை அல்லது விளைவை நிறுவனத்தால் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வுண்மையை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் தெளிவுபடுத்துகின்றார் .

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்". (குறள் 475)

மயில் இறகாக இருந்தாலும் கூட அதனை அளவோடு ஏற்றாமல் அளவு கடந்து மிகுதியாக ஒரு வண்டியில் ஏற்றினால் அவ்வண்டியின் அச்சு முறியும் என்கிறார் திருவள்ளுவர். எவ்வாறு மயிலிறகானாலும் அதிக பாரம் ஏற்றினால் வண்டியின் அச்சு முறியுமோ அதேபோல் ஒரு நிறுவனத்தில் காணப்படும் பொருத்தமற்ற வேலைப்பகிர்வு அல்லது ஒருவர் மீதே எல்லாப் பொறுப்புகளையும் சுமத்துவது எதிர்பார்த்த பலனைக் கொடுக்காது மாறாக எதிர்பாராத தீங்கான விளைவுகளையே தரும் என்பதை முகாமைத்துவம் உணர வேண்டும் .

ஒழுங்குபடுத்தலின் கீழ் நிறுவனமொன்றின் வெற்றிகரமான முகாமைத்துவம் என்பது வேலையைப் பகிர்ந்து கொடுத்தல் மட்டுமல்லாது பகிர்ந்தளிக்கப்பட்ட வேலைகள் சரியான முறையில் எதிர்பார்த்தபடி நடைபெறுகிறதா என்பதையும் உறுதி செய்யவும் வேண்டும். அத்துடன் வேலை பகிர்ந்தளிக்கப்படும்போது உரிய ஆட்களுக்கு, உரியநேரத்தில், உரிய பொருத்தமான சாதனங்களுடன் பகிர்ந்தளிக்கப்படுமாயின் வெற்றி நிச்சயமாகும் என்ற உண்மையை முகாமைத்துவம் உணர்ந்து கொள்ள வேண்டும். இம் முகாமைத்துவ உண்மைகளை திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடியில் தெளிவாக விளக்குகின்றார்.

"அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்".(குறள் 483)

ஒருவர் செய்யும் செயலை முடிப்பதற்கு அச் செயலை செய்வதற்குத் தேவைப்படும் கருவிகளுடன் ஏற்ற காலத்தையும் அறிந்து செய்தால் அரிய செயல்கள் அல்லது முடியாத அலுவல்கள் என்று ஒன்றில்லை என்கிறார் திருவள்ளுவர். எனவே வேலையைப் பகிர்வதுடன் ஊழியர் ஒருவரிற்கு அவரின் வேலையை முடிப்பதற்கு தேவையான வசதிகளை ஒழுங்குகளை முகாமைத்துவம் கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்பதை திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார் .

ஒழுங்கமைத்தல் பற்றி திருவள்ளுவர் இன்னொருவிதமாகக் கீழ்வரும் ஈரடியில் கூறுகிறார்.

"வகையறிந்து தற்செய்து தற்காப்பமாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு"(குறள் 878)

அதாவது ஒருவன் பகையை வெல்லும் வழிவகைகளை நன்கு ஆராய்ந்தறிந்து அதனை வெல்வதற்கேற்றவாறு தன்னைப் பலவிதத்திலும் வளர்த்துக்கொண்டு, சோர்வுபடாமல் தன்னைக் காத்துக்கொண்டால், அவனது பகைவர்களிடம் ஏற்பட்ட இறுமாப்புத் தானாகவே கெட்டு முற்றிலும் ஒழியும். அதாவது தற்காப்பு வளர வளரப் பகைவர்களுடைய இறுமாப்புத் தானாகவே தேய்ந்தொழியுமாம் என்கிறார் திருவள்ளுவர்.

எனவே ஒருநிறுவன முகாமையாளர் என்பவர் தனது போட்டி நிறுவனத்தினைப் பற்றி நன்கு ஆராய்ந்து அதற்கேற்றவாறு தனது நிறுவனத்தில் முறையான ஒழுங்கமைப்பை மேற்கொள்வாராயின் அவரது போட்டிநிறுவனத்தினர் போட்டியில் இருந்து விலகிக்கொள்வார்கள் அல்லது அந்தப் போட்டி இந்த நிறுவனத்திற்கு சாதகமாக அமையும் என்பதை திருவள்ளுவர் கூறுகிறார்.

அதாவது வகையறிதல்– தனது போட்டி நிறுவனத்துடன் எவ்வாறு போட்டி போடலாம் என்பதை ஆய்ந்து அறிதல், தற்செய்தல் தனது நிறுவன ஆற்றலைப் பெருக்கிக்கொள்ளுதல், தற்காத்தல் போட்டி நிறுவனம் தனது நிறுவனத்துள் ஊடுருவாமல் பார்த்துக் கொள்ளல்ஆகிய மூன்று தந்திரோபாயங்களை நிறுவன முகாமையாளர் ஒழுங்குபடுத்துதலில் கைக்கொள்ள வேண்டும் என்று திருவள்ளுவர் இக்குறள் மூலம் வலியுறுத்துகின்றார்.

சமைத்த உணவுகளை மீண்டும் மீண்டும் சூடாக்காதீர்கள்

நம்மில் பெரும்பாலானோர் எஞ்சிய உணவுகளை எடுத்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்து, சாப்பிடுவோம். அப்படி சாப்பிடும் போது அந்த எஞ்சிய உணவுகளை சூடேற்றி சாப்பிடுவோம். ஏனெனில் குளிர் சாதனப் பெட்டியில் உணவுகளானது குளிர்ச்சியாக இருக்கும். குளிர்ச்சியான நிலையில் உணவுகளை உண்ண முடியாது என்பதால் அதை சூடேற்றி சாப்பிடுவோம். ஆனால், உணவுகளை மீண்டும் மீண்டும் சூடேற்றி சாப்பிடுவதால் அந்த உணவில் உள்ள சத்துக்கள் அழிக்கப்படுவதோடு, தீங்கு விளைவிக்கும் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, புற்றுநோய் போன்ற கொடிய நோய்களின் அபாயத்தை அதிகரிக்கிறது. இது தவிர உணவுகளை மீண்டும் சூடேற்றி சாப்பிடும் போது, அது வயிறு தொடர்பான பிரச்சினைகளை ஏற்படுத்துவதோடு, உணவில் நச்சுத் தன்மை ஏற்படும் அபாயத்தையும் அதிகரிக்கிறது.

குறிப்பாக புரோட்டின் நிறைந்த உணவுகளை மீண்டும் சூடேற்றும் போது, அது மிகவும் ஆபத்தானதாக கருதப்படுகிறது. உதாரணமாக உருளைக்கிழங்கு, சோறு, முட்டை, கோழி இறைச்சி, பசலைக்கீரை, எண்ணெய்கள், காளான், பீட்ரூட் போன்ற உணவுகளை மீண்டும் மீண்டும் சூடேற்றி சாப்பிடக்கூடாது.

உருளைக்கிழங்கு: உருளைக்கிழங்கை மீண்டும் சூடேற்றும் போது, அதில் உள்ள சத்துக்கள் அழிக்கப்படும். இது தவிர, சமைத்த உருளைக்கிழங்கு நீண்ட நேரம் அறை வெப்பநிலையில் இருந்தால், அது நஞ்சாக மாறிவிடும்.

சோறு: பலர் மிஞ்சிய சோற்றை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து, பயன்படுத்துவார்கள். சமைக்காத அரிசியில் வித்திகள் இருக்கும். இந்த வித்திகள் தான் பக்டீரியாக்களாக மாறுகின்றன. இந்த பக்டீரியாக்கள் சமைத்த பின்னரும் இருக்கும். அதுவும் சமைத்த சாதத்தை அறைவெப்பநிலையில் வைத்திருக்கும் போது, அதில் உள்ள பக்டீரியாக்கள் பெருக்கமடைந்து, நச்சுக்களை உற்பத்தி செய்து, வயிற்றுப்போக்கு, வாந்தி போன்றவற்றை உண்டாக்கும்.

முட்டை: புரோட்டீன் அதிகம் நிறைந்த முட்டையை எப்போதும் சமைத்த பின்னர் மீண்டும் சூடேற்றக்கூடாது. குறிப்பாக உயர் வெப்பநிலையில் சூடேற்றும் போது, அது நஞ்சாகி, செரிமான பாதையை பாதிக்கும்.

கோழி இறைச்சி: கோழி இறைச்சியில் புரோட்டீன் அதிகம் உள்ளது. இந்த கோழி இறைச்சியை சமைத்த பின்னர் மீண்டும் மீண்டும் சூடேற்றினால், அது ஆரோக்கியத்தைப் பாதிக்கும். அதுவும் இது செரிமான பிரச்சினைகளை உண்டாக்கும். ஒருவேளை நீங்கள் கோழி இறைச்சியை சூடேற்ற வேண்டுமானால், குறைவான தீயில் சூடேற்றுங்கள்.

பசலைக்கீரை: பசலைக்கீரையில் நைட்ரேட்டுகள் மற்றும் இரும்புச்சத்து அதிகம் உள்ளது. நைட்ரேட்டுகள் நிறைந்த உணவுப் பொருட்களை மீண்டும் சூடேற்றும் போது, அந்த நைட்ரேட்டுகள் நைட்ரைட்டுகளாக மற்றும் புற்றுநோயை உண்டாக்கும் கார்சினோஜென்களாக மாற்றப்படும்.

காளான்: காளானில் புரோட்டீன் அதிகம் உள்ளது. காளானை சமைத்த உடனேயே சாப்பிட வேண்டும். இதில் புரோட்டீன் அதிகம் இருப்பதால், இவற்றை சூடேற்றும் போது அதன் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டு, உடலுக்கு தீங்கு விளைவிக்கும். ஒருவேளை சமைத்த காளானை மீண்டும் சூடேற்றும் போது, அது செரிமான பிரச்சினைகளின் அபாயத்தை அதிகரிப்பதோடு, இதய பிரச்சினைகளையும் உண்டாக்கும்.

பீட்ரூட்: பீட்ருட்டும் பசலைக்கீரை போன்றது. ஏனெனில் இதில் நைட்ரேட்டுகள் உள்ளன. சமைத்த பீட்ரூட்டை மீண்டும் சூடேற்றி சாப்பிடும் போது, அதில் உள்ள நைட்ரேட்டுகள் நைட்ரைட்டுகளாக மாற்றமடைந்து, அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

மன அழுத்தத்தால் அதிக பசி ஏற்படுகிறதா?

மன அழுத்தம் அனைவருக்கும் உண்டாகக்கூடியது என்றாலும் தொடர்ச்சியாக நீடிக்கும் பட்சத்தில் உடல் மற்றும் மனதில் பெரும் விளைவுகளை ஏற்படுத்திவிடும். அழுத்தம் ஏற்படும்போது ஒருவர் தீவிரமாக சிந்திக்க தொடங்குகிறார்.

உடலில் குளுக்கோஸ் அளவு குறையும் போது கல்லீரல், வயிற்றுப்பகுதிக்கு கெக்ரிலின் எனும் நொதியை உற்பத்தி செய்யும் சமிக்ஞையை அனுப்புகிறது. கெக்ரிலின் பசியை தூண்டக்கூடிய நொதி ஆகும். வயிற்று பகுதியில் இருந்து நரம்புகள் மூலம் மூளைக்கு செய்தி அனுப்பப்பட்டு கெக்ரிலின் உற்பத்தி தொடங்குகிறது. இதனால் நமக்கு பசி உருவாகிறது.

இது மட்டுமில்லாமல் பல்வேறு காரணங்களாலும் பசி உருவாகிறது.

★ பெண்களுக்கு தைரொய்ட் ஹோர்மோன் அதிக அளவில் சுரக்கும் பொழுது பசி ஏற்படுகிறது.

★ மாதவிடாய் வருவதற்கு பதினைந்து நாட்களுக்கு முன்பு (PMS) கரு முட்டை உருவாகும் நேரத்தில் அதிக அளவு பசி உண்டாகிறது.

★ ஈஸ்ட்ரோஜன் அளவு குறையும் பொழுது அதிக அளவில் பசி உண்டாகிறது.

★ தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கும் அதிக அளவில் பசி உண்டாகிறது.

★ இவை இயற்கையாக பெண்கள் அனைவருக்கும் உண்டாகும் பசியாகும். ஆனால் மன அழுத்தத்தினாலும் அதிக அளவு பசி ஏற்படுகிறது. இது உடலுக்கு தீங்கானது.

★ அதிகப்படியான மன அழுத்தம் ஏற்படும் போது மூளையில் இருந்து எச்சரிக்கை சமிக்ஞை உடல் முழுவதும் அனுப்பப்படும். இதன் மூலம் இதய துடிப்பு அதிகமாகும். எனவே இதயம் அதிக அளவு இரத்தத்தை நுரையீரல் மற்றும் கை, கால்களுக்கு அனுப்பும்.

இந்த செயல்களால் உடல் உறுப்புகள் வேகமாக இயங்குவதன் மூலம் அதிக கலோரி இழப்பு ஏற்பட்டு உடலில் இன்சுலின் அளவு குறைந்து பசி உண்டாகிறது.

செரட்டோனின்(serotonin) என்னும் ஹோர்மோன் நமது மனநிலை சரிவர செயல்பட முக்கியமானதாகும். இது பசி, தூக்கம், மகிழ்ச்சி ஆகியவற்றை நிர்வகிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த ஹோர்மோன் சரியாக சுரக்காத நிலையில் மன அழுத்தத்தை உருவாக்குவதன் மூலம் பசி மற்றும் தூக்கம் ஆகியவற்றில் மாறுதலை ஏற்படுத்துகிறது.

மன அழுத்தத்தில் இருக்கும் போது கார்டிசோல் எனும் ஹோர்மோன் அதிக அளவில் சுரக்கிறது. இதன் மூலமாக மூளை அதிக அளவில் குளுக்கோஸை பயன்படுத்துவதால் பசி அதிகமாக ஏற்படுகிறது.

மன அழுத்தம் ஏற்படும்போது ஒருவர் தீவிரமாக சிந்திக்க தொடங்குகிறார். அதன் மூலம் உடல் சுழற்சி மற்றும் தூக்கம் பாதிப்புக்குள்ளாகிறது. தூக்கமின்மை உடலில் உள்ள கார்டிசோலை அதிகரித்து உடல் எடையை அதிகரிக்கிறது.

பசி மற்றும் மன அழுத்தம் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. மன அழுத்தம் அதிகரிக்கும் நிலையில் விரக்தி சலிப்பு காரணமாக நொறுக்கு தீனிகளை சிலர் அதிகமாக சாப்பிடுகின்றனர். இதன் காரணமாக உடல் எடை அதிகரிக்கின்றது.

கிச்சன் டிப்ஸ்

★ நறுக்கிய வாழைக்காயை தண்ணீரில் போட்டு வைத்தால் நாலைந்து நாட்களுக்கு கெடாது.

★ தக்காளிப் பழங்களை ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் கவிழ்த்து வைத்தால் அதிக நாட்கள் கெடாமல் இருக்கும்.

★ பச்சை மிளகாயை ஒரு வாரம் வரை கெட்டுப் போகாமல் இருக்க, அதை ஒரு கண்ணாடி போத்தலில் போட்டு சிறிதளவு மஞ்சள் பொடி சேர்த்து காற்று புகாமல் இறுக்கி மூடவும்.

★ கடலை, பயறு போன்ற பொருட்களை 6 மாதத்திற்கு மேல் எந்த வகையான பூச்சி புழுக்களும் வராமல் பாதுகாக்க, அவைகளை சேமித்து வைக்கும் போத்தல் அல்லது டப்பாவில் ஒரு துண்டு சுக்கு மற்றும் ஒரு பிரிஞ்சி இலையை சிறு சிறு துண்டுகளாக போட்டு வையுங்கள். இதனால் எத்தனை நாட்கள் ஆனாலும் பூச்சிகள் வராது.

வீட்டுத் தோட்டத்தில் பீட்ரூட் செய்கை

பீட்ரூட்டை வளர்ப்பது ஒரு நீண்ட செயல்முறை என்றாலும், இந்த முறையைப் பயன்படுத்தி வீட்டில் இயற்கை விவசாய முறையில் காய்கறிகளை வளர்த்து சாப்பிடலாம். ஆரோக்கியமாக வாழலாம். பீட்ரூட், குறைந்த கலோரி கொண்ட காய்கறி. அதன் சாறு இரத்த ஓட்டம், ஹீமோகுளோபின் அளவை மேம்படுத்தும். பெண்களுக்கு இது அவசியமானது.

பீட்ரூட் வளர்க்கும் முறை

★ பீட்ரூட்டின் மேல் பகுதியில் இருக்கும் உலர்ந்த இலைகளை அகற்றி விடவும்.

★ பின்பு பீட்ரூட்டின் நுனி பகுதிக்கு சற்று கீழே வட்ட வடிவில் வெட்டிக்கொள்ளவும். வெட்டிய பகுதியை கண்ணாடி கிண்ணத்தில் வைத்து சிறிதளவு நீர் நிரப்பவும்.

★ பீட்ரூட் மேல் பகுதி நீரில் மூழ்க கூடாது. ஏனெனில் அப்படி நீரில் மூழ்கினால் அது அழுக ஆரம்பித்துவிடும்.

★ பின்பு அந்த கண்ணாடி கிண்ணத்தை நேரடியாக சூரிய ஒளி படாத இடத்தில் வைக்கவும். சமையல் அறையில் வைத்துக்கொள்ளலாம்.

★ மூன்று, நான்கு நாட்களுக்குள் பீட்ரூட்டின் நுனி பகுதியில் புதிய இலைகள் துளிர் விட ஆரம்பித்துவிடும்.

★ ஒரு நாள் இடைவெளிவிட்டு மறுநாள் கிண்ணத்தில் இருக்கும் தண்ணீரை மாற்ற வேண்டும். 15வது நாளில் இலைகள் நன்றாக வளர்ச்சி அடைந்துவிடும். அதன் பின்பு இயற்கை உரம் கலந்த மண் தொட்டிக்கு பீட்ரூட் செடியை மாற்றிவிடலாம். அந்த மண் தொட்டியை ஓரளவு நிழல் உள்ள பகுதியில் வைக்கவும்.

★ மண் தொட்டியிலும் ஒரு நாள் இடைவெளி விட்டு தண்ணீர் ஊற்றி வளர்க்கவும். மூன்று, நான்கு மாதங்களில் பூக்கள் பூக்க தொடங்கிவிடும். அதன் பிறகு பீட்ரூட்டை அறுவடை செய்து சமைக்கலாம்.

குறிப்பு: பீட்ரூட்டை நிழல் உள்ள பகுதியில் வளர்க்க வேண்டும். ஓரளவு வளர்ச்சி அடைந்த பிறகு வாரம் ஒருமுறை தண்ணீர் ஊற்ற வேண்டும். ஒரு சில வாரங்கள் இடைவெளிவிட்டு இயற்கை உரம் தூவ வேண்டும். அது செடியின் வளர்ச்சியை தூண்டும். 100 நாட்களுக்குள் பீட்ரூட் அறுவடைக்கு தயாராகிவிடும்.

தினம் ஒரு பாதாம்

பாதாம் நமது மூளைக்கு நல்லது. மூளைக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் மூளையின் செயல்திறனை அதிகரிக்க செய்கின்றன. குழந்தைகளுக்கு தினமும் காலையில் தண்ணீரில் ஊற வைத்த நான்கு பாதாமை கொடுத்து வந்தால் அறிவாற்றல் அதிகரிக்கும்.

இதய நோய் உள்ளவர்கள் தினமும் பாதாம் சாப்பிடுவதால் இதய நோய் குணமாகும் மற்றும் இதய நோய் வராமல் தடுக்கும்.

கொலஸ்ட்ரோல் உள்ளவர்கள் தினமும் சாப்பிட்டு வந்தால் கெட்ட கொலஸ்ட்ரோலை குறைக்கிறது.

மலச்சிக்கல் உள்ளவர்கள் தினமும் பாதாம் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் குணமாகும். இதில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால் புற்று நோயை கட்டுப்படுத்துகிறது.

தினமும் பாதாம் சாப்பிடுவதால் தலைமுடி உதிர்வதை தடுக்கலாம். மேலும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

தோல் சம்பந்தமான நோய்கள் உள்ளவர்கள் பாதாமை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தோல் சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

இரத்த அழுத்தத்தினால் அவதிபடுபவர்கள் பாதாமை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இரத்த அழுத்தம் படிப்படியாக குறையும்.

எடையை குறைக்கும் சீரகம்

சீரகம் - 2 மே.கரண்டி
எலுமிச்சை - 1/2 பாதி
தண்ணீர் -1 1/2 கப்

செய்முறை: இரவில் படுக்கும் போது நீரில் சீரகத்தைப் போட்டு ஊற வைக்கவும். மறுநாள் காலையில் அந்த நீரை கொதிக்க வைத்து வடிகட்டவும். பின்பு அதை குளிர வைத்து அதில் எலுமிச்சையை பிழிந்து குடித்துவர வேண்டும். இப்படி தினமும் காலையில் செய்து வந்தால், 2 வாரத்தில் உடல் எடை குறைந்திருப்பதை காணலாம்.

கோர்ன் பிளவர் அல்வா

சோள மாவு - 1/2 கப்
சர்க்கரை - 1 1/2 கப்
தண்ணீர் - 2 கப்
கலரிங் - ஒரு சிட்டிகை
ஏலக்காய் தூள் - 1/2 தே.கரண்டி
நெய் - 3 தே.கரண்டி
முந்திரி - 10

செய்முறை

ஒரு கிண்ணத்தில் தண்ணீர், சோள மாவு, சர்க்கரை, கலரிங், ஏலக்காய் தூள் சேர்த்து நன்றாக கட்டி இல்லாமல் கலந்து கொள்ளவும். பின்பு அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து அதில் இக் கலவையை ஊற்றி கைவிடாமல் கிளறவும். பின்பு ஜெலி பதம் வந்தவுடன் ஏலக்காய் தூள் மற்றும் முந்திரி சேர்த்து இரண்டு நிமிடம் கழித்து அல்வா பதம் வந்தவுடன் இறக்கவும். ஒரு தட்டில் நெய் தடவி அதில் ஊற்றி ஆறியதும் துண்டுகளாக வெட்டி பரிமாறவும்.

இன ஒற்றுமைக்கும் கல்வித்துறைக்கும் ஷம்ஸ் வழங்கிய பங்களிப்பு

ஷம்ஸ் அன்றாடம் போராட்ட வாழ்க்கை தான் வாழ்ந்து வந்தார். எதிர்ப்புகளுக்கு அவர் சாதுரியமாக பதில் கொடுத்தார். பெரும்பான்மையினரால் அவரது சமூகத்திற்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போது சரியான பதிலடி கொடுத்து வந்துள்ளார். எந்த அறிஞரும் செய்யாத பணியை ஷம்ஸ் செய்திருக்கிறார்.

பன்முக எழுத்தாளர் எம்.எச்.எம்.ஷம்ஸின் 20 ஆவது நினைவு தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது)

'எரிந்த பின்பு தான் தெரிந்தது அது சந்தனக் கட்டையென்று' கவிஞர் ஒருவரின் இந்த வரிகள் எம்.எச்.எம் ஷம்ஸை பொறுத்தவரை மிகவும் பொருத்தமானது எனலாம்.

இலங்கையில் விரல் விட்டு எண்ணக் கூடிய பன்முக ஆற்றல் உள்ள எழுத்தாளர்களில் ஷம்ஸ் குறிப்பிடத்தக்க ஒருவர். 18/19 துறைகளில் தடம் பதித்துள்ளார். பாலர் கவிதை முதல் பாடல், சித்திரம், புகைப்படக் கலை, ஊடகத்துறை, விமர்சனம், கவிதை, சிறுகதை என அவர் தடம்பதித்த நீண்ட பட்டியலை முன்வைக்கலாம்.

பல்வேறு பரிமாணங்களில் அவர் தன்னை வெளிப்படுத்தியிருந்தார். அவற்றில் கல்வித்துறைக்கு ஆற்றிய பணி மற்றும் இன ஒற்றுமைக்காக செய்த பணிகள் பாரியன. அவை பாரிய அளவில் வெளிப்படுத்தப்படவில்லை.

முஸ்லிம் இலக்கியவாதிகள் சகல சமூகத்துடனும் இணைந்து முன்னின்று செயற்பட்டதில் ஷம்ஸ் முக்கியமானவர். இஸ்லாமிய வரையறைகளுக்கு உட்பட்டு இஸ்லாமிய இலக்கியப் பரிச்சயத்தோடு நீண்ட போராட்டம் நடத்தியிருக்கிறார் அவர்.

பல எழுத்தாளர்கள் எழுதுவதோடு தமது பணி முடிந்தது என்று நினைக்கும் நிலையில் ஷம்ஸ் அதற்கு மாற்றமானவர். அவர் தனது இளவயது முதல் இயக்க ரீதியாக பலரோடு சேர்ந்து செயற்பட்டு வந்துள்ளார். ஆசிரியராக தொழிற்சங்கவாதியாக இருந்தாலும் சரி அஷ்ஷரா, பாமிஸி, செய்திமடல் போன்றவற்றில் பணியாற்றிய போதும் சரி, தினகரனில் பணியாற்றிய போதும் சரி ஷம்ஸ் என்ற பெயர் பரிணமிக்கும் ஆசையுடன் அவர் செயற்பட்டது கிடையாது. அனைவரையும் வளர்த்து விடும் உயரிய கொள்கை அவருக்கு இருந்தது. தென்னிலங்கையின் கலை இலக்கியத் துறையில் தன்னிரற்ற நபராக இருந்தார் ஷம்ஸ்.

திக்குவல்லை கமால் தான் இவரை எனக்கு அறிமுகம் செய்தார். சுமார் 40 ஆண்டுகள் இவருடன் அவருடன் பரிச்சயம் இருந்தது. எழுத்தாளர்களாக மனித நேயத்தையும் தத்துவத்தையும் எழுதிக் கொண்டு உதாரண புருஷர்களாக உலகுக்குக் காட்டிக் கொண்டிருப்பதை விட செயலில் வாழ்ந்து காட்டுவதில் அவர் விசேடமானவர்.



ஆசிரியராக இருந்த காலத்தில் சிறந்த ஆசிரியராக மாணவர்களுக்கு நண்பராக புதிய விடயங்களை அறிமுகம் செய்து வைப்பார். இலங்கையில் பல பாகங்களில் அவர் கற்பித்துள்ளார். இன்றும் கூட அவர் அங்கு பேசப்படுகிறார். ஆசிரியராக இருந்த காலம் அவர் கற்பித்த பாடசாலைகளுக்கு பொற்காலமாக இருந்துள்ளது. அவர் எங்கு பணியாற்றினாலும் ஷம்ஸ் என்ற முத்திரை அங்கு நிச்சயம் பதியப்பட்டிருக்கும். பாடசாலை கல்விக்கு மேலதிகமாக மாணவர்களுக்கு இலக்கிய அறிவு, தமிழ் அறிவு என்பவற்றையும் அவர் புகட்டியது குறிப்பிடத்தக்கது.

தினகரனில் ஜவாத் மரைக்கார் தொகுத்து வழங்கிய குருபீடம், கல்விச்சுடர் ஆகிய வெளியீடுகள் மூலம் எனக்கு அவருடன் நெருங்கிய தொடர்பு உருவானது. 1998 முதல் 2002 வரை 5 வருடங்கள் அந்த உன்னதமான பணி முன்னெடுக்கப்பட்டது. 1964 தினபதி சஞ்சிகையில் இவ்வாறான பக்கம் பிரசுரமாகியது. பிரதான பத்திரிகையில் இத்தகைய முயற்சிக்கு அர்ப்பணித்தது வரவேற்கத்தக்கது. நான் அதிபராக இருந்த போது நானும் ஆக்கங்களை அனுப்பி பங்களித்திருக்கிறேன்.

நல்லிணக்கத்தை பற்றி பேசும் போதும் ஷம்ஸ் கட்டாயம் பேசப்பட வேண்டிய ஒருவர். 'வெண்புறாவே' பாடல் நீண்டகாலமாக உயிர்வாழும் பாடல். இன ஐக்கியத்தை பேணுவதற்கு அவர் செய்த பங்களிப்பை எடுத்துக் கூறுவதற்கு இந்த பாடல் ஒன்றே போதுமானது.

இனங்களுக்கிடையில் இணைப்புப் பாலமாக அவர் செயற்பட்டார். அவரின் பன்முக ஆளுமைகளில் மொழிபெயர்ப்பும் முக்கிய ஒரு துறை. தமிழில் நல்ல விடயங்களை சிங்களத்தில் வழங்கவும் சிங்களத்தில் நல்ல விடயங்களை தமிழில் வழங்கவும் அவர் வழங்கிய பங்களிப்பு முக்கியமானது. அவருக்கு சிங்கள மொழியிலும் நல்ல பரிச்சயம் இருந்தது.

ஷம்ஸ் அன்றாடம் போராட்ட வாழ்க்கை தான் வாழ்ந்து வந்தார். எதிர்ப்புகளுக்கு அவர் சாதுரியமாக பதில் கொடுத்தார். பெரும்பான்மையினரால் சமூகத்திற்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போது சரியான பதிலடி கொடுத்து வந்துள்ளார். எந்த அறிஞரும் செய்யாத பணியை ஷம்ஸ் செய்திருக்கிறார்.

இவருடைய படைப்புகளில் ஒருசிலவே புத்தகமாக வெளியாகியுள்ளன. மகாகவியும் தானும் குறும்பாவில் முன்னோடி என்று இவர் சொல்வார். அதில் எந்த சந்தேகமும் கிடையாது.

ஆனால் ஷம்ஸின் குறும்பா மிகவும் ரசிக்கத் தக்கதாகவும் ஹாஸ்யம் மிக்கதாகவும் இருக்கிறது. அவை புத்தகமாக வெளியிடப்படவேண்டும். இவரின் ஆய்வுகள் பெட்டகமாக வேண்டும் என்பதே எனது அவா.

(கடந்த வருடம் சூம் தொழில் நுட்பம் மூலம் இடம்பெற்ற எம்.எச்.எம்.ஷம்ஸ் நினைவேந்தல் நிகழ்வில் அன்பு ஜவஹர்ஷா முன்வைத்த கருத்துக்களின் தொகுப்பு)

அன்பு ஜவஹர்ஷா ...✍

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை வழங்கிய 'தியாகத்தென்றல்' ஹஜ்ஜுப் பெருநாள் கவியரங்கம்

ஒரு நேயரின் பார்வையில்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை வழங்கிய விசேட கவியரங்கம் 'தியாகத்தென்றல்' கடந்த 10 ஆம் திகதி தியாகத் திருநாள் ஹஜ்ஜுப் பெருநாளன்று முற்பகலில், ஒலிபரப்பாகியது.

காலை 11.00 மணிக்கு நிகழ்ச்சி ஒலிபரப்பாகும் என அறிவிக்கப்பட்டிருந்ததால், 11.00 மணியிலிருந்தே காத்திருந்தாலும், தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக முற்பகல் 11.45மணியளவில்தான் நிகழ்ச்சி ஒலிபரப்பு ஆரம்பமானது.

இலக்கியச் செம்மல், கலாபூஷணம், சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் தலைமையேற்று நடாத்திய இக்கவியரங்கில், கொழும்பு 12 'கலைக்கமல்' மஹ்தூம் ஜமால்தீன் (கொழும்பு மாவட்டம்), பேருவளை பாரிஹா பாருக் இம்தியாஸ் (களுத்துறை மாவட்டம்), பலகத்துறை அபூ சஹ்ஸத் சைலாஸ் (கம்பஹா மாவட்டம்), சாய்ந்தமருது சித்தி ஜெரீனா கரீம் (அம்பாறை மாவட்டம்), வெலிகம, மதுராப்புர எம். எச். எம். மின்ஹாஜி (மாத்தறை மாவட்டம்), உடதலவின்ன இல்ஹாம் ஜுனைதீன் (கண்டி மாவட்டம்) ஆகியோர் கலந்து கொண்டு கவிதைகள் பாடினர்.

தலைமைக் கவிஞர், இறையருட்பா பாடி ஆரம்பித்ததோடு, நிகழ்வின் சிறப்பினை முதலில் கவிதையிலேயே எடுத்துச் சொன்னார்.

அதில், இங்கு கவிதை பாடும் கவிஞர்கள் ஆறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் ஐவர் இதுவரை வானொலி கவியரங்கில் கவிதை பாடாதவர்கள் எனக் குறிப்பிட்டார்.

கவியரங்கினை நடாத்திய கவியுழவர் ரஷீத் எம். இம்தியாஸ் அவர்கள் முதலில் ஹஜ்ஜுப் பெருநாளின் சிறப்பினைத் தனக்கேயுரித்தான தனிப்பாணியில் எடுத்துச் சொநார்.

அதன்போது,

'வானுயரக் கொழுந்துவிட்டெரிந்த அந்த
நம்ருதின் கொடுந்தீயில் நின்றபோதும்
நெஞ்சுறுதியின் தினாவட்டு தளர்ந்திடாத
நபிநாதர் பற்றெமக்கு நல் பாடமன்றோ....
பாவப் பிசாசுகளைப் புவியில்
சுட்டெரித்து
பஸ்பமாக்கிடும் பலமெமக்குத்
தருமன்றோ'

எனக் குறிப்பிட்டவை, ஆழ்மனதில் ஆழப்பதியும் வண்ண வரிகளன்றோ...

ஒரே மூச்சில் தங்கள் கவிதைகளைக் கவிஞர்கள் வாசித்துச் செல்லாது, நேயர்கள் மனதில் கவிஞர்களை ஊடறுக்கும் வண்ணம் தலைவர், இரு கட்டங்களில் கவிதைகள் பாட வைத்திருந்த முறைமை மெச்சத் தக்கது என்பதுடன், விறுவிறுப்பையும் அதிகரிக்கச் செய்தது..

கவிதை பாடிய கவிஞர்களின் கவிதைகளில் சில வரிகளை இங்கு கோடிட்டுக் காட்டுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

தெள்ளுதமிழில் முதலில் கவிதை பாடினார் பலகத்துறை அபூ சஹ்ஸத் சைலாஸ். விருத்தம் போலும் இருந்த அவர் கவிதையின் பின்வரும் வரிகள் அவரது முழுக்கவிதையினதும் சந்தத்துடன் கூடிய முத்தாய்ப்பாய் இருந்தது.

'இந்நாளில் இம்மண்ணின் நம்சமூகம் படுகின்ற
அவலங்களை சொல்லாமல் இருந்திட்டால்
என்நாவு செய்திட்ட பாவம் என்றாகும்
அதனால்
சமகாலம் நாம்காணும் போராட்டம்
மனிதன் வாழ்ந்திடத் துடிக்கும் சமராகும்
எனச் சொல்லும் பெருநாளின் கொண்டாட்டம்
பசிக்காக கொடிபிடிக்கும் வறுமையின் திண்டாட்டம்'
மக்கத்து மண்ணின் புகழ்பாடும் இந்நாளில் உன்
பக்கத்து மனையின் நிலைபாரும் மனிதா
வெட்கத்தில் வாய்திறந்து கேட்கமுடியா நிலையில்
துக்கத்தில் துவளும் பட்டினி வயிறுகளை நிரப்பு நீ

அடுத்து, பாரிஹா பாருக் இம்தியாஸ் கவிதை பாடும்போது, சிந்திய வரிகளில் 'மீண்டும் ஹஜ் செய்வோருக்கான விண்ணப்பம்' மேலோங்கி இருந்தது. அவரது வரிகளெல்லாம் ஹாஜிகளுக்கு விண்ணப்பங்கள் கூறுவதாயும் அமைந்திருந்த்து.

'இங்கு சின்னம் சிறு சிறுசுகளை
காமுகக் கண்கொண்டு நோக்கும்
மனிதாபிமானமற்ற மனித சாத்தான்களை
மனித மிருகங்களை கல்லெறிந்துவிட்டு
ஷைத்தானுக்கு கல்லெறிய வேண்டும்'

என அவரது கவி வரிகள் ஆதங்கம் நிறைந்த வரிகளாய் இருந்ததன. சமகால நிகழ்வுகளை மனக்கண்முன் கொணர்ந்தன.

'கலைக்கமல்' மஹ்தூம் ஜமால்தீன் சந்ததக்கவி பாடும்போது, 'உம்மா இன்னும் ஞாபகம் இருக்கிறது எனக்கு' எனத் தொடங்கிய கவிதை வரிகள் ஹஜ்ஜின் மேன்மையை திறம்பட எடுத்துச் சொன்னது.

உம்மாவின் மக்கத்து ஏக்கம்
உண்டியல்கள் வீட்டில்
ஊதிப் பெருத்தன□..
அரபா ஆவல்□ தங்க வளையல்கள்
பணமாகி மகிழ்ந்தது□

என்று ஹஜ்ஜுக்கான ஓர் தாயின் தாகத்தைப் படம் பிடித்துக் காட்டியது. அவர் கவி வரிகளில் வரலாற்று உண்மை துல்லியமாய்த் தெரிந்தது.

கவிஞர் இல்ஹாம் ஜுனைதீனின் சந்தங்களோடு சிந்துபாடிய கவிதை ஆழ்மனதை

அப்படியே வருடிச் சென்றது என்பதே உண்மை. புல்லரித்துப் போகும் அவரது கவிதையின் முதல் வரியே 'ஹாஜரா உன் மகளுக்குச் சொல்லிக் கொடு' என்று இருந்தது.

இன்றைய ஹாஜராக்களுக்கான அவரது கவிதை அது. நவீனத்தில் துவண்டு போயுள்ள இளசுகளை கரைமீட்டுவதாய் கவிதை அமைந்திருந்தது. அவர் பாடுகிறார் இப்படி,

இயம்பி விடு
ஹாஜரா...
உன் மகனுக்கும்....
இவ்வுலகம் நிலையல்ல,
இனி வரும் மண்ணறைக்காய்
இஸ்லாமிய ஈடேற்றத்தை
இதயத்தில் நிரப்பி விடு!
இவ்வையகத்தில்
இன்றிவரோ
இல்லாத பொய் கூறி
செய்யாத செயல் வேண்டி
சொல்லாத பொய் இல்லை
பொல்லாத வாழ்க்கை இது,
பொறுக்காது வையகமும்,
இல்லாளைத் தேடிவரும்
வெறும் நையாண்டிக் கோளமிது!

தொடர்ந்து கவிதை சொன்னார் கவிஞர் எம்.எச்.எம். மின்ஹாஜி. ஹஜ்ஜின் தோற்றுவாயுடன் ஆரம்பமான அவரது கவிதை தற்கால அவலங்களைத் துல்லியமாய் எடுத்தியம்பின. சந்தத்துடன் கூடிய அவரது கவிதையில்,

தொட்டுச்சுவைத்திட உணவின்றி
தட்டுகள் நீட்டும் பட்டினிப்பிணி
வாட்டுதே எம் உயிரை ஓட்டுதே
அடுப்பங்கரைக் காளானும்

எத்தனை எத்தனை வீட்டில்.... என்ற வரிகள் மனங்கொள்ளத்தக்கன.

கவிஞர் சித்தி ஜெரீனா கரீம் அவர்கள் 'அன்னையின் தியாகம்' என்ற மகுடத்தில் கவிதை பாடிய அழகு மெச்சத்தக்கது. அவரது குரலோடு மக்கமா நகருக்கச் சென்றுவந்த நிலை... வறுமையினை விரட்டுவான் வேண்டி அவர் சொல்லும் வழிகள் ஏற்கத்தக்கன.

அவரது கவிதை இன்றைய தாய்க்குலத்திற்குப் பாடம் புகட்டுவதாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதோ சில வரிகள்,

சங்கையாய் நாம் வாழ
சந்தர்ப்பங்கள் பல உண்டு
கையில் இறைவேதம் கொண்டு
தர்மங்கள் பல வழங்கி
சாதனைகள் படைக்கலாம்
நல்ல செல்வங்களை
நலமோடு வளர்க்க
நன்மைகள் நாளும் அடைய
வல்லவன் அல்லாஹ்
நமக்களித்த திருக் குர்ஆன்
வாழ்ந்து காட்ட ஓர் சரித்திரம்
தினம் ஓது வழி பிறக்கும்

அனைத்துக் கவிஞர்களும் இரு பாகங்களாக தமது கவிதைகளை சமர்ப்பித்தனர். அவர்களை ஆரம்பத்திலும், இடையிலும் முடிவிலும் அழைத்து, விடைகொடுத்து, மீள அழைத்து, வழியனுப்பிய சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸின் கவி வரிகள் வசீகரமாய் அமைந்திருந்தன. அவர் தாது முடிவுரையில் இப்படிக் கூறினார்:

மக்கள் மகோன்னதராய் வாழ
மகான்கள் செய்யும் யாகம்
படைத்தோன் மகிழ்வை வென்று
பெற்றிடும் பெரும் யோகம்
உலகம் சிறந்திட நல்லோர்
உளமார செய்யுமுத் யோகம்
நாடும் வீடும் செழித்திட
நாமெல்லாம் செய்வோம் தியாகம்

மொத்தத்தில் தலைமைக்கவி சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் உட்பட எழுவரும் தந்த கவிதைகள் கன்னல் கவிகள் என்றால் மிகையல்ல.

இலை மறைகாயாகவுள்ள கவிஞர்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்து, சாலப்பணி செய்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபன முஸ்லிம் சேவை, பலரதும் வேண்டுகோளுக்கிணங்க, மின்சாரத்தடையைக் கருத்திற்கொண்டு மீண்டும் இந்நிகழ்ச்சியை அடுத்த நாள் திங்கட்கிழமை இரவே மறு ஒலிபரப்புச் செய்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக தயாரித்த எித்த ஏ. எம். முஹம்மது ரஸீம், நெறிப்படுத்திய பணிப்பாளர் பாத்திமா ரினூசியா ஜவ்பர் பாராட்டுக்குரியோரே. மொத்தத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை தந்த 'அருஞ்சுவை ஹஜ்ஜுப் பெருநாள் விருந்து' இத் 'தியாகத்தென்றல்' கவியரங்கம் என்றால் மிகையல்ல.

'தமிழ்ச்சுடர்'
கலைமகன் பைரூஸ் ...✍

மேஷம்

ஆனி 28ம் தேதி (12/07/2022) கடக ராசியில் புதன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தாய், கல்வி, சுகம் ஆகியவற்றிற்கான இடங்களில் சஞ்சரித்துள்ளார். ஆகவே இந்த இடங்களில் உள்ள தடைகள் மறையும். தாய்வழிப் பிரச்சினைகள் நீங்கும். வாகனம் வாங்க, கட்டிடம் கட்ட உத்தியோகத்தில் சலுகை கேட்டு விண்ணப்பித்திருந்தால் அது கிடைக்கும். கைவசம் இருந்த நிலம் மதிப்பு மிக்கதாக மாறும். அதிர்ஷ்ட திகதி ஜூலை 20, அதிர்ஷ்ட நிறம் நீலம்.

ரிஷபம்

ஆனி 28ம் திகதி (12/07/2022) கடக ராசியில் புதன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 2 ,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது குடும்ப ஒற்றுமை பலப்படும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். தடைப்பட்டு வந்த காரியங்கள் துரிதமாக நடைபெறும். வழக்குகள் சாதகமாக முடியும். வாழ்க்கை தேவைகள் படிப்படியாக பூர்த்தியாகும். பிள்ளைகள் வழியில் சுபச் செய்திகள் வந்து சேரும். அதிர்ஷ்ட திகதி 19, அதிர்ஷ்ட நிறம் பச்சை.

மிதுனம்

ஆனி 28ம் திகதி (12/07/2022) கடக ராசியில் புதன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிநாதனான புதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். குடும்பத்தில் இதுவரை தடைபட்ட காரியங்கள் இப்பொழுது துரிதமாகும். குடும்பத்தில் தேவையான அத்தியாவசிய பொருட்கள் வாங்கும் முயற்சி கைகூடும். அதிர்ஷ்ட திகதி ஜூலை 17, அதிர்ஷ்ட நிறம் செம்மஞ்சள்.

கடகம்

ஆனி 28ம் திகதி (12/07/2022) கடக ராசியில் புதன் சஞ்சரித்துள்ளார். விரையாதிபதி புதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விரயங்கள் கூடும். வீடு மாற்றம், நாடு மாற்றம், உத்தியோக மாற்றம், வாகன மாற்றம் உள்ளிட்ட மாற்றங்கள் வரும். அந்த மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். பயணங்கள் அதிகரிக்கும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். பிள்ளைகள் வழியில் சுப காரிய பேச்சுகள் கைகூடும். அதிர்ஷ்ட திகதி ஜூலை 17, அதிர்ஷ்டநிறம் கருநீலம்.

சிம்மம்

ஆனி 28ம் திகதி(12/07/2022) கடக ராசியில் புதன் சஞ்சரிக்கப் சஞ்சரித்து உள்ளார். உங்கள் இராசிக்கு தன லாபாதிபதி புதன் விரய ஸ்தானத்திற்கு வரும் பொழுது கொஞ்சம் விழிப்புணர்வோடு செயல்பட வேண்டும். நீண்ட நாட்களுக்குப் முன் தோன்றிய நோய் மீண்டும் தலைதூக்கும். செலவு அதிகரிக்கும். வெளிநாடு சென்றவர்கள் சொந்த ஊர் திரும்பும் சூழ்நிலை ஏற்படும். அதிர்ஷ்ட திகதி 18, அதிர்ஷ்ட நிறம் பிரவுன் .

கன்னி

ஆனி 28ம் திகதி (12/07/2022)கடக ராசியில் புதன் சஞ்சரிக்க உங்கள் ராசிக்கு அதிபதியான புதன் லாப ஸ்தானத்திற்கு வரும்பொழுது பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். உடன்பிறப்புகளின் வழியே இருந்த கோபங்கள் மாறும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் வாய்ப்பு உண்டு. வீடு, இடம் வாங்கும் யோகம் ஏற்படும். ஆரோக்கியம் சீராகும். வாங்கிய கடனை கொடுத்து மகிழ்வீர்கள். அதிர்ஷ்ட திகதி ஜூலை 18, அதிர்ஷ்ட நிறம் பச்சை .

துலாம்

ஆனி 28ம் திகதி (12/07/2022) கடக ராசியில் புதன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 9 ,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் தொழில் ஸ்தானம் எனப்படும் 10 ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பண வரவு திருப்தியாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும். வாழ்க்கை துணைக்கு வேலை கிடைத்து அதை முன்னிட்டு இடம் மாற்றம் வரலாம். அத்தியாவசிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அதிர்ஷ்ட திகதி ஜூலை 18, அதிர்ஷ்ட நிறம் இளஞ்சிவப்பு.

விருச்சிகம்

ஆனி மாதம் 28ம் திகதி(12/07/2022) கடக ராசியில் புதன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு விரயாதிபதி விளங்கும் புதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பார்கள். பெற்றோர் வழி பிரச்சினையை சமரசத்திற்கு வரும். மேலதிகாரிகள் கேட்ட சலுகைகளை கொடுக்க முன்வருவர். பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். அதிர்ஷ்ட திகதி ஜூலை 19, அதிர்ஷ்ட நிறம் ஊதா.

தனுசு

ஆனி 28ஆம் திகதி (12/07/2022) கடக ராசியில் புதன் சஞ்சரித்துள்ளார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் மறைவது யோகம்தான். தொழிலிலிருந்த குறுக்கீடுகள் அகலும். தொலைதூரத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்து இணையும் வாய்ப்பு உண்டு. சுபகாரியங்கள் நடைபெறும் நேரம் இது. அதிர்ஷ்ட திகதி ஜூலை 21, அதிர்ஷ்ட நிறம் மஞ்சள்.

மகரம்

ஆனி 28ஆம் திகதி (12/07/2022) கடக ராசியில் புதன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் ஆதாயம் தரும் தகவலை கொடுப்பர். எதிர்காலத்திற்காக சேமிக்க முன்வருவீர்கள். அதிர்ஷ்ட திகதி ஜூலை 22, அதிர்ஷ்ட நிறம் பச்சை.

கும்பம்

ஆடி 28ம் திகதி (12/07/2022) கடக ராசியில் புதன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் 6ம் இடத்திற்கு வரும் நேரம் "விபரீத ராஜ யோகம்" செயல்படும். எனவே திட்டமிடாத நல்ல காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சியை தரும். எதிரிகள் விலகுவார்கள். லாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சுய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவார்கள். அதிர்ஷ்ட திகதி ஜூலை 19, மகிழ்ச்சி அதிர்ஷ்ட நிறம் ரோஸ்.

மீனம்

ஆனி 28ஆம் திகதி (12/07/2022) கடக ராசியில் புதன் சஞ்சரித்துள்ளார். கல்வி ஸ்தானாதிபதி பஞ்சம ஸ்தானம் செல்லும்பொழுது பிள்ளைகளின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். அண்ணன் தம்பிகளுக்குள் பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். வாழ்க்கை துணைக்கு வேலை கிடைத்து வருமானம் பெறலாம். அதிர்ஷ்ட திகதி 18, அதிர்ஷ்ட நிறம் நீலம்.

பால்மா பற்றாக்குறையால் பசும்பாலுக்கு வரவேற்பு

பால் உற்பத்தியாளர் திருமதி கணேஷ் சந்திரா

தற்போது எமது நாட்டில் பால்மா வகைகளுக்கு பற்றாக்குறை காணப்படுவதோடு, அவற்றுக்கான விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து, எமது பொதுமக்கள் மத்தியில் பசுப்பாலுக்கான வரவேற்பு அதிகரித்துக் காணப்படுவதாக, வாழ்வாதாரத் தொழிலான பாலுற்பத்தியை மேற்கொண்டுவரும் திருமதி கணேஷ் சந்திரா தெரிவித்துள்ளார்.

அத்தோடு, பால்மா வகைகளின் பற்றாக்குறையைத் தொடர்ந்து, பசுப்பாலை நுகர்வோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துக் காணப்படுவதாகவும், இதனால் பசுப்பாலின் விலையும் சற்று அதிகரித்துள்ளதாகவும், அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளிக் கிராமத்தைச் சேர்ந்த 53 வயதுடைய சந்திரா என்பவர், தனது வீட்டில் பசு மாடுகளை பராமரித்து வருவதோடு, அவற்றின் மூலம் தனது குடும்ப வாழ்வாதாரத்துக்கான அன்றாட வருமானத்தையும் தேடி வருகின்றார்.

தனது குடும்ப நிலைமை பற்றியும் தனது வாழ்வாதாரத் தொழிலான பசு பராமரிப்பு பற்றியும் தினகரன் வாரமஞ்சரி வாசகர்களுடன் அவர் பகிர்ந்துகொள்கின்றார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூலித் தொழிலாளியான எனது கணவர், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு வந்திருந்ததோடு மாத்திரமின்றி, வீட்டில் பசு மாடுகளை பராமரிக்கும் தொழிலிலும் ஈடுபட்டு வந்திருந்தார். அவரது பசு மாடுகளை பராமரிக்கும் தொழிலுக்கு நானும் ஒத்தாசையாக இருந்து வந்திருந்தேன். இவ்வாறிருந்து வகையில், எனது கணவர் திடீரென கால் மூட்டுவலி நோயால் பாதிக்கப்பட்டதோடு, அவரால் பாரிய வேலைகளைச் செய்ய முடியாமல் போனது.

அவ்வேளையில் 6 பெண் பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு நான் செய்யப் போகின்றேன் என்று தடுமாறவில்லை. மாறாக, தைரியத்தை வரவழைத்துக்கொண்டு எமது குடும்ப வாழ்வாதாரத்துக்கான வருமானத்தை தேடும் வழி பற்றி சிந்திக்கத் தொடங்கினேன். இந்நிலையில் எனது கணவர் செய்துவந்த பசு மாடுகளை பராமரிக்கும் தொழிலை நான் பொறுப்பேற்று செய்யத் தொடங்கியதோடு, அத்தொழிலின் மூலம் எமது குடும்ப வாழ்வாதாரத்துக்கான வருமானத்தையும் தேடி வருகின்றேன். இந்நிலையில், எமது 6 பெண் பிள்ளைகளில் 3 பெண் பிள்ளைகளை, அவர்களது மணவாழ்க்கையில் கரை சேர்த்துள்ளோம். இன்னும் 3 பெண் பிள்ளைகள் எம்மோடு உள்ளனர். அம் மூன்று பெண் பிள்ளைகளில் ஒருவர் பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு வீட்டோடு இருப்பதோடு, ஏனைய 2 பெண் பிள்ளைகளில் ஒருவர் 10ஆம் தரத்திலும் மற்றையவர் 9ஆம் தரத்திலும் கல்வி பயின்று வருகின்றார்கள். இம்மூன்று பெண் பிள்ளைகளினதும் எதிர்கால வாழ்க்கையே எனது தற்போதைய கனவாகும் என்கின்றார் அவர்.

எமது கிராமத்தில் நான் மாத்திரமின்றி ஏனையோரும் பசுக்களை பராமரிக்கும் தொழிலை செய்து வருகின்றார்கள். இந்நிலையில், தற்போது எம்மிடம் சுமார் 15 முதல் 20 பசுக்கள் உள்ளதோடு, அவற்றை எமது வீட்டில் வைத்து பராமரித்து வருகின்றேன். அப்பசுக்களிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 10 முதல் 15 லீற்றர்வரை பால் கறப்பதோடு, அப்பசுப்பாலை எமது ஊரில் உள்ளவர்களுக்கு அவர்களது தேவைக்கேற்ப விற்பனை செய்து வருகின்றேன். எமது ஊரிலுள்ளவர்களுக்கு விற்பனை செய்து எஞ்சிய பசுப்பாலை பண்ணையொன்றுக்கு விற்பனை செய்து வருகின்றேன்.

மேலும், குறித்த பண்ணைக்கு எமது வீட்டிலுள்ள பசுக்களின் மூலம் பெறப்படும் பால் மாத்திரமின்றி, பசுக்களை பராமரிக்கும் அயலவர்களிடமிருந்தும் பசுப்பாலை விலைக்கு வாங்கி பண்ணைக்கு விற்பனை செய்து வருகின்றேன். இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு எமது குடும்ப வாழ்வாதாரத்துக்கான செலவைச் சமாளிப்பதுடன், அப்பசுக்களுக்கு தேவையான தவிடு உள்ளிட்ட தீவனத்தையும் கொள்வனவு செய்து வருகின்றேன்.

எனது பசு பராமரிப்பின் மூலம் கிடைக்கும் வருமானமானது, எமது குடும்பச் செலவைச் சமாளிப்பதற்கு மட்டுமட்டாகத்தான் இருக்கின்றது. இருந்தபோதிலும் 'போதும் என்ற மனமே பொன் செய்யும்' என்ற பழமொழிக்கு அமைய கிடைக்கும் அவ்வருமானத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, எமது செலவுகளை மட்டுப்படுத்தி அடிப்படைத் தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்து வருகின்றேன் என்கின்றார் அவர்.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில், பால்மா வகைகளுக்கு காணப்படும் பற்றாக்குறை மற்றும் அவற்றுக்கான விலை அதிகரிப்புக் காரணமாக எம்மிடம் பசுப்பாலை கொள்வனவு செய்யும் நுகர்வோரும்; அதிகரித்துக் காணப்படுவதோடு, பசுப்பாலுக்கான கேள்வியும் அதிகரித்து வருகின்றது. அத்தோடு, பசுப்பாலின் விலையும் சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்நிலையில், எம்மிடம் பசுப்பால் விலைக்கு வாங்குவதற்காக நுகர்வோர் வந்த வண்ணமுள்ளனர். பசுப்பாலுக்கான தற்போதைய விலை அதிகரிப்பினால், எமது வருமானமும் சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது என்றே கூற வேண்டும் என்கின்றார் அவர்.

நான் தினமும் அதிகாலை சுமார் 3 மணிக்கு எழுந்து எனது வீட்டுக் கடமைகளை கவனிப்பதோடு, பசுக்களுக்கும் உணவு இடுவேன்.

அதன் பின்னர் பசுப்பாலை கறந்து ஒவ்வொரு வீடு, வீடாகக் கொண்டு போய்க் கொடுப்பதோடு, பண்ணைக்கும் பசுப்பாலை வழங்குவேன். பண்ணையைச் சேர்ந்தவர்கள், அவர்களாகவே எமது வீடு தேடி வந்து பசுப்பாலை பெற்றுச் செல்கின்றார்கள். குறித்த பண்ணைக்கு தினமும் 20 முதல் 25 லீற்றர்வரை பசுப்பால் விநியோகித்து வருகின்றேன் என்கின்றார் அவர்.

காலை 8 மணிக்குள் அனைத்து வீடுகளுக்கும் கொண்டு சென்று பசுப்பால் விநியோகித்து முடித்து விடுவேன். அதன் பின்னர் எஞ்சிய வீட்டு வேலைகளைக் கவனிப்பேன். வீட்டு வேலைகளுடன் பசுக்களை பராமரிப்பது எனக்கு சிரமமாகத் தெரியவில்லை. வீட்டு வேலை, பசுப் பராமரிப்பு ஆகிய இவ்விரு வேலைகளிலும் நேர முகாமைத்துவம் செய்வது எனக்கு ஒரு பிரச்சினையாக காணப்படவில்லை என்கின்றார் அவர்.

நான் தினமும் அதிகாலை சுமார் 3 மணிக்கு எழுந்து எனது வீட்டுக் கடமைகளை கவனிப்பதோடு, பசுக்களுக்கும் உணவு இடுவேன். அதன் பின்னர் பசுப்பாலை கறந்து ஒவ்வொரு வீடு, வீடாகக் கொண்டு போய்க் கொடுப்பதோடு, பண்ணைக்கும் பசுப்பாலை வழங்குவேன். பண்ணையைச் சேர்ந்தவர்கள், அவர்களாகவே எமது வீடு தேடி வந்து பசுப்பாலை பெற்றுச் செல்கின்றார்கள்.

தற்போது மேய்ச்சல்தரை பிரச்சினை பாரிய பிரச்சினையாக காணப்படுவதால், அப்பசுக்களுக்கு இயற்கையான, ஆரோக்கியமான மற்றும் போதியளவான உணவு கிடைப்பதில் கூட பாரிய சிக்கல் காணப்படுகின்றது. இருந்தபோதிலும், வாயில்லா பிராணிகளாகிய பசுக்களுக்கு எந்தக்குறையும் வைக்கக்கூடாது என்பதால், புல் காணப்படும் இடங்களாகத் தேடிக்கொண்டு, பசுக்களை நான் தினமும் மேய்ச்சலுக்கு கொண்டு செல்வேன்.

என்னதான் நாம் பசுக்களுக்கு தவிடு உள்ளிட்ட தீவனத்தை உணவாகக் கொடுத்தாலும், இயற்கையான புல் பூண்டுகளை உண்பதை போன்று வராதல்லவா. இயற்கையான, ஆரோக்கியமான உணவை பசுக்கள் உட்கொள்ளும் பட்சத்திலேயே, அப்பசுக்களும் ஆரோக்கியமாக இருக்குமென்பதோடு, அவற்றின்; மூலம் கிடைக்கும் பசுப்பாலும் சிறந்ததாக, சுவையானதாக இருக்கும் என்கின்றார் அவர்.

பசு மாடுகளை பராமரிக்கும் தொழிலானது புனிதத்தன்மை கொண்ட வரப்பிரசாதமான தொழிலாகும். ஆகையால், அத்தொழிலை நானும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு செய்து வருகின்றேன்.

அதனால்தான் என்னவோ, பசுக்களின் புனிதத்தை பேணிப் பாதுகாக்கும் வகையில், கோவில்களில் கூட பசுக்களை பராமரித்து வருவதோடு, கோவில்களுக்கு வரும் பக்தர்கள், அப்பசுக்களுக்கு உணவளித்து புண்ணியத்தை தேடும் வகையிலான வாய்ப்பையும் கோவில் உபயகாரர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள்.

வாயில்லா ஜீவன்களுக்கு உணவளிப்பது, அவற்றை பேணிப் பராமரிப்பது உன்னதமான சேவையாகும். வாயில்லா ஜீவன்களுக்கு அவ்வாறான உன்னதமான சேவையை செய்வதற்கான வாய்ப்பு எனது தொழிலோடு சேர்ந்து இயற்கையாகவே கிட்டியுள்ளது.

இதையிட்டு மிகவும் பெருமையடைகின்றேன் என்கின்றார் அவர்.

ஆர்.சுகந்தினி...✍

விண்வெளி ஆய்வுத் துறையில்... (06ஆம் பக்கத் தொடர்)

அணுசக்தி, விண்வெளி, பாதுகாப்பு ஆகிய துறைகளில் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இந்தியா இணைந்து செயல்பட்டு வருகிறது. இந்த வருடத்தில் விண்வெளிக்கு 3 இந்திய விண்வெளி வீரர்களை அனுப்பி வைக்கும் 'ககன்யான்' திட்டத்திலும் பிரான்ஸ் பணியாற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

2025ஆம் ஆண்டுக்கான தொலைதூர திட்டங்களை இஸ்ரோ வகுத்துள்ளது. எதிர்வரும் காலத்தில் இந்திய விண்வெளித்துறையில் அரிய சாதனைகளை உலகம் எதிர்பார்க்க முடியுமென்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

எதிர்வரும் காலங்களில் சந்திராயன் 3, எக்ஸ்ரே போலாரிமீட்டர் செய்மதி, ஆதித்யா எல்1, சுகன்யான், வீனஸ் ஓர்பிட்டர், டிஷா ஏரோனாமி மிஷன்ஸ் மற்றும் லூனார் போலார் எக்ஸ்ப்ரோரேஷன் போன்ற திட்டங்களை இஸ்ரோ செயல்படுத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை மட்டுமில்லாமல் சந்திராயன்1 இன் டேட்டா யுட்டிலைசேசன் கீழ் 17 திட்டங்களையும், மார்ஸ் ஓபிர்ட்டர் மிஷன் திட்டத்தின் கீழ் 28 புதிய திட்டங்களையும் இஸ்ரோ விஞ்ஞானிகள் வகுத்துள்ளனர். ஓஸ்ட்ரோசாட் டேட்டாவின் கீழ் 12 திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

செலவு, நேரம் மற்றும் அபாயத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக விண்வெளி அறிவியல் மற்றும் ஆராய்ச்சியில் 55 நாடுகளுடனும் ஐந்து பலதரப்பு அமைப்புகளுடனும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. விண்வெளி அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடுகளில் RNDயை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள், ஆராய்ச்சி அனுசரணை செய்யப்பட்ட திட்டங்கள், விண்வெளி தொழில்நுட்பம் ஐ.ஐ.டி, ஐ.ஐ.எஸ்.சி மற்றும் எஸ்.பி.பி.யு, புனே, பிரீமியர் நிறுவனங்களின் செல், விண்வெளிக்கான பிராந்திய கல்வி நிலையங்கள் ஆகியவற்றை (ஆர்.ஏ.சி) கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, மத்திய மற்றும் வட கிழக்கு பகுதிகளில் உள்ள முக்கிய பல்கலைக்கழகங்களில் நிறுவ பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

வேற்றுமையிலும் ஒற்றுமை கொண்ட மக்கள் வாழ்கின்ற நாடாக இந்திய தேசம் விளங்வதாலேயே இவ்வாறான வெற்றிகரமான திட்டங்கள் சாத்தியமாகின்றன. விண்வெளி ஆய்வுத்துறையில் இந்தியா எதிர்காலத்தில் உலக நாடுகளையே பின்தள்ளியபடி முன்னேறுவது உறுதி என்கிறார்கள் அந்நாட்டின் விண்வெளித்துறை சார்ந்த அறிவியலாளர்கள்.

தொல்பொருள் அடையாளச் சின்னங்களுக்கு... (06ஆம் பக்கத் தொடர்)

சபாநாயகரின் இல்லம் பாராளுமன்றத்துக்கு மிகவும் அருகில் அமைந்திருப்பதால் ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்றத்துக்குள் நுழைந்து விடுவார்கள் என்ற அச்சமும் காணப்பட்டது. அவ்வாறான தேவையற்ற முயற்சிகள் போராட்டத்தை முற்றுமுழுதாக தோல்வியடையச் செய்துவிடும் எனப் பல்வேறு தரப்பினரும் அறிவித்தனர். அத்துடன், ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் போன்ற பொதுச் சொத்துக்களை கையகப்படுத்தி வைத்திருப்பதானது சுமுகமான பதவிமாற்றத்துக்கு இடமளிக்காது. இவற்றை மீண்டும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது, தேவையற்ற பதற்றங்களை உருவாக்கினால் தாம் வழங்கி வரும் முழுமையான ஒத்துழைப்பை இடைநிறுத்த வேண்டி வரும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் அறிவித்திருந்தது.

ஒருசிலரின் செயற்பாடுகளால் போராட்டம் திசைமாறிப் பயணிப்பதற்கு எத்தனிக்கப்பட்டிருந்த போதும், காலிமுகத்திடலில் உள்ள கோட்டா கோகம ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது அகிம்சைப் போராட்டத்தில் உறுதியாக நின்றனர். இதன் வெளிப்பாடாக ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றை மீண்டும் பாதுகாப்புத் தரப்பினரிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தனர். அங்கு காணப்பட்ட குப்பைகள் அகற்றப்பட்டு கட்டடங்கள் பாதுகாப்பான முறையில் ஒப்படைக்கப்பட்டன. இது இவ்விதமிருக்க, மக்கள் போராட்டம் என்ற ரீதியில் முக்கிய ஸ்தானங்களுக்குள் புகுந்து அங்குள்ளவர்களை அச்சுறுத்தி தேவையற்ற செயற்பாடுகளை மேற்கொள்வது ஏற்புடையதாக இருக்காது. ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சுயாதீனத் தொலைக்காட்சி வலையமைப்புக்களுக்குள் நுழைந்து குழப்பம் விளைவித்தமையையும் இங்கு குறிப்பிடலாம். எனவே, இதுபோன்ற செயற்பாடுகளைத் தவிர்த்து மேற்கொள்ளப்படும் போராட்டங்களுக்கே மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கும் என்பதே அமைதியை விரும்புகின்ற மக்களின் எண்ணமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 20

01	02	03	04	■	05
06	■	07	■	08	09
■	10	■	11	■	12
■	13	■	14	15	16
17	18	19	20	■	■
21	22	■	23	24	25

பெயர் .....
வகுப்பு .....
தொலைபேசி இல .....
பாடசாலை பெயர் .....
வதிவிட முகவரி .....
.....
....
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(01) இப்பறவை பறப்பதில்லை. ஆனால் பெரும் உருவம் கொண்ட இப்பறவை, உலகிலேயே மிகவும் வேகமாக ஓடக் கூடிய பறவையாகும்.
(08) மாணவர்களாகிய உங்களுக்கு கல்வி புகட்டுபவர் இவர்.
(14) மலையூற்றுகளில் உற்பத்தியாகி, பெருக்கெடுத்தோடி, கிராமங்களையெல்லாம் வளமாக்கி, இறுதியில் கடலுடன் சங்கமமாகும் நீர்நிலை.
(17) காயவைத்து நீர் அகற்றப்பட்டு, பதப்படுத்தப்பட்ட மீன். பழுதடையாமல் பாதுகாத்து வைத்திருக்கலாம்.
(21) தாவரங்களில் ஒளித்தொகுப்புக்கு அவசியமான பச்சையத்தைக் கொண்டுள்ள பிரதான பகுதி இது. (தலைகீழான சொல்)
(23) வெட்டுவதற்குப் பயன்படுத்துகின்ற கூரிய உபகரணம் இது. அவதானமாகக் கையாள வேண்டும். இல்லையேல் கையைப் பதம் பார்த்து விடும்.

மேலிருந்து கீழ்

(01) மனிதர்களுக்கு அல்லது பிராணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எவராவது புரிகின்ற தீங்கான காரியங்கள் அனைத்தையும் இவ்வாறு குறிப்பிடலாம்.
(03) நீண்ட காலமாக மழை பெய்யாத வரண்ட காலப்பகுதியை இவ்வாறு கூறுவர்.
(05) நாம் சமையலுக்குப் பயன்படுத்துகின்ற காய்கறியைத் தருகின்ற மரம் இது. தடி போன்று நீளமான காய்கள் காய்க்கின்ற மரம். இதன் இலை கீரையாகப் பயன்படுத்தப்படுகின்றது.
(10) வெளிச்சம் தருவதற்கு ஒளிமுதல் இல்லாவிடின் எங்கும் இவ்வாறுதான் காணப்படும். (தலைகீழான சொல்)
(11) குறித்த தரிப்பிடங்களில் மாத்திரம் நிறுத்தப்பட்டு, விரைவாகப் பயணம் செய்கின்ற பேருந்து, புகையிரதம் போன்றவற்றை இவ்வாறு குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(17) மான்களில் இது ஆண் இனம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 19

விடைகள்

இடமிருந்து வலம்

(01) எரிபொருள் (08) தேன் (10) அமைதி
(16) புலி (18) மின்னல் (23) அணை

மேலிருந்து கீழ்

(01) எள் (03) பொறாமை (05) தேள்
(09) புதன் (10) அம்மி (16) அல்லி
(19) கோன்

குறுக்கெழுத்துப் போட்டி இல: 18

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு
சு. யகஸ்வினி,
தரம் 08 A, தி/தி/ கலைமகள் மகா வித்தியாலயம்,
975, அம்பாள் வீதி, அன்புவழிபுரம், திருகோணமலை.

இரண்டாம் பரிசு
லுக்மான் மின்ஹாஜ்,
தரம் 07 மாத்தளை ஸாஹிரா தேசிய பாடசாலை,
42B, போர்சலின் பிளேஸ், வறக்காமுறை,
உக்குவளை.

மூன்றாம் பரிசு
எம்.ஏ.எம். உமர்,
தரம் 06E, கே/ஸாஹிரா தேசிய பாடசாலை,
78, தக்கியா வீதி, மாவனல்ல.

பாராட்டு பெறுவோர்

1. அனீஸ் முகம்மது ராபித்,
தரம் 11, அல் அமான் மு.ம.ம.வி.,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

2. நாதிர் நூரி,
தரம் 09, அல் அஸ்ஹர் மகா வித்தியாலயம்,
திஹாரி.

3. எம்.ஆர். ஸாரா,
தரம் 09, மாறை/அல் மினா ம.வி.,
41, படபத்தை, மீயல்லை, ஹக்மனை.

4. பக்மா,
தரம் 08, பென்ஹில் கல்லூரி,
12/22A, இலவத்துர, கம்பளை.

5. எம்.ஏ.எப். அலீனா,
தரம் 07 B, க/பதிஉத்தீன் மகளிர் வித்தியாலயம்,
98A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 20
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

குறளமுதம் :

இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாயின் அதுஒப்பது இல்.

தெளிவுரை :
யாரிடத்திலும் எக்காலத்திலும் மறந்தும் சோர்ந்திருக்காத தன்மை தவறாமல் பொருந்தியிருக்குமானால், அதற்கு ஒப்பான நன்மை வேறொன்று இல்லை.

கல்வியின் சிறப்பு

கற்றவர்கள் எப்போதும் சமூகத்தில் உயர்ந்த இடத்திலேயே மதிக்கப்படுகின்றனர். ஒருவரிடம் எவ்வளவுதான் செல்வங்கள் கொட்டிக் கிடந்தாலும் கல்விச் செல்வம் இல்லையேல் அவரிடம் உள்ள ஏனைய செல்வங்களுக்கு மதிப்பில்லை.

ஒருவரிடம் எவ்வளவு பணம் இருந்தாலும் அதனை கணக்கு வைத்துக் கொள்ளவும், நல்ல காரியத்திற்கு பயன்படுத்தவும் கல்வி அறிவு மிக அவசியமாக கொள்ளப்படுகின்றது. ஒரு வீட்டில் உள்ள வறுமையை போக்கவும், நாட்டை அபிவிருத்தி செய்யவும் கல்வியறிவு மிகவும் முக்கியம்.

சிறந்த கல்வி ஒரு மனிதனை உயர்ந்த இடத்திற்கு இட்டுச் செல்லும். இந்த உலகத்தில் கல்வியால் உயர்ந்தவர்கள் பலரை உதாரணமாக குறிப்பிடலாம்.

அவர்களுள் டாக்டர் அப்துல்கலாம், அரிஸ்டோட்டில், அம்பேத்கர், ஆபிரகாம் லிங்கன், பிளாட்டோ மற்றும் சாக்கிரட்டீஸ் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவார்.

உலகின் முதலாவது தத்துவஞானியாக போற்றப்படும் சாக்கிரட்டீஸ், அவர் நஞ்சூட்டப்படும் வரை புத்தகங்களை படித்துக் கொண்டுதான் இருந்திருக்கிறார். அவர் கற்ற கல்விதான் அவரை அறிவியலாளராக மாற்றியது.

அப்துல் கலாம் சிறுவயதில் இருந்தே கல்வி மேல் கொண்ட ஆர்வம் தான் அவரை விஞ்ஞானியாக உருவாக்கி, உலகம் போற்றும் மனிதராக மாற்றியது.

கல்வி ஒரு மனிதனை முழுமையானவன் ஆக்குகின்றது. கல்வியானது கள்வர்களால் திருட முடியாத, நிலையாக வாழ்க்கை முழுவதும் தொடர கூடிய ஒரு செல்வமாகும்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்கின்றது ஆத்திசூடி. அதாவது இளமையில் கல்வியை நன்றாக கற்கும்போது அக்கல்வியானது நம்மை உயரிய இடத்திற்கு இட்டுச் செல்லும். உயர்ந்த பதவிகளை பெற்றுத் தரும்.

ஒருவர் சிறந்த கல்வியைப் பெற்று உயர்ந்த பதவிகளை பெறும்போது பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அவரது வாழ்க்கைத்தரம் உயர்வடைகின்றது.

"கற்க கசடற கற்றவை கற்ற பின் நிற்க அதற்கு தக" என்கின்றுது திருக்குறள். நாம் வெறுமனே கல்வியை கற்றல் மட்டும் போதுமானது அல்ல. கற்ற கல்விற்கேற்ப வாழ்க்கையில் நாம் ஒழுக வேண்டும். நாம் பெற்ற கல்வியை அனைவருடனும் பகிர்ந்து மற்றவர்களும் வாழ வழிவகை செய்யவேண்டும். கல்வியினை பெறுதல் ஒவ்வொருவரினதும் பிறப்புரிமை ஆகும்.

அந்த கல்வியை மேம்போக்காக கற்காமல் அதிக சிரத்தை எடுத்து கற்றால் மாத்திரமே வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய முடியும். எனவே கல்வியை ஐயம் திரிபுற கற்று சீரும் சிறப்புமாக வாழ்வோமாக!

வினோ மதிவதனி,
லுணுகலை.

விடுகதைகள்

- காலைக்கடிக்கும் செருப்பல்ல காவல் காக்கும் நாயல்ல அது என்ன? **முள்**
- காலில்லா பந்தலைக் காணக் காண சந்தோசம் அது என்ன? **வானம்**
- கையுண்டு கழுத்துண்டு தலையுண்டு உயிரில்லை அது என்ன? **சட்டை**
- சொன்னதைச் சொல்லும் பொண்ணுக்கு பச்சைப் பாவாடை கேட்குதாம் அது என்ன? **கிளி**
- தண்ணீரில் மிதக்குது கட்டழகிய வீடுகள் அது என்ன? **கப்பல்கள்**
- மணல் வெளியில் ஓடுது தண்ணீர் கேட்காத கப்பல் அது என்ன? **ஒட்டகம்**
- சிவப்பான பெட்டிக்குள் கருகு மணி முத்துக்கள் அது என்ன? **பப்பாளி விதைகள்**
- நடக்கத் தெரியாதவன் நட்டுவனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்? **கைகாட்டி**
- நடலாம் பிடுங்க முடியாது அது என்ன? **பச்சை குத்துதல்**
- நான் வெட்டுப்பட்டால் வெட்டியவனை அழவைப்பேன் நான் யார்? **வெங்காயம்**
- நடைக்கு உவமை நளனக்கு தூதுவன் அவன் யார்? **அன்னம்**
- சின்னத் தம்பிக்கு தொப்பியே வினை அது என்ன? **தீக்குச்சி**
- தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும் அது என்ன? **தபால் தலை**
- உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான் அவன் யார்? **கடல் அலை**
- காற்று வீசும் அழகான மரம் அது என்ன? **சாமரம்**
- கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான் அது என்ன? **வெங்காயம்**
- எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள் அவள் யார்? **செல்பேசி**

நி. இலக்கியாநாட்சி,
கொ/சைவமங்கையர் மகளிர் வித்தியாலயம்,
கொழும்பு 06.

காக்கையாரே!

கா... கா... என்றே கரைகின்றாய்
காலையில் சகவரை கவர்கின்றாய்
கரிய நிறமாக இருந்தாலும்
காரியம் பலவும் புரிகின்றாய்

ஆகாயத்தோட்டி என்கின்றார்
அழுக்கை குறைப்பாய் என சொல்வார்
சகாயமாக வாழ்ந்திடவே
சான்றுபகர்வாய் என்கின்றார்

ஒற்றுமை உந்தன் உயிர்நாடி
உறவுகள் வருதலை கூறுவாய் கூடி
நற்றுணையாகவே வாழ்கின்றாய்
நண்பனைப் போல் தான் இருக்கின்றாய்

விரதம் இருப்போர் தேடிடுவார்
வீட்டிற்கு வா என அழைத்திடுவார்
குயிலின் முட்டையை அடைகாத்து
குஞ்சு பொரிப்பது நீ யன்றோ!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

உங்கள் சிந்தனைக்கு!

*மிகப் பெரிய நல்லநாள் / **இன்று***
*மிகப் பெரிய வெகுமதி / **மன்னிப்பு***
*மிகவும் வேண்டாதது / **வெறுப்பு***
*கீழ்த்தரமான விடயம் / **பொறாமை***
*நழுவவிடக் கூடாதது / **வாய்ப்பு***
*உயர்வுக்கு வழி / **உழைப்பு***
*செய்ய வேண்டியது / **விவாதம்***
*செய்யக்கூடாதது / **உபதேசம்***

கே.எல். ஹில்மி,
தேசிய பாடசாலை,
சம்மாந்துறை.

கண்டுபிடிப்புகளும் அறிஞர்களும்

- **மின்காந்தக் கொள்கை** / மாக்ஸ்வெல் எலக்ட்ரான் / J.J.தாம்சன்
- **மின்பல்பு** / தாமஸ் ஆல்வா எடிசன்
- **ஆக்ஸிஜன்**, நைட்ரஸ் ஆக்ஸைடு / J.B.பிரீஸ்ட்லி
- **ஈர்ப்பு விதி** / நியூட்டன்
- **பெனிசிலின்** / சர் அலெக்சாண்டர் பிளெமிங் கோள்களின் இயக்க விதி / கெப்ளர்
- **சூரியக் குடும்பம்** / கோபர் நிகஸ்
- **தனிம வரிசை** அட்டவணை / மெண்டலீஃப் நீராவி எஞ்சின் / ஜேம்ஸ் வாட்
- **புவிஈர்ப்புவிசை** / சேர் ஐசக் நியூட்டன்
- **சுருக்கெழுத்து** / சேர் ஐசக் பிட்மேன்
- **கதிரியக்கம்** / ஹென்றி பெக்குரல்
- **ரேடார்** / சர் ராபர்ட் வாட்சன் வாட்
- **செல்** / ராபர்ட் ஹூக்
- **தொலைபேசி** / கிரகாம்பெல்
- **மக்கள்தொகை கோட்பாடு** / மால்தஸ்
- **ஜெட் விமானம்** / ஃபிராங்க்விட்டில்
- **குருடர்களுக்கான எழுத்துமுறை** / லூயி பிரெய்லி
- **தொலைகாட்சி** / J. L. பெயர்டு
- **அம்மை தடுப்பூசி** / எட்வர்டு ஜென்னர்
- **போலியோ தடுப்பு மருந்து** / டாக்டர்.ஜோன்ஸ் சால்க்
- **டைனமைட்** / ஆல்பர்ட் நோபல்
- **இன்சுலின்** / பேண்டிங்
- **இதயமாற்று அறுவை சிகிச்சை** / டாக்டர் கிறிஸ்டியன் பெர்னார்ட் (இதயமாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்டவர் P.K. சென்)
- **இரத்த ஒட்டம்** வில்லியம் / ஹார்லி
- **குளோரோஃபார்ம்** / ஹாரிஸன் சிம்ப்ஸன்
- **வெறிநாய்க்கடி மருந்து** / லூயி பாய்ஸ்டியர்
- **எலக்ட்ரோ கார்டியோகிராம்** / எயின் தோவன்
- **பக்டீரியா** / லீவன் ஹூக்
- **குவாண்டம் கொள்கை** / மாக்ஸ் பிளாங்க்
- **எக்ஸ்ரே** / ராண்ட்ஜன்
- **புரோட்டான்** / ரூதர்போர்டு
- **நியூட்ரான்** / ஜேம்ஸ் சாட்விக்
- **தெர்மா மீட்டர்** / ஃபாரன்ஹூட்
- **ரேடியோ** / மார்கோனி
- **கார்** / கார்ல் பென்ஸ்
- **குளிர்சாதனப் பெட்டி** / ஜேம்ஸ் ஹாரிசன்
- **அணுகுண்டு** / ஆட்டோஹான்
- **ரேடியம், ரேடியோ கதிர்வீச்சு** / மேடம் மேரி கியூரி
- **ஹெலிகாப்டர்** / பிராக்கெட்
- **லாக்ரதம்** / ஜான் நேப்பியர்

சுஸ்மிதன் ஆனந்தன்,
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,
நோர்வூட்.

இவ்வார மழலை

சிறோன் / செந்தூரி ,
கொட்டகலை.

எச். அக்சிப்,
தரம் 07A, அல் அமீர் வித்தியாலயம்,
சம்மாந்துறை.

ஜெ. நித்திஷ்,
தரம் 06, கில்பேர்ட் ஆங்கில பாடசாலை,
வத்தளை.

ஷேன் முரளி,
தரம் 06, இரத்தினபுரி கலைமகள் தமிழ் வித்தியாலயம்,
இரத்தினபுரி.

வி.நேஹா,
தரம் 04, எம்.டி. குணசேன சர்வதேச பாடசாலை,
கொழும்பு.

மஞ்சரி விளையாட்டு

யுபுன் அபேகோனுக்கு அனுசரணை வழங்குகின்றது இலங்கை கிரிக்கெட்

அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக நன்கொடை வழங்கியது இலங்கை கிரிக்கெட்.

தடகள வீரர் யுபுன் அபேகோனுக்கு வருடாந்தம் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான அனுசரணையினை இரண்டு வருடங்களுக்கு வழங்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளது. இதற்கமைய யுபுன் அபேகோனுக்கு இரண்டு வருடங்களுக்கு அனுசரணையாக ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளன. இலங்கை கிரிக்கெட் நிறுவனம் கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை மற்றும் அபேக்ஷா வைத்தியசாலைக்கு நிதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க இந்த விடயத்தினைக் குறிப்பிட்டார்.

சவாட் சர்வதேச குத்துச்சண்டையில் வடக்கின் டிலக்சினிக்கு தங்கம்

திருகோணமலை குறூப் நிருபர்

பாகிஸ்தானில் நடைபெற்ற சவாட் சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் வவுனியாவைச் சேர்ந்த டிலக்சினி கந்தசாமி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

பாகிஸ்தானில் அண்மையில் நிறைவுடைந்த 3ஆவது சவாட் (sawad International Boxing Tournament) சர்வதேச குத்துசண்டைப் போட்டியில் இலங்கையிலிருந்து 4 வீரர்களும் 9 வீராங்கனைகளும் என 13 போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

இதில் ஒன்பது பேர் தங்கப் பதக்கங்களையும், நான்கு பேர் வெள்ளிப் பதக்கங்களையும் வென்றனர். குறித்த போட்டியில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குகொண்ட வவுனியாவைச் சேர்ந்த டிலக்சினி கந்தசாமி தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் கஷ்டங்களுகு மத்தியிலும் தனது விடாமுயற்சியாலும், தொடர் பயிற்சியாலும் தங்கப் பதக்கத்தினை வென்று சர்வதேசத்தில் தமிழ் பேசுகின்ற வீரர்களாலும் சாதிக்க முடியும், இலங்கைக்கு பெருமை சேர்க்க முடியும் என்பதை டிலக்சினி நிரூபித்துக் காட்டியுள்ளார்.

மேலும் மாகாண, தேசிய ரீதியிலான போட்டிகளில் பங்குகொண்டு பல பதக்கங்களை வென்றுள்ள இவர், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விளையாட்டு விஞ்ஞான மற்றும் முகாமைத்துவ மாணவியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் பங்கேற்பதை புறக்கணித்த சாரங்கி சில்வா

பெண்களுக்கான நீளம் பாய்தலில் தேசிய சம்பியனான சாரங்கி சில்வா, இம்மாதம் 15ஆம் திகதி அமெரிக்காவின் ஒரிகனில் ஆரம்பமாகவுள்ள உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரிற்கு தகுதி பெற்றுள்ளார். இதன்மூலம் உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் நீளம் பாய்தல் போட்டி நிகழ்ச்சிக்கு தகுதி பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமையை அவர் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக பெண்களுக்கான நீளம் பாய்தல் உலக தரவரிசையின்படி உலக சம்பியன்ஷிப்பிற்கு தகுதி பெறும் வாய்ப்பை ஒருசில புள்ளிகளால் அவர் தவறவிட்டார், ஆனால், அதன்பிறகு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பின்னர் முதல் 32 வீராங்கனைகளுக்குள் மீண்டும் இடம்பிடித்துள்ளார். இதனையடுத்தே அவருக்கு உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷப்பிற்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

இம்மாத இறுதியில் இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கு தயாராகும் நோக்கில் உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் இருந்து விலகுவதற்கு அவர் தீர்மானித்துள்ளார்.

பொதுநலவாய விளையாட்டு விழாவில் பதக்கம் வெல்லும் முனைப்பில் உள்ள சாரங்கி, குறித்த விளையாட்டு விழாவை இலக்காகக் கொண்டு மேலதிக பயிற்சிகளுக்காக இந்த வார இறுதியில் துருக்கி செல்ல உள்ளார். இதன்போது அவரது தனிப்பட்ட பயிற்சியாளரும் அவருடன் துருக்கி செல்லவுள்ளதாக இலங்கை மெய்வல்லுநர் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒலிம்பிக்கை அடுத்து உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் பங்குபற்ற வேண்டும் என்பது தான் அனைத்து மெய்வல்லுநர் விளையாட்டு வீரர்களின் கனவாகும்.

அவ்வாறு உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடருக்கு தகுதி பெற்ற பின்னர், இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கைக்கு பதக்கமொன்றை வென்று கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் சாரங்கி சில்வா எடுத்த இந்த முடிவு மிகவும் பாராட்டத்தக்கது.

இம்முறை உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கையில் இருந்து மூன்று வீரர்கள் பங்குபற்றவுள்ளனர். இதில் ஆண்களுக்கான 100 மீற்றரில் யுபுன் அபேகோன், பெண்களுக்கான 800 மீற்றரில் கயன்திகா அபேரட்ன மற்றும் பெண்களுக்கான 3 ஆயிரம் மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் நிலானி இரத்நாயக்க ஆகியோர் இலங்கை சார்பில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லங்கா பிரீமியர் லீக் 2022;

ஏலத்தில் வாங்கப்பட்ட வீரர்கள் விபரம்

3 ஆவது தடவையாக நடைபெறவுள்ள லங்கா பிரீமியர் லீக் (LPL) தொடருக்கான வீரர்கள் வரைவு கடந்த (05) நடைபெற்று முடிந்தது.

நடைபெற்றுமுடிந்த இந்த வீரர்கள் வரைவில், சர்தேச கிரிக்கெட்டில் ரி 20 போட்டிகளில் பிரகாசித்துவரும் பல முன்னணி வீரர்கள் அணிகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான டி'ஆர்சி ஷோர்ட் (தம்புள்ள ஜயண்ட்ஸ்), தென்னாபிரிக்காவின் டுவைன் பிரிட்டோரியர்ஸ் (கொழும்பு ஸ்டார்ஸ்), மேற்கிந்திய தீவுகளின் எவின் லுவிஸ் (ஜப்னா கிங்ஸ்) மற்றும் கார்லோஸ் பிராத்வைட் (கண்டி பெல்கன்ஸ்) ஆகியோருடன் பாகிஸ்தான் வீரர் இமாட் வசீம் (கோல் கிளேடியேட்டர்ஸ்) போன்ற முன்னணி ரி 20 வீரர்கள் இண்டெர்நெசனல் ரூபி பிரிவிலிருந்து இணைக்கப்பட்டனர்.

இலங்கை ரூபி பிரிவிலிருந்து தசுன் ஷானக (தம்புள்ள ஜயண்ட்ஸ்), அஞ்செலோ மெதிவ்ஸ் (கொழும்பு ஸ்டார்ஸ்), திசர பெரேரா (ஜப்னா கிங்ஸ்), வனிந்து ஹஸரங்க (கண்டி பெல்கன்ஸ்) மற்றும் தனுஷ்க குணதிலக்க (கோல் கிளேடியேட்டர்ஸ்) ஆகியோர் அணிகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை தவிர்த்து சர்வதேச ரி 20 கிரிக்கெட்டில் பிரகாசித்துவரும் சந்தீப் லமச்சனே, டொமினிக் டார்க்ஸ், சொஹைப் மலிக், அன்ரே பிளச்சர் மற்றும் ஜெனமன் மலான், நியூசிலாந்தின் டிம் செய்பர்ட், IPL தொடரில் கவனத்தை ஈர்த்திருந்த ஏபி டி வில்லியர்ஸ் பாணியில் துடுப்பெடுத்தாடும் டெவால்ட் பிரேவிஸ் மற்றும் பென் கட்டிங் ஆகிய வீரர்கள் இன்றைய வரைவின் மூலம் அணிகளால் வாங்கப்பட்டிருந்தனர்.

சர்வதேச ரி 20 கிரிக்கெட்டில் பிரபலமான வீரர்கள் தொடரில் இணைக்கப்படாவிட்டாலும், ரி 20 கிரிக்கெட்டில் தங்களுக்கென அடையாளத்தை உருவாக்கிவரும் முன்னணி வீரர்கள் இம்முறை தொடரில் பங்கேற்கவுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட்டில் பிரபலமான வீரர்கள் பலர் அணிகளில் இணைக்கப்படாத நிலையில், இலங்கையின் முன்னணி வீரர்கள் பலரும் நடைபெற்றுமுடிந்த வீரர்கள் வரைவில் வாய்ப்பை இழந்துள்ளனர்.

குறிப்பாக ஐசிசி ரி 20 துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் இலங்கை சார்பில் முன்னிலையில் உள்ள பெதும் நிஸ்ஸங்கவை எந்த அணிகளும் வாங்குவதற்கு முன்வரவில்லை. இவருடன் குசல் பெரேரா (உபாதை), அவிஷ்க பெர்னாண்டோ (உபாதை), ஓஷத பெர்னாண்டோ, லஹிரு மதுஷங்க, அகில தனன்ஜய, லஹிரு குமார, கசுன் ராஜித மற்றும் அசித பெர்னாண்டோ ஆகியோரையும் எந்த அணிகளும் வாங்குவதற்கு முன்வரவில்லை.

இதேவேளை, இளம் வீரர்களை பொருத்தவரை தமிழ்பேசும் வீரர்களான விஜயகாந்த் வியாஸ்காந்த், சகலதுறை வீரர் தெய்வேந்திரம் டினோஷன் மற்றும் சுழல் பந்துவீச்சாளர் தீஷன் விதுசன் ஆகியோர் ஜப்னா கிங்ஸ் அணிக்காக வாங்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் லசித் மாலிங்க பாணியில் பந்துவீசும் மதீஷ பதிரண, நவோத் பரனவிதான, கெவின் கொத்திகொட, டில்ஷான் மதுஷங்க, மொவின் சுபசிங்க, அவிஷ்க பெரேரா, லக்ஷித மானசிங்க, நிபுன் தனன்ஜய, திலும் சுதீர, கலன பெரேரா மற்றும் லக்ஷான் கமகே போன்ற பல இளம் வீரர்களுக்கு இம்முறை லங்கா பிரீமியர் லீக் தொடரில் வாய்ப்பு கிடைத்துள்ளது.

மூன்றாவது தடவையாக ஆரம்பிக்கவுள்ள லங்கா பிரீமியர் லீக் தொடர் இம்மாதம் 31ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. தொடரின் ஆரம்பக்கட்ட போட்டிகள் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளதுடன், பிற்பகுதி போட்டிகள் ஹம்பாந்தோட்டை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீரர்களுக்கான ஒப்பந்தத்தொகையின் முழு விபரம்

இந்த வீரர்கள் வரைவின்படி இண்டெர்நெசனல் ரூபி பிரிவில் உள்ளடங்கும் வீரர்கள் மற்றும் இலங்கை ரூபி பிரிவில் உள்ளடங்கும் வீரர்களுக்கு 60 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும் என்பதுடன், இண்டெர்நெசனல் ஷெப்பீர் மற்றும் இலங்கை ஷெப்பீர் பிரிவுகளை சேர்ந்த வீரர்களுக்கு 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் ஒப்பந்த தொகையாக வழங்கப்படும்.

இண்டர்நெசனல் டயமண்ட் ஏ, பி பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள வீரர்களுக்கு முறையே 40 ஆயிரம் மற்றும் 25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படுவதோடு, இலங்கை டயமண்ட் ஏ, பி பிரிவுகளில் உள்ள வீரர்களுக்கும் முறையே 40 மற்றும் 25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை இண்டெர்நெசனல் பிளட்டினம் மற்றும் இலங்கை பிளட்டினம் பிரிவுகளை சேர்ந்த வீரர்களுக்கு 15 ஆயிரம் அமெரிக்க டொலர்களும், இலங்கை கோல்ட் பிரிவில் உள்ள வீரர்களுக்கு 10 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளன. அதுமாத்திரமின்றி இலங்கை சில்வர் 1, 2, 3 மற்றும் 4 பிரிவுகளில் உள்ள வீரர்களுக்கு 3000 அமெரிக்க டொலர்கள் வீதம் ஒப்பந்தத்தொகையாக வழங்கப்படும்.

அணிகளில் இணைக்கப்பட்ட வீரர்களின் முழு விபரம்

தம்புள்ள ஜயண்ட்ஸ்

வீரர்கள் வரைவுக்கு முன்னர் இணைக்கப்பட்ட வீரர்கள்

தசுன் ஷானக, பானுக ராஜபக்ஷ, ரமேஷ் மெண்டிஸ், பென் கட்டிங், நுவான் பிரதீப், தரிந்து ரத்நாயக்க, டி ஆர்ஷி ஷோர்ட், சதுரங்க டி சில்வா

வீரர்கள் வரைவின் மூலம் இணைக்கப்பட்ட வீரர்கள்

சந்தீப் லமச்சானே, டிம் செய்பர்ட், ஹய்டர் அலி, ஷெல்டன் கொட்ரல், பிரமோத் மதுசான், லசித் குரூஸ் புள்ளே, கலன பெரேரா, டிலும் சுதீர, சச்சித்த ஜயலத், துஷான் ஹேமந்த, சஷா டி எல்விஸ், ருவிந்து பெர்னாண்டோ

கொழும்பு ஸ்டார்ஸ்

வீரர்கள் வரைவுக்கு முன்னர் இணைக்கப்பட்ட வீரர்கள்

அஞ்செலோ மெதிவ்ஸ், தினேஷ் சந்திமால், சரித் அசலங்க, ஜெப்ரி வெண்டர்சே, சீகுகே பிரசன்ன, நிரோஷன் டிக்வெல்ல, டுவைன் பிரிட்டோரியர்ஸ், ஆசிப் அலி, நவீன் உல் ஹக், கரீம் ஜெனட்

வீரர்கள் வரைவின் மூலம் இணைக்கப்பட்ட வீரர்கள்

டொமினிக் டார்க்ஸ், பஷல்ஹக் பரூக்கி, தனன்ஜய லக்ஷான், இசான் ஜயரத்ன, முதித லக்ஷான், லக்ஷித மானசிங்க, கெவின் கொத்திகொட, சதுரங்க குமார, நவோத் பரனவிதாரன, சமோத் பட்டாகே

ஜப்னா கிங்ஸ்

வீரர்கள் வரைவுக்கு முன்னர் இணைக்கப்பட்ட வீரர்கள்

திசர பெரேரா, சொஹைப் மலிக், தனன்ஜய டி சில்வா, மஹீஷ் தீக்ஷன, துனித் வெல்லாலகே, அஷான் ரந்திக, பிரவீன் ஜயவிக்ரம, ரஹ்மானுல்லாஹ் குர்பாஸ், ஹர்டஸ் வில்ஜியோன், எவின் லிவிஸ்

வீரர்கள் வரைவின் மூலம் இணைக்கப்பட்ட வீரர்கள்

ஷஹ்னவாஸ் டஹானி, பினுர பெர்னாண்டோ, டிரிஷ்டன் ஸ்டப்ஸ், சுமிந்த லக்ஷான், சதீர சமரவிக்ரம, டில்ஷான் மதுசங்க, நிபுன் தனன்ஜய, விஜயகாந்த் வியாஸ்காந்த், தீஷன் விதுசன், தெய்வேந்திரம் டினோசன்

கண்டி பெல்கோன்ஸ்

வீரர்கள் வரைவுக்கு முன்னர் இணைக்கப்பட்ட வீரர்கள்

வனிந்து ஹஸரங்க, சாமிக்க கருணாரத்ன, கமிந்து மெண்டிஸ், கார்லோஸ் பிராத்வைட்

வீரர்கள் வரைவின் மூலம் இணைக்கப்பட்ட வீரர்கள்

பெபியன் எலன், அன்ரே பிளச்சர், இசுரு உதான, டேவால்ட் பிரேவிஸ், மதீஷ பதிரண, அஷேன் பண்டார, உஸ்மான் ஷின்வாரி, அஷான் பிரியன்ஜன், மினோத் பானுக, அவிஷ்க பெரேரா, அஷைன் டேனியல், மலிந்த புஷ்பகுமார, ஜனித் லியனகே, லசித் அபேரத்ன, கெவின் பண்டார

கோல் கிளேடியேட்டர்ஸ்

வீரர்கள் வரைவுக்கு முன்னர் இணைக்கப்பட்ட வீரர்கள்

தனுஷ்க குணதிலக்க, சர்பராஸ் அஹ்மட், குசல் மெண்டிஸ், புலின தரங்க, பஹீம் அஷ்ரப், துஷ்மந்த சமீர, லக்ஷான் சந்தகன், நுவான் துஷார, இமாட் வசீம்

வீரர்கள் வரைவின் மூலம் இணைக்கப்பட்ட வீரர்கள்

ஜெனமன் மலான், ஷெப்புன் ரதபோர்ட், அசாம் கான், நுவனிந்து பெர்னாண்டோ, நிமேஷ் விமுக்தி, மொவின் சுபாசிங்க, நிபுன் மாலிங்க, சச்சிந்து கொலம்பகே, லக்ஷான் கமகே, தரிந்து கௌஷால், சம்மு அஷான்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்

2022 ஜூலை 17 ஞாயிற்றுக்கிழமை

வரலாற்றைப் புரட்டிப்போடும் 'கோபெக்லி டெபே'

கிழக்குத் துருக்கியில் இருக்கும் ஒரு வரலாற்றுக்கு முந்திய தலம், நாம் இதுவரை தெரிந்திருந்த மனித வரலாறு, நாகரிகம் பற்றிய அனைத்துக் கதைகளையும் புரட்டிப்போடுவது போல் இருக்கிறது. உர்பா நகருக்கு அருகிலுள்ள சுண்ணாம்பு பீடபூமியின் மேல் 'கோபெக்லி டெபே' என்று துருக்கியில் அழைக்கப்படும் மலை உச்சியில் கல் தூண்கள் இருக்கின்றன. இவை நாம் அறிந்த வரலாற்று கட்டுமானங்களை விடவும் பழையவை.

இங்கு 20 அடி உயரமுள்ள ஆங்கில எழுத்தான U வடிவிலான கல்தூண்கள் 200க்கும் மேல் உள்ளன. இவை வட்டவடிவில் அமைக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 20 வட்டங்கள் இங்கு உள்ளன. கற்தூண்களில் காளை, நரி, கொக்கு, காட்டுப் பன்றி போன்றவற்றின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஒரு குலக்குறிக் கம்பமும் உள்ளது. இதில் என்ன இருக்கிறது? வழக்கமான ஒரு பண்டைய தலம் என்று நினைத்துவிட வேண்டாம். இது நாம் நினைக்கும் பண்டைய தலங்களை விடவும் பழசு.

அதாவது எகிப்து பிரமிட் காலம் தோன்றியதை விடவும் கோபெக்லி டெபே 7000 ஆண்டு பழைமையானது. தற்காலத்துடன் பார்த்தால் இந்த தலம் சுமார் 12,000 ஆண்டுகள் பழையது. இது மனிதன் சக்கரத்தைக் கண்டுபிடித்தது, விவசாயம் செய்ய ஆரம்பித்தது அல்லது கருவிகளைக் கண்டுபிடிப்பதற்கு முந்தியது. மனிதன் ஓர் இடத்தில் தங்கி விவசாயம் செய்ய ஆரம்பித்தபோதே நாகரிம் தோன்றியதாக வரலாறு சொல்கிறது. ஆனால் அதற்கு முன்னரே வேட்டையாடும் மனிதர்களால் இத்தனை பிரமாண்டமாக கட்டுமானம் ஒன்று உருவாக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே இதுவரை தெரிந்த வரலாற்றையே பொய்யாக்குவதாக இருக்கிறது. அதாவது கோபெக்லி டெபே தலம் தான் உலகின் மிகப்பழைமையான கட்டுமானம் என்று நம்பப்படுகிறது. அப்படி என்றால் மனிதன் எப்போது நாகரிகம் அடைந்தான்?

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

இறந்தும் வென்றவர்

பிரான்க் ஹெயஸ் இருபத்து இரண்டு வயதான குதிரையோட்ட வீரர். ஆனால் எந்த குதிரையோட்டப் போட்டியிலும் அதுவரை வெற்றி பெற்றிருக்கவில்லை. உண்மையில் அவர் குதிரையோட்ட பயிற்சியாளர் மற்றும் தொழுவக்காரராகவே வேலை செய்து வந்தார்.

நியுயோர்க்கில் உள்ள பெல்மொன்ட் பூங்க, குதிரைப் பந்தயத் திடலில் 1923 ஜுன் 4ஆம் திகதி இடம்பெற்ற குதிரையோட்டப்போட்டியில் ஹெயஸும் பங்கேற்றார். அன்றைய தினம் எப்போதையும் விட அவரது குதிரை நன்றாக ஓடியது. அனைத்து குதிரைகளையும் பின்னுக்குத் தள்ளி வெற்றியும் பெற்றது. ஆனால் குதிரை மேலிருந்து ஹெயிஸோ அசைவு எதுவும் இன்றி காணப்பட்டார். போய்ப் பார்த்தபோது தான் அவர் உயிரிழந்திருப்பது தெரிந்தது. ஓட்டப்பந்தயத்தின் பாதி வழியிலேயே ஹெயஸ் மாரடைப்பால் உயிரிழந்திருக்கிறார்.

ஓட்டப் பந்தயத்தில் உயிரிழந்தும் வெற்றி பெற்றவர் என்று இன்றும் அவர் நினைவுகூரப்படுகிறார்.

மனித நூலகம்

புத்தகங்களை படிப்பதற்கல்ல மனிதர்களைப் படிக்கும் நூலகங்களும் உலகில் இருக்கின்றன. ஆதாவது இவ்வாறான நூலகங்களுக்குச் சென்றால் அங்கே புத்தகங்கள் இருக்காது, அதற்கு பதில் மனிதர்கள் தான் இருப்பார்கள். எமக்கு அவர்களின் கதையை கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும். இதற்காக 'மனித நூலகம்' என்ற சர்வதேச அமைப்பே இருக்கிறது. 2000 ஆம் ஆண்டு டென்மார்க்கின் கோப்பன்ஹேகன் நகரில் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. சந்திக்காத மக்களின் தப்பெண்ணங்களை போக்க உதவும் வகையில் இந்த நூலகம் அமைந்திருக்கிறது. இந்த நூலகத்திற்கு செல்பவர்களுக்கு புத்தகங்களுக்கு பதில் மனிதர்களை வாடகைக்குப் பெறலாம். இந்த மனிதர்கள் தப்பெண்ணத்திற்கு ஆளானவர்கள், சமூக புறக்கணிப்புக்கு உள்ளானவர்கள் அல்லது இழிவு நிலைக்கு முகம்கொடுத்தவர்களாக இருப்பார்கள். நூலகத்திற்கு வருபவர்கள் அவர்களிடம் கேள்விகளைக் கேட்டு அவர்களின் தப்பெண்ணங்களை போக்கவும், அடுத்தவர்கள் பற்றிய புரிதலை பெறவும் முடியும்.

மனித நூலக அமைப்பு 80 நாடுகளில் இயங்கி வருகின்றன. உலகில் ஒருசில நிரந்தர மனித நூலகங்கள் இருந்தபோதும் போரும்பாலானவை நிகழ்ச்சிகளாகவே ஏற்பாடு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு மனிதனும் ஒரு புதிய புத்தகம் என்று சும்மவா சொன்னார்கள்!

ஆபத்தில் ஓர் அழகு

வீதிக்கு குறுக்கால் ரயில் தண்டவாளம் இருப்பது வழக்கமானது. ஆனால் விமான ஓடுபாதைக்கு குறுக்கால் தண்டவாளம் இருந்தால் எப்படி இருக்கும்? அப்படி ஒரு விமானநிலையம் நியூசிலாந்தில் இருக்கிறது.

கிப்போன் நகரில் இருக்கும் விமானநிலையத்தின் நடுவால் ரயில் செல்வது பார்க்கப் பயங்கரமாக இருந்தலும், ரயிலும், விமானமும் ஒரு சேர செல்வதைப் பார்க்க அழகாகத்தான் இருக்கிறது. உலகில் இப்படி ஒரு விமானநிலையம் நியூசிலாந்தில் மாத்திரம் தான் இருக்கும். ஆனால் ரயில் போகும் வரை பஸ் காத்திருக்கும், விமானம் காத்திருக்குமா? என்று தான் தெரியவில்லை.

இதுவரையில் நிகழ்ந்த பயங்கர பூகம்பம்

உலகில் அதிக உயிரிழப்பு ஏற்பட்ட பூகம்பம் நிகழ்ந்தது வடக்கு சீனாவின் சான்சி மாகாணத்தில். சரியாக 1556 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி அந்தப் பயங்கர அதிர்வு நிகழ்ந்தது. 8 ரிச்டர் அளவில் பதிவான அந்த பூகம்பம் பூமியை ஊஞ்சலாடச் செய்தது. இதில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை கிட்டத்தட்ட 830,000. அதவது சீனாவின் இரு மாகாணங்களின் மக்கள் தொகை 60 வீதம் குறைந்துவிட்டதாம்.

இந்த பூகம்பம் பற்றி சீன வரலாற்றுப் பதிவில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, "1556 குளிர்காலத்தில் ஏற்பட்ட பூகம்பம் ஷான்சி மற்றும் ஷன்சி மாகாணங்களில் பேரழிவை ஏற்படுத்தியது. எமது ஹுவா பிராந்தியத்தில் பல துரதிருஷ்டமான நிகழ்வுகள் இடம்பெற்றன. மலைகள் மற்றும் நதிகள் இடம்மாறியதோடு வீதிகள் அழிந்தன. சில இடங்களில், தரை திடீரென்று மேலெழுந்து புதிய குன்றுகள் உருவாகின அல்லது அது திடீரென அமிழ்ந்து புதிய பள்ளத்தாக்குகளாக மாறின. ஏனைய பகுதிகளில், நொடிப்பொழுதில் ஓடைகள் வெடித்து நீர் பீரிட்டுப் பாய்ந்தது அல்லது பூமி வெடித்து பள்ளங்கள் உருவாகின. கூடாரங்கள், உத்தியோக பூர்வ இல்லங்கள், கோயில்கள் மற்றும் நகர சுவர்கள் திடீரேன்று இடிந்து விழுந்தன."

வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய பூங்காவன உற்சவத்தில் வீரமுனை திருஞானசம்பந்தர் அறநெறிப் பாடசாலை அதிபர் ரகுபதி ஆசிரியர் ஆசிரியை திருமதி ஜெயா, நடன ஆசிரியை செல்வி அனுஜா பாஸ்கரன் பரதாஞ்சலி நடனப்பள்ளி ஆசிரியை திருமதி கோகுல ரஜினி டிசாந்தன் உட்பட்ட 12 ஆசியர்களுக்கும் 150 மாணவர்களுக்கும் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் கௌரவ பாராட்டுப் பத்திரமும் ஞாபகார்த்த சின்னமும் வழங்கினார். நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு குருபீடாதிபதி சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்குவதையும் நிர்வாக சபையினரையும் படங்களில் காணலாம்.

குதூகலமான குடும்பம்

கிஷான்தி, தன்வந்திரி , கிருஷ்ணசாமி, சௌமியா , பவித்ரா

புதுமணத் தம்பதிகள்

அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்த செல்வப்பிரகாஷ் வேதிதா தம்பதிகளுக்கு இனிய திருமண வாழ்த்துகள் - தேற்றாத்தீவு ஸிந்தூரன்

செல்ஃபி உலா

Ravindran Deniyaya

Sathyendra Sathya

Logesh

குறும்பா, ஹைக்கூ லிமரிக்கூ, தன்முனைக் கவிதைகள்: சில அறிமுகக் குறிப்புகள்

குறும்பா, ஹைக்கூ லிமரிக்கூ, தன்முனைக் கவிதைகள்: சில அறிமுகக் குறிப்புகள்:

மேற்குறிப்பிட்ட பாக்கள் தமிழ்ப் பாவடிங்களுக்குள் அடங்குவன் அல்ல. ஆயினும், தமிழில் "வரவுப் பாவடிவ"ங்களாக இவை வந்து சேர்ந்துள்ளன.

குறும்பா (Limerick)

குறுகியதும் குறும்பு தருவதுமான பா குறும்பா. Edward lier ஐ தந்தையாகக் கொண்ட,அயர்லாந்து நாட்டுக்குரியதாகக் கொள்ளப்படுகின்ற Limerick என்ற பாவடிவமே இலங்கைக் கவிஞர் மஹாகவி து.உருத்திரமூர்த்தி அவர்களால் தமிழுக்கு குறும்பா வாக அறிமுகம் செய்யப்பட்டது.

மஹாகவி தமிழுக்கு கொண்டு வந்த குறும்பா வடிவத்தின் வரைபுச் சட்டகம்,

காய் காய் தேமா
காய் காய்
காய் காய்
காய் காய் தேமா என்பதாகும்.

குறும்பா ஒரே எதுகையுடைய மூன்று அடிகளில் அமையும் என்பதும், முதலாம் அடியின் மூன்றாம் ஆறாம் சீர்களும், மூன்றாம் அடியின் இறுதிச்சீரும் இயைபுத் தொடை பெற்றிருக்கும் என்பதும் மஹாகவியின் குறும்பா நூல் முன்னீட்டில் எஸ்.பொ. தருகின்ற குறிப்பு. ஓசை ஊறுபடாமல் காய்ச்சீருக்கு பதிலாக விளம் வருவதையும், வெண்சீர் வெண்டளைக்கு பதிலாக இயற்சீர் வெண்டளை வருவதையும் அவரின் முன்னீடு அனுமதிக்கும்.மஹாகவியின் குறும்பா 3 அடிகளைக் கொண்டது என்ற போதிலும் 5 வரிகளில் அமைந்திருக்கும்.

முதலாம் அடி, இரண்டு வரிகளில்,
இரண்டாம் அடி உட்சாய்ந்து,இரண்டு வரிகளில்,
மூன்றாம் அடி, முதலாம் அடிக்கு நேராக அமையும். 13 சீர்களில் அது அமையும்.எடுத்துக் காட்டாக அவ்வரைபுச் சட்டகத்தில் 13 சீர்களில் அமைந்த மஹாகவியின் குறும்பா இது.

முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்துநின்றான் காலன்
சத்தமின்றி,வந்தவனின்
கைத்தலத்தில் பத்துமுத்தைப்
பொத்திவைத்தான் போனான்முச் சூலன்!
(மஹாகவி)

இதேவரைபுச்சட்டகத்தில்
இன்னுமொரு குறும்பா.
பிள்ளைகளில் அவர்க்கதிகம் பற்று
பெருமளவில் சேர்த்தாராம் சொத்து
பிள்ளைகளோ சண்டையிட்டுப்
பிரித்தனராம் தனித்தனியாய்
உள்ளதெலாம் வேறாக்கி விற்று!
லிமரிக் என்ற ஆங்கில வடிவத்தில்
குறும்பாவின் 3ம் 4ம்
வரிகளிலும் இயைபுத் தொடை பேணப்படும்.
அப்படி அமைந்த குறும்பா இது.
காதலனைக் கன்னியெதிர் பார்த்து
கால்கடுக்க நின்றிருந்தாள் காத்து
காதலனோ லேற்று
காலமதோ வேஸ்ற்று
சென்றுவிட்டாள் நின்ற
வன்கை கோத்து!

(தொடரும்)

பாலமுனை பாறூக்..

கன்னியரை காதல் வசப்படுத்தும் கழு குமாரயா

இன்றைய நவீன உலகில் நாளுக்கு நாள் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி வெகுவாக வளர்ந்துவிட்ட போதிலும் கண்ணுக்கு புலப்படாத ஏதோ சில அசாதாரண அமானுஷ்ய சக்திகள் எமது பின்னணி இயங்கி வருவதாக நம்மில் அநேகமானோர் இன்றும் நம்பி வருகின்றனர்.

இத்தகைய நம்பிக்கைகளை விஞ்ஞான ரீதியாக அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளாத போதிலும் சாதாரண மக்கள் மத்தியில் மேலோங்கி வளர ஆங்காங்கே அவ்வப்போது இடம்பெறும் சில விஞ்ஞான அறிவியலுக்கு அப்பாற்பட்ட அமானுஷ்ய நிகழ்வுகளும் ஒரு காரணம் எனலாம். இலங்கையில் பெரும்பாலும் சிங்கள கிராமப்புற பாமர மக்களிடையே மட்டுமின்றி அனைவராலும் தொன்றுதொட்டு மரபு ரீதியாக நிலவிவரும் "கழுக் குமாரயா தோஷய" எனப்படும் "கருப்பு இளவரசனின்" யக்ஷ தோஷம் மிகவும் விசித்திரமானது.

இரத்தச் சிவப்பு வஸ்திரத்தில் விசாலமான கறுத்த உடலமைபுடன் ஜன நடமாட்டம் இல்லாத முச்சந்திகள், பாலங்கள், அடர் வனப் பகுதிகள், மைதானம், பூங்கா, சேனை குடிசைகள், வயல் வெளிகள் சுடுகாடு மற்றும் குறிப்பாக பெண்கள் குளிக்கும் ஆற்றங்கரை, குளக்கரை, பொது கிணறுகள் போன்ற இடங்களில் தன்னந்தனியாக நடமாடும் அல்லது குளிக்கும் கன்னிப் பெண்களும் திருமணமான இளம் பெண்களும் களுக்குமாரயக்ஷயாவின் பார்வைக்கு அதிக அளவில் இலக்காவதாக நம்பப்படுகின்றது.

களுக்குமார(கருப்பர்) தோஷம் அல்லது தனிமை தோஷம் என்பது குழந்தை பருவத்தை கடந்து பருவமடைந்த இளம் பெண்களின் மனதில் அடிக்கடி எழும் இனம்புரியாத ஒரு வகையான காம இச்சைக்கு இந்த கருப்பரின் பார்வையே காரணமாக இருக்கலாம் என பெரும்பானும் கிராமிய மக்களிடையே நம்பிக்கை நிலவி வருகிறது.

இவ்வாறு கருப்பரின் தாக்குதலுக்கு உள்ளான கன்னிப் பெண்களை மீட்டெக்கும் வகையில் "கட்டடி" எனப்படும் மந்திரவாதிகளால் பல்வேறு சாந்திகர்ம பேயோட்ட பூஜைகள் நடத்தப்படும்.

இதன் போது இவ்வாறான கன்னிப் பெண்கள் திருமணத்திற்கு முன்னரே கன்னி கழித்தால் இப்பிரச்சினையில் இருந்து விடுபடலாம் என்றொரு மூடநம்பிக்கையும் மக்களிடையே நிலவி வருகின்றது. அதிக காம இச்சையை ததும்பும் கருப்பு நிற உடலமைப்புடன் நான்கு கைகளில்ஒரு கையில் பெண் ஒருவரையும் இன்னொரு கையில் குழந்தை ஒன்றையும் மற்றொரு கையில் வாள் ஒன்றுடன் பெண்களை வசீகரிக்கும் வகையில் இளவரசன் ஒருவனை ஒத்த தோற்றத்தில் தென்படும் கருப்பர் தான் விரும்பிய அனைத்து பெண்களையும் வசியப்படுத்தி தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு விசேஷமாக புதிதாக பூப்பெய்தும் கன்னிப் பெண்களின் கனவில் தோன்றி அவர்களுடன் தனதுஇச்சையை தீர்த்துக் கொள்வதுடன் மேலும் அவர்களை திருமண பந்தத்தில் இணையமுடியாதவாறு திருமணத்தை தாமதப்படுத்தி வருவதுடன் மீறி திருமணம் செய்து கொண்டாலும் தாம்பத்திய உறவை பேன முடியாதவாறு தடுத்தது அவர்களுக்கு மக்கட்பேறு இல்லாது செய்வதாகவும் சில வேளைகளில் குழந்தை பாக்கியம்கிடைத்தாலும் கூட அந்த குழந்தைகளை ஏதோவொரு வகையில் இழந்துவிட நேரிடும் எனவும் கூறப்படுகிறது.

கருப்பரின் இலக்கு பருவமடைந்த இளம் பெண்களாக இருந்தாலும் கருப்பரால் எல்லாப் பெண்களையும் அணுக முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பலவீனமான கிரஹ யோகங்களை கொண்டவர்களே கருப்பரின் பார்வைக்கு இலக்காகி பாதிக்க படுகின்றனர். மேலும் சமய வழிபாடுகளில் அதிக ஈடுபாடு கொண்டவர்களும் பருவ தோஷம் தொடர்பில் மந்திரித்து ஜபம் செய்யப்பட்ட யந்திரங்களை அணிபவர்களுக்கும் கருப்பரினால் பாதிப்பை ஏற்படுத்த முடியாது.

புலி ஒன்று மானைக் துரத்திச் செல்வது போல் கன்னியரை பின் தொடரும் கருப்பர் மேற்குறிப்பிட்ட இடங்களில் ஒளிந்து இருந்து பலவீனமான மனம் கொண்டவர்களை தனது வலையில் வீழ்த்தி கொள்வார்.

இதனையே சில சமயங்களில் பெண்கள் தாங்கள் குளிக்கும் போது யாரோ ஒளிந்திருந்து பார்த்ததாகவும் கூறுகின்றனர் எனவும் நம்பப்படுகிறது.

கருப்பு இளவரசர் புதிதாக பருவமடைந்த சிறுமியர்களை பின் தொடர்ந்தது தன் வசப்படுத்திக் கொள்ள அதிக ஆர்வம் செலுத்துவதால் இளம் பெண்கள் வீட்டில் இருந்து வெளியே செல்லும் போது கையில் ஒரு இரும்புத் துண்டையோ அல்லது பாக்குவெட்டி ஒன்றையோ எடுத்துச் செல்வதன் மூலம் கருப்பரின் தீய பார்வையில் இருந்து தவிர்த்துக் கொள்ளலாம்.

மேலும் கன்னிப் பெண்களின் மாதவிடாய் காலங்களிலேயே கருப்பரின் தாக்கம் அதிகமாக காணப்படுவதால்மாதவிடாய் காலப் பகுதியில் தனிமையில் பாழடைந்த நீர் நிலைகளில் குளித்தல் மற்றும் தீட்டு உடைகளை கழுவுதலை தவிர்த்தல் என்பவற்றின் மூலமும் கருப்பரின் பார்வையில் இருந்து தவிர்த்து தப்பித்துக் கொள்ளலாம் எனவும் நம்பப்படுகிறது.

கருப்பரின் தோஷத்துக்கு உள்ளானோருக்கு காய்ச்சல்,

விகாரமான வாய் உலரல், மயக்கம், மனக் கோளாறு, குமட்டல், ஆழ்ந்த யோசனைமற்றும் தனிமை போன்ற நோய் அறிகுறிகள் காணப்படுகின்றன. சில நேரங்களில்

தன்னை கருப்பு உருவம் அல்லது நிழல் ஒன்று பின் தொடர்வதை போல்உணர்கின்றனர். மேலும் கர்ப்பிணி பெண்களின் கருவைக்கலைத்து, பிரசவத்தின் போது அதிக இரத்தப் போக்கை ஏற்படுத்தி பெண்களுக்கு குழந்தை பேறு கிடைக்காத வண்ணம் உபத்திரவம் கொடுப்பதாகவும் சொல்லப்படுகிறது.

தமிழர்களிடையே நிலவும் காத்துக் கருப்பு போன்றதொரு பூத பிறப்பில் ஒன்றாக கருதப்படும் கருப்பு இளவரசரின் பிறப்பு பற்றிய பல்வேறு மரபுக்கதைகள் காணப்படுகின்றன. பண்டைய இந்தியாவின் "விஷால" மாநகரில்

அமைந்திருந்த அரச மாளிகையில் வாழ்ந்து வந்த அரச குமாரி ஒருவர் முதல்முதலாக பூப்பெய்திய தீட்டு உடைகளை ஆற்றங்கரையில் கழுவிக் கொண்டு இருக்கும் சந்தர்ப்பத்தில் அவ்வழியே சென்ற இளைஞன் ஒருவன் அவளின் அழகில் மயங்கி தனது காதலைத் தெரிவித்து உள்ளான் எனினும் அவனது காதலை இளவரசி ஏற்க்க மறுத்த காரணத்தால் மனமுடைந்த இளைஞன் தற்கொலை செய்து கொண்டதுடன் பிற்காலத்தில் அவ் இளைஞனே களுக்குமாரயக்ஷயா என்ற பெயரில் பிறப்பெடுத்ததாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. இலங்கையில் பிரதேச வாரியாக கரும் பிசாசு, கரும்புச் சாமி, சந்தி இளவரசர், கடவர, வெல்லஸ்ச பண்டார, சுடுகாட்டு இளவரசர் மற்றும் சப்புமல் இளவரசர் போன்ற மேலும் பல பெயர்களில்அழைக்கப்படுவதுண்டு. இத்தகைய பயங்கரமான பிசாசுகளில் பிடியிலிருந்து

பெண்களை பாதுகாப்பதற்கு இலங்கையின் தென் பகுதிகளில் ரட்டயக்கும எனப்படும் மூன்று ஜாம "ரத்தி யாக" சாந்திகர்ம பூஜை நடைபெறும். இதன் போது விடியவிடிய

மந்திரங்கள் ஓதப்பட்டு குறித்த பிசாசை வரவழைத்து அடித்து துன்புறுத்தி அடிபணிய வைத்து இறுதியில் அவற்றிற்கு தேவையானமது, மாமிசம் உட்பட பல்வேறு உணவு வகைகளையும் படையலிட்டு அவற்றை சந்தோசம் படுத்தி தோஷத்துக்கு இலக்கான பெண்களின் உடலிருந்து அதிகாலை ஜாமத்தில் இத்தகைய கொடிய பிசாசுகள் விரட்டியடிக்கப்படும்.

நாராயணசாமி ஜெயரட்ணம் ...✍
களுத்துறை சுழற்சி நிருபர்

நோயாளி கண் டாக்டரிடம்: டாக்டர், எனக்கு எதைப் பார்த்தாலும் ரெண்டு ரெண்டா தெரியுது.
கண் டாக்டர்: அது சரி. அதுக்கு ஏன் நீங்க நாலுபேரா வந்திருக்கீங்க?

வாடிக்கையாளர்: சார், ஆறு வருஷத்துல நீங்க போட்ட பணம் இரட்டிப்பாகும்னு சொன்னீங்களே என்ன ஆச்சு?
வங்கி ஊழியர்: இரட்டிப்பாகும்னு தானே சொன்னோம் திருப்பித் தர்றதா சொல்லலையே!

'எதுக்கு பசங்க எல்லாரையும் வாசல்ல உட்காரவெச்சு பரீட்சை எழுத விட்டிருக்காங்க?'
'என்ட்ரன்ஸ் எக்ஸாமாம்!'

தலைவர் நம்ம கட்சிக்கு எப்படி எல்லாம் ஆள் சேர்க்கிறார் பாருங்க...!
எப்படி?
எங்கள் கட்சியில் இணைந்தால் சந்திரனில் இடம் பிடிக்க முன்னுரிமை தரப்படும்னு சொல்றாரே..!

சர்வர் சாப்பிட வந்தவரிடம்: என்ன வேணும் சார்?
சாப்பிட வந்தவர்: சூடா என்னப்பா இருக்கு
சர்வர்: தோசைக்கல் சார்.

'சோப்பு டப்பாவுல எதுக்கு சின்னச் சின்ன ஓட்டை இருக்கு தெரியுமா?'
'தெரிஞ்சுக்கோங்க....'
'பெரிய ஓட்டை இருந்தா சோப்பு கீழே விழுந்துடும்!'

'இந்த கடிகாரம் சரியான நேரத்தை காட்டுமா?'

'அது காட்டாது! நாம்தான் பார்க்க வேண்டும்'

ஆனாலும் தலைவர் பண்றது ரொம்ப ஓவர்..! ஏன்..என்ன செய்தார்? நம்ம கட்சி சார்பா அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு வேட்பாளரை அறிவிக்கலாமான்னு கேட்கிறாரே...!

இனிமே உங்க மாமியாருக்கு காது கேட்கிற வாய்ப்பே இல்லை மேடம்..!

அப்படின்னா இனிமேல் நான் திட்டுறது எல்லாம் வேஸ்ட்டா டாக்டர்...!

அழகுமலை ஈன்ற மலையக கலை நட்சத்திரம் மாக்ரட்

இலங்கை கலையுலகில் தனக்கென தனித்துவமான இடமொன்றை தக்க வைத்துக் கொண்டு முன்னேறி வருபவர் நடிகை மாக்ரட்.

தொலைகாட்சியில் ஒளிபரப்பாகி வந்த வாங்க பழகலாம் என்ற நிகழ்ச்சியின் மூலம் பெரும் பெயர் பெற்று வந்தவர் இவர். மத்திய மலைநாடான கண்டி நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இவர். அழகுமலை என்பவருக்கும் சீதை என்பவருக்கும் மகளாகப் பிறந்தவர் இவர். இவரது தந்தையின் தொழில் காரணமாக இவர் கண்டி நகரில் பிறந்த பின் இவரது குடும்பம் மஸ்கெலியா நகருக்கு இடம் பெயர்ந்தது. மஸ்கெலியா புனித ஜோசப் கல்லூரியில் கல்வி கற்ற இவருக்கு இந்தப் பாடசாலை கல்விக்கூடமாக மட்டுமல்ல கலைக் கூடமாகவும் விளங்கியுள்ளது. இவருள் உதித்த கலைகள் அரங்கேற களம் அமைத்துக் கொடுத்தது இந்த கல்லூரி அரங்கம் தான். பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் சக மாணவர்களும் இவரது கலையாற்றலை வளர்க்க இவருக்கு பெரும் துணையாக இருந்துள்ளார்கள். இவ்வாறாக கல்லூரியிலும் ஆலய மண்டபங்களிலும் இவரது ஆடல், பாடல் அடங்கிய கலை நிகழ்வுகள் களை கட்டின. பள்ளியிலே படிக்கின்ற காலத்திலேயே கலையின் மீது தீவிர ஆர்வம் கொண்டதால் மேற் படிப்பில் கரை காண முடியவில்லை. கலையின் பால் கொண்ட மயக்கம் இவரது கல்விக் கண்களை மயக்கி விட்டது. படிப்பு மீது ஆர்வம் காட்ட வேண்டிய தருணத்தில் இவரது உள்ளத்தை, கலை கொள்ளை கொண்டு விட்டது.

இவர், மேற்படிப்பைத் தொடர வேண்டிய காலகட்டத்தில் தனது கலை ஆற்றலை வளர்த்துக் கொள்ள பல்வேறு கனவுகளை சுமந்த வண்ணம் கொழும்பு நகருக்கு நடையை கட்டினார். எந்த கனவுகளோடு தலைநகருக்குள் அடியெடுத்து வைத்தாரோ அவை அவ்வளவு இலகுவாக அரங்கேறவில்லை. எனவே இங்கேயே காலத்தை கடத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவர் தள்ளப்பட்டார்.

கொழும்புக்கு வந்த உடன் கலை வாய்ப்புகள் கிடைக்காதால் தொழில் ஒன்றை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். எனவே தொழில் ஒன்றை செய்து கொண்டிருக்கின்ற போது கலைஞர் மரிக்கார் ராமதாஸை சந்திக்கக்கூடிய வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அந்த சந்தர்ப்பத்திலேயே அவர் ஒரு தொலைக்காட்சி நாடகம் ஒன்றை தயாரித்துக் கொண்டிருந்தார். அந்த தொலைக்காட்சி நாடகம் முடிவடைந்த பின் புதிய தொலைக்காட்சி நாடகங்களை தயாரிக்க இருப்பதாகவும் அதில் தனக்கு நடிக்க வாய்ப்பு கொடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார். ஆனால் எதிர்பாராதவிதமாக அவர் இறைவனடி சேர்ந்து விட்டார். அதனால் அந்த நாடகத்தில் நடிக்கக் கூடிய வாய்ப்புகள் நழுவிப் போயுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில்தான் வசந்தம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிய வாங்க பழகலாம் என்ற நிகழ்வில் இவருக்கு பங்கேற்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த நிகழ்ச்சியில் நடனம், நகைச் சுவை துணுக்குகள் என இவரது நடிப்புத் திறனையும் வழிகாட்டுவதற்கு வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இதன் மூலம் பிரபலமடைந்து வந்த இவருக்கு, தொடர்ந்து தொலைக்காட்சியில் நாடகங்களிலும் குறு நாடகங்களிலும் திரைப்படங்களிலும் நடிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. இவ்வாறாக வானொலி நாடகம் முழு நாடகம் திரைப்படம் என இவரது கலை மென்மேலும் வளர்ந்து வந்துள்ளது. தொடர்ந்து

இயக்குனர் கே செல் வராஜ் இயக்கிய மேடை நாடகமொன்றில் நடிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது. "ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்" என்ற நாடகத்திலே நடிப்பதற்கு ஒப்பந்தமானாலும் எதிர்பாராதவிதமாக அந்த நாடகத்தில் நடிப்பதற்கு அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை ஆனாலும் மேடைநாடக இயக்குனர் கே செல் வராஜ் இயக்கிய இதற்குத்தானே

ஆசைப்பட்டாய் என்ற மேடை நாடகத்தில் நடிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. தொடர்ந்து செவ்வந்திப்பூவே, ஆகாரம், உயிர் எழுதும் மடல், கிறிஸ்டி ஆகிய குறும் படங்களில் நடிக்கக் கூடிய வாய்ப்பு இவருக்குக் கிடைத்துள்ளது.



கே. ஈஸ்வரலிங்கம்...

நகங்களுக்கு அழகு தரும் நெயில் ஆர்ட்

‘நெய்ல் ஆர்ட்’ எனப்படும் நகங்களை அழகுப்படுத்தி கொள்ளும் முறை தற்போது அனைத்து வயது பெண்களிடமும் அதீத வரவேற்பை பெற்றுள்ளது. நகங்களை சுத்தமாக வைத்துக்கொண்டால் உடல் நலத்திற்கு நல்லது என்பது அனைவருக்கும் தெரிந்ததே, ஆனால் அந்த நகத்தையும் அழகாக வளர்த்து, சுத்தப்படுத்தி, பிறரை கவரும் விதத்தில் பல்வேறு வகையான அலங்காரங்களை செய்துகொள்வது இப்போது வாடிக்கை ஆகிவிட்டது. பெண்கள் நகங்களுக்கு நெயில் பாலிஷ் போட்டு அழகுபடுத்துவது பேஷனா இருந்துச்சு. அதுலயும் பிரவுன், சிவப்பு, பிங்க்னு குறிப்பிட்ட நிறங்கள் மட்டுமே போட்டு வந்தாங்க. அதன்பின் கருப்பு, அடர் நீலம், கரும்பச்சை, வயலெட் என மாறியது.

வெறுமனே பாலிஷ் மட்டுமே போடுவதை விட நெயில் ஆர்ட் தான் இளம் பெண்களின் விருப்பம். அழுத்தமான நிறங்களில் நெயில் பாலிஷ் போட்டுக்கோண்டு அதன் மேல் வெள்ளை கலர் பாலிஷ் டிசைன் போடுவது ஒருவகை நெயில் ஆர்ட். மிக நுணுக்கமான டிசைனைப் போட ஸ்டாம்பிங் நெயில் ஆர்ட்டும் இருக்கிறது.

வெள்ளைக்கரு பேஸ்

முட்டையில் உள்ள புரோட்டீன் நல்ல மாய்ஸ்சுரைசராகவும், சருமத்தை மென்மையாக்கவும், சருமத்தில் உள்ள கருமையைப் போக்கவும் செய்யும். இதில் உள்ள வைட்டமின் ஏ, சருமத்தில் ஏற்படும் சுருக்கங்கள்,முதுமைக் கோடுகள் போன்றவற்றை தடுக்க உதவும். எனவே நீங்கள் வெள்ளையாகவும், இளமையுடனும் நீண்ட நாட்கள் இருக்க வாரம் ஒருமுறை முட்டை கொண்டு ஃபேஸ் பேக் போடுங்கள்.

முட்டையில் வெள்ளைப் பகுதியை தனியாக எடுத்து நன்கு கலக்குங்கள். அதில் அரை ஸ்பூன் எலுமிச்சை சாறு கலந்து அதை முகத்தில் சீராகத் தடவுங்கள்.

20 நிமிடங்கள் காத்திருந்து கழுவினால் சீரற்ற முக நிறம் சமமாகும். வாரம் இரண்டு முறை செய்யுங்கள்.

பாத வெடிப்பு

தோல் வறட்சியும், அதிக உடல் எடையும்தான் பாத வெடிப்புக்கான முக்கியமான காரணிகள். நம் உடலில் நீர்ச்சத்து குறையும்போது தோல் வறண்டு, பாதத்தில் வெடிப்பு உண்டாகும். குளிர்காலத்தில், இயல்பாகவே தோலில் வறட்சி ஏற்படும். அதனால் பாதத்தில் வெடிப்பு ஏற்படக்கூடும். பொதுவாகவே காலில் உள்ள தோல் தடிமனாக இருக்கும். அதற்குள் ஒரு கொழுப்பு அடுக்கு இருக்கும். உடல் எடை அதிகமாக இருந்தால், அந்த அடுக்கு இடம் மாறி தோலில் வெடிப்பு உண்டாகும். வெதுவெதுப்பான தண்ணீரில், தினமும் பாதத்தைக் கழுவி வந்தாலே வெடிப்பு ஏற்படாமல் தவிர்க்கலாம். அதோடு காலையிலும் இரவிலும் பாதத்தைத் தண்ணீரில் நன்றாக கழுவினால் வெடிப்பு வரும் வாய்ப்பு குறைவு. கற்றாழை, தேங்காய் எண்ணெய் தடவலாம். ஆனால் ஒரு சிலருக்கு தொற்று ஏற்பட்டு, புண்கள் அதிகமாகி, கடுமையான வலியுடன் வெடிப்புகள் இருக்கும். அவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

குறிப்பாக சர்க்கரை நோயாளிகள் லேசான வெடிப்புகள் ஏற்பட்டாலே, உடனடியாக மருத்துவரிடம் பரிசோதித்து தொற்று ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பாதவெடிப்புகளுக்குச் சிகிச்சை எடுத்துக்கொள்ளாவிட்டால், கால் முழுவதும் தொற்று பரவுவதற்கு வாய்ப்பிருக்கிறது. உடலில் நீர்ச்சத்துக் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நீர்ச்சத்து நிறைந்த காய்கறிகள், பழங்களை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

Senthooram செந்தூரம்

சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

எம்.எம்.பைரூஸ்
கல்முனை .

கேள்வி: – நகைச்சுவை நடிகர் செந்தில் தனது வாரிசை அறிமுகப்படுத்தியிருக்கிறாராமே... அதை பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

பதில்:– தமிழ்த் திரை உலகின் நகைச்சுவை நடிகர்களில் ஒருவராக தனித் தன்மையுடன் திகழ்ந்தவர் செந்தில். கவுண்டமணியுடன் கூட்டணி அமைத்து 80,90களில் ரசிகர்களை மகிழ்வித்த இவர் கவுண்டமணி படத்தில் நடிப்பதை குறைத்துக் கொண்ட பிறகு. தனியாக நகைச்சுவை மற்றும் குணசித்திர பாத்திரங்களில் நடித்து வருகிறார். 70 வயதாகும் செந்தில் முதன் முதலாக தன்னுடைய மூத்த மகனான மணி கண்ட பிரபுவை நகைச்சுவை நடிகராகவே அறிமுகப்படுத்துகிறார். அறிமுக இயக்குநர் என்.எஸ்.ராகேஷ் இயக்கத்தில், நடிகர் பொபி சிம்ஹா நடித்து தயாரிக்கும்'நடை உடை' எனும் படத்தில் நகைச்சுவை காட்சிகளில் மணிகண்ட பிரபு அறிமுகமாகிறார். இந்த தகவலை தன்னுடைய சமூக வலைதள பத்கத்தில் புகைப்படத்துடன் நடிகர் சிம்ஹா பகிர்ந்திருக்கிறார்.

எம்.மாகிர்.
எலபடகம.

கேள்வி: – நடிகை கீர்த்தி சுரேஷ் இருப்பதைப்போல் மீண்டும் ஒரு கீர்த்தி தமிழ்த்திரைப் படங்களில் நடிக்க வந்திருக்கிறாராமே?

பதில்:–பொதுவாக தமிழ் திரை உலகில் மலையாள தேசத்து நடிகைகளின் வரவும் ஆதிக்கமும் அதிகமாகவே இருக்கும். ஆனால் தற்போது தெலுங்கு மற்றும் ஹிந்தி திரையுலகிலிருந்து ஏராளமான நடிகைகள் தமிழ் திரையுலகிற்கு வருகை தருகிறார்கள். அந்த வகையில் 'உப்பென்னா' என்ற படத்தில் நடித்தன் மூலம் ரசிகர்களின் "கனவுக்கன்னி"யானவர் கீர்த்தி ஷெட்டி. அவர் நடித்த தெலுங்குப் படங்கள் வெளி வருவதற்கு முன்பே தமிழில் 'தி வாரியர்' எனும் படத்தில் கதாநாயகியாக ஒப்பந்தமானார். அதைத் தொடர்ந்து கார்த்தி நடிக்கும் பெயரிடப் பாத படத்திலும் கதா

நாயகியாக நடிக்க ஒப்பந்த மாகியுள்ளார். தற்போது வெங்கட் பிரபு இயக்கத்தில் நாகசைத்தன்யாவுக்கு ஜோடியாக நடிக்கவும் ஒப்பந்தமாகி இருக்கிறார். நடித்த படங்கள் எதுவுமே வெளிவராமல் மூன்று தமிழ் படங்களில் ஒப்பந்தமான ஒரே நடிகை என்று பெயர் பெற்றுள்ளார்.

எம்.ஆர். தாகர்.
வத்தளை.

கேள்வி: என்ன இது... கமலின் 'விக்ரம்' படம் தமிழ்த் திரை உலகையே கலக்கிக் கொண்டிருக்கிறதாமே.....!

இதுவரை காலமும் தமிழ்த்திரையுலகில் வந்த படங்களின் வசூலை எல்லாம் விழுங்கி ஏப்பம் விட்டு விட்டதாமே..?

பதில்: ஆமாம்...தமிழ்த் திரை உலகில் இதுவரை காலமும் வந்த எல்லா திரைப்படங்களின் வசூலையும் முறியடித்து முன்னணியில் நிற்கிறது.

மக்கள் திலகம், நடிகர் திலகம் இவ்விருவருக்கும் இடையேயான போட்டி, சூப்பர் ஸ்டார், உலகநாயகன் ஆகியோரிடமும் தொடரந்தது. நான்கு ஆண்டுகளாக படமாளிகையில் படம் வெளியாகி வசூல் ரீதியில் வெற்றியை பெறாத உலக நாயகன் கமல் ஹாசன் 'விக்ரம்' படத்தின் மூலம் புதிய சாதனையை படைத்திருக்கிறார். அதாவது இதுவரை வெளிவந்த தமிழ் த் திரைப்படங்களில் தமிழகத்தில் அதிக வசூலை ஈட்டிய திரைப்படமென்று 'விக்ரம்' வரலாற்றை படைத்திருக்கிறது.

கடந்த சில காலங்களில் உலக நாயகனை விட சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்துக்குத்தான் திரையுலக வணிகர்கள் முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளித்து வந்தனர். தற்போது அந்த நிலை 'விக்ரம்' பட வசூலின் மூலம் மாறி விட்டது.

எம்.எம். முஸ்தபா.
மன்னார்.

கேள்வி; மக்கள்...திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் செய்ய நினைத்து அவரால் செய்ய முடியாமல் போன காரியங்கள் ஏதாவது இருக்கிறதா?

பதில்: எனக்கு தெரிந்த வகையில் முக்கியமான ஒரு விஷயம் இருக்கிறது. இப்போது மணிரத்தினம் இயக்கிக் கொண்டிருக்கிறார் அல்லவா கல்கியின் 'பொன்னியின் செல்வன்', இந்தக் கதையை முதலில் திரைப்படமாக தயாரிக்கப் போனவர் எம்.ஜி.ஆர்.தான். அதற்காக முப்பதாயிரம் ரூபாய் கொடுத்து அத்தக் கதையின் உரிமையையும் வாங்கி வைத்திருந்தார். 'நாடோடி மன்னன்' படம் வெற்றிகரமாக ஓடிய பின், 'பொன்னியின் செல்வன்' படத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார். வழக்கமாக அவரது படங்களில் நடிப்பதைத் தவிர்த்து புதியவர்களை போடவேண்டுமென்று திட்டமிட்டிருந்தார். அதேநேரம் அவர் இரட்டை வேடங்களில் நடிப்பதாகவும் இருந்தது.

ஆனாலும் 'நாடோடி மன்னன்' பட வெற்றிக்குப் பிறகு அவருக்கு நிரைய படங்களில் நடிக்க வாய்ப்புகள் வந்து தயாரிப்பு வேலைகள் துள்ளிப்போனது. 'பொன்னியின் செல்வன்' படத்தை எம்.ஜி.ஆரே இயக்கப்போவதாக பத்திரிகைகளில் விளம்பரங்கள் கூட வெளியாகின. நடிகர் சிவகுமாரிடமும் படத்தில் நடிக்க வேண்டுமென்று சொல்லியிருந்தார். வதியத்தேவன் கதாபாத்திரத்தில் அவர் நடிப்பதாக இருந்தது.

இதற்கிடையில் 'அடிமைப் பெண்', 'உலகம் சுற்றும் வாலிபன்' போன்ற படங்களைத் தயாரிப்பதில் அவர் முன்மும்முரமாக ஈடு பட்டதால் 'பொன்னியின் செல்வன் 'தயாரிப்பு தள்ளிப் போனது. இதன் பிறகு அவர் அரசியலுக்கு வந்து விட்டதால் அவரது அந்த ஆசை நிறைவேறாமலே போனது.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

ஆம்பளன்னா ஒஸ்தியா

ஆடுகளம் டாப்ஸி ஆவேசம்

தமிழில் ஆடுகளம் படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமான டாப்ஸி, அதன் பின் தமிழ் தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் சில படங்களில் நடித்துவிட்டு இந்தியில் நடிக்க தொடங்கினார். அங்கே அமிதாப்புடன் அவர் நடித்த பிங்க் திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றதை அடுத்து தற்போது கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளில் நடித்து வருகிறார். அவர் நடித்த தப்பாட் திரைப்படம் மிகப் பெரிய அளவில் பாராட்டுகளை பெற்று வசூலில் மாபெரும் சாதனை படைத்தது. இதையடுத்து கடைசியாக வெளியான 'ஹசீன் தில்ருபா' படம் ஓடிடியில் வெளியாகி கலவையான விமர்சனத்தை பெற்று வருகிறது. இப்படியான நேரத்தில் பாலிவுட்டில் பாலின ஏற்ற தாழ்வு அதிகம் இருப்பதாக குறை கூறியுள்ளார். பெண்களை மையப்படுத்தி உருவாகும் படங்களை குறைந்த பட்ஜெட்டில் தயாரிப்பதாகவும் அதற்கு முக்கிய காரணம் நடிகர்களை கொண்டாடும் அளவுக்கு ரசிகர்கள் நடிகைகளை கொண்டாடுவதில்லை என வெளிப்படையாக தெரிவித்துள்ளார். ஒரு ஆண் அதிகம் சம்பளம் கேட்டால் அவர் வெற்றிக்கு கிடைத்த அங்கீகாரம் என்கிறார்கள். அதுவே பெண் நடிகை கேட்டால் சம்பளம் விஷயத்தில் கறார் என முத்திரை குத்திவிடுறார்கள். நான் சினிமாவில் கால் பதித்தபோது என்னுடன் நடிக்க தொடங்கிய பல ஆண் நடிகர்கள் தற்போது என்னை விட 3 முதல் 5 மடங்கு வரை அதிக சம்பளம் வாங்குகிறார்கள் என பாலிவுட் திரைத்துறையில் நடக்கும் சம்பவங்களை வெளிப்படையாககூறியுள்ளார்.

நடனம் ஒழுக்கத்தை கற்றுக் கொடுத்தது

இயக்குனர் கௌதம் ராமசந்திரன் இயக்கத்தில் சாய் பல்லவி நடித்துள்ள படம் கார்கி. கார்கி திரைப்படம் ஜுலை 14ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இயக்குனர் கௌதம் ராமசந்திரன் இயக்கத்தில் சாய் பல்லவி நடித்துள்ள திரைப்படம் 'கார்கி'. இந்த படத்தை சக்தி பிலிம் ஃபேக்டரி மற்றும் பிளாக் ஜெனி புரொடக்ஷன் இணைந்து தயாரித்துள்ளது. இந்த படத்திற்கு கோவிந்த் வசந்தா இசையமைத்துள்ளார். 'கார்கி' படத்தை சூர்யா, ஜோதிகாவின் 2டி எண்டர்டெயின்மெண்ட் வழங்கவுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய 3 மொழிகளில் இப்படம் தயாராகி உள்ளது. 'கார்கி' திரைப்படம் ஜுலை 14ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இப்படத்தின் டிரைலரை தமிழ் திரையுலகில் முன்னணி பிரபலங்களான சூர்யா, ஆர்யா, லோகேஷ் கனகராஜ், அனிருத் ஆகியோர் இணைந்து வெளியிட்டனர். இந்த படத்தின் நடிகை சாய் பல்லவி மாலை மலர் நேயர்களுக்காக பிரத்யேகமாக பேட்டி அளித்தார். கார்கி படம் குறித்தும் அவரின் சினிமா பயணம் குறித்தும் பல விஷயங்களை பகிர்ந்துள்ளார். "சூர்யா சார், கார்கி படத்தை வெளியிடுவது படத்திற்கு எவ்வளவு உதவியாக இருக்கும் என்று நினைத்து மகிழ்ச்சியடைந்தேன். அவர் இந்த படத்தை பார்த்து இதெல்லாம் பிடித்திருக்கிறது என்று கூறும்போது சரியாக தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்ற எண்ணம் தோன்றியது. நடனம் எனக்கு ஒழுக்கத்தை கற்றுக் கொடுத்தது. நடனம் இல்லை என்றால் நான் இல்லை" என்று கூறினார்.

'குலு குலு' படத்தில் யாஷிகா

இயக்குனர் ரத்னகுமார் இயக்கத்தில் சந்தானம் நடித்துள்ள படம் 'குலு குலு'. 'குலு குலு' படத்தில் சந்தானத்திற்கு ஜோடியாக அதுல்யா நடித்திருக்கிறார். 'மேயாதமான்', 'ஆடை' ஆகிய படங்களை இயக்கிய இயக்குனர் ரத்னகுமார் இயக்கியிருக்கும் படத்தில் சந்தானம் கதாநாயகனாக நடித்திருக்கிறார்.

இப்படத்திற்கு 'குலு குலு' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் சந்தானத்திற்கு ஜோடியாக அதுல்யா சந்திரா மற்றும் நமீதா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நடித்திருக்கிறார்கள். இவர்களுடன் பிரதீப் ராவத், மரியம் ஜார்ஜ், சாய் தீனா, 'லொள்ளு சபா' மாறன் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். விஜய் கார்த்திக் கண்ணன் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்தப் படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருக்கிறார். இதனை சர்க்கிள் பாக்ஸ் என்டர்டெய்ன்மெண்ட் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் எஸ்.ராஜ் நாராயணன் தயாரித்திருக்கிறார். சமீபத்தில் இப்படத்தின் மோஷன் போஸ்டர் மற்றும் ஃபர்ஸ்ட் லுக் இணையத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் இப்படத்தின் ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதன்படி, இப்படம் ஜூலை 29ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு போஸ்டர் ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.

புதிய படத்தில் சமந்தா

டாப்ஸி தயாரிக்கவுள்ள புதிய படத்தில் சமந்தா நடிக்கவுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார். தமிழில் வெளி வந்த 'ஆடுகளம்' படத்தின் மூலம் ரசிகர்களின் மனதை கொள்ளை கொண்டவர் டாப்சி. 'காஞ்சனா', 'வந்தான் வென்றான்', 'கேம் ஓவர்', 'அனபெல் சேதுபதி' போன்ற படங்களிலும் நடித்துள்ளார். இந்தியிலும் பல படங்களில் நடித்திருக்கிறார். சமீபத்தில் ஒரு பட தயாரிப்பு நிறுவனத்தை டாப்சி தொடங்கினார். இப்போது ஒரு புதிய படத்தை தயாரிக்க இருக்கிறார். இந்த படத்தில் சமந்தா தான் கதாநாயகி என்று அவர் அதிகார பூர்வமாக அறிவித்திருக்கிறார். இது கதாநாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கும் படம் என்று கூறப்படுகிறது. படப்பிடிப்பு பணிகள் விரைவில் தொடங்க உள்ளன.

ஒளவன் கவிதை

காலத்தின் சாவி

கி.மு.மூன்றாம் நூற்றாண்டின் முற்பட்ட காலத்தில்
என்னிடமொரு சாவி இருந்தது
சாவியை உபயோகிக்கவென கைகள் இருக்கவில்லை
கையிடை விரல்களுமில்லை
சாவி இருந்தது

கி.மு.மூன்றாம் நூற்றாண்டின் முற்பட்ட காலத்தில்
என்னிடமொரு சாவி இருந்தது
சாவி கொண்டு திறக்கவென வீபொன்றும் இருக்கவில்லை
கதவுகளுமிருக்கவில்லை
சாளரமுமில்லை
அலுமாரி இல்லை
காசுப்பெட்டியுமில்லை
கைகளுமில்லை
சாவி கொடுக்கக் கடிகாரமிருந்தது

மேலுமிருந்தன
வானமிருந்தது மேகமிருந்தது மழையிருந்தது
சூரியனிருந்தது ஒளியிருந்தது
வெயிலிருந்தது நிழலுமிருந்தது

நிலமிருந்தது
நீரிருந்தது
நெருப்பிருந்தது
காற்றிருந்தது
என்னிடமொரு சாவியிருந்தது

ஆகாயத்தைப் பூட்டினேன்
மேகத்தையடைத்தேன்
மழையை இழந்தேன்
சூரியனைப் பூட்டினேன்
ஒளியையடைத்தேன்
இருளையொத்தேன்

நிலத்தைப் பூட்டினேன் நீரூற்றையொளித்தேன்
நெருப்பை மூட்டினேன் பின் காற்றாய் மாறினேன்
கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் என்னிடமிருந்த சாவி
என்னைப் பூட்டிற்று

சாவியுடைத்து வெளியேறினேன்
கடிகாரம் சாவியற்றிருந்தது
முதலில் கடிகாரத்திற்கு சாவி கொடுத்தேன்

மாளிகையொன்று வளர்ந்தது
ஆயிரம் வாசல் கதவுகள் திறந்தன

மறுமலர்

முல்லை முஸ்ரிபா

சாந்தன் சரிதம்; சித்தன் சரிதம்

'சோழகம் எப்போதும் சுழன்று வீசியது, சோழகம் யாழ். மண்ணின் உயிர் மூச்சு' என்று தொடங்குகிற முன்னீடு வழி வளரும் சித்தன் சரிதம்; சாந்தானின் சரிதம்தான்.

2021இல் காலச்சுவடு கொணர்ந்த இச்சரிதம் பாலன் விடலை, காளை, முதுமகன் என மூன்று பருவக் கட்டு மானங்களில் வளர்கிறது. சாந்தனின் பருவக் கட்டுமானங்கள் அவை. யாழ்ப் பாணத் தமிழ்ச் சமூகத்தின் கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களில் ஊடறுத்து நகர்கிற துயரமிக்க வாழ்வொன்றின் வெட்டுமுகத்தைச் சித்தன் சரிதம் காட் டுகிறது.

சித்தன் சரிதம் ஆறு தலை முறையின் கதை. சோழகம் மண்ணின் பெருமூச் சாய் மூலை முடுக்கெல்லாம் புகுந்து வருவது போல சாந்தானின் எழுத் தும் மண்ணின் துகள்களிலும் புகுந்து செல்கிறது. கதையின் முதன்மை மாந்தராய் வெளிப்படும் சித்தன் 'சோழகமும் நிலவும் சாஸ்வாத மாய் இருந்தால் உலகில் எந்தத் துன்பங்களும் அண்ட முடியாது என்று தன் நாட்குறிப்பில் எழுதி வைத்தார் சித்தன்' என்பதாக அவன் சரிதம் தொடங்குகிறது.

சாந்தன் கதைகூறுமுறை, கதைய மைப்பு, கதையோட்டம், மண்மொழி, மொழியால் இடையறாத அல்லது இடையறுந்து தொடரும் ஒரு வகை லாவண்யம். உணர்வின் இழைகளில் ஊடாடி மனத்திற்குள் நகரும் சரிதத்துக் குரிய பண்பாடலை வளர்க்கிறார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுத வல்ல சாந்தன், எழுத்துக்களுக்காக 'சாகித்ய ரத்னா', 'பிரேம்சந்த ஃபெல் லோஷிப்' விருதுகளை வென்றவர்.

நாவலொன்று ஒரு சமூக வாழ்விய லின் யதார்த்தத்தை அதன் இருப்பியல் சாயலில் உணர்வு ததும்பக் காலகட்ட வெட்டுமுகமாக எழுந்து நிற்கும் என் பதற்கு 'சாந்தனின் சரிதம்', 'சித்தன் சரிதம்' சான்றாகிறது.

பாத்திரங்கள், பாத்திரங்களின் ஊடாட் டம், ஊடாட்டத்தினூடு வளரும் கலைக் கோலம், கதைக் கோலத்திற்கேற்றதான மண்மொழியென செய் நேர்த்தியோடு சித்தன் வெளிப்படுகிறான்.

வாசகரைத் தொய்யவிடாத வாசிப்ப னுபவ ஆற்றுப் படையாக இச்சரிதம் நம் கைக்குக் கிடைக்கிறது. சோழகக் காற்றும், நிலவும் தவிர்க்க முடியாத கதாபாத்திரங்களாக உடன் வருகின் றன. சினுவா அச்பேயின் சிதைவு களோடு ஒப்பிடத் தோன்றுவதாக இராகவன் குறிப்பிடுவதும் சரிதத்தின் சிறப்பெனலாம்.

ஊமக்காச்சி 05

வீடு மேய்தலென்பது ஒரு கலாசாரம்;. கிராமத்துப் பண்பாடு, அயலும் உறவும் சேரும் ஒற்றுமைப் பணி;. ஒற்றுமைப் பாலமென்றும் சொல்லலாம். அதுவொரு அழகு மிளிரும் தொழிற்பாடு. எனது சின்ன வயசின் ஞாப கங்களில் வீடு மேய்தல் ஒரு மேய்ச்சல் தரையாக விரிகி றது.

எங்களது கடையடி வள வுக்குள் ஒரு சிறு குடிசை வீடு இருந்தது. நானறிந்த வரை என் சின்னக் காலத்திலிருந்து அந்த வீடு அப்படியேதான் இருந்தது. ஒரு இருபத்தைந்து அடி நீளமும், பத்து, பன்னி ரெண்டடி அகலமுமிருக்கும். பின்பகுதி அறை; அதற்கு முன் பகுதி அடுப்படி. அதற் கும் முன் பகுதிதான் வீட்டுக்கு வருபவர்கள் அமர்ந்திருக்கும் வரவேற்புப் பகுதி. நாங்கள் குந்தியிருந்து பாண்டியும், முற்றத்தில் எட்டுக்கோடும் விளையாடிக் களித்திருக்கி றோம்.

அந்த கடையடி வீடும் வாப்பாவின் உருவாக்கம் தான். ஒன்றுக்கும் உதவாத தென்று அவர் ஒன்றையும் கழிப்பதில்லை. அவரது சேர்மானங்களின் தொகுப்பு அது. வீட்டின் அரையளவு மண்சுவரும், எங்கள் பின்வ ளவுக் களிமண் சேர்த்து அவர் கட்டியது. தரையும் களிமண் பூச்சுத்தான். வாப்பாவினதும், உம்மாவினதும், உம்மம்மாவி னதும் கைப்பூச்சுத் தரை வீடு அது.

நாங்கள் பின் வளவு வீட்டில் குடியிருந்தோம் என் பதனால் கடை வளவு வீட்டை சும்மா வைக்கவில்லை. அது ராசியான வீடோ இல்லையோ தெரியாது என்றாலும் அது பலரும் குடி வாழ்ந்த வீடு என் பதால் மகிழ்ச்சி வீடு.

வாப்பாவின் தங்கச்சி செய்னம்பு மாமி, இன்னொரு தமிழ் குடும்பம், பின்னர் மாமியின் மகன் முத்து மச்சான் குடும்பம், வீட்டு வேலைக்கு நின்ற சின்னராசா வின் அம்மா, அப்பா, பிறகு கண காலமாக எலிமாமாவும் கொசு மாமியும் என்று பல குடும்பம் வாழ்ந்த வீடு.

வீட்டு வளவுக்குள் பலா, மா, தென்னை, பனை, அன்ன மின்னா, முருங்கை மரங்கள். இந்த மரங்களோடு பின்னிய கதைகள் ஞாபகங்களின் ரேகைகளில் ஒட்டியிருக்கி றது. அணிலோடு சேர்ந்து வெள்ளக் கொழும்பான் கடித்த தும், பலாவிலைச் சருகுகளை ஆட்டுக்குட்டிக்கு சேகரித்ததும், கனிந்து கமகமக்கும் பலாப் பழத்தைக் கயிறு கட்டி இறக் கியதும், தொப்பென விழுந்து தொப்பி கழன்ற பனம்பழங் களை எங்கள் வீட்டு சிவப் பியைப்போல சூப்பியதும், அன்னமுன்னாவை அப்படியே தோல் கழட்டிச் சுவைத்தது மென்று நினைக்க நினைக்க நெஞ்சூறும் கதைகள் கதை கதையாகி எனக்குள் இருக்கி றது.

முள்முருக்கு, கிளுவை, இணல் வாகை என வேலிக் கதிகாலாய் வாப்பா ஊன்றிய தடிகள் பெருத்த மரங்களாகி ஒன்றுக்கும் உதவாததென்று ஒன்றுமில்லை என்பதைக் காட்சி ஓவியமாக்கின.

வீடு மேயும் காலம் நெருங் குகையில், கூரைக்கிடுகுகள் உக்கி, நிறமும் மங்கி, ஒட்டி யுலர்ந்திருக்கும். மழையொ முகத் தொடங்கும். இனியும் பிந்தக் கூடாதென வாப்பா நினைப்பார்.

கிடுகுக் கட்டுகள் வந்து சேரும். முதல் நாளே வீடு மேய்வதற்கு அயலுக்கும், உறவுக்கும் சொல்லப்படும். கூலி கொடுக்காது அல்லது வாங்காது உறவின் அல்லது ஊரின் உரிமைப் பணி இது.

மேய்ச்சலுக்கு விடிய சுபுஹோட வாப்பா வீட்டுக்கு மேல் ஏறுவார். நானும் ராத் தாமாரும் சொந்தங்களும் கீழே நிற்போம். பழைய கூரையைக் கீழே தள்ளு வார். நாங்கள் கூழங்களை அள்ளிக் குப்பை மேட்டில் போடுவோம். கூரையைத் தட்டிச் சுத்தம் செய்வோம்.

பிறகு வீடு மேய்;தல் தொடங்கும். மேலே இரண்டு பக்கமும் மேய்ப்வர்கள் ஏறி வசதியாக உட்காருவார்க் கள் ஏழு எட்டுப் பேர். கீழே கிடுகு கொடுக்க நான்கு பேர் மட்டும். வாப்பா அல்லது பாச்சா அல்லது வயசுபோன ஒருவர் கீழே நின்று ஆற்றுப் படுத்துவார். கிடுகுகள் மேலே போகும். வரிசைவரிசையாக அடுக்கி ஈக்கிலால் அல்லது சணல் அல்லது பனை ஓலையில் வார்ந்த கீற்றால் கட்டுவார்கள். கடகடவென்று வரிசை நேர்த்தியோடு மேய்ச் சல் போகும். இடையில் லைன் பிழைத்தால் கள்ளப் படையொன்று வைக்குமாறு கீழே ஆற்றுப்படுத்தும் பெரிய வர் வழிப்படுத்துவார். தண்ணீ ரும், இளனியும், தேசிக்காய் கரைசலுமென பரிமாறவும்ப டும். மோடு கட்டுவதும் ஒரு நுட்பமான வேலைதான்.

வீடு மேய்தல் முடியவும் சாப்பாடு பரிமாறப்படும். புட்டும் புளியாணமும், புக்கை, சோறும் இறச்சிக்கறியும் இல்லையென்றால் இடியப்ப மும் கோழியும். பசிக்கு ஏற்ற பரிமாறல். வீடு அழகானது போல் பசியாறும். அகமும் முகமும் மலரும்.

எங்களஊரில் வீடு வேய்த லென்பது கிராமத்துப் பண்பா டுதான்.

ஹாரிஸ்குட்டி
என்ன பார்க்கிறீங்க ஹாரிஸ்குட்டி...
இல்ல ஸ்கூல்போகணும்...
பாதை மறந்து போச்சு...
அதுதான் பார்க்கிறன் ...

எம்.ஆர்.எப்.அய்(Z)ஸா
ரிமாஸ் - நிஸ்லா
32/B ஒபேசேகரபுர
தம்பதெனிய

செந்தூரம் பிறந்தநாள் வாழ்த்து

நீங்கள், உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை இந்த செந்தூரம் இதழில் எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக பிரசுரிக்க விரும்புகின்றீங்களா? அவ்வாறாயின் மழலையின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543என்ற whats app க்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.

செல்ஃபி உலா

நீங்கள், உங்கள் Phone களில் விதவிதமாக எடுத்துப் பார்த்து ரசிக்கும் Selfie படங்களை இந்த செந்தூரம் இதழில் பிரசுரிக்க உங்கள், பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு என்ற 0773124543 whatsappக்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.

நெல்சன் மண்டேலா

தென்னாபிரிக்காவில் சோஸா என்னும் பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தனர். இந்தப் பழங்குடி இனத்தின் ஒரு பிரிவினர் தெம்பு மக்கள் என்று அழைக்கப்பட்டனர். தெம்பு இன அரசர், தெம்பு மக்களின் தலைவராக காட்லா (Gadla Henry Mphakanyswa) அவர்களை நியமித்திருந்தார். நியமனம் செய்த அரசர் பிரித்தானியாவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டவர். மரியாதைக்குரிய பதவி, செல்வாக்குள்ள மனிதர், தன் இன மக்களோடு நெருக்கமான உறவு கொண்டிருந்த தலைவர் என்றாலும் பிரித்தானியாவுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலைமையிலேயே அவர் இருந்தார்.

காட்லாவுக்கு நான்கு மனைவிகள் இருந்தனர். ஒரு ஆபிரிக்கர் பல பெண்களை மணந்துகொள்வது ஆபிரிக்காவில் வழமையாக இருந்தது. அவர்களது இன வழக்கப்படி, முதலாவது மனைவி மதிப்புக்குரிய மனைவி என்றும் இரண்டாவது மனைவி வலது கை மனைவி என்றும் மூன்றாவது மனைவி இடது கை மனைவி என்றும் நான்காவது மனைவி பணி செய்யும் மனைவி என்றும் அழைக்கப்பட்டனர். காட்லாவுக்கும் இடது கை மனைவிக்கும் மகனாக 1918 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18 ஆம் திகதி "குனு" என்னும் கிராமத்தில் பிறந்தவர்தான் நெல்சன் மண்டேலா.

காட்லா அவர்கள் மகன் மண்டேலாவுக்கு வைத்த பெயர் ரோலிலாலா மண்டேலா. (பாட்டனார் பெயர் மண்டேலா). கறுப்பின மக்கள் மத்தியில் வாழ்ந்து வந்த நெல்சன் மண்டேலா ஐந்து வயது சிறுவனாக இருக்கும்போது முதன் முதலில் ஒரு வெள்ளையனைக் கண்டு திகைத்து நின்று விட்டான். நான் அறிந்த யாரும் இத்தனை வெளுப்பாக இருந்ததில்லை , இவர்கள் நிச்சயம் கடவுளாகத்தான் இருக்க வேண்டுமென்று தன் நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டான். (வெள்ளைக்காரன் கடவுளா? எமனா? என்பது பற்றி பாவம் அந்த ஐந்து வயது பாலகனுக்கு தெரிந்திருக்கவில்லை போலும் . ஏழு வயது வரை அவர் ஒரு போர்வையை மட்டுமே ஆடையாக அணிந்திருந்தார். போர்வையை தோள் பக்கமாக போர்த்தி, இடுப்பில் ஊசி செருகியிருப்பார். ஓடினாலும் ஆடினாலும் அவிழாது. சிறு பராயத்தில் துடிப்பு மிக்க சிறுவனாகவே இருந்துள்ளார். கூடுகளில் இருந்து தேன் சேகரித்தார், மாட்டின் மடியிலிருந்து நேரடியாக பால் குடித்தார், கூரான குச்சியைக் கொண்டு மீன்களைக் குத்திப் பிடித்தார், உண்டி கோல் வைத்து பறவைகளை அடித்து வீழ்த்தினார், குளிரான ஆறுகளில் குதித்து உடல் நடுங்க நடுங்க நீந்தி கரையைத் தொட்டார், தனக்கான பொம்மைகளை களிமண் மரப்பட்டைகள் கொண்டு தானே செய்து கொண்டார். அத்துடன் ஒவ்வொரு ஆபிரிக்க சிறுவனும் தெரிந்துகொள்ள வேண்டிய குச்சிச் சண்டையை கற்றுக்கொண்டு சிறு வயதிலேயே வீரமிக்க சிறுவனாக திகழ்ந்தார். ஆரம்ப முதலே அவரது வாழ்கை முட்புதர்கள் நிறைந்த ஒன்றாகவே இருந்தது.

சோஸா மக்கள் மானசீக கடவுளாக

"கமாடா" எனும் கடவுளையே வணங்கி வந்தனர். கிறிஸ்தவ மதம் அறிமுகப்படுத்தப்பட்ட போது இவர்களில் முதன் முதலில் மண்டேலாவின் தாயாரே கிறிஸ்தவ மதத்தை தழுவிக்கொண்டார். இவருக்கு ஃபேனி என்று பெயர் மாற்றப்பட்டது. இதனையடுத்து மண்டேலாவை மெதடிஸ்ட்.வெஸ்லியன் தேவாலயத்துக்கு அழைத்து செல்லப்பட்டு கிறிஸ்தவ ஞானஸ்நானம் அளிக்கப்பெற்றது. காட்லாவின் வம்சத்தில் யாருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. நெல்சன் மண்டேலாவே ஏழு வயதில் முதன் முதலாக பாடசாலைக்கு சென்றார். அவரைப் படிக்க வைத்து சோஸா மக்கள் மத்தியில் ஒரு பெரும்தலைவராக ஆக்க வேண்டுமென்பதே தந்தை காட்லாவின் அவாவாக இருந்தது. "படிக்கப்போவது ஆங்கிலப் பாடங்களை, கற்கப்போவது பிரிட்டிஷ் சரித்திரத்தை, பழகிக்கொள்ளப் போவது ஆங்கிலேயப் பழக்கவழக்கங்களை, அனாவசியமாக உனக்கேன் ஆபிரிக்கப் பெயர்?" என்று ஆசிரியர் கடிந்துகொண்டு ரோலிலாலா எனும் பெயரை நெல்சன் என்று மாற்றம் செய்தார். அன்றிலிருந்து இன்றுவரை ரோலிலாலா மண்டேலா, நெல்சன் மண்டேலா எனும் பெயருடனே வாழ்ந்து வந்தார். சோஸா வழக்கப்படி விருத்தசேதனம் (circumcision) நடைபெற்ற பிறகே ஒருவன் இளைஞனாகிறான். மண்டேலாவுக்கு பதினாறு வயதில் விருத்தசேதனம் செய்யப்பட்டது.

அந்தக் காலத்தில் சோஸா மக்களை வெள்ளையர்கள் அடிமைகளாகவே நடத்தினர். தங்கச் சுரங்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கறுப்பின மக்களை அடிமைகளாக வேலை வாங்கி, வேலைகேற்ற ஊதியத்தை அவர்களுக்கு கொடுக்காமல் அவர்களை இம்சித்தனர். இவ்வாறான பல இன்னல்களுக்கு மத்தியில் கறுப்பின மக்கள் செய்வதறியாது திண்டாடினர். சொந்த மண்ணில் தம் மக்கள் அடிமைப்படுத்தப்படுவதையும் கேவலமாக நடத்தப்படுவதையும் அவதானித்துக்கொண்டிருந்த இளைஞனான நெல்சன் மண்டேலாவின் இரத்தம் கொதித்தது, விடுதலை வேட்கை உணர்வு மனதில் குடிகொண்டது. வெள்ளையர்களிடமிருந்து கறுப்பின மக்களை காப்பாற்ற வேண்டுமென்ற மனப்பாங்கும் உத்வேகமும் அவருக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றது. வெள்ளையர்களால் நெல்சன் மண்டேலா அவமானப்படுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்களுமுண்டு. வெள்ளையர்களிடமிருந்து தம்மின மக்களை எவ்வாறு காப்பாற்றலாமென சிந்தித்துக்கொண்டிருந்த போது அவருக்கு லாஸர் சிடெல்ஸ்கி எனும் ஒரு யூத உயர் அதிகாரியின் நட்பு ஏற்பட்டது. அவரிடம் மண்டேலா தன் இன மக்களின் அடிமை வாழ்கை பற்றிய தன் மனக்கவலைகளை பகிர்ந்துகொண்டார். அதற்கு அந்த யூத நண்பர் "நீ ஒரு வழக்கறிஞராக மாறி உன் இன மக்களுக்கு நீ உதவ வேண்டும். அப்போதுதான் வெள்ளையர்களின் ஆதிக்கத்திலிருந்து உன் இன மக்கள் விடுதலை பெற்று சுதந்திரக் காற்றை சுவாசிப்பார்கள். அதற்கு நீ இப்போதிருந்தே போராட வேண்டும்" என்று விடுதலைத் தாகத்தை ஊட்டினார். அதிலிருந்துதான் நெல்சன் மண்டேலாவின் மனதில் விடுதலை வேட்கை வேர் விடத் தொடங்கியது. வெள்ளையர்களின் அடிமைத்தனத்திலிருந்து தம் இன மக்களை விடுவிக்க வேண்டுமென்ற உத்வேகமும் உற்சாகமும் பிறந்து வெறிகொண்ட வேங்கையும் சினங்கொண்ட சிங்கமுமாக செயல்படத் தொடங்கினார். 1941 ஆம் ஆண்டு ஜொகனஸ்பேர்க்கிற்கு சென்று பகுதி நேரத்தில் சட்டக்கல்வியைக் கற்றார். 1943 ஆம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்து போராடத் தொடங்கினார். 1956 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகவும் வன்முறையைத் தூண்டிவிட்டதாகவும் குற்றம் சாற்றப்பட்டு மண்டேலாவுடன் சேர்த்து 155 பேர் கைது செய்யப்பட்டார்கள். 1960 ஆம் ஆண்டு ஷார்ப்வில் சம்பவத்தில் 69 போராளிகள் கொல்லப்படுகிறார்கள். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி தடை செய்யப்படுகிறது, இனி அஹிம்சை வழி பலன் தராது என்று நம்பிய மண்டேலாவும் அவரது நண்பர்களும் ஆயுதமேந்தி போராட முடிவெடுத்து இரகசியமாக நாட்டை விட்டு வெளியேறினர். மண்டேலா தலைமறைவாகிறார்.

ஆபிரிக்காவின் ஈட்டி எனும் இயக்கத்தை தொடங்குகிறார்.1961 ஆம் ஆண்டு மண்டேலா வன்முறைப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கிறார். புதிய இயக்கத்தின் தலைவராகிறார். பதினேழு மாத தலைமறைவு வாழ்க்கைக்கு பிறகு 1962 ஆம் ஆண்டு ஆகஸ்து 5 ஆம் திகதி கைது செய்யப்பட்ட மண்டேலா ஜொகனஸ்பேர்க் கோட்டையில் சிறை வைக்கப்படுகிறார்.

அக்டோபர் 25 ஆம் திகதி வாசிக்கப்பட்ட தீர்ப்பில் ஐந்தாண்டு சிறைத் தண்டனை கிடைக்கிறது. இராஜதுரோக குற்றம் சுமத்தப்பட்டு 1964 ஆம் ஆண்டு ஜுன் பன்னிரெண்டாம் திகதி ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது. ரோபன் தீவில் 18 ஆண்டுகள் சிறை வைக்க உத்தரவிடப்பட்டது. 1968ஆம் ஆண்டு தாயார் மரணமடைந்தபோது அவரின் இறுதிச் சடங்குகளில் கூட பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டது.

கலாபூஷணம்
பரீட் இக்பால்..., யாழ்ப்பாணம்

நிறம் தீட்டுங்கள்



வழிகாட்டுங்கள்

தீயணைப்பு வாகனத்துக்கு
தீயை ஆணைக்க வழிகாட்டுங்கள்

தொடர்புபடுத்துங்கள்

JACK FRUIT

I like jack fruit very much.
I'm green in colour. Inside
my pulp is yellow in colour.
I taste sweet. I'm rich in fiber
and minerals.

10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்

எட்டு ஆண்டுகள் பிரிந்திருந்த நாயுடன் இணைந்த இளம்பெண்

1900 கிலோ மீட்டர் பயணம் செய்து 8 ஆண்டுக்கு பின் செல்ல நாயுடன் இளம்பெண் இணைந்த சம்பவம் சுவாரசியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அமெரிக்காவை சேர்ந்த பெட்சி டிஹான் என்ற பெண் காணாமல் போன நாயுடன் மீண்டும் இணைவதற்காக 1900 கிலோமீட்டர் பயணம் செய்திருக்கிறார்.

கடந்த 2013ம் ஆண்டில் ஃப்ளோரிடாவில் வசித்து வந்த பெட்ஸி பிட் புல் நாய் ஒன்றை தத்தெடுத்து வளர்த்தி வந்துள்ளார். அதற்கு ஹார்லி என்று பெயரிட்டார். இதனையடுத்து, பெட்ஸி 2014ம் ஆண்டு நாய் காணமல் போயுள்ளது. அதன் பின் போஸ்டர் ஒட்டுவது முதல் விளம்பரம் கொடுப்பது வரை பல வகைகளில் அதனைத் தேடியிருக்கிறார்.

ஆனால் எவ்வளவு தேடியும் அந்த நாய் கிடைக்கவில்லை. இதனால் நம்பிக்கை இழந்த அவர், மிசூரி மாகாணத்துக்குக் குடி பெயர்ந்தார்.

காலங்கடந்தாலும் அவரால் தனது நாயை மறக்க முடியவில்லை. அதன் பிறகு பெட்ஸி வேறு எந்த நாயும் வளர்க்கவில்லை.

இந்நிலையில், கடந்த ஜூலை 2ம் திகதி பெட்ஸிக்கு Lee County Domestic Animal Servicesல் இருந்து ஒரு அழைப்பு வந்திருக்கிறது. பல நாட்கள் வெட்டப்படாத அதிக நீளமான நகங்களைக் கொண்ட பிட் புல் ஒன்றை அவர்கள் கண்டுபிடித்ததாகக் கூறியுள்ளனர்.

மேலும், அதன் தோலிலிருந்த மைக்ரோசிப் மூலம் அதன் உரிமையாளர்களைக் கண்டறிந்து பெட்ஸிக்கு அழைத்ததாக அவர்கள் கூறியதும், உற்சாகமடைந்த பெட்ஸி உடனடியாக மிசூரியில் இருந்து ஃப்ளோரிடாவுக்கு காரில் பயணம் செய்துள்ளார்.

சுமார் 1900 கிலோ மீட்டர் பயணம் மேற்கொண்டு ஹார்லியுடன் மீண்டும் இணைந்தார் பெட்ஸி. 8 வருடங்கள் கழித்து மீண்டும் தனது செல்ல நாயுடன் இணைந்த பெட்ஸி அது இதுவரை மெலிந்திருப்பதைப் பார்த்து கண்கலங்கியுள்ளார்.

8 ஆண்டுகளுக்கு முன் காணாமல் போன நாய், தற்போது கிடைத்துள்ளதை அறிந்து உற்சாகம் அடைந்த பெட்ஸி, இது தொடர்பாக பேசும்போது, "தன்னுடைய ஹார்லி மிகவும் மோசமாக இருந்தது. அதன் நகங்கள் கூட வளர்ந்தும் இருந்துள்ளது. அது நடந்து செல்லும் போது கூட, எலும்பும் தோலுமாக இருந்தது. இது ஒரு அதிசயம் போல உள்ளது. அவன் கண்டுபிடிக்கப்பட்டதை என்னால் நம்பவே முடியவில்லை" என பெட்ஸி தெரிவித்துள்ளார்.

மேலும், ஹார்லி மீண்டும் சேர உதவியாக இருந்த மைக்ரோசிப் ஒரு அரிசி அளவு இருக்கும் கருவியாகும்.

இதனை நாயின் தோலில் பொருத்திவிட்டால் வாழ்நாள் முழுவதும் நாயின் உடலில் இருக்கும்.

இதில் உரிமையாளரின் விவரங்கள் இருக்கும். நாயைக் காண்பவர்கள் மீண்டும் உரிமையாளரிடம் கொண்டு சேர்க்க இதைப் பயன்படுத்துகிறார்கள்.

104 வருடங்களாக ஒரே வீட்டில் வாழும் அதிசய மூதாட்டி

பிறந்ததில் இருந்து இறக்கும் வரை யாரும் ஒரே வீட்டில் வாழ வாய்ப்பில்லை. புதிய புதிய இடங்களுக்கு மாறுவது மனிதர்களுக்குள் சகஜமாக நடைபெறும். ஆனால் 104 வருடமாக பெண்மணி ஒருவர் ஒரே வீட்டில் வசித்து வருகிறார் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதா?

பிரிட்டனைச் சேர்ந்த எல்சி ஆல்காக் என்கிற பெண்மணி சுமார் 104 வருடமாக தான் பிறந்து வளர்ந்த வீட்டிலேயே குடியிருந்து வருகிறார். 1918 இல் இவர் பிறந்திருக்கிறார். இந்த பெண்மணி இறுதி வரை இவருடைய தாயார் இறந்து போக, தமது தந்தையை கவனிக்கும் பொறுப்பும் இவருக்கு அமைந்தது. தொடர்ந்து தந்தை மற்றும் கணவரை கவனித்துக் கொண்டு இதே வீட்டில் இருந்த இவர், 1949 இல் தந்தையைப் பறிகொடுத்தார். தந்தையின் மரணத்தை தொடர்ந்து 1960 ஆம் ஆண்டு இந்த வீட்டை சொந்தமாக வாங்கி இருக்கிறார் இப் பெண்மணி.

இதற்கென வங்கியில் இருந்து கடன் பெற்று, சுமார் 25 பவுண்டுக்கு இந்த வீட்டை வாங்கி இருக்கிறார் இவர். இப்போது இந்த வீடு மற்றும் நிலத்தின் மதிப்பு 75 ஆயிரம் பவுண்டுகள் என்று கூறப்படும் நிலையில், இந்த வீட்டை விட்டு எங்கும் செல்லாத இவர், இந்த வீட்டிலேயே வசிக்கக்கூடிய காட்சிகளை காண முடிகிறது. இந்த வீட்டை விட்டு வேறு எங்கும் புலம்பெயரக் கூடிய தேவையும் அவசியமும் தனக்கு இதுவரை ஏற்படவில்லை என்று இவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

தம் வாழ்வோடு இரண்டற கலந்து இந்த வீட்டை விட்டு தான் பிரியவேயில்லை என்றும் அவர் குறிப்பிடுகிறார். தம்முடைய இறுதி மூச்சு வரை இந்த வீட்டில் குடியிருக்கவே ஆசைப்படுவதாகவும் கூறி நெகிழ வைக்கிறார்.

லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்து வந்த ஒரு பெண்ணின் தற்போதைய அவல நிலை

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிப் படைந்த வடக்கு, கிழக்கு மக்கள் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்வதற்கு அதிஷ்டலாப சீட்டுக்களையும் (லொத்தர்களையும்) நம்பியிருக்க வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது.

என்னதான் கடினமான வேலை அல்லது நீண்டநேரம் வேலை செய்தாலும் அதன் மூலம் பெறப் படும் பணம் என்பது தற்போதைய வாழ்க்கைச் செலவைப் போக்குவதற்கு போதுமானதாக இல்லை என்பது பலரது ஆதங்கம். இதனால் பலரும் தாம் செய்யும் பிரதான தொழில்களுக்கு மேலதிகமாக வேறு தொழில்களை செய்வதற்கும், பகுதிநேர வேலை செய்வதற்கும் முயற்சிப்பதுடன் வருமானத்தை பெறக் கூடிய வழி வகைகள் தொடர்பிலும் சிந்தித்து வருகின்றனர். இதன்காரணமாக திடீர் பணக்காரர்களை உருவாக்கும் லொத்தர்களை நாடும் மக்கள் தொகையும் கடந்த காலங்களில் அதிகரித்து இருந்தது.

சிலர் பரிசுத் தொகையை பெற, இன்னும் சிலர் இதில் பெரும் தொகையை பரிசாக பெற வேண்டும் என நாளாந்தம் அதிக பணத்தை லொத்தர் சீட்டுக்களுக்காக செலவு செய்து இருந்த பணத்தையும் இழந்தவர்களும் உண்டு. அதிஷ்டம் யார் வீட்டு வாசல் கதவை தட்டுகிறதோ அவர்களே வெற்றி பெறுகிறார்கள். இவ்வாறு திடீர் பணக்காரர்களை உருவாக்கும் இத்தகைய செயற்பாடுகள் தவிர, வடக்கு, கிழக்கு பகுதிகளில் பலருக்கும் வேலைவாய்ப்புக்களையும் லொத்தர் சீட்டு நிறுவனங்கள் வழங்கியுள்ளது.

வடக்கில் விசேட தேவைக் குட்பட்ட சிலரும் இதன் மூலம் தொழில் வாய்ப்பைப் பெற்று தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தக் கூடிய வகையில் கணிசமான வருமானத்தைப் கடந்த காலங்களில் பெற்று வந்தனர். குறிப்பாக யுத்தம் காரணமாக தமது கணவன்மாரை இழந்த விதவைப் பெண்கள், உடல் அங்கவீனமுற்றோர், விசேட தேவைக்குட்பட்டோர் என வடபகுதியில் அதிகமாக உள்ள நிலையில் அவர்கள் இலகுவாக குறைந்த முதலீட்டுடன் வருமானத்தை ஈட்டக் கூடிய ஒரு தொழிலாகவும் லொத்தர் சீட்டு விற்பனை மாறியிருந்தது. ஆனால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அவர்களின் நிலை என்ன என்பது பலரும் அறியாத நிலையில் உள்ளனர்.

அந்த வகையில், வவுனியாவில் லொத்தர் சீட்டு விற்பனையில் ஈடுபட்ட முதலாவது பெண் என்ற பெருமையை வவுனியா, கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த விசேட தேவைக்குட்பட்ட செல்லையா சந்திரிக்கா என்ற 50 வயதுப் பெண் பெறுகின்றார்.

போலியோ நோயினால் சிறு வயதில் பாதிக்கப்பட்டு கால் நடக்க முடியாத நிலைக்கு சென்ற அவர் தனது விடயா முயற்சியால் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அதிஷ்டலாப சீட்டு விற்பனையில் ஈடுபட்டு வருவதுடன், அந்த வருமானத்தில் தனது தந்தை மற்றும் சகோதரி ஆகியோரை தற்போது பராமரித்தும் வருகின்றார்.

ஆனால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் அதிஷ்டலாப சீட்டு விற்பனை சடுதியாக குறைவடைந்துள்ளதுடன், அதன் மூலம் கிடைக்கும் பரிசுகளும் குறைவடைந்துள்ளது.

இதனால் அதிஷ்டலாப சீட்டு விற்பனை நிலையங்கள் வெறிச் சோடிகாணப்படுவதுடன்அதனை நம்பி தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்பவர்களின் நிலை கவலைக்கிமடாகவுள்ளது. வவுனியா கூமாங்குளம் பகுதியில் இருந்து சராசரியாக 5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வவுனியா நகரப்பகுதிக்கு முச்சக்கர வண்டியில் வருகை தந்து சாயி வீதியில் அதிஷ்டலாப சீட்டினை விற்பனை செய்து வருகின்றார்.

தற்போது எரிபொருள் பற்றாக்குறை காரணமாக தனது முச்சக்கர வண்டிக்கு பெற்றோல் பெற முடியாத நிலையில் அதிஷ்டலாப சீட்டு விற்பனைத் தொழிலை கூட கைவிட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். அப்படி எனில் அவரின் குடும்ப நிலை இனி என்ன ஆவது?

போலியோ நோயினால் சிறுவயதில் பாதிக்கப்பட்டு கால் நடக்க முடியாத நிலைக்கு சென்ற அவர் தனது விடா முயற்சியால் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அதிஷ்டலாப சீட்டு விற்பனையில் ஈடுபட்டு வருவதுடன், அந்த வருமானத்தில் தனது தந்தை மற்றும் சகோதரி ஆகியோரை தற்போது பராமரித்தும் வருகின்றார்.

இது குறித்து சந்திரிக்கா இவ்வாறு கூறுகின்றார். நான் கால் ஊனமுற்ற விசேட தேவைக்குட்பட்ட பெண். நான் கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்து வருகின்றேன். எனது குடும்பத்தில் உள்ள சகோதார்கள் எல்லோரும் திருமணம் செய்து இருக்கின்றார்கள். இருந்தாலும் விசேட தேவைக்குட்பட்ட நான் எவருக்கும் பாரமாய் இருக்கக் கூடாது என்பதற்காக இந்த தொழில் மூலம் கடந்த 10 வருடமாக உழைத்து எனது அம்மா, அப்பா, அக்கா ஆகியோரை பராமரித்து வருகின்றேன். அம்மா இறந்து விட்டார்.

தற்போது லொத்தர் சீட்டு விற்பனை குறைவு. முச்சக்கர வண்டிக்கு பெற்றோலும் இல்லை. விசேட தேவைக்கு உட்பட்டவர் என்று கூட பார்த்து எனக்கு பெற்றோல் அடிக்க இடம் தருகிறார்கள் இல்லை. அங்கு நிற்பவர்கள், பொலிசார் கூட எம்மை தரக்குறைவாக பார்க்கிறார்கள். எதையோ என்னிடமே எதிர்பார்க்கிறார்கள். உடல் ஏழாத நிலையிலும் யாருக்கும் பாரமாக இருக்கக் கூடாது என நினைத்து உழைத்து வாழ விரும்பும் எனக்கே இந்த நிலையா என கண்ணீர் விடுகின்றார் சந்திரிக்கா.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் உழைத்து வாழ வேண்டும் என்பதற்காக இவ்வாறு கண்ணீர் விடும் சந்திரிக்கா போன்ற பல குடும்பங்களின் கண்ணீருக்கு பதில் தான் என்ன...?

கி. வசந்தரூபன்...
வவுனியா விசேட நிருபர்

இன்றைய வானவியலும் நாமும்

தொழிநுட்ப வளர்ச்சியும், விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் பொது மக்களது அறிவு வளர்ச்சியை தூண்டி மூட நம்பிக்கைகளை ஒழித்துள்ளது. அனைத்து சமூகங்களிலும் கிரக பலன், கிரக தோசம் ஆகியன வெறும் ஜோக் ஆக மாறிவிட்டன. இலட்சக் கணக்கான வருடங்களாக மனிதன் பயப்பட்டு அணுக முடியாதிருந்த சூரியன், சந்திரன், கிரகங்கள், சூரிய குடும்பம், பால்வளி நட்சத்திரக் கூட்டங்கள், பிரபஞ்சம் ஆகியன இப்போது பிரதான சுற்றுலா தலங்களாக (Tourist Destination) மாறிக்கொண்டு வந்து கொண்டிருக்கின்றன.

இன்னும் 23 வருடங்களுக்குள் சந்திரனிலும், செவ்வாய் கிரகத்திலும் ஆரம்பிக்கப்பட இருக்கும் கட்டுமான வேலைகளுக்கும் ஏனைய தொழில்களுக்கும் Engineers, Doctors, Masons, Electricians, Plumbers, Carpenters, AC Technicians, Network Technicians, Chefs, Drivers, House Maids, Care takers உட்பட்ட பல்வேறுபட்ட தொழில்வாய்ப்புக்கள் வரும்! அதில் கால் பதித்து வெற்றி கண்டுவிட்டு எமது பால்வளி (Milky way Galaxy) யில் உள்ள ஏனைய கிரகங்களை மனிதன் அடைவான். பிறகு பால்வளிக்கு வெளியால் உள்ள நட்சத்திர கூட்டங்களுக்குள் சென்று ஆராய்வான். இப்படியே பிரபஞ்சத்தின் எல்லையை மனிதன் அடைந்து விட்டு ஏழு வானங்கள் பற்றி சிந்திக்க ஆரம்பிப்பான். மறுமை நாள் வரை இது தொடரும். விஞ்ஞானம் வளரும்.

இம்மாதம் வானில் நிகழ்ந்து கொண்டிருக்கும் அதிசயம்: 5 கிரகங்களை வெற்றுக் கண்களால் பார்த்தீர்களா?

பூமிக்கு நெருங்கியிருக்கும் ஐந்து கிரகங்களையும் ஜூன் மாதம் முழுவதும் வெற்றுக் கண்களால் பார்க்கக் கூடியதாக இருந்து கொண்டிருக்கிறது. சூரிய உதயத்திற்கு சுமார் அரை மணி நேரத்திற்கு முன்பதாக, புதன்(Mercury), வெள்ளி(Venus), செவ்வாய் (Mars), வியாழன் (Jupiter) மற்றும் சனி(Saturn) ஆகிய கிரகங்களை சூரியனிலிருந்து அவற்றின் இயற்கையான வரிசையில் காணக்கூடியதாக இருக்கும். இந்நிகழ்வு 18 வருடங்களுக்குப் பிறகு நிகழும் ஒரு அதிசய நிகழ்வாகும். இம்மாதம் முழுவதும் இந்த சந்தர்ப்பம் இருந்த போதிலும் கூட ஜூன் மாதம் 23 ஆம் திகதி அதிகாலையில் சந்திரனும் இந்த ஐந்து கிரகங்களுடன் வரிசையாக வந்து அழகாக காட்சியளிக்கும்.

***Astrophotography* என்றால் என்ன?**

ஆஸ்ட்ரோஃபோட்டோகிராஃபி என்பது விண்வெளியில் உள்ள பொருட்களை புகைப்படம் எடுப்பதாகும். இது சந்திரன், சூரியன், கோள்கள், நட்சத்திரங்கள், விண் கற்கள், கருந்துளை மற்றும் விண்மீன் கூட்டங்கள் (Galaxy) உள்ளிட்ட வான் பொருட்களின் புகைப்படக் கலை ஆகும்.

மாணவர்களை இந்தத் துறையில் ஊக்குவிப்பதானது அவர்களது எதிர்கால கல்வி, தொழில் வாழ்க்கைக்கு பாலம் அமைத்துக் கொடுத்ததாக மட்டுமன்றி அவர்களுக்கான சிறந்ததொரு பொழுது போக்கை அமைத்துக் கொடுத்ததாகவும் இருக்கும்.

அன்று முதல் இன்று வரை இவ்வாறு தொழிநுட்ப வளர்ச்சியும், விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் ஒரு நிலையான வளர்ச்சியை (Sustainable Development) அடைந்து கொண்டிருக்கும் நிலையில் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று சிந்திக்கவும், மீள் பரிசீலனை செய்யவும் நாம் அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஹரீஸ் ஸாலிஹ் ...✍

பன்முகம் கொண்ட கலைஞர் விசு

நடிகர், இயக்குனர், வசனகர்த்தா, பட்டிமன்ற பேச்சாளர் என பன்முகம் கொண்ட கலைஞர் விசு. இவர் 1945 ஜூலை 01ஆம் திகதி பிறந்தார். 2020 மார்ச் 22 ஆம் திகதி தனது 74வது அகவையில் அமரரானார்.

இவருக்கு லாவண்யா, சங்கீதா மற்றும் கல்பனா என மூன்று பிள்ளைகள். இவர் 1975 ஆம் ஆண்டு சுந்தரி என்பவரை திருமணம் செய்து கொண்டார்.இவர் சிறுநீரக செயலிழப்பு காரணமாக காலமானார். இவர் மேடை நாடகம், தொலைக்காட்சித் தொடர் பலவற்றிலும் நடித்துள்ளார். நடிகர் கிஷ்மு இவரது சகோதரர் ஆவார்.

இவர் இயக்கிய சம்சாரம் அது மின்சாரம் திரைப்படம் பெரும்பாலான இந்திய மொழிகளில் மீண்டும் எடுக்கப்பட்டது.

இத்திரைப்படம் 1986 ஆம் ஆண்டிற்கான சிறந்த தமிழ்த் திரைப்படத்திற்கான பிஃல்ம்பேர் விருதை பெற்றது.

இவர், தமிழின் தலை சிறந்த இயக்குனர்களில் ஒருவரான கே. பாலச்சந்தரிடம் உதவி இயக்குனராக இருந்து பின்னர் இயக்குனரானார்.

இவருடைய பெரும் பாலான திரைப்படங்கள் சமூக, குடும்பத் திரைப்பட வகையைச் சேர்ந்தது.

சதுரங்கம், அவன் அவள் அது, மழலைப் பட்டாளம், தில்லு முல்லு, நெற்றிக் கண், கீழ்வானம் சிவக்கும், குடும்பம் ஒரு கதம்பம், ஸ்ரீனிவாச ராகவன், கண்மணி பூங்கா, சிம்லா ஸ்பெஷல், மணல் கயிறு, புதுக்கவிதை, டௌரி கல்யாணம், நல்லவனுக்கு நல்லவன், புயல் கடந்த பூமி, ராஜதந்திரம், வாய்ச்சொல்லில் வீரனடி ஆகிய இவர் பணியாற்றிய படங்களாகும்.

ஜெயா டிவியில் அரட்டை அரங்கம் நிகழ்ச்சியில் நடந்த படப்பிடிப்பில் விசுவை நேரில் சந்தித்து உரையாடியதை நினைவு கொள்கின்றேன்.

எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...✍
கம்பளை



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.